தமிழ்நாடு அரசு

# ஏழாம் வகுப்பு

## முதல் பருவம்

### தொகுதி 1

தமிழ் ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு இலவசப்பாடநூல்
வழங்கும் திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2012
திருத்திய பதிப்பு – 2013
திருத்திய பதிப்பு – 2014
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்
www.textbooksonline.tn.nic.in

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
        Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
        Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
        Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
        Tava Subha asisa mage,
        Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
        Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

## SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
        Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
        Jaya jaya, jaya, jaya he.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
        Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
        Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
        mingles in the music of the Yamuna and Ganges
        and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

"I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation."

"I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means."

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# பொருளடக்கம்

## தமிழ் (1 - 78)


| இயல் | | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | செய்யுள் | வாழ்த்து | 2 |
| | | திருக்குறள் | 4 |
| | உரைநடை | செம்மொழித் தமிழ் | 7 |
| | துணைப்பாடம் | ஊரும் பேரும் | 11 |
| | இலக்கணம் | சார்பெழுத்துகளின் வகைகள் | 14 |
| 2. | செய்யுள் | புறநானூறு | 26 |
| | | முதுமொழிக்காஞ்சி | 28 |
| | உரைநடை | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் | 30 |
| | துணைப்பாடம் | கோவூர்கிழார் | 34 |
| | இலக்கணம் | உயிர்மெய், ஆய்தம் | 38 |
| 3. | செய்யுள் | தனிப்பாடல் | 49 |
| | உரைநடை | கணிதமேதை இராமானுஜம் | 51 |
| | துணைப்பாடம் | நன்றிப்பரிசு | 56 |
| | இலக்கணம் | நால்வகைச் சொற்கள் | 59 |


## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
|---|---|---|
| 1. | வாழ்த்து | 4 |
| | திருக்குறள் ( 1, 2, 3, 8, 9 ) | 10 |
| 2. | புறநானூறு | 4 |
| 3. | தனிப்பாடல் | 4 |
| | மனப்பாட அடிகள் மொத்தம் | 22 |

(பாடநூலுள் ★ இவ்வுடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி)

# தமிழ்

## ஏழாம் வகுப்பு

### முதல் பருவம்


# வாழ்த்து

பண்ணினை இயற்கை வைத்த
பண்பனே போற்றி போற்றி
பெண்மையில் தாய்மை வைத்த
பெரியனே போற்றி போற்றி
வண்மையை உயிரில் வைத்த
வள்ளலே போற்றி போற்றி
உண்மையில் இருக்கை வைத்த
உறவனே போற்றி போற்றி. *

– திரு. வி. கலியாணசுந்தரனார்

பொருள் : இசையை இயற்கையோடு இணைத்த பண்பாளனே! பெண்களுக்குத் தாய்மையால் பெருமை சேர்த்த பெருமைக்குரியவனே! கொடைத்தன்மையை உயிரினங்களுக்குத் தந்த வள்ளல் தன்மை உடையவனே! உள்ளத்தில் உண்மையை வைத்த உறவுடையோனே! உன்னை வாழ்த்துகின்றேன்.

சொற்பொருள் : பண் – இசை ; வண்மை – கொடைத்தன்மை ; போற்றி – வாழ்த்துகிறேன்.



ஆசிரியர் குறிப்பு

பெயர் : திரு. வி. கலியாணசுந்தரனார் (திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார் என்பதன் சுருக்கமே திரு. வி. க. என்பது.)

பெற்றோர் : விருத்தாசலனார் – சின்னம்மையார்.

பிறந்த ஊர் : காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள துள்ளம். இவ்வூர், தற்பொழுது தண்டலம் என அழைக்கப்படுகிறது. இவ்வூர், சென்னையை அடுத்துள்ள போரூருக்கு மேற்கே உள்ளது.

சிறப்பு : இவர் தொழிலாளர் நலனுக்கும் பெண்கள் முன்னேற்றத்துக்கும் அயராது பாடுபட்டார்; மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுத்தார். இவரின் தமிழ்நடையைப் போற்றித் தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

* மனப்பாடப்பகுதி

பணி : சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியராகவும், நவசக்தி முதலான இதழ்களில் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

படைப்புகள் : மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்த்தென்றல், உரிமை வேட்கை, முருகன் அல்லது அழகு முதலியன.

காலம் : 26.08.1883 – 17.09.1953

நூல் குறிப்பு : வாழ்த்துப் பகுதியில் இடம்பெற்றுள்ள இப்பாடல், திரு. வி. க. இயற்றிய பொதுமை வேட்டல் என்னும் நூலில் போற்றி என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. நாடு, மதம், இனம், மொழி, நிறம் அனைத்தையும் கடந்து உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதுவதே பொதுமை வேட்டல். தெய்வநிச்சயம் முதலாகப் போற்றி ஈறாக உள்ள நாற்பத்து நான்கு தலைப்புகளில், நானூற்று முப்பது பாக்களால் ஆனது இந்நூல்.

நூல் பயன் : இந்நூலைக் கற்பார்க்கு நாடு, மதம், மொழி, இன வேற்றுமைகள் விலகும்; சமுதாய ஒற்றுமை வளரும்; மனித நேயம் மலரும்; உலகம் தழுவிய ஒருமைப்பாட்டுணர்வு உண்டாகும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ) திரு. வி. கலியாணசுந்தரனார் பிறந்த ஊர் ____________ .

ஆ) திரு.வி.க. இயற்றிய ‘பொதுமை வேட்டல்’ என்னும் நூலில் உள்ள பாக்களின் எண்ணிக்கை ____________ .

**2. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.**

‘வண்மையை உயிரில் வைத்த’ இந்த அடியில் ‘வண்மை’ என்னும் சொல் தரும் பொருள் ____________ .

1. வலிமை 2. கொடைத்தன்மை 3. வளமை

### ஆ) குறுவினாக்கள்

1. திரு. வி. க. வின் பெற்றோர் யாவர் ?
2. திரு. வி. க. இயற்றிய நூல்கள் நான்கனை எழுதுக.
3. இறைவன் உயிரில் வைத்தது எதனை ?

### இ) சிறுவினாக்கள்

1. திரு. வி. க. பற்றிக் குறிப்பு எழுதுக.
2. இறைவனின் பெருமையைத் திரு. வி. க. எவ்வாறெல்லாம் குறிப்பிடுகின்றார் ?

# திருக்குறள்

## வாய்மை

1. வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல். *

பொருள் : வாய்மை எனப் போற்றப்படும் பண்பு எதுவெனில், அது மற்றவருக்கு எவ்வகையிலும் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்.

2. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
   நன்மை பயக்கு மெனின். *

பொருள் : பிறர்க்குக் குற்றமற்ற நன்மையைத் தருமாயின், பொய்யும் உண்மையாகக் கருதப்படும்.

சொற்பொருள் : புரை – குற்றம்; பயக்கும் – தரும்.

3. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
   தன்நெஞ்சே தன்னைச் சுடும். *

பொருள் : தன் நெஞ்சம் அறிந்து பொய் கூறக்கூடாது. கூறின், தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

சொற்பொருள் : சுடும் – வருத்தும்.

4. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

பொருள் : ஒருவன் தன் உள்ளம் அறிய பொய்யில்லாமல் நடப்பானானால், அத்தகையவன் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் ஆவான்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
   தானம்செய் வாரின் தலை.

பொருள் : மனத்தொடு பொருந்திய வாய்மை பேசுபவன், தானம் தவம் செய்கிறவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கருதப்படுவான்.

6. பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
   எல்லா அறமும் தரும்.

பொருள் : பொய் பேசாமை ஒருவனுக்கு எல்லாப் புகழையும் தரும்; அஃது அவன் வருந்தாமலேயே அவனுக்கு எல்லா நலன்களையும் தரும்.

சொற்பொருள் : அன்ன – அவை போல்வன; எய்யாமை – வருந்தாமை.

நீதி

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பொருள் : பொய் சொல்லாமை என்னும் அறத்தை இடைவிடாமல் கடைப்பிடித்தால், வேறு எந்த அறங்களையும் செய்யவேண்டியது இல்லை.

8. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். *

பொருள் : உடல் தூய்மை நீரால் உண்டாகும்; உள்ளத்தூய்மை வாய்மையால் வெளிப்படும்.

சொற்பொருள் : அகம் – உள்ளம்; அமையும் – உண்டாகும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. *

பொருள் : சான்றோர்க்குப் புறஇருளை நீக்கும் விளக்குகளைவிட, அகத்தின் இருளை நீக்கும் பொய்பேசாமையே உண்மையான விளக்காகும்.

10. யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

பொருள் : யாம் உண்மையாகக் கண்ட பொருள்களுள், எவ்வகையிலும் உண்மையைவிடச் சிறந்தவையாகச் சொல்லத்தக்கவை வேறில்லை.



ஆசிரியர் குறிப்பு : திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர், சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர். இவரைப்பற்றித் தெளிவான வரலாறு இதுவரையில் கிடைக்கவில்லை. இவருக்கு நாயனார், முதற்பாவலர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் முதலிய பெயர்கள் உண்டு. இவரின் காலம் கி.மு.31 என்பர்.

நூல் குறிப்பு : குறள் வெண்பாக்களால் அமைந்த நூல் திருக்குறள். இது, திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருக்குறள் என வழங்கப்பெறுகிறது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதில், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துக் குறட்பாக்களென ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் உள்ளன. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

மனிதன் மனிதனாக வாழ, மனிதன் மனிதனுக்குக் கூறிய அறவுரைதான் திருக்குறள்.

திருக்குறள், உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டு உள்ளதனால் ‘உலகப் பொதுமறை’ என வழங்கப்பெறுகிறது. இது, தமிழ்மொழி யிலுள்ள அறநூல்களுள் முதன்மையானது. இந்நூல் நூற்றேழு மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது.

நூல் பயன் : திருக்குறள் கற்பதனால் மனித வாழ்க்கை செம்மையுறும்; பண்புகள் வளரும்; உலகெலாம் ஒன்றெனும் உயர்குணம் தோன்றும்; மனிதர்களிடையே வேறுபாடுகள் மறையும்; எல்லா உயிரிடத்தும் அன்பு தழைக்கும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) குறள் வெண்பாக்களால் ஆன நூல் __________ .

ஆ) திருக்குறளில் __________ அதிகாரங்கள் உள்ளன.

இ) உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதனால் திருக்குறள் __________ என வழங்கப்படுகிறது.

2. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

அ) உடலை நீர் தூய்மை செய்யும்; உள்ளத் தூய்மையை வெளிப்படுத்துவது __________

1. இன்னாச்சொல் 2. வாய்மை 3. பழிச்சொல்

ஆ) வாய்மை எனப்படுவது யாதெனில் __________

1. மற்றவர்களுக்குத் தீங்கு தராத சொற்களைப் பேசுதல்
2. புறங்கூறாமை 3. பழிகூறாமை

3. பிரித்து எழுதுக.

அ) யாதெனின் ஆ) பொய்யாதொழுகின் இ) புறந்தூய்மை

4. சேர்த்து எழுதுக.

அ) தன் + நெஞ்சு ஆ) புகழ் + இல்லை

5. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

இயற்கை, பெண்மை, வாய்மை, உள்ளம்.

### ஆ) குறுவினாக்கள்

1. பொய்மையும் வாய்மையாவது எப்போது?
2. வள்ளுவர் குறிப்பிடும் தூய்மைபற்றிக் குறிப்பிடுக.
3. அகவிருளைப் போக்கும் விளக்கு எது?

### இ) சிறுவினாக்கள்

1. வாய்மையின் இலக்கணமாக வள்ளுவர் குறிப்பிடுவது யாது?
2. உண்மையைப் பேசுவோரின் சிறப்பியல்புகள் யாவை?
3. அகவிருளைப் போக்கும் விளக்கைக் குறள்வழி விளக்குக.
4. உலகத்தாரின் உள்ளத்துள் இருப்பாரைப்பற்றி வள்ளுவர் கூறுவது என்ன?

# செம்மொழித் தமிழ்

### உலக மொழிகள்

உலகத்தில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் பல பேச்சுமொழிகளே. எழுத்துமொழிகளாக உள்ளனவற்றுள் இலக்கிய வளம் நிறைந்தவை மிகச் சிலவே. எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே என்று வள்ளலார் அருள்கிறார். உலக மொழிகளில் சிறந்தது தமிழ்மொழியே என அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

### செம்மொழிகள்

திருந்திய செவ்வியல்புகள் பொருந்திய மொழிகள் செம்மொழிகள் எனப்படும். கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகியவற்றைச் செம்மொழிகள் எனப் பட்டியலிடுகிறார் மொழியியல் அறிஞர் ச.அகத்தியலிங்கம்.

இவற்றுள் கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் ஆகிய மொழிகள் இன்று பேச்சுவழக்கில் இல்லை.

### செம்மொழித் தமிழின் சிறப்பு

உலகில் இன்று வழங்கும் மொழிகள் தோன்றுவதற்கு முன்பாகவே எண்ணற்ற இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டதாக விளங்கியது தமிழ்மொழி.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருள் ஆகிய செவ்வியல் இலக்கியங்கள், தமிழைச் செம்மொழி என நிலைநாட்டுவதற்கு உரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றான திருக்குறளுக்கு இணையான வேறு நூல் உலகில் இல்லை.

அதனால்தான் டாக்டர் கிரௌல், தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்; தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது என்று மொழிந்து இன்புற்றார்.

### தமிழின் தனிப்பெருந்தன்மைகள்

இயல்பாகத் தோன்றிய தமிழ்மொழியின் உயரிய பண்புகள், தன்மைகள்பற்றி ஒவ்வொரு தமிழனும் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

அ) தொன்மை

உலகின் மிகப்பழைமையான நிலப்பகுதி குமரிக்கண்டம். அந்நிலப்பகுதி கடல்கோளால் மூழ்கிவிட்டது. அத்தொன்னிலத்தில்தான் தமிழ் தோன்றியதெனத் தண்டியலங்கார மேற்கோள் செய்யுள் கூறுகிறது.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

ஆ) மென்மை

தமிழ் மெல்லோசை மொழியாயிருப்பதனாலேயே, அஃது உலக முதன் மொழியாய்த் தோன்றியும் வழக்கொழியாமல் இன்றும் இளமை மாறாமல் கன்னித்தமிழாய் இருந்து வருகின்றது. தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவரும் முயற்சி வருத்தமின்றி எளிதாக அதனைக் கற்கவும் பேசவும் இயலுகின்றது. எக்காலத்தும் உள்ளத்தில் எழக்கூடிய கருத்துகளை எல்லாம் தெரிவிக்கத்தக்க சொற்களைக் கொண்டதாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

இ) தாய்மை

பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் என்னும் நாஞ்சில்நாட்டுத் தமிழ்ச் சொற்கள், வடமொழி உட்பட உலகப் பெருமொழிகள் பலவற்றிலும் வடிவு திரிந்து வழங்கி வருகின்றன. தமிழ்ச்சொல் இல்லாத உலகப் பெருமொழி யாதொன்றும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஈ) தூய்மை

தமிழில் வழங்கிய ஆயிரக்கணக்கான பேச்சு வழக்குச் சொற்களும், நூல்வழக்குச் சொற்களும் காலவெள்ளத்தில் மறைந்து போயின. எஞ்சியுள்ள பழஞ்சொற்களைக் கொண்டும் தேவைக்கேற்பப் புதுச் சொற்களைப் புனைந்தும் பிறமொழித் துணையின்றித் தமிழால் தனித்து இயங்க இயலும். இவ்வுண்மையை அறிந்தே, தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமன்றித் தழைத்தோங்கவும் செய்யும் என்று கூறினார் கால்டுவெல்.


கால்டுவெல்

உ) செம்மை

மக்களுக்கு ஒழுக்க வரம்பு தேவையானது போலவே மொழிக்கு இலக்கண வரம்பும் சொற்களுக்குத் திருந்திய வடிவும் இன்றியமையாதன. இவற்றைத் தமிழில் உள்ளதுபோல், வேறு எம்மொழியிலும் காண இயலாது. அதனாலேயே தமிழ், செந்தமிழ் எனப்பட்டது.

ஊ) மும்மை

முதற்சங்கத்திலிருந்தே இசையும் நாடகமும் இயற்றமிழோடு இணைந்து முத்தமிழென வழங்கி வரலாயிற்று. முதலிரு சங்கத்திலும் வழங்கிய இலக்கண நூல்கள் முத்தமிழ் பற்றியனவாகவே இருந்தன.

எ) இயற்கை வளர்ச்சி

எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பிய நூற்பா. தமிழில் இடுகுறிப் பெயர்கள் மிகவும் குறைவு. ஒருமை, பன்மை என்னும் இருவகை எண் மட்டுமே தமிழில் உண்டு. ஆனால், வடமொழியில் ஒருமை, இருமை, பன்மையென மூவகை எண் உள்ளன. தமிழில் உயிர்களுக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு; பொருள்களுக்குப் பால்வேறுபாடு இல்லை. ஆனால், பிறமொழிகளில் இத்தகைய பகுப்புமுறை இல்லை.

ஏ) இலக்கண நிறைவு

எல்லா மொழிகளும் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும். ஆனால், தமிழ் அவற்றுடன் சேர்த்து வாழ்வியலுக்கான பொருளிலக்கணத்தையும் கூறுகிறது. அதனையும் அகம், புறம் என இருவகையாகப் பகுத்துள்ளது.

ஐ) செய்யுள் சிறப்பு

பண்டைத் தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் செய்யுள் வடிவிலேயே இருந்தன. கலிப்பா முதலான செய்யுள் வகைகள் வேறு எம்மொழியிலும் இல்லை.

ஒ) அணிச்சிறப்பு

புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க உவமை, உருவகம் முதலிய அணிகளைப் பயன்படுத்திப் பாடல்களை இயற்றியுள்ளார்கள்.

ஓ) நூல் சிறப்பு

ஆயிரக்கணக்கான தமிழ் நூல்கள் இயற்கைச் சீற்றங்களால் அழிந்துபோயின. கிடைத்தனவற்றுள் சங்ககால நூல்கள் தமிழர்தம் மொழியையும் பண்பாட்டையும் விளக்குவனவாகத் திகழ்கின்றன.

இத்தகைய விழுமிய வியத்தகு பண்பாடுகளையும் நூல்களையும் கொண்டது தமிழ்மொழி. அத்தகைய உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியை உணர்ந்து கற்றுப் போற்றிக் காப்போம்.

தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ) உலகில் மிகப்பழைமையான நிலப்பகுதி __________.

ஆ) தமிழில் __________ பெயர்கள் மிகவும் குறைவு.

இ) எல்லா மொழிகளும் எழுத்துக்கும் __________ இலக்கணம் கூறும்.

ஈ) புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க உவமை, __________ பயன்படுத்தி அழகு சேர்த்தனர்.

**2. உரிய விடையைத் தேர்வு செய்க.**

அ) உலக மொழிகளில் சிறந்து விளங்குவது

1. தமிழ்மொழி 2. வடமொழி 3. மலையாளம்

ஆ) அம்மை, அப்பன் என்னும் சொல் வழங்கும் நாடு

1. கொங்குநாடு 2. வருசநாடு 3. நாஞ்சில்நாடு

இ) வாழ்வியலுக்கு இலக்கணம் கூறும் மொழி

1. வடமொழி 2. தெலுங்குமொழி 3. தமிழ்மொழி

### ஆ) குறுவினாக்கள்

1. உலக மொழிகளில் சிறந்தமொழி எது? எங்ஙனம்?
2. செம்மொழியாகக் கருதப்படும் மொழிகள் யாவை?
3. தமிழின் இளமை மாறாத் தன்மைக்குக் காரணம் என்ன?
4. தமிழ், உயர்தனிச் செம்மொழி எனப் போற்றப்படுவதேன்?
5. தமிழர்தம் பண்பாட்டை விளக்கும் நூல்கள் யாவை?

### இ) சிறுவினாக்கள்

1. செம்மொழித் தமிழின் தனிச்சிறப்புகள் யாவை?
2. தமிழ், தொன்மைமொழி என்பதற்குச் சான்று தருக.
3. தமிழ், தனித்தியங்கும் மொழி என்பதனைக் குறிப்பிடுக.

### ஈ) நெடுவினா

தமிழின் தனிப்பெருந்தன்மைகளை விளக்குக.

# ஊரும் பேரும்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ் மக்கள், தம் குடியிருப்புப் பகுதிகளை ஊர் என்னும் பெயரால் குறித்தனர். ஊர் என்னும் இத்தமிழ்ச்சொல் உலகின் பல நாடுகளில் வழங்குவது வியப்பளிக்கிறது. பாபிலோன் அருகே ஊர் என்னும் பெயரில் ஒரு நகரும், ஊர்நம்மு என்னும் ஊரும் உள்ளதாம். நாளடைவில் பல்வேறு ஊர்கள் உருவாக, நிலவகைக்கேற்பப் பெயரிட்டு மலையூர், காட்டூர், மருதூர், கடலூர் என வழங்க, மக்கள் தலைப்பட்டனர். இவ்வாறு தமிழகத்தில் ஊரும் பேரும் தோன்றின.

கான்பூர்
கோலாலம்பூர்
சிங்கப்பூர்
மணிப்பூர்
ஜனக்பூர்
ஜெய்ப்பூர்
ஜோத்பூர்

## குறிஞ்சி நில ஊர்கள்

தமிழகத்தில் வளமார்ந்த மலைகள் பலவுண்டு. மலையின் அருகே உள்ள ஊர்களுக்கு ஆனைமலை, சிறுமலை, திருவண்ணாமலை, நாகமலை, வள்ளிமலை, விராலிமலை எனப் பெயர்கள் வழங்குவதனைக் காணலாம்.

ஓங்கியுயர்ந்த நிலப்பகுதி மலை எனவும், மலையின் உயரத்தில் குறைந்ததனைக் குன்று எனவும், குன்றிலும் உயரத்தில் குறைந்ததனைக் கரடு எனவும், பாறை எனவும் பெயரிட்டு அழைத்தனர். இவற்றையொட்டி வாழ்ந்த மக்கள், தம்வாழ்விடங்களுடன் ஊர் என்னும் பெயரையும் சேர்த்து ஊர்ப்பெயர்களாக்கினர்.

குன்றை அடுத்துள்ள ஊர்கள் குன்றூர், குன்றத்தூர், குன்றக்குடி என வழங்கப் பெற்றன. குட்டப்பாறை, சிப்பிப்பாறை, பூம்பாறை, மட்டப்பாறை, மணப்பாறை, வால்பாறை என்னும் ஊர்ப்பெயர்களுக்கான காரணத்தையும் இதனால் அறியலாம்.

மலையைக் குறிக்கும் வடசொல், கிரி என்பதாகும். கிருஷ்ணகிரி, கோத்தகிரி, சிவகிரி, நீலகிரி என்பன மலையையொட்டி எழுந்த ஊர்ப்பெயர்களே.

குறிஞ்சி நிலமக்கள் மலையிலிருந்து பிற இடங்களுக்குச் சென்று தங்கிய போதும் தங்கள் நிலப்பெயரை மறவாது ஆழ்வார்க்குறிச்சி, கல்லிடைக்குறிச்சி, குறிச்சி, கள்ளக்குறிச்சி, மொடக்குறிச்சி எனப் பெயர் வைத்துக் கொண்டனர்போலும். குறிஞ்சி என்னும் சொல்லே மருவிக் குறிச்சியாயிற்று எனலாம்.

## முல்லை நில ஊர்கள்

தமிழகத்தில் மரஞ்செறிந்த காடுகள் பழங்காலத்தில் மலிந்திருந்தன. மரங்கள் சூழ்ந்த பகுதிக்குக் குடிபெயர்ந்த மக்கள், மரங்களுக்குப் பெயர்சூட்டி, அம்மரப்

பெயர்களோடு ஊர்ப்பெயர்களையும் வழங்கினர். அத்தி (ஆர்) மரங்கள் சூழ்ந்த ஊர் ஆர்க்காடு எனவும், ஆல மரங்கள் நிறைந்த ஊர் ஆலங்காடு எனவும், களாச்செடிகள் நிறைந்த பகுதி களாக்காடு எனவும், மாமரங்கள் செழித்திருந்த இடம் மாங்காடு எனவும், பனைமரங்கள் நிறைந்திருந்த ஊர் பனையபுரம் எனவும் பெயரிட்டுத் தம்மிடத்தைக் குறிப்பிட்டனர். காட்டின் நடுவில் வாழ்ந்த மக்கள், அங்குத் திரியும் விலங்குகளால் தமக்கும், தம் கால்நடைகளுக்கும் ஊறு நேராவண்ணம் வேலி கட்டிப் பாதுகாத்தனர். அவ்வூர்கள் பட்டி, பாடி என்றழைக்கப்பெற்றன. ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி, கோவில்பட்டி, சிறுகூடல்பட்டி, சின்னகொல்லப்பட்டி, பெரியகொல்லப்பட்டி முதலிய நூற்றுக்கணக்கான பட்டிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

ஆடு மாடுகள் அடைக்கப் படுமிடம் பட்டி எனப்படும்.

### மருதநில ஊர்கள்

நிலவளமும் நீர்வளமும் பயிர்வளமும் செறிந்த மருதநிலக் குடியிருப்பும் ஊர் என வழங்கப்பட்டது. பொங்கிப் பெருகி வழிந்தோடி வளங்கூட்டிய ஆறும், அதன் கரையில் இருந்த உயர்ந்த மரங்களும் ஊர்ப்பெயர்களில் கலந்து நிலைத்தன. ஆறுகள் பாயும் இடங்களில் ஆற்றூர் என வழங்கும் ஊர்கள் தவிராமல் இடம்பெற்றிருக்கும். இதுவே காலப்போக்கில் பேச்சுவழக்கில் ஆத்தூர் என மருவி வழங்குகிறது. கடம்பமரம் சூழ்ந்த பகுதி கடம்பூர், கடம்பத்தூர்; தென்னை சூழ்ந்த பகுதி தெங்கூர்; புளியமரங்கள் அடர்ந்த பகுதி புளியங்குடி, புளியஞ்சோலை, புளியம்பட்டி என வழங்கும் ஊர்கள் மரப்பெயர்த் தொகுப்பு அடிப்படையில் பெயரிடப்பட்ட ஊர்களாகும்.

நம் முன்னோர் குளம், ஏரி, ஊருணி முதலிய நீர்நிலைகளை உருவாக்கி, அவற்றோடு ஊர்ப்பெயர்களையும் இணைத்தனர். சீவலப்பேரி, புளியங்குளம், பேராவூரணி, மாங்குளம், வேப்பேரி என்பன இவ்வாறு தோன்றிய ஊர்ப்பெயர்களே.


வேலூர்க் கோட்டை

### நெய்தல் நில ஊர்கள்

பழங்காலத்தில் கடற்கரையில் உருவான பேரூர்கள் பட்டினம் எனவும், சிற்றூர்கள் பாக்கம் எனவும் பெயர் பெற்றிருந்தன. நெடிய கடற்கரையை உடைய தமிழகத்தில் பரதவர் வாழ்ந்த ஊர்கள் கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை எனப் பெயர் பெற்றிருக்கின்றன. இக்காலத்தில் மீனவர் வாழுமிடங்களின் பெயர்கள், குப்பம் என்னும் பெயரைச் சேர்த்துப் பல்கிப் பெருகி வருகின்றன.

### அரசும் ஊர்களும்

பெருவேந்தரும் குறுநில மன்னரும் அரண்கள் அமைத்து மக்களைக் காத்தனர். அரண்களுள் கோட்டையும் ஒன்று. கோட்டை சூழவிருந்த ஊர்களே கந்தர்வக்கோட்டை, கோட்டை, தேவக்கோட்டை, நாட்டரசன்கோட்டை, நிலக் கோட்டை, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை என வழங்கலாயின.

### திசையும் ஊர்களும்

நாற்றிசைப் பெயர்களும் ஊர்களுடன் குறிக்கப்பெற்றன. தம் ஊருக்குக் கிழக்கே எழுந்த ஊர்ப்பகுதியைக் கீழூர் எனவும், மேற்கே அமைந்த ஊர்ப்பகுதியை மேலூர் எனவும் பெயரிட்டு வழங்கினர். தெற்கே உள்ளது தென்பழஞ்சியாகவும் வடக்கே உள்ளது வடபழஞ்சியாகவும் பெயர் பெற்றன.

நாயக்க மன்னர்கள் தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்துத் தம் ஆளுகைக்குட்படுத்தினார்கள். அவர்கள் ஊர்ப்பெயர்களுடன் பாளையத்தைச் சேர்த்து வழங்கினார்கள். அவ்வாறு பெயர்பெற்ற ஊர்கள் ஆரப்பாளையம், இராசபாளையம், கணக்கம்பாளையம், குமாரபாளையம், கோபிச்செட்டிப்பாளையம், கோரிப்பாளையம், மேட்டுப்பாளையம் எனப் பலவாகும்.

காலச்சுழற்சி, ஆட்சிமாற்றம், வேற்றினக்கலப்பு முதலிய காரணங்களால் முதனிலை ஊர்ப்பெயர்களும் தனித்தன்மைமிக்க ஊர்ப்பெயர்களும் சிதைந்து, திரிந்து, மருவி, மாறி வழங்கலாயின.

கல்வெட்டுகளில் காணப்படும் மதிரை மருதையாகி இன்று மதுரையாக மாறியுள்ளது. கோவன்புத்தூர் என்னும் பெயர் கோயமுத்தூர் ஆகி, இன்று கோவையாக மருவியுள்ளது. இதேபோல, உங்கள் ஊர்ப்பெயரும் மாறிவிட்டதா? இல்லை, கன்னித்தமிழாய் மாறா இளமையோடு வழங்குகிறதா எனச் சிந்தனை செய்யுங்கள்.

## மாதிரி வினாக்கள்

### கட்டுரை வினாக்கள்

1. குறிஞ்சி, முல்லை நில ஊர்ப்பெயர்களை உரிய சான்றுகளுடன் விளக்குக.
2. மருதம், நெய்தல் நில ஊர்ப்பெயர்களுக்கான காரணங்களை எழுதுக.

# சார்பெழுத்துகளின் வகைகள்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : குழந்தைகளே வணக்கம்! மலர்விழி, உன் வீட்டில் யாரெல்லாம் இருக்கிறீர்கள்?

மலர்விழி : நான், அம்மா, அப்பா, தம்பி ஆகிய நால்வர் உள்ளோம், ஐயா.

ஆசிரியர் : சரி, வீட்டில் முதன்மையானவர்கள் நீயும் உன் தம்பியுமா?

மலர்விழி : இல்லை, ஐயா. அப்பாவும் அம்மாவும்தான்.

ஆசிரியர் : அப்படியா... நீயும் தம்பியும்...

மலர்விழி : அப்பா அம்மாவைச் சார்ந்து வாழ்கிறோம், ஐயா.

ஆசிரியர் : வீட்டில் முதல் பொறுப்பாளர்கள் பெற்றோர்கள். அவர்கள் தாமே தனித்து இயங்குகிறார்கள். எனவே, அவர்கள் முதன்மையானவர்கள். அதனைப்போலவே, நம் தமிழ்மொழியிலும் உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய்யெழுத்துகள் பதினெட்டும் தனித்து இயங்கி முதன்மைபெற்று விளங்குவதால், அவற்றை முதலெழுத்துகள் என்கிறோம். குழந்தைகளாகிய நீங்கள், உம் பெற்றோரைச் சார்ந்திருப்பதனைப் போலவே, முதலெழுத்துகளைச் சார்ந்துவரும் எழுத்துகளைச் சார்பெழுத்துகள் என்கிறோம். உடல் – வண்ணமிட்ட இச்சொல்லில் உ என்பது உயிர் எழுத்து. ட, ல் என்பன என்ன எழுத்துகள்?

வேலன் : ட உயிர்மெய் எழுத்து, ல் என்பது மெய்யெழுத்து, ஐயா.

ஆசிரியர் : ட் + அ = ட. ட் என்னும் மெய்யெழுத்தும், அ என்னும் உயிர் எழுத்தும் சேர்ந்து, ட என்னும் உயிர்மெய் எழுத்தாகப் பிறந்தது. இதனைப்போன்றே மற்ற உயிர்மெய் எழுத்துகளும் உயிரையும் மெய்யையும் சார்ந்து வரும்.

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனச் சார்பெழுத்துகள் பத்து வகைப்படும்.

மாணவர்கள் : முதலெழுத்துகள், சார்பெழுத்துகள்பற்றிக் கற்றுக்கொண்டோம். ஐயா.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் முதலெழுத்துகளை வட்டமிடுக.

அ) அன்பு ஆ) கடல் இ) இன்பம் ஈ) அம்மா உ) தமிழ்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

1. ஆய்தம் ________________ எழுத்துவகையைச் சார்ந்தது.
   அ) முதல் எழுத்து ஆ) மெய்யெழுத்து இ) சார்பெழுத்து

2. சார்பெழுத்துகள்________________ வகைப்படும்.
   அ) 10 ஆ) 18 இ) 12

3. முதலெழுத்துகளின் எண்ணிக்கை ________________
   அ) 216 ஆ) 30 இ) 247

### ஆ) குறுவினாக்கள்

1. முதலெழுத்து என்றால் என்ன ?
2. முதலெழுத்துகள் யாவை ?
3. சார்பெழுத்து என்றால் என்ன ?
4. சார்பெழுத்து எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
5. இரண்டு – இச்சொல்லில் இடம்பெற்றுள்ள சார்பெழுத்துகளை எழுதுக.
6. சார்பெழுத்துகள் இடம்பெறாத நான்கு சொற்களை எழுதுக.

## வகுப்பறைத்திறன்கள்

அடிப்படைத் திறன்களில் பயிற்சி பெறுவதற்காக வகுப்பறைத் திறன்கள் அமைக்கப் பட்டுள்ளன. இப்பகுதியில் பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்பாற்றல், கலந்துரையாடல், சொற்போர் முதலியனவும், மொழித்திறன் பயிற்சிகளும் உள்ளன. தமிழெண்களை அறிவோம், வாழ்க்கைத்திறன், மதிப்புக்கல்வி, பண்பு, தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம் ஆகிய பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

### அ) பேசுதல் திறன்

1. மொழியே நமக்கு முகவரி இத்தலைப்பில் ஐந்து மணித்துளி பேசுக.
2. வாய்மையே வெல்லும் என்னும் தலைப்பில் கலந்துரையாடுக.

### ஆ) படித்தல் திறன்

பின்வரும் உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் வாய்விட்டுப் படிக்க.

உழவன் காலையில் காளையை ஓட்டிச் சென்றான். அவன், கடும்பனியிலும் தன் பணியைச் சிறப்பாகச் செய்தான்; வாழைத் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சினான்; ஏழையாக இருந்தாலும் எடுத்த வேலையை வேளை தவிராது செய்து முடித்தான்.

தமிழ்

இ) எழுதுதல் திறன்

கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. (மாதிரி)

நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்
நெஞ்சார உண்மைதனைப் பேச வேண்டும்
ஓதிமறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்
ஒப்பற்ற ஆசான்சொல் கேட்க வேண்டும்
ஆதியிலே வாழ்ந்தமுறை நினைக்க வேண்டும்
ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும்
சோதிவடி வானவனைச் சொல்ல வேண்டும்
சுகம்பெறவே வாயார வாழ்த்த வேண்டும்.

வினாக்கள் :
1. எப்படி நிற்கவேண்டும் ?
2. எவ்வாறு உண்மை பேசவேண்டும் ?
3. யாரை மதிக்கவேண்டும் ?
4. யாருடைய சொல்லைக் கேட்கவேண்டும் ?
5. பாடலுக்கேற்ற தலைப்புத் தருக.

விடைகள் :
1. நீதிநெறி வழுவாமல் நிற்கவேண்டும்
2. மனமறிய உண்மை பேசவேண்டும்.
3. கல்வி, கேள்விகளில் சிறந்த சான்றோரை மதிக்கவேண்டும்.
4. ஒப்பற்ற ஆசான் சொல் கேட்கவேண்டும்.
5. வாழும் முறை – இப்பாடலுக்கேற்ற தலைப்பு.

பயிற்சி

1. கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
உயிர் களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா.

– பாரதியார்

வினாக்கள் :
1. எது பாவம் ?
2. மேலோர் எத்தன்மையர் ?
3. யாரிடத்தில் அன்பு செலுத்துதல் வேண்டும் ?
4. வாழும் முறை யாது ?
5. இப்பாடலுக்கேற்ற தலைப்புத் தருக.

ஈ) செயல்திட்டம் : பட்டி என முடியும் ஊர்ப்பெயர்களைத் தொகுக்க.

## மொழித்திறன் பயிற்சி

### அ) வல்லினம் மிகும் இடங்கள்

இரண்டு சொற்கள் ஒன்றாகச் சேரும்போது இடையில் க், ச், த், ப் ஆகிய நான்கு வல்லின மெய்யெழுத்துகள் எங்கெங்கு மிகும் என்பது குறித்து அறிவோம்.

அ, இ, உ என்பன சுட்டெழுத்துகள் என்பதனை ஆறாம் வகுப்பில் கற்றீர்கள்.

இந்த எழுத்துகளின்முன் வல்லின எழுத்துகளை முதலாக உடைய சொல் வந்து சேர்ந்தால், இடையில் அவ்வெழுத்தின் மெய்யெழுத்துத் தோன்றும். இதனை வல்லொற்று மிகுதல் என்பர்.

அ + பையன் = அப்பையன்

( அ முன் பை என்னும் பகர வருக்க எழுத்து வந்ததால், அவ்வெழுத்தின் மெய்யெழுத்தாகிய ப் தோன்றியது.)

அ + சட்டை = அச்சட்டை

இ + தோட்டம் = இத்தோட்டம்

இ + குளம் = இக்குளம்

உ + பக்கம் = உப்பக்கம்

( உ என்னும் சுட்டெழுத்தானது தற்பொழுது வழக்கத்தில் இல்லை)

எ என்னும் வினா எழுத்துக்குமுன் வல்லின எழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்தாலும் வல்லினம் மிகும்.

எ + குடம் = எக்குடம்

எ + சட்டை = எச்சட்டை

**நானே செய்வேன்**

அ + குடம் =

அ + கூட்டம் =

அ + பெட்டி =

எ + பள்ளி =

எ + சட்டம் =

எ + குழந்தை =

இ + சிறுமி =

இ + தோப்பு =

இ + புத்தகம் =

### ஆ) தமிழ் எண்களை அறிவோம்

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | க | 6 | சு |
| 2 | உ | 7 | எ |
| 3 | ங | 8 | அ |
| 4 | ச | 9 | கூ |
| 5 | ரு | 10 | கO |

**பயிற்சிக்கட்டம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

### இ) கட்டுரை எழுதுதல் : எங்கள் ஊர்

குறிப்புச் சட்டகம் : முன்னுரை, ஊர்ப்பெயர்க்காரணம், ஊர் எல்லைகள், ஊர் அமைப்பு, சிறப்புகள், முடிவுரை.

### ஈ) அகரவரிசையில் அமைத்தல்

1. பின்வரும் உயிர் எழுத்துகளை அகரவரிசையில் அமைக்க.

எ, ஔ, ஈ, உ, ஐ, ஊ, ஆ, அ, ஒ, இ, ஏ, ஓ.

2. பின்வரும் சொற்களை முதலெழுத்தைக்கொண்டு அகரவரிசையில் அமைக்க.
   ஏணி, ஈசல், எலி, ஒன்று, ஔவை, ஊர், அண்ணன், இல்லம், ஆடு, ஓடம், ஐந்து, உடை.
3. உயிரெழுத்தில் தொடங்காத சொற்களை வட்டமிட்டுக் காட்டுக.
   அம்மா, கண்ணன், எல்லை, ஏன், ஆசை, சட்டை, இன்பம், குடம்.

## வாழ்க்கைத்திறன்

### தன்னையறிதல்

(தன்னிடம் உள்ள திறமைகளை அறிந்து செயல்படுதலே தன்னையறிதல்)

மும்பையில் தமிழ்க் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. அக்குடும்பத்தில் எட்டு வயது நிரம்பிய சிறுமி இருந்தாள். அச்சிறுமிக்கு நாட்டியத்தில் மிகுந்த ஈடுபாடு இருந்தது; எட்டு வயதிலேயே அரங்கேற்றம்; பன்னிரண்டு வயதுக்குள் நாட்டியக் கச்சேரியில் பங்குபெற்று பெரும்புகழை அடைந்தாள்; நாட்டியச் செல்வி என்னும் பட்டமும் பெற்றாள். ஆனால், பதினெட்டு வயதில் அப்பெண்ணுக்கு எதிர்பாராதவகையில் ஏற்பட்ட கொடிய விபத்தால் அவளது வலக்காலை எடுக்க வேண்டியதாயிற்று.

இளவயதிலேயே பேரும்புகழும் பெற்ற அப்பெண் தன் எதிர்காலமே இருண்டுவிட்டது என மூலையில் முடங்கிவிடவில்லை. தன் நிலைமையை நன்கு உணர்ந்து கொண்டாள்; மருத்துவரிடம் சென்றாள். ‘செயற்கைக்கால் பொருத்திக் கொண்டால் நடக்கலாம், நீந்தலாம், ஏன் நாட்டியம் கூட ஆடலாம்’ என்று மருத்துவர் கூறினார்.

மருத்துவரின் கூற்றைக் கேட்ட அப்பெண், நான் மீண்டும் நாட்டியத்தில் ஈடுபடுவேன், வெற்றி பெறுவேன் என்று தனக்குள் சூளுரைத்துக் கொண்டாள். முதலில் செயற்கைக்காலைப் பொருத்திக் கொண்டு ஆடும்போது, அதனால் ஏற்பட்ட பெருந்துன்பத்தையும் பொறுத்துக் கொண்டாள்.

மருத்துவரின் ஊக்கமும் தன்னிடமுள்ள திறமையும் விடாமுயற்சியும் அப்பெண்ணை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்றன.

இரண்டே ஆண்டுகளில் நாட்டியப் பேரொளி என்னும் பட்டமும் அவரைத் தேடி வந்தது. அவரைப் புகழ் பெற்ற நடிகையாகவும் அடையாளம் காட்டியது.

அனைத்துக்கும் காரணம் அப்பெண்ணின் விடாமுயற்சியும் ஊக்கமும் தன்னம்பிக்கையும்தான். நடந்ததனையே நினைத்துக்கொண்டிருக்காமல், அதிலிருந்து வெளியேவர ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் வேண்டும். இழந்ததனையோ கடந்தகாலத்தையோ எண்ணிக் கொண்டிருப்பது வீண்வேலை. அடுத்தது என்னவெனச் சிந்தித்து வாழ்க்கையில் முன்னேறுதல் வேண்டும். உங்களிடமுள்ள வளம், திறமை, வாய்ப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தடைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறுங்கள். அதுதான் வாழ்க்கை; அதுதான் பயணம்; அதுவே முன்னேற்றம். கேள்விக்குறியாய் வாழாமல் வியப்புக்குறியாய் வாழ்ந்துகாட்டுங்கள். கைத்தட்டுபவராக இல்லாமல், கைத்தட்டல் பெறுபவராக வாழுங்கள்.

1. இந்நிகழ்வைப்போன்று நீங்கள் வேறு ஏதேனும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா ?
2. அப்பெண்ணின் நிலையிலிருந்து கற்பனை செய்து, உங்கள் செயல்பாடுகளை எழுதுங்கள்.

## மதிப்புக்கல்வி

### துணிவு

பன்னிரண்டு வயதிலேயே மற்போர், சிலம்பம், வாள்வீச்சு என வீரக்கலைகளை எல்லாம் கற்றுத் தேர்ந்திருந்தான் அச்சிறுவன். மதுரைக்கு அருகில் புலியொன்று ஊருக்குள் நுழைந்து கண்ணில்படுகின்ற மக்களையும் ஆடுமாடுகளையும் அழித்து வந்தது. அதனைக் கேள்வியுற்ற மக்கள் அச்சத்தோடு வாழ்ந்தனர். மக்களின் அச்சத்தைப் போக்கக் கருதிய அரசர் விசயரங்க சொக்கநாதர், புலியைக்கொன்று வீழ்த்துபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்நிலையில், ஒருநாள் ஊருக்குள் புகுந்த அப்புலியைத் தன்கையிலிருந்த ஆயுதத்தாலேயே கொன்று வீழ்த்தினான் அச்சிறுவன். அரசரும் பரிசுகள் பல வழங்கி அவனைச் சிறப்பித்தார்.

இளமையிலேயே துணிச்சலும், வீரமும்கொண்டு விளங்கிய அச்சிறுவன்தான் பின்னாளில் புலித்தேவன் என்று அனைவராலும் போற்றப்பட்டான். இந்திய விடுதலைக்குத் தென்னகத்திலிருந்து அந்நியரை எதிர்த்த சிறந்த வீரன் புலித்தேவனாவான்.

மாணவர்களே! நீங்களும் இளமையிலேயே துணிவுடன் செயல்படுங்கள். ஏனெனில், என்றும் ஒருவர்க்குத் துணிவே துணையாக நிற்கும்.

நீங்கள் துணிந்து செய்த செயல்களை நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.

### என் எதிர்காலத் திட்டங்கள்

(வருங்காலத்தில் நான்...)

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தமிழகத்தின் சிறப்புமரம் பனைமரமாகும். புன்செய் நில வரப்புகளின்மீது பனை மரங்களை உழவர்கள் வளர்த்தார்கள். போக்குவரத்துக்காகப் பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையை வேறு யாரும் கைப்பற்றிவிடுதல் கூடாது என்பதற்காகச் சாலையின் இருமருங்கிலும் பனைமரங்களை வளர்த்தனர். ஏரி, குளம், வாய்க்கால் முதலியவற்றின் கரைகளின்மீது மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும் அதன் உறுதித் தன்மைக்காகவும் பனைமரங்கள் பெருமளவில் வளர்க்கப்பட்டன. பனைமரங்கள் தரும் நுங்கு, பதநீர், கற்கண்டு முதலியன மனித உடலுக்குப் பெரும் நன்மையைச் செய்வன. மேலும், இடி மின்னல்களைத் தாங்கிக் கொண்டு நம் வாழ்வைக் காப்பன. பெரும்பான்மைத் தமிழர் அன்றுமுதல் இன்றுவரை பனைமரத்தின் ஓலைகளால்தான் கூரைவேய்ந்து வாழ்கிறார்கள். இவ்வாறு தமிழர்தம் வாழ்வோடு இணைந்திருக்கும் பனைமரங்கள் இன்று அழிவின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கின்றன. விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறும்போது, அந்நிலங்களிலுள்ள பனைமரங்களே முதல் களப்பலியாகின்றன. மேலும், செங்கல்சூளைகளுக்காகப் பல்லாண்டுக்காலம் நெடிதுயர்ந்த பனைமரங்கள் பெருமளவில் வெட்டிச் சாய்க்கப்படுகின்றன.


பனைமரங்கள் சல்லிவேர்களைக் கொண்டிருப்பதனால், கட்டடங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவது இல்லை. பனைமரங்கள் மிகுதியான நீரைக்கூட உறிஞ்சுவது இல்லை. இவ்வாறு தமிழகத்தின் சிறப்புமரமாக உள்ள பனைமரத்தைக் காத்தலும் வளர்த்தலும் தமிழர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வினாக்கள்

1. தமிழகத்தின் சிறப்பு மரம் ஆலமரம். (உண்மை /பொய்)
2. மனித உடலுக்கு நன்மைதரும் பொருள்களைப் பனைமரங்கள் தருகின்றன. (உண்மை/பொய்)
3. பனைமரங்கள் மண்ணரிப்பைத் தடுக்கும். (உண்மை /பொய்)
4. பனைமரங்கள் உங்கள் வீட்டுக்கு அருகில் வளர்ந்தால் அவை கட்டடத்தைப் பாதிக்கும். (உண்மை/ பொய்)
5. பனைமரங்கள் மிகுதியான நீரை உறிஞ்சி நிலத்தடி நீர் மட்டத்தைக் குறைத்துவிடும். (உண்மை/பொய்)

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

**காலடுவெல்லின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டு, உரிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்திப் பேசுக.**



| | | |
|---|---|---|
| பெயர் | : | கால்டுவெல் |
| பிறந்த ஆண்டு | : | 1815 |
| நாடு | : | அயர்லாந்து |
| தமிழகத்தில் வாழ்ந்த இடம் | : | இடையன்குடி (திருநெல்வேலி மாவட்டம்) |
| தமிழ்த்தொண்டு | : | திராவிடமொழிகளின் தாய் 'தமிழ்' என உலகுக்குப் பறைசாற்றியது. |
| இயற்றிய நூல் | : | திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் |
| மறைந்த ஊர் | : | கொடைக்கானல் |
| மறைந்த ஆண்டு | : | 1891 |

## எழுதுதல் திறன்

| அகரவரிசைப்படுத்துதல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

**கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.**

சார்பு, சுக்கு, சேய்மை, சொல்லாட்சி, சட்டம், சிறுகதை, செவ்வாழை, சீர், சோளம், சூடாமணி

__________ __________

__________ __________

__________ __________

__________ __________

__________ __________

| திருந்திய வழக்குச் சொற்கள் அறிதல் | செயல்பாடு – 4 |
|---|---|

அட்டவணையில் உள்ள பேச்சுவழக்குச் சொற்களுக்கு உரிய எழுத்துவழக்குச் சொற்களை எழுதுக.

| வ.எண் | பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|---|
| 1. | தலகாணி | தலையணை |
| 2. | வேர்வை | |
| 3. | வூடு | |
| 4. | வெல | |
| 5. | தண்ணீ | |
| 6. | வெளக்கு | |

| அறிதல் திறன் | செயல்பாடு – 5 |
|---|---|

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________
7. ____________________
8. ____________________
9. ____________________
10. ____________________
11. ____________________
12. ____________________
13. ____________________
14. ____________________
15. ____________________
16. ____________________
17. ____________________
18. ____________________

| கண்டறிதல் | செயல்பாடு – 6 |
|---|---|

குறிப்புகளைப் பயன்படுத்தி ஊர்ப்பெயர்களைக் கண்டறிக.

1. சொல்லின் முன்னுள்ள ஈரெழுத்து மயக்கம் தரும்; பின் ஈரெழுத்துப் பெருமை தரும்; இரண்டும் சேர்ந்தால் ஊராகும். ____________
2. சொல்லின் முன் பகுதி வீடு கட்ட உதவும்; பின் பகுதி ஆடை நெய்ய உதவும்; இரண்டையும் சேர்த்தால் ஊர்ப்பெயர் காணலாம். ____________
3. சொல்லின் முதல் பகுதி மேன்மை தரும்; இரண்டாம் பகுதி உணவைத் தரும்; மூன்றாம் பகுதி காவலைத் தரும்; மூன்றும் சேர்ந்தால் ஊராகும். ____________
4. சொல்லின் முதல் பகுதி மாட்டின் பெயராகும்; இரண்டாம் பகுதி வினாச் சொல்லாகும்; மூன்றாம் பகுதி இறைவனின் வீடாகும்; மூன்றும் சேர்ந்தால் ஊராகும். ____________
5. சொல்லின் முதல் பகுதி இறைவனின் இருப்பிடமாகும்; இரண்டாம் பகுதி ஆடுகளின் இருப்பிடமாகும்; இரண்டும் சேர்ந்தால் ஊராகும். ____________
6. சொல்லின் முதல் பகுதி மேன்மை; இரண்டாம் பகுதி மலர்; மூன்றாம் பகுதி வீட்டின் நுழைவிடம்; மூன்றும் சேர்ந்தால் ஊராகும். ____________
7. சொல்லின் முதல் பகுதி வெண்ணெய்யை உருக்கினால் கிடைப்பது; இரண்டாம் பகுதி காவலைத் தருவது; இரண்டும் சேர்ந்தால் சுரங்கம் இருக்கும் ஊராகும். ____________

| தொகுத்தல் | செயல்பாடு – 7 |
|---|---|

இந்திய மாநிலங்களின் பெயர்களையும் அங்குப் பேசப்படும் மொழிகளின் பெயர்களையும் தொகுக்க.

| மாநிலம் | மொழி | மாநிலம் | மொழி |
|---|---|---|---|
| 1. தமிழ்நாடு | தமிழ் | 4. | |
| 2. கேரளா | | 5. | |
| 3. | | 6. | |

| சொற்களஞ்சியம் பெருக்குதல் | செயல்பாடு – 8 |
|---|---|

‘மை’ என்னும் எழுத்தில் முடியும் சொற்களை உருவாக்குக.

(எ.கா.) பெண்மை


__________ மை    __________ மை    __________ மை

__________ மை    __________ மை    __________ மை

__________ மை    __________ மை    __________ மை

| சொற்களை நிரப்புதல் | செயல்பாடு – 9 |
|---|---|

விடுகதைகளுக்கான விடைகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.




1. பொழுது சாய்ந்தால் பூந்தோட்டம்; விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம்.
2. காலில்லாத பந்தல்; காணக்காண வியப்பு.
3. ஊருக்கெல்லாம் ஒரே கூரை; மழை வந்தால் ஒழுகும் கூரை.
4. ஊருக்கெல்லாம் ஒரே போர்வை.
5. எல்லையில்லாக் கடலிலே, எங்குப் பார்த்தும் படகு இல்லை.

6. யாரும் சுருட்ட முடியாத பட்டுத் துணியில் எங்குப் பார்த்தாலும் நீல நிறம்.
7. அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி; பாதி நாள் குறைவாள்; பாதிநாள் வளர்வாள்.
8. பால் இல்லாமல் பருப்பாள்; நோய் இல்லாமல் இளைப்பாள்.
9. ஓர் அகப்பை மாவாலே ஊரெல்லாம் கல்யாணம்.
10. இளமையில் கொம்புண்டு; வளர்ந்ததும் கொம்பில்லை.
11. ஒரு கோப்பைப் பசும்பால், ஊரெல்லாம் பெருகிடுமாம்.
12. ஒரே ஒரு வெள்ளை விளக்கு; ஊருக்கெல்லாம் வெளிச்சம் தரும்.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண்: 10

அ) பொருள் கூறுக. 2 x 1 = 2

1. பண் ______ 2. அகம் ______

ஆ) பிரித்து எழுதுக. 2 x 1 = 2

1. யாதொன்றும் ______ 2. பயக்குமெனின் ______

இ) கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக. 2 x 1 = 2

1. உலகின் மிகப்பழைமையான நிலப்பகுதி ______

அ) தக்காணப் பீடபூமி ஆ) குமரிக்கண்டம் இ) தார்ப்பாலைவனம்

2. தனித்து இயங்கும் எழுத்துகள் ______ .

அ) சார்பெழுத்து ஆ) ஆய்தஎழுத்து இ) முதலெழுத்து

ஈ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 2 x 1 = 2

1. திரு.வி.க. ______ இதழின் ஆசிரியராக இருந்தார்.
2. ஆற்றூர் பேச்சுவழக்கில் ______ என மருவியுள்ளது .

உ) ஒரிரு சொற்களில் விடையளிக்க. 2 x 1 = 2

1. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார் ?
2. தமிழ்மொழியின் செவ்வியல் இலக்கியங்கள் நான்கனை எழுதுக

## புறநானூறு

நெல்லும் உயிரன்றே நீரும்உயி ரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே. *

– மோசிகீரனார்

பொருள் : இவ்வுலகத்தார்க்கு நெல்லும் நீரும் உயிராகா. முறைசெய்து காத்தலினால் மன்னவனே உயிராவான். வேற்படை உடைய வேந்தனின் கடமை நாட்டைப் பேணிக் காப்பதே ஆகும்.

சொற்பொருள் : அறிகை – அறிதல்வேண்டும்; தானை – படை; கடனே – கடமை.

ஆசிரியர் குறிப்பு : இப்பாடலைப் பாடியவர் மோசிகீரனார். தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்னும் ஊரில் வாழ்ந்தவர். கீரன் என்பது குடிப்பெயராகக் குறிப்பிடப்படுகிறது. உடல் சோர்வினால் அரசுக்குரிய முரசுக் கட்டிலில் உறங்கியபோது, சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற அரசனால் கவரிவீசப் பெற்ற பெருமைக்குரியவர். இவர் பாடிய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றுள் உள்ளன.

நூல் குறிப்பு : புறம் + நான்கு + நூறு = புறநானூறு. இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது புறம்பற்றிய நானூறு பாடல்களின் தொகுப்பு. புறம் என்பது மறம் செய்தலும் அறம் செய்தலும் ஆகும். இந்நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த புலவர்களாலும் மன்னர்களாலும் பாடப்பெற்றவை. புறநானூற்றுப் பாடல்கள்மூலம் பண்டைய தமிழக மன்னர்களின் அற உணர்வு, வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு, கல்விப் பெருமை முதலியவற்றையும் புலவர்களின் பெருமிதம், மக்களுடைய நாகரிகம், பண்பாடு முதலியவற்றையும் அறியலாம்.

நூல் பயன் : புறநானூற்றைக் கற்பதனால், தமிழர்தம் பழங்காலப் புறவாழ்க்கையையும் பண்பாட்டையும் அறிந்து பெருமிதம் கொள்ளலாம்.

அரசனைக் குறிக்கும் வேறு பெயர்கள் : கோ, மன்னன், வேந்தன்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ) புறநானூறு ______________ நூல்களுள் ஒன்று.

ஆ) நெல்லும் உயிரன்றே என்னும் பாடலைப் பாடியவர் ______________ .

**2. உரிய விடையைத் தேர்வு செய்க.**

அ) மோசிகீரனார் உடல் சோர்வினால் முரசுக்கட்டிலில் உறங்கியபோது கவரி வீசிய மன்னன்

1. பாண்டியன் நெடுஞ்செழியன்
2. சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை
3. கோப்பெருஞ்சோழன்

### ஆ) பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

நெல், உயிர், நீர், வேந்தன்.

### இ) குறுவினாக்கள்

1. புறநானூறு – சிறு குறிப்பு எழுதுக.
2. மோசிகீரனாரைப் பற்றிக் குறிப்புத் தருக.
3. உலக உயிர்களைக் காக்கின்றவை எவை ?

### ஈ) சிறுவினா

வேந்தனின் கடனாகப் புறநானூறு குறிப்பிடும் செய்தி யாது ?

# முதுமொழிக்காஞ்சி

## சிறந்த பத்து

(சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பது சிறந்த பத்து.)

1. ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
   ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.
2. காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
3. மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.
4. வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.
5. இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை.
6. நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.
7. குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.
8. கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
9. செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
10. முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று.

– மதுரைக் கூடலூர்கிழார்

பொருள் : 1. கடல்சூழ்ந்த இவ்வுலக மக்கள் அனைவர்க்கும் கற்றலைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது. 2. பிறர்க்கு அன்புகாட்டுவதிலும் செயல்களால் அவர் போற்றும்படி நடத்தலே மேலானது. 3. அறிவுநுட்பத்தினும் கற்றபொருளை மறவாமை மேன்மையானது. 4. வளமான வாழ்க்கையைக்காட்டிலும் வாய்மை உடையவராக வாழ்வது உயர்ந்தது. 5. இளமையைக் காட்டிலும் நோயற்ற வாழ்வே சிறந்தது. 6. அழகுடையவராக இருப்பதினும் நாணமுடையவராக இருப்பதே மேலானது. 7. குலப்பெருமையைவிட ஒழுக்கமுடைமையே சிறந்தது. 8. சிறந்த நூல்களைக் கற்றலைவிடவும் கற்றறிந்த பெரியாரைப் பின்பற்றி யொழுகுதல் சிறப்பானது. 9. பகைவரைத் தண்டிப்பதனைவிட, அவருக்கு நன்மைசெய்தல் சிறந்தது. 10. முற்காலத்துப் பெருகிய செல்வத்தைப் பின்னர்க் குறைவுபடாமல் காத்தலே சிறந்தது.

சொற்பொருள் : ஆர்கலி – நிறைந்த ஓசையுடைய கடல்; காதல் – அன்பு, விருப்பம்; மேதை – அறிவு நுட்பம்; வண்மை – ஈகை, கொடை; பிணி – நோய்; மெய் – உடம்பு; நாணம் – செய்யக் கூடாததனைச் செய்ய அச்சப்படுதல்; சிறந்தன்று – சிறந்தது; வழிபடுதல் – போற்றி வணங்குதல்.

ஆசிரியர் குறிப்பு

பெயர் : மதுரைக் கூடலூர்கிழார்

பிறந்த ஊர் : கூடலூர்

சிறப்பு : இவர்தம் பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் கையாண்டுள்ளார்கள்.

காலம் : சங்க காலத்துக்குப்பின் வாழ்ந்தவர்.

நூல் குறிப்பு : முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இந்நூல், உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்புகிறது. இந்நூல், அறவுரைக்கோவை எனவும் வழங்கப்படுகிறது. இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் பத்துச் செய்யுள்கள் உள்ளன. இந்நூல் நூறு பாடல்களால் ஆனது.

நூல் பயன் : முதுமொழிக்காஞ்சி கற்போரின் குற்றங்களை நீக்கி, அறம் பொருள் இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) முதுமொழிக்காஞ்சி என்பது ________ திணையின் துறைகளுள் ஒன்று.

ஆ) முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் ________.

இ) இளமையைக் காட்டிலும் ________ சிறந்தது.

2. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

அ) முதுமொழிக்காஞ்சி ________ என வழங்கப்பெறும்.

1. நன்னெறி 2. அறநூல் 3. அறவுரைக்கோவை

ஆ) கற்றலைவிடவும் சிறந்தது

1. அறிவுடைமை 2. பொறையுடைமை 3. ஒழுக்கமுடைமை

3. பிரித்து எழுதுக.

அ) மக்கட்கெல்லாம் ஆ) பிணியின்மை இ) குலனுடைமை

4. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

உலகம், மக்கள், ஒழுக்கம், வழிபடுதல்.

### ஆ) குறுவினாக்கள்

1. முதுமொழிக்காஞ்சி – சிறுகுறிப்பு எழுதுக.
2. மதுரைக் கூடலூர்கிழார் பற்றிக் குறிப்பு எழுதுக.
3. மேதை, வண்மை இவற்றைக் காட்டிலும் சிறந்தன யாவை ?
4. நலனுடைமையின் சிறந்தது எது ?

### இ) சிறுவினா

முதுமொழிக்காஞ்சி குறிப்பிடும் சிறந்த பத்துகள் எவை ? விளக்குக.

# மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்



யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தார் ஒருவர் அவர்தாம், உ.வே.சாமிநாதர். பின்னாளில் அவரே அனைவராலும் தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்பட்டார். இத்தகைய மாணவரை உருவாக்கிய பெருமை அவர்தம் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரையே சாரும்.

ஆசிரியரால் மாணவன் சிறப்படைவதுபோலவே ஓராசிரியரும் நல்ல மாணவர்களால் பெருமையடைகிறார் என்பதற்கு இவ்விருவருமே சான்றாவர்.

மீனாட்சிசுந்தரனார் நயமும் சுவையும் மிக்க பாடல்களை இயற்றிப் புதுப்புது நூல்களைப் படைத்தளித்தார். தமிழ்ப்பாடம் சொல்லிச் சொல்லி மாணவர்களைத் தமிழின்பால் ஈர்த்தார். அதனால், மாணவர்கள் தமிழின்மீது தீராக்காதல்கொண்டு தமிழை ஈடுபாட்டுடன் கற்றார்கள். அம்மாணவர்கள் தேமதுரத் தமிழை உலகெலாம் பரவச் செய்தார்கள்.

### இளமையும் கல்வியும்

மீனாட்சிசுந்தரனார் 1815ஆம் ஆண்டு ஏப்ரல்திங்கள் ஆறாம் நாளன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எண்ணெய்க்கிராமத்தில் பிறந்தார். அவர்தம் பெற்றோர் சிதம்பரம் –அன்னத்தாச்சியார் ஆவர். மீனாட்சிசுந்தரனார் இளமையில் தமது தந்தையாரிடம் தமிழ் கற்றார்; இலக்கிய இலக்கண நூல்களில் நன்கு புலமை பெற்றார். சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றார்.

### கல்வியே வாழ்க்கை

மீனாட்சிசுந்தரனார் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் திரிசிரபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) வாழ்ந்தார். அதனால், அவரைத் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார் என்றே அழைத்தனர். அவரிடம், 'கற்கவேண்டும்' என்ற வேட்கை தணியாததாக இருந்தது. அதனால், எப்பொழுதும் நூல்களைப்

படித்துக்கொண்டே இருப்பார். அவர் தமிழ் இலக்கியத்திலும் சைவ சமய நூல்களிலும் ஆர்வம் கொண்டிருந்தார்.

### தமிழ் கற்பித்தல்

மீனாட்சிசுந்தரனார் தமிழ் கற்கவேண்டுமென்று விரும்பியவர்களுக்கெல்லாம் கற்றுக்கொடுத்து வந்தார்; சாதி, சமயம் பாராது அனைவருக்கும் கல்வி கற்பித்து வந்தார். மீனாட்சிசுந்தரனார் பெருஞ்செல்வராக இல்லை என்றாலும், மாணவர் சிலருக்கு உண்டியும் உறையுளும் அளித்துக் கற்பித்திருக்கிறார். அதன் காரணமாக அவருடைய புகழ் எங்கும் பரவியது. குலாம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், சாமிநாதர் ஆகியோர், அவர்களுள் குறிப்பிடத்தக்க மாணவர்கள்.

திருவாவடுதுறையில் ஆதீன வித்துவானாக இருக்கவேண்டுமென்று ஆதீனத் தலைவர், மீனாட்சிசுந்தரனாருக்கு அழைப்பு விடுத்தார். மீனாட்சிசுந்தரனார் அப்பதவியில் சிலகாலம் இருந்து அரும்பணி ஆற்றினார். இவர் திருவாவடுதுறையில் வாழ்ந்த காலத்தில்தான் உ.வே.சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார். அவரைப்போன்ற நன்மாணாக்கர் பலரைப் பெற்றதால் மீனாட்சிசுந்தரனார் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

மீனாட்சிசுந்தரனார் செய்த தமிழ்த்தொண்டுகள் கணக்கிலடங்கா. இவர், தம்வாழ்வின் பெரும்பகுதியை, மாணவர்களுக்குக் கற்பிப்பதிலேயே செலவழித்தார். கற்பித்ததால் அவருடைய அறிவும் வளர்ந்தது. மாணவர்களுக்குப் பாடம் சொல்லும்பொழுது அவர் ஏடுகளைப் பார்க்கவே மாட்டார். அவற்றிலுள்ள அனைத்தும் அவருக்கு மனப்பாடமாகவே இருந்தன. அவர் பேச்சுத் திறமையில் சிறந்திருந்தார். பிறருக்கு விளக்கும்போது, மிகத் தெளிவாக நல்ல தமிழில் பேசி விளக்கும் திறமை பெற்றிருந்தார். ஆகையால், அவருடைய மாணாக்கர்கள், அவரிடம் கற்பதனை மிகவும் விரும்பினார்கள்.

### தமிழ்த்தொண்டு

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். தமிழகத்திலுள்ள பல்வேறு கோவில்களுக்கு நடைப்பயணம் மேற்கொண்டு அக்கோவில்களைப் பற்றித் தலபுராணங்கள் பல இயற்றியுள்ளார். அத்தல புராணங்களில் கோவில் வரலாறு, சிறப்புகள், இறைவனின் பெருமைகள் முதலியன இடம்பெற்றுள்ளன.

### பண்பு நலன்கள்

மீனாட்சிசுந்தரனார் அருங்குணமும் நிறைந்த புலமையும் தளராத நாவன்மையும் படைத்தவர். அவர், பலரால் பாராட்டப்பெற்றுள்ளார்; ஆயினும், தம்மைத்தாமே புகழ்ந்து பேசும் தற்பெருமை அவரிடம் இல்லை. மிகுந்த நகைச்சுவை உணர்வுமிக்க இவர், இறுதிவரை நிறைகுடமாகவே வாழ்ந்தார். ஒருமுறை அவருடைய நண்பர் ஆறுமுகம் என்பவர், தம்முடைய குடும்பத்

தொடர்பாகக் கும்பகோணத்தில் ஒருவருக்குப் பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்தார். அதில், சாட்சிக் கையொப்பமிட வந்த ஒருவருடைய இருப்பிடம் கும்பகோணத்திலுள்ள சுண்ணாம்புக்காரன் தெரு என்பது. அதனை நீற்றுக்காரத் தெரு எனவும் வழங்குவர். இந்த இரண்டில் எதனைப் பெயருக்கு முன்னால் சேர்க்கலாம் என்று அவர் கேட்டபொழுது, மீனாட்சிசுந்தரனார் இரண்டும் வேண்டாம், மூன்றாவது தெரு என்று போட்டுவிடும் என்று சொன்னார். அதிலுள்ள நகைச்சுவை உணர்வை அனைவரும் அறிந்து மகிழ்ந்தனர். மூன்றாவது என்பது சுண்ணாம்பைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். (வெற்றிலை + பாக்கு + சுண்ணாம்பு)

ஒருநாள் அவர், காய்ச்சலுற்றுத் துன்புற்றார். அப்பொழுது மாணவர் ஒருவரை நூல் முழுவதனையும் தொடர்ந்து படிக்குமாறு கேட்டார். உடல்நிலை சரியில்லாதபோது சற்று ஓய்வெடுத்தால் நல்லதென்று மற்றவர் கூற, நோய்க்கு மருந்து இலக்கியம் என்றார். இதன்மூலம் அவர் தமிழ்மீது கொண்ட பற்றை அறியலாம். இவர் 01 .02. 1876 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் போன்றோருடைய புலமைத் திறத்தை நாமறிந்து மகிழவேண்டுமெனில், அவர்தம் நூல்களைப் படித்தல் வேண்டும். அவர்களுடைய நூல்களைப் படிப்பதோடு, அந்நூல்கள் கூறும் நற்கருத்துகளைப் பின்பற்றுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உ.வே. சாமிநாதரின் ஆசிரியர் பெயர் ______________ .
2. நோய்க்கு மருந்து ______________ என்பார் மீனாட்சிசுந்தரனார்.
3. மீனாட்சிசுந்தரனார் ______________ பாடுவதில் வல்லவர்.

### ஆ) குறுவினாக்கள்

1. மீனாட்சிசுந்தரனார் இளமையில் எவ்வாறு தமிழ் கற்றார்?
2. மீனாட்சிசுந்தரனாரிடம் தமிழ் கற்றோர் யாவர்?
3. மீனாட்சிசுந்தரனாரின் நகைச்சுவையை விளக்குக.

### இ) சிறுவினா

மீனாட்சிசுந்தரனாருக்குத் தமிழ்மீதுள்ள பற்றினை விவரிக்க.

### ஈ) நெடுவினாக்கள்

1. மீனாட்சிசுந்தரனாரின் பண்புநலன்களை விளக்குக.
2. மீனாட்சிசுந்தரனார் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைக் கூறுக.

## தாய்மொழியின் அருமை

அறுபது வயது பெரியவர் அவர். அமெரிக்காவில் வசிக்கும் தம் ஒரே மகனைக் காணத் தன் மனைவியுடன் ஆவலோடு புறப்பட்டார். ஆறு மாதக்காலம் அங்கு வசிக்கப் போவதாகத் தன் நண்பர்களிடம் பெருமையாகக் கூறிச் சென்றார். ஆனால், என்ன ஆனதோ தெரியவில்லை ? மூன்று மாதங்களுக்குள் திரும்பி வந்துவிட்டார். மனவருத்தத்துடன் காணப்பட்ட அவரை, அவருடைய நண்பர், "ஏன் சீக்கிரம் வந்துவிட்டீர்கள்" என்று கேட்க, மகிழ்ச்சி மறைந்துபோன இறுக்கமான முகத்துடனும், கனத்த இதயத்துடனும் பெரியவர் சொன்னார், "உணவு உண்டு மகிழ்ந்து, ஊர் சுற்றிப் பார்த்து, உணர்வுகளைப் பகிர்ந்து பேசிப்பேசி மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசையில்தான் சென்றோம். ஆனால், அங்கேயோ என் மகன் ஒருபுறம், மருமகள் மறுபுறம். அவர்களுக்கு வேலை வேலை எப்போதும் வேலைதான். பேசுவதற்கும் நேரமில்லை. வீட்டில் உணவு சமைப்பதற்கும் நேரமில்லை. தகர டப்பாவில் அடைக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்ட உணவை நாமே சூடாக்கிச் சாப்பிட வேண்டிய சூழ்நிலை, பொறுத்துக்கொள்வதனைத் தவிர வேறு வழி இல்லை.

பேரப்பிள்ளைகளுடனாவது பாட்டுப்பாடி, கதைகள் சொல்லி, சோறூட்டி மகிழலாம் என்றால் அவர்களுக்கு ஆங்கிலம் மாத்திரமே தெரியும். எங்களுக்கோ தமிழ் மட்டுமே தெரியும். தாய்மொழி அவர்களுக்கு அன்னியப்பட்ட காரணத்தினால், எங்களோடு ஒட்டமுடியவில்லை. நானும் என் மனைவியும் அவர்களோடு உறவாடலாம் என்று எண்ணிய கனவெல்லாம் தகர்ந்து போனது. மகனும் மருமகளும் வெளியே வேலைக்குச் செல்ல, பேரக்குழந்தைகள் தத்தம் கணினி விளையாட்டில் மூழ்கிவிட, அந்த வீட்டில் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள முடியாத மரக்கட்டைப்போல் ஆனோம். சிரிப்பு மறந்து போனது. மன அழுத்தம், சோகம் எங்களைச் சீக்கிரம் ஊர் திரும்ப வைத்தது" என்று நண்பரிடம் கூறினார்.

தொப்புள் கொடி உறவுகள் அறுந்துபோகாமல் காப்பது தாய்மொழி மாத்திரமே!

பிறமொழிகள், பிழைப்பதற்கு – தாய்மொழி ஒன்றே வாழ்வதற்கு!

"நாளை என் தாய்மொழி சாகுமானால் – இன்றே
நான் இறந்து விடுவேன்" என்றான் ருஷ்யக் கவிஞன் ரசூல் கம்சதேவ்.

நன்றி : வீ. கே. டி. பாலன், 'சொல்லத் துடிக்குது மனசு' நூலிலிருந்து எடுத்தாளப்பட்டது.



### தமிழ் படித்தால்...

அறம் பெருகும் தமிழ்படித்தால், அகத்தில் ஒளிபெருகும்
திறம் பெருகும் உரம் பெருகும், தீமைக் கெதிர் நிற்கும்
அறம் பெருகும் ஆண்மை வரும் மருள்விலகிப் போகும்
புறம் பெயரும் பொய்மை யெலாம், புதுமை பெறும் வாழ்வே!

– பெருஞ்சித்திரனார்.

# கோவூர்கிழார்

கோவூர்கிழார் உறையூருக்கு அருகிலுள்ள கோவூரில், வேளாளர் மரபில் பிறந்தார்; இளமைப்பருவத்திலேயே கல்வி கேள்வியில் சிறந்து விளங்கினார். இவர் சான்றோர் பலரை அணுகி இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார்; கவிதைகள் எழுதுவதில் ஆற்றல் பெற்றார்; நற்பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தார்; நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகியவற்றில் இவரின் பதினெட்டுப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நலங்கிள்ளி என்ற மன்னன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இம்மன்னன், கோவூர்கிழாரின் புலமையைப் பலர் வாயிலாகக் கேட்டு அறிந்தான். தம் அவைக்கு அவரை அழைத்து, அரசு அவைக்களத் தலைவர் ஆக்கினான். அவரிடம் நட்புக்கொண்டு பல சிறப்புகளைச் செய்தான். மகிழ்ந்த புலவர், நலங்கிள்ளியின் புகழ் விளங்கப் பல பாடல்களை இயற்றினார். இவர் அஞ்சா நெஞ்சர்; யார் தவறு செய்தாலும் அத்தவற்றினைச் சுட்டிக்காட்டி, முறையாக ஏற்றுக்கொள்ளும் வகையில் இனிமையாகச் சொல்லித் திருத்துவதில் வல்லவர்; அரசர்களானாலும், பிறரானாலும் கோவூர்கிழார் சொல்லுவதனை ஏற்றுச் செயல்பட்டுள்ளனர்.

### போரைத் தவிர்த்த புலவர்

சோழர் மரபில் தோன்றிய நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நெடுங்காலம் பகைமை இருந்து வந்தது. ஒருமுறை இருவருக்கும் போர் மூண்டது. உறையூருக்கு அருகில் ஆவூர்க்கோட்டை இருந்தது. நலங்கிள்ளியின் படையினர் அக்கோட்டையை முற்றுகையிட்டனர்; நாள் பல கழிந்தன. கோட்டையினுள் இருந்த மக்கள் துன்புற்றனர்.

கோவூர்கிழார் கோட்டையினுள் சென்றார்; நெடுங்கிள்ளியைக் கண்டார். "நெடுங்கிள்ளியே! கோட்டைக்குள் யானைகள் உணவின்மையால் பிளிறுகின்றன; குழந்தைகள் பாலின்றிக் கதறுகின்றன; மக்கள் குடிக்க நீரின்றித் தவிக்கின்றனர். நீ அறத்தினை உடையவனானால், வெற்றிபெற்ற நலங்கிள்ளியிடம் கோட்டையை ஒப்படைத்துவிட்டு வெளியேறு; அல்லது நீ வீரனானால் எதிர்த்துப் போரிடு. இரண்டில் எதனையும் செய்யாமல் கோட்டை மதிலுக்குள் ஒடுங்கியிருப்பது நாணும் தன்மையுடையது" என்றார்.

கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்ட நெடுங்கிள்ளி, ஆவூர்க்கோட்டையைத் திறந்துவிட்டு உறையூர்க் கோட்டைக்குள் புகுந்து கதவடைத்துக் கொண்டான். செய்தியறிந்த

நலங்கிள்ளி வெகுண்டெழுந்தான்; உறையூர்க்கோட்டையை முற்றுகையிட்டான். கோவூர்கிழார் அவ்விருவரையும் அமைதிப்படுத்த எண்ணினார்;உறையூர்க்கோட்டைக்குள் புகுந்து நெடுங்கிள்ளியை மீண்டும் கண்டார்.

“நெடுங்கிள்ளியே! உன்னோடு போர் புரிய, கோட்டைக்கு வெளியே முற்றுகை யிட்டிருப்பவன் பனம்பூ மாலையணிந்த சேரனும் அல்லன்; வேப்பம்பூ மாலையணிந்த பாண்டியனும் அல்லன்; சோழருக்குரிய ஆத்திமாலையணிந்தவனே. உம் இருவருள் எவர் தோற்பினும் தோற்பது சோழர் குடியே. இருவரும் வெற்றி பெறுவது உலக இயற்கையன்று. ஒருகுடியைச் சேர்ந்த நீவிர் இருவரும் பகைமை கொள்வது பெருமை தரும் செயல் ஆகாது. உங்கள் பகைவர்களுக்கு நும் செயல் மகிழ்ச்சிதரும். ஆதலின் போரை ஒழிமின் என்றார். கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்ட நெடுங்கிள்ளி உறையூர்க்கோட்டையை நலங்கிள்ளியிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறினான்.

### மலையமான் பிள்ளைகளைக் காத்தல்

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் புகார் நகரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான். இவன் சிறந்த கவிஞன் ஆவான். இவன் புலவர் பலரால் பாராட்டப்பட்ட கொடை வள்ளல். புலவர்களுக்குக் கொடையளித்துப் புகழ் பெற்றவன். கோவூர்கிழார் கிள்ளிவளவனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

கடையேழு வள்ளல்களுள் ஒருவரான மலையமான் திருமுடிக்காரிக்கும், கிள்ளிவளவனுக்கும் பெரும்பகை இருந்தது. மலையமான் சிறந்த வீரன். அவனுக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். மலையமானை அடக்கமுடியாத சோழன் கிள்ளிவளவன், அவன் பிள்ளைகள் இருவரையும் கவர்ந்து சிறை வைத்தான். அவர்களைத் தன் பட்டத்து யானையின் காலால் இடறிக் கொல்ல முடிவு செய்தான். பகைவன் மரபை அழிக்க இதுவே வழியெனக் கருதினான்; அதற்கான நாளையும் குறித்தான். சிறுவர் இருவரும் யானையைக் கண்டு மருண்டனர்; அஞ்சி நடுங்கினர்; வியந்து நோக்கினர்.

கோவூர்கிழார், அவ்விடத்திற்கு விரைந்தார்; யானையின் அருகில் சென்றார். இருபிள்ளைகளையும் தம் இருகரத்தால் தழுவி அணைத்துக் கொண்டார். அவர் கிள்ளிவளவனின் முகத்தைக் கண்டார்; சினத்தால் அவன் முகம் கடுகடுத்துக் காணப்பட்டது; கண்கள் சிவந்திருந்தன; கோவூர்கிழார் கிள்ளிவளவன் செயலுக்கு வருந்தினார்.

“கிள்ளியே! புறாவுக்கு வந்த துன்பத்தையும் பசுவுக்கு உற்ற துயரத்தையும் நீக்கிய சோழர் மரபில் பிறந்தவன் நீ! இப்பிள்ளைகளோ வறுமையுற்றோருக்கு வாரி வழங்கும் வள்ளல் மரபில் பிறந்தவர்கள். இப்பொழுது இவர்கள், தம் அழுகையையும் மறந்து களிற்றைக் கண்டு வியந்து நிற்கின்றார்கள். இவர்கள், இதுவரை கண்டறியாத துன்பத்தை அடைந்துள்ளார்கள். மன்னா, நான் சொன்னதனைச் செவிமடுத்துக் கேட்டாய். இனி, நீ விரும்பியதனைச் செய்வாயாக” என்று கிள்ளிவளவனின் நெஞ்சில் பதியுமாறு கூறினார்.



முன்னோர் பெருமையை நினைவூட்டினார் கோவூரார். அதனால், கிள்ளி வளவன் தான் செய்யவிருந்த பெரும்பிழையைத் தவிர்த்தான். சிறுவர் இருவரையும் யானையின் முன்னிருந்து விடுவித்த கோவூர்கிழார், பிள்ளைகளை மலையமான் திருமுடிக்காரியிடம் ஒப்புவித்து மகிழ்ந்தார்.

### இளந்தத்தனாரைச் சிறைமீட்ட செம்மல்

சோழன் நெடுங்கிள்ளி உறையூரில் இருந்தான். சோழன் நலங்கிள்ளியைப் பாடிப் பரிசு பெற்ற புலவரான இளந்தத்தனார் நெடுங்கிள்ளியை நாடிச் சென்றார். அவனைப் பாடிப் பரிசுபெற நினைத்தார். நெடுங்கிள்ளியைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடினார். புலவர், தமக்குப் பரிசு கிடைக்கும் என எதிர்பார்த்தார். நெடுங்கிள்ளியோ மாறாக நினைத்தான். தன் பகைவன் நலங்கிள்ளியிடமிருந்து வந்த ஒற்றன் எனப் புலவரை ஐயங்கொண்டான். அரசனின் ஐயத்தைப் போக்க, அப்போது அவன் அருகில் ஒருவருமிலர். ஆகவே, புலவரைச் சிறையிலடைத்துப் பின்பு கொல்லத் துணிவு கொண்டான். கோவூர்கிழார் செய்தியறிந்தார்; விரைந்து சென்றார்; நெடுங்கிள்ளியின் முன் நின்றார். அவர், உண்மையை அஞ்சாமல் உரைத்தார்.

“நெடுங்கிள்ளியே! பழுமரம் இருக்கும் இடத்திற்குப் பறவைகள் நாடிச் செல்வது போலப் புலவர் வள்ளல்களை நாடிச் செல்வர்; நெடுந்தொலைவு நடந்தே செல்வர். தம் ஆற்றலுக்கேற்பப் புகழ்ந்து பாடுவர்; பரிசு பெற்று மகிழ்வர்; தாம் பெற்ற பரிசினை உற்றார்க்கும் உறவினர்க்கும் பிறருக்கும் பகிர்ந்தளித்துத் தாமும் உண்டு மகிழ்வர். தமக்குப் பரிசில் அளித்தாரைச் சிறப்பிப்பது புலவர் தம் வழக்கம். இத்தகைய புலவர் வாழ்க்கை, பிறருக்குத் தீங்கு செய்ய அறியாது” என்னும் கருத்தமைந்த பாடலைப் பாடினார்.

அஃது, அவன் தவற்றை உணரச் செய்தது. நெடுங்கிள்ளி திருந்தினான். கோவூர்கிழார் இளந்தத்தனாரைச் சிறை மீட்ட செம்மலானார். கோவூர்கிழார் முறையாக இனிதாகச் சொல்லும் சொல்வன்மையால், சொல்லுவதனை நுட்பமாகக் கேட்டு அறியும் மன்னர்கள் செவிமடுத்து ஏற்றுப் பயன்பெற்றார்கள். நெடுங்கிள்ளி, தனது கோட்டையை நலங்கிள்ளியிடம் ஒப்படைத்தான்; யானையின் காலில் அகப்பட்டு இறக்க இருந்த திருமுடிக்காரியின் பிள்ளைகள் காப்பாற்றப்பட்டார்கள்; ஒற்றரெனச் சிறையில் அடைபட்ட இளந்தத்தனார் விடுதலை பெற்று மகிழ்ந்தார். கோவூர்கிழார்போல் சொல்லும் திறனும் அதனைக் கேட்டு ஏற்றுச் செயல்படும் பண்பும் மன்னர்க்கு இருந்ததால் மக்கள் நலமுற்றனர்.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். – குறள், 648

நன்றி : சே. சுந்தரராசன், குறள்நெறி இலக்கியக் கதைகள்

## மாதிரி வினாக்கள்

### கட்டுரை வினாக்கள்

1. நெடுங்கிள்ளி, நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் எவ்வாறு அமைதிப்படுத்தினார்?
2. மலையமான் பிள்ளைகளைக் கோவூர்கிழார் எவ்வாறு காப்பாற்றினார்?
3. இளந்தத்தனாரைக் கோவூர்கிழார் எவ்வாறு சிறைமீட்டார்?

### செயல் திட்டம்

நீ அறிந்த புலவரின் வாழ்க்கை வரலாற்றினை எழுதி வருக.

# உயிர்மெய், ஆய்தம்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : அனைவருக்கும் வணக்கம். கடந்த வாரம் இலக்கணத்தில் எந்தப் பகுதியைக் கற்றீர்கள்?

வளர்மதி : சார்பெழுத்துகளைக் கற்றோம், ஐயா.

ஆசிரியர் : பொன்னி, சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

பொன்னி : பத்து வகைப்படும், ஐயா.

ஆசிரியர் : முருகா, சார்பெழுத்துகளின் வகைகளைக் கூறு.

முருகன் : உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம், ஐயா.

ஆசிரியர் : நன்று. நன்றாக நினைவில் வைத்திருக்கிறாய்! வளவா! கண், காண், கிளி இவற்றில் முதலிலுள்ள எழுத்துகளைக் கூறு.

வளவன் : க, கா, கி ஐயா.

ஆசிரியர் : அன்பரசி, வளவன் கூறிய எழுத்துகளுக்கான பெயரென்ன?

அன்பரசி : உயிர்மெய் எழுத்துகள், ஐயா.

ஆசிரியர் : எந்தெந்த எழுத்துகள் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும்?

அன்பரசி : உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்தால் உயிர்மெய் எழுத்துத் தோன்றும், ஐயா.

ஆசிரியர் : செல்வா, அன்பரசி கூறியதனைக் கரும்பலகையில் எழுதிக்காட்டு (க் + அ = க; க் + ஆ = கா; க் + இ = கி) கரும்பலகையில் எழுதியதனைப்போல மெய்யெழுத்துகள் பதினெட்டையும் உயிரெழுத்துகள் பன்னிரண்டுடன் சேர்த்து எழுத இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துகள் தோன்றும். உயிர்மெய் எழுத்து உயிரையும் மெய்யையும் சார்ந்திருப்பதால் இதனைச் சார்பெழுத்து என்கிறோம். நந்தா! உயிர், மெய்,

உயிர்மெய் எழுத்து ஆகியவற்றை விடுத்து, வேறு எழுத்து ஏதாவது இருக்கிறதா? அப்படியிருக்குமெனில், அஃது என்ன எழுத்து எனத் தெரியுமா? கூறு.

நந்தன் : தெரியும், ஐயா. அஃது அஃகேனம், ஐயா.

ஆசிரியர் : அஃகேனத்தைக் கூர்ந்து நோக்குங்கள். ஃ எனும் இவ்வெழுத்து மூன்று புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஆகவே, இதனை முப்புள்ளி, முப்பாற்புள்ளி எனக் குறிப்பிடுவர். இஃது உயிரோடும் மெய்யோடும் சேராமல் தனித்தே இருப்பதால், தனிநிலை எனவும் கூறுவர். போர் வீரர்கள் பயன்படுத்தும் தற்காப்பு ஆயுதத்தில் (கேடயம்) காணப்படும் மூன்று குமிழ்ப்புள்ளிகள்போன்று இருத்தலால் ஆய்தம் எனவும் கூறுவர். காவேரி..! ஆய்தஎழுத்து இடம்பெறும் சொற்கள் இரண்டு கூறு.

காவேரி : எஃகு, அஃதிலார், ஐயா.

ஆசிரியர் : மிக நன்று. ஆய்தஎழுத்து ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். அவ்வெழுத்தின் முன் குறிலும், அதன்பின் வல்லின உயிர்மெய்க் குறிலும் வரும்.

பயிற்சி : கீழுள்ள சொற்களில் சார்பெழுத்துகளை வட்டமிடுக.

அ) அண்ணன் ஆ) எஃகு இ) கொம்பு ஈ) பண்பு உ) செல்வம்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

   உயிர்மெய் எழுத்துகள் ________________ வகையில் அடங்கும்.

   1. சார்பெழுத்து 2. சுட்டெழுத்து 3. முதல் எழுத்து

2. அன்பு, அடக்கம், எஃகு – இச்சொற்களிலுள்ள சார்பெழுத்துகளை வட்டமிடுக.

3. விடுபட்ட எழுத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. க் + – = கு | 3. ம் + எ = – | 5. – + அ = ச | 7. த் + ஈ = – |
| 2. ப் + ஏ = – | 4. – + ஐ = பை | 6. வ் + – = வௌ | 8. – + – = பூ |

### ஆ) குறுவினாக்கள்

1. அஃகேனத்தின் வேறுபெயர்களை எழுதுக.
2. அஃகேனம் சொல்லில் எவ்வாறு இடம் பெறும்?

தமிழ்

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் – இத்தலைப்பில் ஐந்து மணித்துளி பேசுக.

ஆ) எழுதுதல் திறன்

கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

பண்டைக்காலத்தில் அரசன் போர் செய்யக் கருதியவுடன், அவனது போர்ப்பறை முழங்கும். அப்பறையின் ஓசை நாற்றிசையையும் அதிரச் செய்யும். அவ்வோசையைக் கேட்ட போர்வீரர்கள் போர்க்கோலம் பூண்டு மிக்க ஆர்வத்தோடு போருக்குப் புறப்படுவார்கள். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நாற்படைகளும் திரண்டெழும். அரசன் படைத்தலைவரோடு சென்று அவற்றைப் பார்த்து மகிழ்வான்.

போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன், தன் அரண்மனையில் வீரர்களுக்குப் பெருவிருந்து அளிப்பான். அதனைப் 'பெருஞ்சோறு அளித்தல்' என்பர். சேனை புறப்பட்டுச் செல்லும் வழியில் அரசனும் படைத்தலைவர்களும் தங்குதற்குரிய பாடி வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு அரசனும் வீரரும் இளைப்பாறுவர். அப்பொழுது ஆடலும் பாடலும் நடைபெறும்.

வினாக்கள்

1. நாற்றிசை, நாற்படை – இத்தொகைச்சொற்களை விரித்தெழுதுக.
2. உம் சேர்ந்திருக்கும் பெயர்ச்சொற்களை எடுத்தெழுதுக.
3. பெருஞ்சோறு அளித்தல் என்றால் என்ன ?

## மொழித்திறன் பயிற்சி

### வல்லினம் மிகும் இடங்கள்

1. ஓட, பாட, காண, செய்ய, எழுத, பேச, விளையாட முதலிய அகர ஈற்று வினையெச்சங்களுக்கு முன் க், ச், த், ப் மெய்யெழுத்துகளின் வருக்க எழுத்துச் சொற்கள் (வினைச்சொற்கள்) வருமாயின், உரிய வல்லெழுத்துகள் தோன்றும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | ஓட + காத்திருக்கிறான் | = | ஓடக் காத்திருக்கிறான். |
| | பாட + கேட்டேன் | = | பாடக் கேட்டேன். |
| | காண + கொடுத்தான் | = | காணக் கொடுத்தான். |
| | செய்ய + சொன்னான் | = | செய்யச் சொன்னான். |
| | எழுத + தொடங்கினார் | = | எழுதத் தொடங்கினார். |
| | பேச + செய்தார் | = | பேசச் செய்தார். |
| | விளையாட + பார்த்தான் | = | விளையாடப் பார்த்தான். |

2. நாடி, பேசி, தேடி, செதுக்கி, ஊன்றி, தழுவி, கொட்டி முதலிய 'இ'கர ஈற்று வினையெச்சச் சொற்களின்பின், வல்லின உயிர்மெய் எழுத்துச் சொற்கள் (வினைச்சொற்கள்) வந்தால் வல்லொற்று மிகும்.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | நாடி + சென்றான் | = | நாடிச் சென்றான். |
| | பேசி + பழகினான் | = | பேசிப் பழகினான். |
| | தேடி + திரிந்தான் | = | தேடித் திரிந்தான். |
| | செதுக்கி + கொடுத்தான் | = | செதுக்கிக் கொடுத்தான். |
| | ஊன்றி + படித்தான் | = | ஊன்றிப் படித்தான். |
| | தழுவி + கொண்டான் | = | தழுவிக் கொண்டான். |
| | கொட்டி + கிடக்கிறது | = | கொட்டிக் கிடக்கிறது. |

பயிற்சி

1. அகர ஈற்றுச் சொற்கள் ஐந்து எழுதுக.

அ) காண    ஆ) ________    இ) ________

ஈ) ________    உ) ________    ஊ) ________

2. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அ) கூடி + சென்றான் = ________

ஆ) பதுங்கி + கொண்டான் = ________

இ) சொல்லி + பார்த்தான் = ________

ஈ) புலம்பி + தீர்த்தான் = ________

உ) அள்ளி + கொடுத்தான் = ________

3. விடுபட்ட தமிழ் எண்களை எழுதுக.

1. க, __ , __ , ச, ரு, சா, __ , அ, __ , __ .

4. அகரவரிசையில் அமைத்தல்

மெய்யெழுத்துகள், உயிரெழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் எழுத்தாகிறது எனப் பார்த்தோம். சொற்களில், உயிர்மெய்யெழுத்துகளாக வரும் சொற்களை அகரவரிசையில் அமைப்போம்.

அகரவரிசை

(எ.கா.) கண், காண், கிளி, கீரி, குடுவை, கூகை, கெண்டை, கேள்வி, கை, கொல், கோடு, கௌவை.

5. கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.

கிண்ணம், கூட்டம், கீற்று, காட்சி, கடமை, குடம், கெஞ்சு, கேளிர், கைக்குட்டை, கொக்கு, கோடை, கௌசிகன்.

6. செயல்திட்டம் : நும் பாடப்பகுதியில் ஏதேனும் ஒரு பாடத்தை எடுத்துக்கொண்டு அதிலுள்ள சகர வருக்கச் சொற்களைத் தொகுத்து, அவற்றை அகரவரிசைப்படுத்துக.

7. கடிதம் எழுதுதல் : சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம்

## வாழ்க்கைத்திறன்

### முடிவெடுத்தல் திறன்

(ஒரு செயலில் நாம் எடுக்கும் முடிவு ஆக்கத்திற்கானதா, அழிவிற்கானதா எனச் சிந்தித்து முடிவு எடுத்தல் வேண்டும். ஏனெனில், விளைவுகளைப்பற்றிச் சிந்திக்காமல் நாம் எடுக்கும் சில முடிவுகள் நம்முடைய நடத்தையையும், உடல் நலத்தையும் சீரழிக்கும்.)

முருகன், வீட்டில் தன் தாய்க்கு உறுதுணையாகச் சில வேலைகளைச் செய்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டான். அவன் பள்ளி, வீட்டிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. விரைவாக நடந்தால் மணி அடிப்பதற்கு முன்னதாகப் பள்ளிக்குச் சென்றுவிடலாம். தாயிடம் விடைபெற்றுப் புத்தகப்பையைச் சுமந்தவாறு விரைவாக நடந்தான். முக்கால்பங்குத் தொலைவு கடந்தாயிற்று.

அப்பொழுது வழியில் கூன்விழுந்த பெரியவர் ஒருவர் ஊன்றுகோலைப் பிடித்தபடி நடக்கமுடியாமல் தள்ளாடியபடி சென்று கொண்டிருப்பதனைப் பார்த்தான். பாவம்! இந்த வயதிலும் அவர் எங்குப் போய்க் கொண்டிருக்கிறார்? என எண்ணியபடி அவரைக் கடந்து சென்றான் முருகன். பள்ளியின் மணியோசை கேட்டு ஓடத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் 'தடால்' என்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பெரியவரின் ஊன்றுகோல் சற்றே தள்ளிக் கிடக்க, அவர் தரையில் விழுந்து கிடந்தார்.

இந்த நிலையில் முருகன் இடத்தில் நீயிருந்தால் என்ன செய்வாய்?

பள்ளிக்குச் செல்வாயா? பெரியவர்க்கு உதவுவாயா?

## மதிப்புக்கல்வி

### மனக்கட்டுப்பாடு

பெண்மணி ஒருத்தி, தன்னுடைய மகனை அழைத்துக்கொண்டு பெரியவர் ஒருவரைக் காணச் சென்றாள். அவரிடம், தன் மகன் அதிகமாக இனிப்புகளை விரும்பி உண்பதாகவும், அந்தப் பழக்கத்தை விடுவதற்கு அறிவுரை சொல்லுமாறும் கேட்டாள்.

அந்தப் பெரியவர், நாற்பது நாள் கழித்து வந்து தம்மைப் பார்க்குமாறு கூறினார். மீண்டும் அப்பெண்மணி மகனுடன் அவரைச் சந்தித்தாள். பெரியவர் அச்சிறுவனிடம், "தம்பி, இனிப்புகளை அதிகமாக உண்ணாதே; உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும்" என்று கூறினார்.

அதனைக் கேட்ட அப்பெண்மணி, 'இதனை நீங்கள் அப்பொழுதே கூறியிருக்கலாமே, ஏன் நாற்பது நாள் கழித்துச் சொல்கிறீர்கள்' என்று கேட்டாள்.

அந்தப் பெரியவரோ, 'அம்மா, எனக்கே இனிப்பு அதிகமாக உண்ணும் பழக்கம் இருந்தது. நான் முதலில் என்னைத் திருத்திக்கொண்ட பின்னரே, பிறருக்கு அறிவுரை கூற முடியும். நாற்பது நாளுக்குப் பிறகு இப்போதுதான் இனிப்பு உண்பதனை நான் குறைத்திருக்கிறேன். அதனால்தான் உன் மகனுக்கு அறிவுரை கூறினேன்' என்றார் அப்பெரியவர்.

நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொண்டு வாழவேண்டும்; இல்லையென்றால், பலவற்றுக்கும் நாம் அடிமையாகிவிடுவோம். புலனடக்கமே எல்லார்க்கும் புகழ் சேர்க்கும்.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நகரம் திருச்சிராப்பள்ளி. இந்நகரம் கோவில்களும் நினைவுச்சின்னங்களும் நிறைந்துள்ள வரலாற்று நகரமாகும். இதன் பழம்பெருமைக்குச் சான்றாகத் திகழ்வது மலைக்கோட்டை. இக்கோட்டையிலுள்ள பல்லவர் காலத்துச் சிற்பங்கள் காண்போரைக் கவரும் தன்மையன.

திருச்சிராப்பள்ளியைத் தமிழ் மன்னர்கள் மட்டுமன்றி முகலாயர்கள், விசயநகர மன்னர்கள், மராட்டியர்கள், ஆங்கிலேயர்கள் ஆண்டுள்ளார்கள். சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூர், திருச்சிக்கு அருகில் அமைந்துள்ள பண்டைய நகரமாகும். இவ் உறையூர் முற்காலத்தில் கோழிமாநகரம் என்று அழைக்கப்பட்டது.

திரிசிரபுரம் என்று தொன்மைக்காலத்தில் அழைக்கப்பட்ட திருச்சியில், ஈராயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்த கவின்மிகு கல்லணை, காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்தியப் பொறியியல் சாதனைகளிலே மேம்பட்டு நிற்கும் இக்கல்லணை, பண்டைத்தமிழரின் நீர் மேலாண்மைச் சிந்தனையின் சிகரமாகும்.

திருச்சியின் சுற்றுலா இடங்களாக முக்கொம்பு, ஊமையன்கோட்டை, புளியஞ்சோலை, பச்சைமலை முதலியன உள்ளன. தாயுமானவருக்கு ஞானநெறி காட்டிய மௌனகுருவும், தமிழின் முதல் சிறுகதை எழுத்தாளரான வ.வே.சுப்பிரமணியமும் திருச்சி மண்ணில் தோன்றியவராவர்.

### வினாக்கள்

1. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நகரம் திருச்சிராப்பள்ளி. ( ஆம் / இல்லை )
2. மலைக்கோட்டையில் உள்ள சிற்பங்கள் பாண்டியர் காலத்தவை. ( ஆம் / இல்லை )
3. பல்லவர்களின் தலைநகரம் உறையூர். ( ஆம் / இல்லை )
4. பண்டைத் தமிழரின் நீர் மேலாண்மைக்குச் சான்று கல்லணை. ( ஆம் / இல்லை )
5. தமிழின் முதல் சிறுகதை எழுத்தாளர் வ. வே. சுப்பிரமணியம். ( ஆம் / இல்லை )

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

மாணவன், தன்னை மோசிகீரனாராக நினைத்துக்கொண்டு பேசுதல்

என் பெயர் மோசிகீரன். என் ஊர் தென்பாண்டி நாட்டிலுள்ள மோசி என்பதாகும். கீரன் என்பது, என் குடிப்பெயர். நான் பாடிய பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

ஒருமுறை சேரமன்னனைக் காண, அவன் அரண்மனைக்குச் சென்றேன்; மன்னனோ அரண்மனையில் இல்லை. எனக்கு ஏற்பட்ட உடற்சோர்வினால் அங்கிருந்த கட்டிலில் படுத்து உறங்கிவிட்டேன். அக்கட்டில் முரசுக்கட்டில் என்பது எனக்குத் தெரியாது. முரசுக்கட்டில் மன்னனைவிட மேலான ஒன்றாகும். அக்கட்டிலில் படுத்தால் மரணதண்டனைதான் என்பது, களைத்திருந்த என் சிந்தைக்கு எட்டவில்லை.

சிறிதுநேரத்தில் திடீரெனச் சில்லென்ற காற்று என்மீது படவே கண்விழித்துப் பார்த்தேன். ஐயோ, என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. முரசுக்கட்டிலில் படுத்துறங்கியதற்கு மரணதண்டனை அளிக்கவேண்டிய சேரமன்னன், எனக்குக் கவரி வீசிக்கொண்டிருந்தான். காரணம், என்மீதுள்ள அன்பைவிடத் தமிழ்மீதிருந்த அன்பு, அவனை அவ்வாறு செய்யச் செய்தது. இஃது என் வாழ்வில் மறக்கவியலாத நிகழ்வாகும்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
| --- | --- |

கீழ்க்காணும் பாடலை வாய்விட்டுப் படிக்க.

ஐவர் கடமை

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

– புறநானூறு

| நடித்தல் திறன் | செயல்பாடு – 4 |
| --- | --- |

கீழ்க்காணும் நாடகத்தை வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

களம் : சோழனின் யானைக்கவுனி

பங்குபெறுவோர் : சோழன் கிள்ளிவளவன், புலவர் கோவூர்கிழார், மலையமான் பிள்ளைகள் (அண்ணன், தம்பி), யானைப்பாகன்

கிள்ளிவளவன்: யானைப்பாகனே, இன்னும் என்ன தயக்கம் ? விரைந்து செலுத்து யானையை ! தொலைந்து போகட்டும் அந்த மலையமானின் பிள்ளைகள்.

(பிள்ளைகளை நோக்கிப் பாகன் யானையைச் செலுத்துதல்)

தம்பி : அண்ணா, அண்ணா! அங்கே பார்! எவ்வளவு பெரிய யானை! அதனைக் காண எனக்கு அச்சமாக உள்ளது, அண்ணா!

அண்ணன் : தம்பீ, அஞ்சாதே! அது பட்டத்து யானை, நம்மை ஒன்றும் செய்யாது.

தம்பி : அப்படியென்றால், அது நம்மை நோக்கி ஏன் விரைந்து வருகிறது, அண்ணா!

அண்ணன் : ஆமாம், தம்பி! அதுதான் எனக்கும் விளங்கவில்லை; அருகில் வரட்டும் தொட்டுப் பார்ப்போம்.

(சிறுவர்களை நெருங்குகிறது யானை. அப்பொழுது, திடீரென்று ஒரு குரல்.

''பாகனே, நிறுத்து யானையை!''

குரல் வந்த திசைநோக்கித் திரும்பிப் பார்க்கிறான், மன்னன் கிள்ளிவளவன்.)

கிள்ளிவளவன் : யாரது? ஓ, கோவூர்கிழாரா! வாருங்கள், புலவரே! எதற்காக நிறுத்தச் சொல்லுகிறீர்கள் யானையை!

கோவூர்கிழார் : மன்னா, இதுவா உன் நீதி? ஒன்றுமறியாப் பச்சிளங்குழந்தைகளைக் கொல்ல எவ்வாறு துணிந்தாய்?

கிள்ளிவளவன் : புலவரே, என்ன சொல்லுகிறீர்கள்? பகைவனின் பிள்ளைகளும் பகைவர்களே! அவர்களை அழிப்பதுதான் முறை. அவர்கள் வளர்ந்தால், எதிர்காலத்தில் என் இனத்தையே அழித்து விடுவார்கள் அல்லவா? 'இளைதாக முள்மரம் கொல்க' என உன்போன்ற புலவர் ஒருவர் பாடியதனை நீவீர் அறிந்திருப்பீரே!

கோவூர்கிழார் : மன்னா! உன்னை மாபெரும் வீரனென்று நினைத்தேன்; ஆனால், மாபெருங்கோழையாக அல்லவா இருக்கிறாய். அந்தக் குழந்தைகளின் முகத்தைப் பார். அவர்களா உன் பகையாளிகள்? தம்மை யானை கொல்ல வருகிறது என்பதனைக்கூட அறியாமல், அவர்கள் திகைத்து நிற்பதனைப் பார்.

கிள்ளிவளவன் : புலவரே! பாம்புக்குட்டிகள், குட்டிகள்தாம் என்றாலும் அவற்றின் பற்களில் நஞ்சு இருக்காதா என்ன?

கோவூர்கிழார் : கிள்ளியே, புறாவுக்கும் பசுவுக்கும் உற்றதுயரத்தைப் போக்கிய சோழர் மரபில் பிறந்தவன் நீ! இப்பிள்ளைகளோ வந்தோர்க்கு வாரி வழங்கும் வள்ளல் மரபில்பிறந்தவர்கள். இப்பிள்ளைகளைக் கொன்று, அழியாத களங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாதே. அவ்வாறு

செய்தால், நாளைய வரலாறு உன்னைத் தூற்றும்.நான் சொல்ல நினைத்தவற்றைச் சொல்லிவிட்டேன். பிறகு, உன் விருப்பம்போல் செய்.

(மன்னன் சிந்திக்கிறான்; முகம் மாறுகிறது...)

கிள்ளிவளவன் : புலவர் பெருமானே! பெரும்பிழை செய்யவிருந்தேன். நல்ல நேரத்தில் வந்து என்னைக் காப்பாற்றினீர்கள். இந்தப் பிள்ளைகளை இப்போதே விடுவிக்கிறேன்.

கோவூர்கிழார் : மிக்க மகிழ்ச்சி, மன்னா! நீ வாழ்க, நின் கொற்றம் வாழ்க!

| தொகுத்தல் திறன் | செயல்பாடு – 5 |
|---|---|

கீழ்க்காணும் எண்களுக்கான குறட்பாக்களைக் கண்டறிந்து, அக்குறட்பாக்களிலுள்ள ஆய்த எழுத்து இடம்பெற்றுள்ள சொற்களைத் தொகுக்க.

குறள் எண்கள்

38, 49, 76, 80, 132, 162, 172, 179, 226, 363, 368, 467, 459, 556, 575, 759, 773, 971, 1001, 1037

(மேலும் பல குறட்பாக்களிலும் ஆய்த எழுத்து இடம்பெற்றுள்ளது.)

| தொடரை நிரப்புதல் | செயல்பாடு – 6 |
|---|---|

உரிய சொற்களைப் பயன்படுத்தித் தொடரை நிரப்புக.

( கள்ளம்கபடம், ஊர்உலகம், ஓடியாடி, பயிர்பச்சை, காடுமேடு, நோய்நொடி )

(எ.கா.) குழந்தைகள் ஓடியாடி விளையாடினர்.

1. தூய்மையாக இருந்தால் ______________ வாரா.

2. குழந்தைகள் ______________ அறியாதவர்கள்.

3. மக்கள் ______________ திருத்தி உழவு செய்தனர்.

4. நன்மை செய்தவர்களை ______________ போற்றும்.

5. கண்ணுக்கு எட்டிய தூரம் ______________ நிறைந்துள்ளன.

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

சோழன் நெடுங்கிள்ளி உறையூரில் இருந்தான். சோழன் நலங்கிள்ளியைப் பாடிப் பரிசு பெற்ற புலவரான இளந்தத்தனார், நெடுங்கிள்ளியை நாடிச் சென்றார்; அவனைப் பாடிப் பரிசு பெற நினைத்தார்; நெடுங்கிள்ளியைப் புகழ்ந்து பாடல்கள் பல பாடினார். புலவர், தமக்குப் பரிசு கிடைக்கும் என எதிர்பார்த்தார்; நெடுங்கிள்ளியோ அதற்கு மாறாக நினைத்தான்.

| நிரப்புதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் சொல்மாலையில் ஒரு சொல்லின் இறுதி எழுத்து, அடுத்து வரும் சொல்லின் முதல் எழுத்தாக அமையுமாறு உருவாக்கப்பட்டுள்ளது. அச்சொல்மாலையில் விடுபட்டுள்ள எழுத்தை நிரப்புக.

சிறகு

குருவி

______ த்து

______ம்பி

______ஞ்சு

சுக்கு

கும்______

மிளகு

______ளவி

______ருது

______ம்பை

இதுபோன்ற சொல்மாலையை உன் நண்பர்களுடன் சேர்ந்து உருவாக்குக.

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண்: 10

அ) கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக. 3 x 1 = 3

1. மோசிகீரனார் பாடிய பாடல்கள் இடம்பெற்ற நூல் ____________ .

   அ) புறநானூறு ஆ) ஐங்குறுநூறு இ) பழமொழி நானூறு

2. சோழருக்குரிய மாலை ____________ .

   அ) பனம்பூ ஆ) வேப்பம்பூ இ) ஆத்திப்பூ

3. உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை ____________ .

   அ) 30 ஆ) 216 இ) 247

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 3 x 1 = 3

1. நலனுடைமையின் ____________ சிறந்தன்று.
2. கற்றலின் கற்றாரை ____________ சிறந்தன்று.
3. முன்பெரு கலின்பின் ____________ சிறந்தன்று.

இ) சரியா, தவறா ? 4x 1 = 4

1. பகைவரைத் தண்டிப்பதனைவிட, அவருக்கு நன்மை செய்தலே சிறந்தது. ( சரி / தவறு )
2. மீனாட்சிசுந்தரனாரின் மாணவர் வ. உ. சி. ( சரி / தவறு )
3. நலங்கிள்ளியின் தலைநகரம் உறையூர். ( சரி / தவறு )
4. ஆய்தம், சொல்லின் இடையிலும் இறுதியிலும் மட்டுமே வரும். ( சரி / தவறு )

# தனிப்பாடல்

## இரட்டுறமொழிதல்

ஓடும் சுழிசுத்தம் உண்டாகும் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் – நாடறியத்
தேடு புகழான் திருமலைரா யன்வரையில்
ஆடுபரி காவிரியா மே.

– காளமேகப் புலவர்

பொருள் : புகழ்பெற்ற மன்னன் திருமலைராயன் நாட்டில், விரைந்து ஓடுவதால், தெளிந்த (சுத்தமான) சுழி உடையதால், பகைவரைத் தாக்குவதால், அன்போடு தலை சாய்ப்பதால் குதிரையும், வெள்ளத்தால் ஆறு விரைந்து ஓடுவதால், ஓடுகிறபொழுது நீரில் சுழிகள் உடையதால், மலர்களை அலைத்துச் செல்வதால், பயிர்களுக்கு வளம் சேர்ப்பதால் காவிரியும் ஒன்றாகும்.

சொற்பொருள் : சுழி – உடல்மீது உள்ள சுழி, நீர்ச்சுழி; துன்னலர் – பகைவர், அழகிய மலர்; பரிவாய் – அன்பாய்; சாடும் – தாக்கும், இழுக்கும்; ஆடுபரி – ஆடுகின்ற குதிரை.

### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | காளமேகப்புலவர் |
| பிறந்த ஊர் | : | கும்பகோணத்துக்கு அருகில் உள்ள நந்திக்கிராமம் எனவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள எண்ணாயிரம் எனவும் கூறுவர். |
| இயற்பெயர் | : | வரதன் |
| பணி | : | திருவரங்கக் கோவில் மடைப்பள்ளியில் பணிபுரிந்தார். வைணவ சமயத்தில் இருந்து சைவசமயத்திற்கு மாறினார். கார்மேகம் போல் கவிதை பொழியும் ஆற்றல் பெற்றதால், இவர் காளமேகப்புலவர் என அழைக்கப் பெற்றார். இவர், இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர். |

### மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. காளமேகப் புலவர் – குறிப்பு எழுதுக.
2. காவிரியின் தன்மைகளாகப் பாடல் உணர்த்தும் கருத்துகள் யாவை ?

ஆ) சிறுவினா

ஆடுபரியும் காவிரியும் ஒன்று என்பதனைக் காளமேகப் புலவர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

## கல்விக்கு எல்லை இல்லை

கற்றதுகைம் மண்ணளவு கல்லா(து) உலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் – மெத்த
வெறும்பந் தயம்கூற வேண்டா; புலவீர்
எறும்புந்தன் கையால்எண் சாண். *

– ஔவையார்

பொருள் : புலவர்களே! இதுவரை நாம் படித்தது கைம்மண்ணளவே. இன்னும் படிக்க வேண்டியவை உலகளவு என நினைத்து கலைமகளே இன்றளவும் படித்துக்கொண்டே இருக்கிறாள். ஆதலால், மிகுதியாகப் படித்துவிட்டோம் என்னும் செருக்குடன் வீண் வல்லமை பேசுதல் வேண்டா. சிறு எறும்பும் அதன் கையினால் எண் சாண் உடையதே.

சொற்பொருள் : கைம்மண்ணளவு – ஒரு சாண் எனவும் பொருள் கொள்வர்; மெத்த – மிகுதியாக; பந்தயம் – போட்டி; புலவீர் – புலவர்களே; கலைமடந்தை – கலைமகள்.

ஆசிரியர் குறிப்பு : இங்குக் குறிக்கப்படும் ஔவையார், சங்க கால ஔவையாருக்கு மிகவும் பிற்பட்டவர். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர் முதலிய புலவர்கள் இவர் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறுவர்.

நூல் குறிப்பு : புலவர் பலர், பல்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது பாடிய பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டு. இதனை, இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி வேண்டுதலுக்கிணங்க, சந்திரசேகர கவிராசப் பண்டிதர் தமிழகம் முழுவதும் சென்று தேடித் தொகுத்தார்.

நூல் பயன் : தனிப்பாடல்களைக் கற்பதனால், தமிழ்மொழியின் பெருமையையும் புலவர்களின் புலமையையும் சொல்லின்பம் பொருளின்பம் கற்பனைஇன்பம் முதலியவற்றையும் பெறலாம்.

### மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. ஔவையார் – குறிப்பு எழுதுக.
2. கலைமகள் என்ன செய்துகொண்டிருக்கிறாள் ?

ஆ) சிறுவினா

கற்றார் செருக்குக் கொள்ளக்கூடாது என ஔவையார் கூறுவது ஏன் ?

# கணிதமேதை இராமானுஜம்

தாத்தா! தாத்தா! உங்களால் இன்று நான் பள்ளியில் ஆசிரியரின் கேள்விக்கு ஆளாக நேர்ந்துவிட்டது.

ஏனப்பா, என்னவாயிற்று?

நேற்று நீங்கள் சொல்லித் தந்த வீட்டுக்கணக்குக்கான வழிமுறைகள் எல்லாம் தவறென்று ஆசிரியர் கூறிவிட்டார், தாத்தா. பிறகு, அவர் வேறுவிதமாகக் கற்றுக் கொடுத்தார்.

அப்படியா? சரி பொறுத்துக் கொள்ளப்பா! நான் என்ன எல்லா வழிமுறைகளையும் அறிந்திருக்க கணிதமேதை இராமானுஜமா?

கணிதமேதை இராமானுஜமா? அவர் யார் தாத்தா?



கணிதமேதை இராமானுஜம்

என்ன குழந்தைகளே! உங்களுக்கு இராமானுஜரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? மேலே படியுங்கள்.

கணிதமேதை எனப் போற்றப்படும் இராமானுஜம் ஈரோட்டில் வாழ்ந்துவந்த சீனிவாசன்– கோமளம் இணையருக்கு 22.12.1887 இல் பிறந்தார். இவர் மூன்றாண்டுவரை பேசும் திறனற்றவராக இருந்தார். பள்ளியில் சேர்ந்து பிற மாணவர்களுடன் பேசிப் பழகினால் பேச்சு வந்துவிடும் என்று பெற்றோர் நம்பினர். எனவே, இராமானுஜத்தின் தாயார், தம் தந்தையார் வாழ்ந்து வந்த காஞ்சிபுரத்தில் இருந்த திண்ணைப் பள்ளியொன்றில் சேர்த்தார். அவர்களின் நம்பிக்கை மெய்யாயிற்று; இராமானுஜம் நன்கு பேசத் தொடங்கினார்.

கோமளத்தின் தந்தையார், பணியின் காரணமாகக்

கும்பகோணத்திற்குக் குடும்பத்துடன் குடியேறினார். எனவே, இராமானுஜத்தின் கல்வி கும்பகோணத்திலும் தொடர்ந்தது. இராமானுஜம் சிறுவயது முதலே கணிதப் பாடத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். வாய்ப்பு நேரும்போதெல்லாம் தன் கணிதத் திறமையை வெளிக்காட்டவும் செய்தார். கணிதப்பாடம் குறித்த கருத்துகளையும் ஐயங்களையும் உடனுக்குடன் வெளிப்படுத்த அவர் தயங்கியதே இல்லை.

ஒருநாள், கணித வகுப்பில் ஆசிரியர் வகுத்தல் கணக்குக்கான விளக்கம் கூறும்பொழுது, மாம்பழங்கள் நான்கனை, நான்குபேருக்குக் கொடுத்தால் ஆளுக்கொரு பழம் கிடைக்கும்; இதன் மூலம், ஓர் எண்ணை அதே எண்ணால் வகுத்தால் ஈவு ஒன்று என விளக்கினார். அதற்கு இராமானுஜம் சுழியம் (0) பழங்களைச் சுழியம் (0) பேருக்குக் கொடுத்தால் ஈவு ஒன்று வருமா, ஐயா? என்று கேட்டார்.

ஆசிரியர், 'சுழியத்திற்கு மதிப்பில்லை' எனச் சொன்னார். மதிப்பிருக்கு ஐயா! நான் சொல்லட்டுமா? என்று பணிவுடன் கேட்டார். ஆசிரியர் ஒப்புதல் கொடுத்ததும், ஐயா! சுழியத்தின் இடப்பக்கம் ஒன்று (1) என எழுதினால் சுழியத்துடன் சேர்த்துப் பத்து ஆகிறது அல்லவா? ஆகவே, சுழியத்திற்கு மதிப்பில்லை என்று சொல்வதற்கில்லை என்று விளக்கமளித்தார்.

ஆசிரியருக்கு இராமானுஜம் கூறியது சரியெனவே தோன்றியது. அவருடைய அறிவுத் திறமையை எண்ணி வியந்தார். எப்போதும் கணிதத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த இராமானுஜம், தனது கணித அறிவை வளர்த்துக்கொள்ள கணித நூல்கள் பலவற்றைப் பயின்றார்.

1880ஆம் ஆண்டில் இலண்டனிலிருந்த கார் என்பவர் பதினைந்தாம் வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கியதனைப்போல இராமானுஜமும் சிறந்து விளங்கினார். உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போதே கல்லூரி மாணவர்களுக்குக் கணிதத் தொடர்பான ஐயங்களைப் போக்கினார்.

பட்டப்படிப்பிலும் கணிதத்தில் முழுமையான மதிப்பெண் பெற்றபோதிலும் பிற பாடங்களில் கவனம் குறைந்ததால், இராமானுஜத்தால் தேர்ச்சியடைய முடியவில்லை. தந்தை சீனிவாசனின் முயற்சியால் சென்னைத் துறைமுகத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார்; எனினும், தன்னுடைய கணித ஆராய்ச்சியை அவர் விடவில்லை.

தான் கண்டுபிடித்த தேற்றங்களையும், எடுகோள்களையும் வினாக்களாகத் தொகுத்து இந்தியக் கணிதக் கழகப் பத்திரிகைக்குச் சென்னைத்

ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுஜன் குறைந்தபட்சம் ஒரு ஜாகோபி.

– லிட்டில்வுட்டு

ஆய்லர் என்பவர் சுவிட்சர்லாந்தைச்சேர்ந்த 18ஆம் நூற்றாண்டின் இணையற்ற கணிதமேதை.

ஜாகோபி என்பவர் 19ஆம் நூற்றாண்டில் செருமனியில் வாழ்ந்த கணிதமேதை.

கணிதத் திறமையால் விஞ்ஞான உலகினைப் பிரமிக்கச் செய்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்ற பிறவிக் கணிதமேதை.

– இந்திராகாந்தி

துறைமுகத்தின் தலைமைப்பொறியாளர் ஃபிரான்சிஸ் ஸ்பிரிங் என்பார் மூலம் அனுப்பினார். பெர்னௌலிஸ் எண்கள் எனும் தலைப்பில் வெளியான அவருடைய கட்டுரை, கணித வல்லுநர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

அதனைத்தொடர்ந்து ஊதியமில்லா விடுப்பு எடுத்துக்கொண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார். தம்முடைய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றை விவரமாக எழுதி, இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹார்டி என்பாருக்குக் கடிதமாக அனுப்பினார். முதலில், அக்கடிதத்தை ஹார்டி பொருட்படுத்தவில்லை. பின்னர், இராமானுஜத்தை இங்கிலாந்திற்கு வரவழைக்க ஏற்பாடு செய்தார். இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள திரினிட்டி கல்லூரியின் பேராசிரியர் ஈ.எச்.நெவில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சொற்பொழிவாற்ற வந்தார். அவர் வாயிலாகச் செய்தியறிந்து, இராமானுஜம் இங்கிலாந்து செல்ல முடிவெடுத்தார்.

இராமானுஜம், 1914ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் நாள் இங்கிலாந்துக்குக் கப்பலில் புறப்பட்டார். இலண்டனில் அவரை வரவேற்கக் காத்திருந்த மேதைகளின் கூட்டத்தைக் கண்டு அவர் வியந்தார்.

'திரினிட்டி கல்லூரியில்' ஆராய்ச்சி மாணவராக 18.04.1914இல் சேர்ந்தார். அவருடைய கணிதத் திறமையைக் கண்டு, அவருக்கு ஆண்டொன்றுக்கு அறுபது பவுண்டு உதவித்தொகை வழங்கப்பட்டது. கல்லூரிப்படிப்புடன் இராமானுஜம் தன்னுடைய ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டார்.

கல்லூரியில் தனது கணிதத்திறமையை வெளிப்படுத்திப் பாராட்டுதல்களைப் பெற்றார். ஒருநாள் கிங்ஸ் கல்லூரிக் கணிதப் பேராசிரியர் ஆர்தர்பெர்சி, கேம்பிரிட்ஜ் மாணவர்களுக்குச் சிறப்புக் கணிதம் நடத்திக் கொண்டிருந்தார். திடீரென, இராமானுஜம் எழுந்து, 'ஐயா, நீங்கள் கணக்கிட்ட வழிமுறைகள் முறையாக இல்லையென எனக்குத் தோன்றுகிறது' என்றார். அவற்றுள், எந்த வழிமுறை தவறு எனச் சுட்டிக் காட்டுமாறு ஆர்தர் கேட்டதும், இராமானுஜம் கரும்பலகையில் ஆசிரியர் கணக்கிட்ட வழிமுறைகளில் சில திருத்தங்களைச் செய்தார். பின்பு, அக்கணக்கினைச் சுருக்கமாக எழுதி விடை வரவழைத்தார்; பேராசிரியர் வியந்து அவரைப் பாராட்டினார்.

ஹார்டி, ரோசர்ஸ் இராமானுஜன் கண்டுபிடிப்புகள் என்னும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டு அவருக்குப் பெருமை சேர்த்தார். இராமானுஜத்தின் திறமையை அறிந்த இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் 1918 பிப்ரவரியில் தங்கள் கழகத்தில் உறுப்பினராக்கி எஃப்.ஆர்.எஸ். பட்டம் வழங்கியது. இப்பட்டம், ஒருவரது திறமைகள் பிறர் வியக்கத்தக்கவகையில் இருந்தால் மட்டுமே வழங்கப்படுவதாகும்.

எஃப்.ஆர்.எஸ். பட்டம் பெற்ற இராமானுஜத்தைத் திரினிட்டி கல்லூரி பாராட்டிச் சிறப்பித்தது. கல்விக்குழுவின் சிறப்பு உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் 250 பவுண்டுத் தொகையை ஆறு ஆண்டுகளுக்கு வழங்கவும்

ஏற்பாடு செய்தது. ஹார்டியின் பரிந்துரையின்பேரில் சென்னைப் பல்கலைக்கழகமும் 250 பவுண்டுத் தொகையை ஐந்து ஆண்டுக்குக் கொடுக்க முன்வந்தது. ஆனால், இராமானுஜம் 50 பவுண்டைத் தம் பெற்றோருக்கும் 200 பவுண்டை ஏழை எளிய மாணவர்களுக்கும் வழங்கி வருமாறு கடிதம் எழுதினார்.

ஆராய்ச்சியையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருந்த இராமானுஜம் தன் உடல்நிலையைக் கருத்தில் கொள்ளவில்லை. அவருக்குக் காசநோய் ஏற்பட்டது. அவரைக் காணவந்த ஹார்டி, நான் 1729 என்ற எண் கொண்ட வாடகை மகிழுந்தில் வந்தேன் எனக் கூற, படுக்கையிலிருந்து சட்டென எழுந்து, ஹார்டி அவர்களே! என்ன இப்படி இயல்பாகக் கூறுகிறீர்களே 1729 என்ற எண் இருவகைகளிலே இரு கனங்களின் கூட்டுத்தொகையாக வரும் எண்களில் மிகச்சிறிய எண் அல்லவா? எனக் கேட்டார். எங்கே அதனை விளக்குங்கள் என ஹார்டி கேட்க, $1^3 + 12^3$ என்றோ $10^3 + 9^3$ என்றோ $7 \times 13 \times 19$ என்றோ பிரிக்கலாமே என உடனடியாகப் பதில் கூறினார். ஹார்டி, மிகவும் மகிழ்ந்து அவரது கணிதத்திறனை வெகுவாகப் பாராட்டினார்.

பாராட்டுதல்கள் ஒருபுறமிருக்க, நோய்முற்றியதால் நாளுக்குநாள் உடல்நலம் குறைந்தது. இங்கிலாந்தில் நல்ல சிகிச்சை இருப்பினும் உடனிருந்து அவரைப் பார்த்துக்கொள்ள உறவினர் எவரும் இல்லாததால் இந்தியாவிற்குத் திரும்ப முடிவுசெய்து, 1919 மார்ச் 27 ஆம் நாள் மும்பைக்குக் கப்பலில் வந்து இறங்கினார்; ஏப்ரலில் சென்னை வந்து சேர்ந்தார்.

1920 ஏப்ரல் 26ஆம் நாள் மூன்று ஆண்டாகத் தீராத நோயுடன் போராடிய இராமானுஜத்தின் உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது முப்பத்து மூன்று. நோயினால் துன்பப்பட்டபோதும், ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிய வண்ணம் இருந்தார்.

இராமானுஜன்
சாதாரண மனிதரல்லர்.
அவர்
இறைவன் தந்த பரிசு.

– பேரா.ஈ.டி.பெல்

இராமானுஜன் முதல்தரமான
கணித மேதை

– இலண்டன் ஆளுநர்
லார்ட்மெண்ட் லண்ட்.

இராமானுஜன்தான்
இந்த 20 ஆம் நூற்றாண்டின்
மிகப்பெரிய கணிதமேதை

– பேராசிரியர் சூலியன் கக்சுலி

## தெரிந்துகொள்வோம்

1962 திசம்பர் 22ஆம் நாளன்று இராமானுஜத்தின் 75ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நடுவணரசு பதினைந்து காசு அஞ்சல்தலை இருபத்தைந்து இலட்சம் வெளியிட்டது. வெளியிட்ட அன்றே அத்தனை அஞ்சல்தலைகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன.






■ 1971ஆம் ஆண்டு, பேராசிரியர் இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு சென்னையில் அமைக்கப்பட்டது.

■ சென்னையில், 1972ஆம் ஆண்டு அக்டோபர் 3ஆம் நாள் அன்றைய தமிழக முதலமைச்சரால் இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் திறந்து வைக்கப்பட்டது.

■ அவர் பணியாற்றிய சென்னைத் துறைமுகம் சார்பில் புதிதாக வாங்கிய குடிநீர்க்கப்பலுக்குச், சீனிவாச இராமானுஜம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

■ அமெரிக்காவின் விசுகன்சீன் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ரிச்சர்ட்டும் ஆஸ்கேயும் இணைந்து 1984இல் அவரது மார்பளவு வெண்கலச் சிலையை இந்தியாவிற்குக் கொண்டு வந்து வழங்கினர்.

■ கணிதக் குறிப்புகள் அடங்கிய 3 குறிப்பேடுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் விட்டுச் சென்றுள்ளார். அவருடைய குறிப்பேடுகளில் 3000முதல் 4000 தேற்றங்களை 1957ஆம் ஆண்டு 'டாடா' அடிப்படை ஆராய்ச்சி நிலையம், அப்படியே ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்டுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ) உயர்கல்விபெற இராமானுஜம் ______________ சென்றார்.

ஆ) சென்னைத் துறைமுகம் சார்பில் குடிநீர்க்கப்பலுக்கு ______________ எனப் பெயரிடப்பட்டது.

இ) இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் நிறுவப்பட்டுள்ள இடம் ______________ .

**2. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.**

அ) இராமானுஜம் திண்ணைப்பள்ளியில் படித்த ஊர் ______________

1. கும்பகோணம் 2. காஞ்சிபுரம் 3. ஈரோடு

ஆ) இராமானுஜம் ஆசிரியரிடம் ______________ மதிப்புடையது என வாதிட்டார்.

1. ஒன்று 2. நூறு 3. சுழியம்

இ) இராமானுஜம் ______________ இல் எழுத்தர் பணிபுரிந்தார்.

1. கல்லூரி 2. துறைமுகம் 3. பள்ளி

### ஆ) குறுவினாக்கள்

1. கணிதமேதை இராமானுஜம் எங்கு, எப்போது பிறந்தார் ? அவர் பெற்றோர் யாவர் ?
2. இராமானுஜம், இலண்டன் பயணம் மேற்கொண்டதன் நோக்கம் என்ன ?
3. இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் இராமானுஜத்திற்கு வழங்கிய பட்டம் யாது ?

### இ) சிறுவினாக்கள்

1. சுழியத்திற்கு மதிப்பு உண்டு என்பதனை இராமானுஜம் எவ்வாறு விளக்கினார் ?
2. வண்டி எண் 1729 – இந்த எண்ணைப்பற்றி இராமானுஜம் கூறிய விளக்கம் யாது ?.

### ஈ) நெடுவினா

கணிதமேதை இராமானுஜத்தின் வாழ்வில் நடைபெற்ற சுவையான நிகழ்வுகளைப்பற்றி எழுதுக.

# நன்றிப்பரிசு

இருநூறு ஆண்டுக்கு முன்பு சிவகங்கைப் பகுதியை மருதுபாண்டி ஆண்டு வந்தார். இல்லை என்று வந்தவர்க்கு, அவர் ஒருபோதும் இல்லை என்று கூறாதவர்; குடிமக்களையும், குல தெய்வத்தையும் ஒரே மாதிரி நேசித்தவர்; பூசித்தவர். பிரபந்தங்களும், தனிப்பாடல்களும் இயற்றி அவரைப் போற்றுமளவுக்குப் புலவர்களிடம் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த விவேகியான மருது பாண்டி, எதிரிகளை விரட்டிச் சிதறடித்து உதிரிகளாக்கும் தீரர், சூரர்; வீரமிக்க அவரிடம் ஈரமும் இருந்தது.

ஒருமுறை திருக்கோட்டியூரில் பெருமாள் கோவிலுக்கு எதிரிலிருந்த மண்டபத்தில் யாருமறியாமல் தங்கியிருந்தார் மருதுபாண்டி. அவருடைய வலக்கையில் ஒரு பெரிய கட்டி ஏற்பட்டு, அதனால் துன்பப்பட்டார். அச்சமயம் பகைவர் சிலர், அவரைச் சிறைப்பிடிக்க முயற்சி செய்தனர். செய்தியறிந்ததும் அவருடைய கண்கள் சிவந்தன.

படுத்திருந்த அவர், நெஞ்சு துடித்து எழுந்தார். வலக்கை வலியையும் பொருட்படுத்தாமல் குதிரையின் மீதேறி பகைவர்களை முறியடிக்க விரைந்தார். பகைவர், அவரைச் சூழ்ந்து கடுமையாகத் தாக்கத் துணிந்தனர். அவர், காற்றாய்ச் சுழன்று கடிதில் பகைவர்களை எதிர்த்தார்; பகைவர்களை நாற்றிசையிலும் சிதறடித்தார்.

பின்தொடர்ந்து வந்தால் பிடிபடக்கூடாது என்ற எண்ணம் மேலோங்கியவராய்க் காற்றெனத் தன் குதிரையைச் செலுத்தினார். 'டக் டக் டக்' கென்று இரவெல்லாம் ஓடியது குதிரை. மருதுபாண்டியின் விரட்டலுக்குக் குதிரை பணிந்து, வாயோரம் நுரை தள்ளச் சோர்ந்துபோய், ஒரூரின் முன்தெருவில் போய் அது நின்றது. அப்போது புலர்ந்தும் புலராத பொழுது. பசியும் தாகமும் சோர்வும் நிறைந்த மருதுபாண்டி, தெருவாசலில் கோலமிடும் ஒரு கிழவியைக் கையெடுத்துக் கும்பிட்டார்.

எடுப்பான தோற்றம் கொண்ட அவரையும் அவரது குதிரையையும் மாறி மாறிப் பார்த்த கிழவி, "மகனே யார் நீ? உனக்கு என்ன வேண்டும்? " என்று கனிவுடன் கேட்டாள்.

"அம்மா, பசியும் தாகமும் என்னை மிகவும் வருத்துகின்றன; சாப்பிட ஏதாவது இருந்தால் கொடுங்கள்..." அவருடைய குரல் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல் ஒலித்தது.

"இரவு மிச்சமான, தண்ணீர் ஊற்றிய பழைய சோறுதான் இருக்கிறது. உன்னைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி தெரிகிறாய்... உனக்குப் பழைய சோற்றையா தருவது" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள் கிழவி.

“அம்மா, அன்போடு தாங்கள் படைக்கும் சோறு தற்சமயம் எனக்குப் பழைய சோறு இல்லை; கிடைத்தற்கரிய அமுதம்” என்றார் அவர்.

கை, கால், முகம் கழுவிக்கொண்டு, உயரம் குறைவாய் வாசற்படி வைத்துக் கட்டப்பட்டிருந்த அந்தக் கூரை வீட்டிற்குள் குனிந்து நுழைந்தார் மருது பாண்டி.

சாணத்தால் மெழுகப்பட்டிருந்த தரையில் விரித்த ஈச்சம்பாயில் உட்கார்ந்தார் அவர். சற்றே பெரிய அந்த அறையின் ஒருமூலையில் இரண்டு பிள்ளைகள் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவர், அவர்களைக் கவனிப்பதனைக் கண்ட கிழவி, “என் பேரன், பேத்தி. என் மகன்கள் இருவரும் தங்கள் மனைவிகளோடு வெளியூருக்குச் சென்றிருக்கிறார்கள்..” என்றவள், அப்போதுதான் புறக்கடைப் பக்கமிருந்து அறுத்து வந்த வாழையிலையில் பிழிந்த பழைய சோற்றினை இட்டாள்; தொட்டுக்கொள்ள நெல்லிக்காய் ஊறுகாயும் வைத்தாள்.

பசி ருசியறியாது என்பதனை மெய்ப்பிக்கும் வகையில் மருதுபாண்டி பழைய சோற்றினைச் சுவைத்துச் சாப்பிட்டார்; அருமை அருமை என்று பாராட்டினார்.

“அம்மா... ஓர் உதவியைத் தொடர்ந்து, இன்னோர் உதவியையும் உங்களிடம் யாசிக்கின்றேன். இரவெல்லாம் பயணம் செய்ததால் களைப்பு மிகுதியாயுள்ளது. சிறிது உறங்கி ஓய்வெடுக்கவும் குதிரையைக் கட்டவும் மறைவான இடம் தேவை. உதவ முடியுமா?” என்று பணிவுடன் கேட்டார், அவர்.

“ப்பூ...! இதெல்லாம் ஓர் உதவியா? தோட்டத்துப் பக்கம் ஒரு கொட்டகை உள்ளது. அதனைப் பயன்படுத்திக்கொள் மகனே” என்று தோட்டத்துக் கதவைத் திறந்த கிழவி, “ஆங்... மறந்து விட்டேனே, குதிரைக்குக் கொள்ளும் தண்ணீரும் வைக்கிறேன்... வாயில்லா உயிர்...” என்றாள்.

கொட்டகையில் குதிரைச் சேணத்தைத் தலைக்கு வைத்தவாறு மெய்மறந்து சுட்டெரிக்கும் சூரியன் உச்சிக்கு வரும்வரை ஆழ்ந்துஉறங்கினார் மருதுபாண்டி. மருதுபாண்டிக்குக் கூரை வீட்டுப் பழைய சோறும், ஆழ்ந்த உறக்கமும் புதியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. உறைவிடமும் உணவும் அளித்த கிழவிக்கு நன்றியைச் செலுத்த மருதுபாண்டியின் மனம் எண்ணியது.

“அம்மா, எழுத்தாணியும் ஓலையும் தாருங்கள்.”

“ மகனே... எழுத்தாணியும், ஓலையும் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றனவோ எனக்குத் தெரியாதேப்பா... ”

இருக்கையிலிருந்து எழுந்த அவர், தோட்டத்துப் பக்கமிருந்த சுமார் மூன்றடி உயரம் வளர்ந்திருந்த பனையிலிருந்த ஓலையை அறுத்தெடுத்து வேலி முள்ளால் ஓலையில் எதையோ எழுதினார். எழுதும் அவரையும், அவரது எழுத்துகளையும் சிந்தித்தவாறு பார்த்தாள், கிழவி.

“அம்மா, இதனைச் சிவகங்கை அரசாங்க அலுவலர்களிடம் கொடுங்கள். உங்கள் கவலைகளை விடுங்கள்...’’ என்று ஓலையைக் கிழவியின் கையில் திணித்துவிட்டுக் கண்களில் நீர் தளும்ப வாய் நிறைய நன்றி கூறிக் கிழவியின் கால்களில் பணிந்து, குதிரை மீதேறிப் போனார் மருதுபாண்டி.

விடை கொடுத்தாள் கிழவி; ஓரக்கண்களைச் சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டாள். இந்நிகழ்வை வெளியூரிலிருந்து திரும்பிய மகன்களிடம் நடந்ததனைக் கூறி ஓலையைக் காட்டினாள். படித்த மக்கள் மகிழ்ந்தனர். சிவகங்கை அரசாங்க அலுவலர்களுக்கு ஓலையைக் காட்ட எடுத்துச் செல்வதற்குள், ‘மருதுபாண்டி பகைவர்களால் சிறையில் அடைக்கப்பட்டார்’ என்ற துயரச் செய்தி கிடைத்தது. ஏற்கனவே உடலால் தளர்ந்திருந்த மருதுபாண்டியிடம் மனிதநேயத்தோடு, “உங்களுடைய இறுதி விருப்பம் யாது? சொல்லுங்கள்...’’ என்று வேண்டினர், பகைவர்.

“நான் அரசோச்சிய காலத்தில் யார் யாருக்கு எந்தெந்த ஊர்களைத் தானமாக வழங்கினேனோ அவற்றை அவரவர்களுக்கே உரிமையாக்குதல் வேண்டும். இதுவே என் இறுதி விருப்பம்...’’ என்றார் கணீரென்று.

நற்செய்தி அறிந்த கிழவி, தன்னிடமிருந்த ஓலையைக் கொண்டு சென்றாள்; கொடுத்தாள் மருது பாண்டியரைப் பிடித்திருந்த பகைவர்களிடம். அவள் வசித்த ஊர், அவளுக்குக் கொடையாகக் கிடைத்தது. மருதுபாண்டி அவ்வாறு ஓலையில் எழுதியிருந்தார்.

“பழைய சோற்றுக்கா இவ்வளவு பெரிய பரிசு...’’ என்று வியந்தாள் கிழவி.

அந்த ஊர்தான் சிவகங்கைக்கு அருகில், பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல் என்னும் பெயரில் இன்றும் வழங்கி வருகிறது.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

என்னும் திருக்குறளுக்கு உரிய எடுத்துக்காட்டாய் விளங்கியவர் மருதுபாண்டி. இவர், தினையளவு உதவிக்குப் பனையளவு நன்றியை மறவாமல் செலுத்தியவர்; நன்றி மறவா நல்லவர் மட்டுமல்லர் வல்லவரும்கூட.

நன்றி நல்லவர்களிடம் நாளும் வாழும். நன்றி மறப்பது நன்றன்று என்கிறது வள்ளுவம். ஆகவே, நன்றி மறவாமையே உயரிய மனிதப் பண்பாகும்.

( நன்றி : நீலவன், முத்துக்கதைகள் என்னும் கதைத் தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்டது.)

## மாதிரி வினா

### கட்டுரை வினா

இச்சிறுகதை வாயிலாக மருதுபாண்டியின் பண்பினை வெளிப்படுத்துக.

# நால்வகைச் சொற்கள்

மாணவர்கள் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், குழந்தைகளே! தமிழரசி, நேற்று நீ ஏன் பள்ளிக்கு வரவில்லை?

தமிழரசி : நான் மதுரைக்குச் சென்றிருந்தேன், ஐயா.

ஆசிரியர் : ஓ... அப்படியா... யார் யாருடன் சென்றாய்?

தமிழரசி : என் அப்பா, அம்மாவுடன், ஐயா.

ஆசிரியர் : உடன் யார் வந்தது?

தமிழரசி : என் தம்பியும் வந்தான், ஐயா.

(ஆசிரியர் கரும்பலகையில் அம்மா, அப்பாவுடன் மாநகர் மதுரைக்குச் சென்றோம். என் தம்பியும் வந்தான் என எழுதுதல்.)

ஆசிரியர் : செல்வன்! வண்ணமிட்ட சொற்களைப் படி.

செல்வன் : படிக்கிறேன், ஐயா. அப்பா, அம்மா, மாநகர் மதுரை, தம்பி வந்தான்.

ஆசிரியர் : அம்மா, அப்பா, மாநகர் மதுரை என்பன எவ்வகைச் சொற்கள் எனத் தெரியுமா?

கண்ணன் : இம்மூன்றும் பெயர்ச்சொற்கள், ஐயா.

ஆசிரியர் : நன்று. இவை பெயரைக் குறித்து வந்ததால் பெயர்ச் சொற்கள் ஆயின. நல்லான்! அடுத்த சொல் என்னவென்று கூறு?

நல்லான் : வந்தான், ஐயா.

ஆசிரியர் : ஒரு பொருளின் செயலைக் (இயக்கத்தைக்) குறிப்பதால் இச்சொல் வினைச்சொல் ஆயிற்று. வேந்தா, அடுத்த சொல் என்னவென்று கூறு.

வேந்தன் : 'தம்பியும்'

ஆசிரியர் : தம்பி + உம். இதிலுள்ள 'உம்' என்பது இணைப்புச் சொல்லாக வருகிறது. இதனை இடைச்சொல் என்பர்.

செந்தணல் : இது தனியாக வந்தால் பொருள் தருமா? ஐயா.

ஆசிரியர் : நன்றாகக் கேட்டாய், செந்தணல். இது தனியாக வந்தால் பொருள் தராது; பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைச் சார்ந்தே வரும்.

மதிவாணன் : வேறு எடுத்துக்காட்டுகள் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேனே, இராமனைப் பார்த்தேன். இராமன் + ஐ. இதில் வரும் வேற்றுமை உருபு ஐ இடைச்சொல்லாகும்.

கற்றதனா லாய பயனென் கொல். இதிலுள்ள கொல் என்னும் அசைச்சொல்லும் இடைச்சொல்லே. இவ்வாறு இடைச்சொற்கள் தனித்தியங்காமல் பெயரையோ வினையையோ சார்ந்தே வரும். அவற்றையெல்லாம் மேல் வகுப்புகளில் கற்கவிருக்கிறீர்கள். அடுத்த சொல் என்ன?

தாமரை : மாநகர், ஐயா.

ஆசிரியர் : மாநகர் என்னும் சொல்லிலுள்ள மா என்பது உரிச்சொல் ஆகும். இதன் பொருள் பெரிய என்பது...

செல்வன் : உரிச்சொல் என்றால் என்ன, ஐயா?

ஆசிரியர் : பலவகைப்பட்ட பண்புகளைக்கொண்டு பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களைவிட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவன உரிச்சொற்கள். இவ்வாறு இலக்கணவகைச்சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

மாணவர் : நன்றி, ஐயா.

*****

பயிற்சி : உனக்குத் தெரிந்த பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை எழுதுக.

## மாதிரி வினாக்கள்

அ) புறவய வினாக்கள்

1. முருகன் மாமலையைப் பார்த்தான்.

   இந்த முற்றுச்சொற்றொடரில் உள்ள சொற்களை வகைப்படுத்திக் காட்டுக.

   அ) ____________ ஆ) ____________ இ) ____________ ஈ) ____________

2. பார்த்திபனும் பாரதியும் பள்ளியை அடைந்தனர். – இந்த முற்றுச்சொற்றொடரில் சொற்களை வகைப்படுத்திக்காட்டுக.

   அ) ____________ ஆ) ____________ இ) ____________

3. பொருத்துக.

   அ) பெயர்ச்சொல் – வந்தான்

   ஆ) வினைச்சொல் – ஐந்தும் ஆறும்

   இ) இடைச்சொல் – மாவீரன்

   ஈ) உரிச்சொல் – வேலன்

ஆ) குறுவினாக்கள்

1. சொல் எத்தனை வகைப்படும்?
2. இடைச்சொல் என்றால் என்ன? சான்றுதந்து விளக்குக.
3. உரிச்சொல் என்றால் என்ன? சான்றுதந்து விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

1. வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கான வழிகள் என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.
2. நன்றிப்பரிசுக் கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.

ஆ) படித்தல் திறன்

பொருளுக்கேற்றவாறு குரல் ஏற்ற இறக்கத்துடன் படித்துக் காட்டுக.

ஆகாயத்தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால், ஊமைகளாய் இருந்து வந்த மக்களைப் பேச வைத்தார்; உரிமை முழக்கமிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார்; அச்சத்தைத் துடைத்தார்; ஆயுதம் தாங்கியவர் எதிரில் உயிர் துறக்க அஞ்சாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினார்; சிட்டுக்குருவிகளுக்கு வல்லூற்றை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்.

இ) எழுதுதல் திறன் : குறிப்புகளைக்கொண்டு கதை எழுதுதல் (மாதிரி)

உப்பு வணிகன் – கழுதையின்மேல் உப்புமூட்டை ஏற்றல் – நாள்தோறும் கடைக்குச் சென்று – குறைதல் – மறுநாளும் விழுதல் – உப்பு வணிகனுக்கு வருவாய் குறைதல் – கழுதையின் மனநிலையை அறிதல் – மூட்டையில் பொருளை மாற்றுதல் – அறியாத கழுதை மீண்டும் ஆற்றுநீரில் விழுதல் –எடை கூடுதல் – உண்மை உணர்தல்.

### கழுதையின் சூழ்ச்சி

ஓர் ஊரில் உப்பு விற்கும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறும் உப்புமூட்டை களைக் கழுதையின் மேலேற்றி ஆற்றைக் கடந்துசென்று விற்று வருவான். நாள்தோறும் அதிக எடையுள்ள உப்புமூட்டையைச் சுமந்து செல்வது கழுதைக்குப் பிடிக்க வில்லை. அது துன்பப்பட்டுக்கொண்டே வேலை செய்து வந்தது. ஒருநாள் உப்பு வணிகன் முன்னால் செல்ல, கழுதை மெதுவாக அவன் பின்னே சென்று கொண்டிருந்தது. அப்போது அது, எதிர்பாராமல் ஆற்றுநீரில் தவறி விழுந்தது; எழுந்தபோது தன்மீதுள்ள மூட்டையின் எடை குறைந்ததனைக் கண்டுகொண்டது. மறுநாளும் வேண்டுமென்றே நீரில் தவறி விழுந்தது. மூட்டையின் எடை குறைந்தது. கழுதையின் இச்செயல் நாளும் தொடர்ந்தது. படிப்படியாக வருமானம் குறைந்துகொண்டே வருவதனைக் கண்ட வணிகன், உண்மையை அறிந்துகொண்டான். தீயஎண்ணம் கொண்ட கழுதைக்குப் பாடம் புகட்ட விரும்பினான்.

மறுநாளும் கழுதை கால் தடுமாறி விழுவதுபோல, நீரில் விழுந்தது. ஆனால், அஃது எழுந்த போது, முன்பைவிட எடை கூடியுள்ளதனைக் கண்டது. அன்று, சுமக்க முடியாமல் சுமந்து சென்றது.

நாளும் கழுதை தவறி விழ, எடையும்கூட, மெதுவாக உண்மையை உணரத் தொடங்கியது. நாம் வணிகனை ஏமாற்ற நினைத்தோம். ஆனால், வணிகன் நம்முடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு, உப்பு மூட்டைக்குப் பதிலாகப் பஞ்சு மூட்டையை வைத்துவிட்டான் போலும். தீமை செய்ய நினைத்த எனக்கு நன்றாகப் புரிய வைத்துவிட்டான். இந்தத் தவற்றை இனிச் செய்யக் கூடாது என்று அக்கழுதை முடிவெடுத்தது.

பயிற்சி

கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதையை விரித்து எழுதுக.

சிறுவன் – ஆடுகளை மேய்த்தல் – பிறரை ஏமாற்ற நினைக்கும் குணம் – புலி வருகிறது என எப்போதும் கூறல் – மற்றவர்கள் ஏமாறுதல் – உண்மையாகவே புலி வந்துவிடுதல் – சிறுவன் அழைத்தல் – மற்றவர்கள் இவன் எப்போதும் இப்படித்தான் என நினைத்தல் – பார்க்காமல் இருத்தல் – புலி ஆடுகளை அடித்துச்சென்றுவிடுதல் – சிறுவன் வருந்துதல்.

ஈ) செயல்திட்டம் : கணித மேதைகள் இருவரைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்க.

## அ) வல்லினம் மிகும் இடங்கள்

1. எட்டு, பத்து ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் மட்டும் வல்லின வருக்கச் சொற்கள் வந்தால் வல்லொற்று மிகும்.

(எ.கா.) எட்டு + கால் = எட்டுக்கால்
பத்து + பேர் = பத்துப்பேர்
எட்டு + தொகை = எட்டுத்தொகை
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

**நானே செய்வேன்**

பத்து + சட்டை =
பத்து + தோப்பு =
எட்டு + கூடை =
எட்டு + தேர் =

2. பாடாத, கேளாத, ஆடாத, செய்யாத, சொல்லாத என்பன எதிர்மறைப்பொருளில் வரும் பெயரெச்சங்கள் ஆகும். இச்சொற்களிலுள்ள ஈற்றெழுத்தானது கெட்டுப் பாடா, கேளா, ஆடா, செய்யா, சொல்லா என வருவதும் உண்டு. அவ்வாறு வருவதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர். இவற்றின்முன் வல்லின வருக்க எழுத்துகள் வந்தால் வல்லொற்று மிகும்.

(எ.கா.) பாடா + குயில் = பாடாக்குயில்
கேளா + செவி = கேளாச்செவி
ஆடா + தோழி = ஆடாத்தோழி
செய்யா + செயல் = செய்யாச்செயல்
சொல்லா + சொல் = சொல்லாச்சொல்

**நானே செய்வேன்**

செய்த + தச்சன் =
பாடிய + கவிதை =
காத்த + சிறுமி =
வெடித்த + பஞ்சு =

### வல்லினம் மிகா இடங்கள்

வந்த, உடைந்த, செய்த, கிழிந்த, காய்ந்த என்பன முற்றுப்பெறாத வினைச்சொற்கள். இத்தகைய சொற்கள் பெயரைக்கொண்டு முற்றுப்பெறும். இச்சொற்களைப் பெயரெச்சம் என்பர்.

(எ.கா.) வந்த + குழந்தை = வந்த குழந்தை

உடைந்த + பலகை = உடைந்த பலகை

செய்த + பணி = செய்த பணி

கிழிந்த + துணி = கிழிந்த துணி

காய்ந்த + கட்டை = காய்ந்த கட்டை

இவ்வாறான பெயரெச்சச் சொற்கள்முன் வல்லொற்று மிகாது.

ஆ) தமிழ் எண்ணுப்பெயருக்குரிய எண்ணுருக்களைப் பொருத்துக.

எண்ணுப்பெயர் – எண்ணுரு

1. ஐந்து – அ
2. ஏழு – ௩
3. எட்டு – எ
4. மூன்று – க0
5. பத்து – ரு

இ) கட்டுரை எழுதுதல் : அன்றாட வாழ்வில் அறிவியல்

## வாழ்க்கைத்திறன்

### பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

சோமு, வீட்டுக்கு ஒரே பிள்ளை. அவன் கேட்பது எல்லாம் உடனுக்குடன் கிடைத்துவிடும். அடம்பிடித்துத் தான் விரும்புவதனை எல்லாம் வாங்கிவிடுவான். பெற்றோர் வசதியாக இருந்தமையால், மறுப்பு எழுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

சோமு ஒருநாள், தன் தந்தையுடன் துணிக்கடைக்குச் சென்றான். அங்கு இருந்த வண்ணமயமான ஆடை அவன் மனத்தைக் கவர்ந்தது. அந்த ஆடைதான் தனக்கு வேண்டும் என்று வழக்கம்போல் அடம்பிடித்தான், சோமு. அவனுடைய தந்தை ஆடையை வாங்கிப் பார்த்தார். விலை ரூபாய் எழுநூறு என்று இருந்தது.

'அப்பா விலையை ஏன் பார்க்கிறீர்கள்? எனக்கு இதுதான் வேண்டும். வேறு எதுவும் எனக்கு வேண்டா' என்று திட்டவட்டமாகக் கூறினான் சோமு. அப்போது அங்கு ஒரு சிறுவன், அவன் பெற்றோருடன் அதே ஆடையைப் பார்த்துக்கொண்டு நின்றான். அச்சிறுவனின் பெற்றோரும் அவ்வாடையின் விலையைப் பார்த்தனர்.

உடனே அச்சிறுவனின் தந்தை, 'கண்ணா, இந்தத் துணி நன்றாக இல்லை, வா நாம் அடுத்த கடைக்குப் போகலாம்' என்று அழைத்துச் சென்றார். அச்சிறுவனோ அந்தத் துணியைப் பார்த்துக்கொண்டே சென்றான். அவன் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அதனைக் கவனித்த சோமு, அவர்களின் ஏழைமை நிலையினை எண்ணிப் பார்த்தான். ஒருவேளை, தான் அந்தச் சிறுவனாக இருந்து, அப்பா வாங்கித் தராமல் இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? என்று நினைத்துப் பார்த்தான்.

பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் மனநிலையைப் பெற்றவர்கள் காரண காரியங்களை அறியும் திறன் பெறுவார்கள். இதனால், சிந்தனைத்திறன் வளர்வதோடு உதவும் மனப்பான்மை, இரக்கக்குணம் ஏற்படும். பிறரை எள்ளி நகையாடுவதோ குற்றங் காண்பதோ தீங்கிழைப்பதோ அவர்தம் மனத்தில் ஏற்படாது.

யார், எது செய்தாலும் அவர்நிலையில் நின்று ஒருநொடி சிந்தித்துப் பாருங்கள். அந்த இடத்தில், அந்தச் சூழலில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்; எப்படி நடந்துகொண்டிருப்போம்? உங்களுக்குள் உள்ள கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டுப் பாருங்கள்.

## மதிப்புக்கல்வி

### கடமை

பிரேம் சந்த், இந்திமொழியில் புகழ்பெற்ற ஓர் எழுத்தாளர். அவருடைய கதைகள் பெரும் புகழ்பெற்றவை. பிரேம் சந்த் ஒருமுறை உடல் நலமில்லாமல் இருந்தார். ஆனால், அந்த நிலையிலும் எழுத்துப் பணியினை விடாமல் செய்து கொண்டிருந்தார். அதனைக் கண்ட அவர் மனைவி, 'ஏன் இப்படி உங்களை வருத்திக் கொள்கிறீர்கள்? சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும். உங்கள் உடல்நலம் நன்றாக இருந்தால்தானே எழுத முடியும்; எழுதுவதனை நிறுத்தி உங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்துங்கள்' என்று வற்புறுத்திக் கூறினார்.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பிரேம் சந்த், 'ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் ஒளி கொடுக்க வேண்டியது, அதன் கடமை. அதனை விட்டுவிட்டு, நம்முடைய ஒளியினால் பிறருக்கு நன்மையா தீமையா என்று ஆராய்வது அதன் வேலையன்று. எண்ணெயும் திரியும் உள்ளளவும் தானாகவே எரிந்து, பின்னர் அணைந்து விடும்' என்றார்.

உடல் நலம் பாதித்தபோதும் எடுத்த வேலையை முடிக்காது, அவ்விடத்தைவிட்டுச் செல்ல விரும்பாமல் கடமையே பெரிது என வாழ்ந்தார் பிரேம் சந்த்.

கடமைக்கு முதலிடம் தருவோர் வாழ்க்கையில் வெற்றிபெறுவர். நீங்களும் அன்றாடப் பணிகளை அன்றன்றைக்கே முடிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். உங்களை வெல்ல யாராலும் இயலாது.

மாணவர்களே! நீங்கள் எப்படி? கடமையுணர்ச்சி கொண்டவர்களா?

உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்.

| உனக்குத் தெரிந்த இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் பட்டியலிடுக. |
|---|
| |

| வளரறி செயல்பாடுகள் | |
|---|---|
| கேட்டல் திறன் | செயல்பாடு – 1 |

**கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படிக்கக் கேட்டு வினாக்களுக்கு விடையளிக்க.**

விவேகானந்தர் அமெரிக்காவிலுள்ள ஓரூரில் தங்கியிருந்தார். அங்கு நீரோடையைக் கடப்பதற்கு ஒரு பாலம் இருந்தது. விவேகானந்தர், அந்நீரோடைக் கரையில் ஒருநாள் நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அங்கு இளைஞர் சிலர், முட்டை ஓடுகளைத் துப்பாக்கியால் குறிவைத்துச் சுடுவதற்குப் பயிற்சி மேற்கொண்டிருந்தனர். அவர்கள், முட்டை ஓடுகளை ஒரு நூலில் கட்டி நீரோடையில் மிதக்கவிட்டிருந்தனர். அந்நூல், நீரோடைக் கரையிலிருந்த சிறிய கல்லில் கட்டப்பட்டிருந்தது. நீரின் அசைவுக்கு ஏற்ப நூலில் கட்டப்பட்டிருந்த முட்டை ஓடுகள் மெதுவாக அசைந்துகொண்டிருந்தன.

அவ்விளைஞர்கள், பாலத்தில் நின்றுகொண்டு ஓடையில் அசைந்து கொண்டிருக்கும் முட்டை ஓடுகளைச் சுடுவதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் துப்பாக்கியால் முட்டை ஓடுகளைச் சுட்டனர். ஆனால், அவர்கள் வைத்த குறி தப்பிப் போயிற்று. ஒரு முட்டை ஓட்டைக்கூட அவர்களால் சுட இயலவில்லை.

இளைஞர்களின் இந்தச் செயலைப் பார்த்தார் விவேகானந்தர். அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. இதனை அங்கிருந்த இளைஞருள் ஒருவன் கண்டான். அவன் விவேகானந்தரிடம் இந்த முட்டை ஓடுகளைச் சுடுவதனைப் பார்ப்பதற்கு எளிதான செயல்போன்று தோன்றும்; ஆனால், நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதானதன்று. நீங்களே முயற்சி செய்து பாருங்கள். அப்போது உங்களுக்கே தெரியும் எனக் கூறினான்.

விவேகானந்தர் துப்பாக்கியைக் கையிலெடுத்தார். அப்போது அங்குப் பன்னிரண்டு முட்டை ஓடுகள் மட்டுமே நீரோடையில் மிதந்து கொண்டிருந்தன. விவேகானந்தர் அவற்றைச் சுட, அவை அனைத்தும் தூள்தூளாகிச் சிதறின. இதனைப் பார்த்த இளைஞர்கள் பெரிதும் வியப்படைந்தார்கள். ‘ஐயா, நீங்கள் துப்பாக்கி சுடுவதில் மிகவும் பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். அதனால்தான், நீங்கள் அத்தனை முட்டை ஓடுகளையும் குறி தவிராமல் சுட்டீர்கள்’ எனக் கூறினார்கள்.

அதற்கு விவேகானந்தர், ‘என் வாழ்நாளில் இன்றுதான் முதன்முறையாகத் துப்பாக்கியைத் தொடுகிறேன்’ எனக் கூறினார். அவர் கூறியதனை இளைஞர்களால் நம்பமுடியவில்லை. ‘அப்படியென்றால், உங்களால் எப்படிக் குறி தவிராமல் அத்தனை முட்டை ஓடுகளையும் சுடமுடிந்தது’ எனக் கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த விவேகானந்தர், மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் அனைத்தும் இருக்கிறது. அவ்வாறு செய்யும்போது, எந்தவொரு செயலும் வெற்றியைத் தரும் என்றார்.

### வினாக்கள்

1. பத்தியின் மையக் கருத்து யாது ?
2. பத்தியில் குறிப்பிடப்படுபவர் புகழ்மிக்கவர். அவர் பெயர் என்ன ?
3. நீரோடைக் கரையில் இளைஞர்கள் என்ன செய்துகொண்டிருந்தனர் ?
4. விவேகானந்தர் முட்டை ஓடுகளைக் குறி தவிராமல் சுட்டதனைக் கண்டு இளைஞர்கள் கூறியது என்ன ?
5. பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

| பேசுதல் திறன் | செயல்பாடு – 2 |
|---|---|

### தன் விவரங்களைப்பற்றிப் பேசவைத்தல்.

(எ.கா.) என் பெயர் முத்து. என் ஊர் நாமக்கல் மாவட்டத்திலுள்ள மல்லசமுத்திரம். எங்கள் ஊரிலுள்ள அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளியில் நான் ஏழாம் வகுப்புப் படிக்கிறேன். தமிழ்ப்பாடம் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் எழுதிய பாடல்கள் பள்ளிக் கையெழுத்து இதழில் இடம்பெற்றுள்ளன. என் பாடலைப் படித்த தலைமையாசிரியர், அதனைப் பள்ளி ஆண்டுமலரில் வெளியிடுவதாகக் கூறியுள்ளார். இஃது என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு நிகழ்வாகும்.

| படித்தல் திறன் | செயல்பாடு – 3 |
|---|---|

### கீழ்க்காணும் உரைப்பத்தியை உரிய ஒலிப்புடன் வாய்விட்டுப் படிக்க.

ஆடற்கலை என்பது, முத்தமிழில் நாடகக்கலையுள் அடங்கும். நடனம், நாட்டியம் என்பனவும் ஆடற்கலையைக் குறிப்பனவே. இக்கலை, பழங்காலத்தில் கூத்துக்கலை என அழைக்கப்பட்டது. கட்புலனாம் இன்பத்தைத் தரவல்லது ஆடற்கலை. உடற்சோர்வையும் உள்ளத் துயரையும் போக்கும் வடிகால்கள் ஆடல் பாடல்கள்.

மக்கள் மனம் மகிழ்ச்சியில் திளைக்கும் பொழுதெல்லாம் ஆடிப் பாடிக் களித்தனர். அவர்கள் மரநிழல்களிலும் கோவில் முற்றங்களிலும் ஆடினார்கள். மாடம், மாளிகை, மண்டபங்களிலெல்லாம் மகளிர் சிலம்பார்ப்ப ஆடினர். கைவழிக் கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே ஆடலின் நுட்பமாகும். ஆடற்கலையில் வல்லவராய்க் கூத்தரும் விறலியரும் திகழ்ந்தனர்.

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைச் சொல்லக் கேட்டு எழுதுக.

கொட்டகையில் குதிரைச் சேணத்தைத் தலைக்கு வைத்தவாறு மெய்மறந்து சுட்டெரிக்கும் சூரியன் உச்சிக்கு வரும்வரை ஆழ்ந்து உறங்கினார் மருதுபாண்டி. மருதுபாண்டிக்குக் கூரை வீட்டுப் பழைய சோறும் ஆழ்ந்த உறக்கமும் புதியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. உறைவிடமும் உணவும் அளித்த கிழவிக்கு நன்றி கூற மருதுபாண்டியின் மனம் எண்ணியது.

| எழுதுதல் திறன் | செயல்பாடு – 5 |
|---|---|

சொல்லைப் பிரித்து இருபொருள் கூறுக.

| சொல் | பொருள்–1 | பொருள்–2 |
|---|---|---|
| கண்மணி | கண் | மணி |
| மாநாடு | | |
| பொதிகை | | |
| கவிமணி | | |
| வைகறை | | |

| கண்டறிதல் திறன் | செயல்பாடு – 6 |
|---|---|

பெயருக்கேற்ற வினைச்சொற்களையும் வினைக்கேற்ற பெயர்ச்சொற்களையும் கண்டறிந்து எழுதுக.

(நிரம்பியது, மின்னியது, இடித்தது, கறுத்தது, வீசியது, பெய்தது, பெருகியது,ஊர், வளம், வயல்)

| | |
|---|---|
| வானம் கறுத்தது | வெள்ளம் ____________ |
| காற்று ____________ | ஏரி ____________ |
| மின்னல் ____________ | ____________ விளைந்தது |

தமிழ்

| | |
|---|---|
| இடி ____________ | ____________ கொழித்தது |
| மழை ____________ | ____________ செழித்தது |

| நேர்காணல் | செயல்பாடு – 7 |
|---|---|

ஒரு மாணவனை உரிச்சொல்லாக நினைக்கச் செய்து, அம்மாணவனை மற்றொரு மாணவன் நேர்காணல் செய்க.

மாணவர் : வணக்கம், ஐயா.

உரிச்சொல் (மாணவர்) : வணக்கம்.

மாணவர் : உங்களைச் சந்தித்துப் பேசுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

உரிச்சொல் : எனக்கும் மகிழ்ச்சிதான்.

மாணவர் : தங்களைப்பற்றி விளக்கமாகச் சொல்லுங்களேன்.

உரிச்சொல் : உங்களைப்போன்றே எனக்கும் பலவகையான பண்புகள் உண்டு.

மாணவர் : அப்படியா, வியப்பாக உள்ளதே! ஏதேனும் ஒரு பண்பைப்பற்றிச் சொல்லுங்கள்.

உரிச்சொல் : மாநகர் என்னும் சொல்லில் உள்ள 'மா' நானே. இங்குப் பெரிய என்னும் பொருளைத் தந்துள்ளேன். இப்படிப்பட்ட பண்புகள் மிகுதியாக எனக்கு உண்டு.

மாணவர் : நீங்கள் தனியாக நின்று பொருள் தருவீர்களா?

உரிச்சொல் : இல்லையில்லை, அஃது என்னால் இயலாது.

மாணவர் : அப்படியானால், யாருடன் சேர்ந்து பொருள் தருவீர்கள்?

உரிச்சொல் : வேறு யார்? பெயருடனும் வினையுடனும்தான்.

மாணவர் : ஆனால், எங்கள் பேச்சுவழக்கில் நீங்கள் அவ்வளவாக இடம் பெறுவதில்லையே, ஏன்?

உரிச்சொல் : உண்மைதான். என்னைச் செய்யுளில்தான் மிகுதியாகப் பயன்படுத்துவர்.

மாணவர் : நன்றி, ஐயா. தங்களைச் சந்தித்தது எனக்குக் கிடைத்த மாபெரும்பேறு, விடைபெறுகிறேன் ஐயா.

உரிச்சொல் : என்னை நன்றாகப் பயன்படுத்தத் தெரிந்துகொண்டது போற்றுதற்குரிய மாச்சிறப்பு. சென்று வாருங்கள். வாய்ப்புக் கிடைக்கும்போது மீண்டும் சந்திப்போம்.

| நடித்தல் திறன் | செயல்பாடு – 8 |
|---|---|

இடைச்சொல்லாக மாறி நடித்துக் காட்டுக.

அ) என் பெயர் இடைச்சொல்.

ஆ) நான், என் நண்பர்களான பெயர்ச்சொல், வினைச்சொல்லுடன் சேர்ந்து வருவேன்.

இ) நான் எப்போதும் தனியாகச் செயல்படாமல், நண்பர்களுடன் சேர்ந்தே செயல்படுவேன்.

ஈ) தனியாக இருந்தால் பொருள்தரமாட்டேன்.

உ) இணைச்சொல்லாகவும் அசையாகவும் வேற்றுமை உருபாகவும், உவம உருபாகவும் நண்பர்களுடன் இணைந்தே வருவேன்.

ஊ) நான், நண்பர்களுடன் இருக்கும்போது, எளிதாகப் பொருளையும் கருத்தையும் தெளிவுபடுத்துவேன்.

| அறிதல் திறன் | செயல்பாடு – 9 |
|---|---|

கீழ்க்காணும் பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.




நாங்கள்தாம் வரையாடுகள். எங்களைத் தமிழக இராஜாங்கத்தின் தேசிய மிருகங்கள் எனச் சகல ஜனங்களும் அழைக்கிறார்கள். நாங்கள் உதகையில் பெருமளவில் ஜீவித்து வருகிறோம். அழிந்துவரும் மற்ற மிருகங்களைப் போன்றே நாங்களும் விரைவாக அழிந்து வருகிறோம். எங்களைக் காப்பது உங்களின் கடமை.

| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| இராஜங்கத்தின் | |
| தேசிய | |
| மிருகங்கள் | |

| வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| | |
| | |
| | |

| சொல்லுருவாக்கம் | செயல்பாடு – 10 |
|---|---|

வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




சொற்கள்


________________, ________________, ________________, ________________

________________, ________________, ________________, ________________

________________, ________________, ________________, ________________

| தொடர் உருவாக்கம் | செயல்பாடு – 11 |
|---|---|

பெயர்ச்சொற்களுடன் ‘ஆர’ என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து, உரிய வினையுடன் தொடரை உருவாக்குக.




(எ.கா.) 1. மனதார வாழ்த்தினான்.

4. ______________________

2. ______________________

5. ______________________

3. ______________________

6. ______________________

| படைப்பாற்றல் | செயல்பாடு – 12 |
|---|---|

பொருத்தமான சொற்களை எடுத்து எழுதிப் பாடலை நிரப்புக.

( வீழ்ச்சி, வெற்றி, உறவு, பெருமை, புகழ், அழிவு, உயர்வு, சிறப்பு, இன்பம், துன்பம் )

| | |
|---|---|
| அறம் இன்பம் தரும் | உழைப்பு ________ தரும் |
| அன்பு ________ தரும் | பகை ________ தரும் |
| ஆக்கம் ________ தரும் | பண்பு ________ தரும் |
| ஆசை ________ தரும் | முயற்சி ________ தரும் |
| உண்மை ________ தரும் | முயலாமை ________ தரும் |

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண்: 10

அ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 2 x 1 = 2

1. காளமேகப்புலவர் ______________________ கோவிலில் பணிபுரிந்தார்.
2. இராமானுஜத்தின் கட்டுரைகள் ______________________ தலைப்பில் வெளியானது.

ஆ) கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக. 4 x1 = 4

1. தனிப்பாடல் திரட்டு என்னும் நூலைத் தொகுத்தவர் ______________________.

   அ) மோசிகீரனார் ஆ) காளமேகப்புலவர்

   இ) சந்திரசேகர கவிராசப்பண்டிதர்

2. இலண்டனிலுள்ள ____________ கல்லூரியில் இராமானுஜம் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார்.

   அ) திரினிட்டி ஆ) ஆக்ஸ்போர்டு இ) ஹார்வார்டு

3. மாநகர் என்பது ______________________.

   அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) உரிச்சொல்

4. கிழவிக்கு மருதுபாண்டி அளித்த ஊர் ______________________.

   அ) சிவகங்கை ஆ) திருநெல்வேலி

   இ) பழஞ்சோற்று குருநாதனேந்தல்

இ) கீழ்க்காணும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. 2 x 2 = 4

1. வழிமுறை
2. சிந்தித்தவாறு

# பல்லூடகப் பாதுகாப்பு



மணி ஒலித்தது. விடுமுறைக்குப் பின்னர்த் தொடங்கும் முதல்நாள் வகுப்பறை அது. மாணவர் மகிழ்ச்சியுடன் ஆசிரியரை எதிர்பார்த்திருந்தனர். உள்ளே நுழைந்த ஆசிரியர் கரும்பலகையில் 'கலந்துரையாடல்' என எழுதினார்; மாணவரை நோக்கினார்.

தலைப்பு . . . . . ? ஒரு மாணவனின் குரல் உரக்க ஒலித்தது.

நீங்கள் விரும்பும் தலைப்பில் உரையாடலாம் – ஆசிரியரின் பதில் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டியது.

விடுமுறை நாள்கள் – எனப் பின்னிருக்கையிலிருந்து ஒரு குரல் மெலிதாகக் கேட்டது. வகுப்பறை முழுவதும் அதனை வரவேற்றது. நான்... நீ... எனப் போட்டியிட்டனர் மாணவர். நான் போய் வந்த கண்காட்சி குறித்துக் கூறவா எனத் துடுக்காகப் பேசும் சுடர்விழி முதலில் கூறினாள்.

இராட்டினம் சுற்றினாயா ? படம் பார்த்தாயா ? விளையாட்டுப் பொருள் வாங்கினாயா ? என நாலு மூலையிலிருந்தும் வினாக்கள் தொடர்ந்து வந்தன. சுடர்விழி உறுதியுடன், நான் பார்த்த கண்காட்சி முற்றிலும் மாறுபட்டது. நீங்கள் நினைப்பதுபோல இல்லை. நாம் அனைவரும் அலைபேசி, கணிப்பொறி, இணையம் என அனைத்தையும் பயன்படுத்துகிறோம். அதில் ஒளிந்துள்ள தொல்லைகள் என்னென்ன என்பது யாருக்கேனும் தெரியுமா ?

இம். . . கண் கெட்டுவிடும், காது கேளாமல் போய்விடும் . . . எல்லாம் தெரிந்தவை தானே ? பாரதியின் பதில் போட்டியாக ஒலித்தது.

"இல்லை இல்லை. அலைபேசியை எப்படி ஆபத்தில்லாமல் பயன்படுத்துவது என்பதைப் பார்த்தேன்" எனச் சுடர்விழி கூறவும், "அப்புறம்..." குறும்பாக வந்து விழுந்தன குரல்கள்.

சிறுவன் ஒருவன் எப்போதும் அலைபேசியில் விளையாடிக் கொண்டே இருந்தானாம். அந்நேரம் நடைப்பயிற்சிக்கு வெளியே சென்ற தாத்தா, கீழே விழுந்து அடிபட்டிருக்கிறார் எனத் தகவல் வந்திருக்கிறது. விளையாட்டுப்போக்கில் அவன் அந்த அலைபேசி

இணைப்பை மூன்றுமுறை துண்டித்து இருக்கிறான், அவனுக்கே தெரியாமல்! இறுதியில், அவன் தாத்தாவை இறந்த பிறகே பார்த்தானாம். அவன் வாழ்நாளில் மறக்கக் கூடியதா இது ? தான் பார்த்ததை வருத்தத்துடன் கூறினாள் சுடர்விழி .

மாணவர் அனைவரும் அமைதியாயினர். எழிலுக்கோ இருப்புத் தாளவில்லை.

"நான் எப்போதாவதுதான் அலைபேசியில் விளையாடுவேன்" என ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தான்.

"என் தோழி ஒருமுறை, தன் அம்மாவின் அலைபேசியில் பேசுபவரின் குரலை மாற்றும் முறையைப் பதிவு செய்து விட்டாள். அது, அவள் அம்மாவிற்குத் தெரியாது, ஏன் அவளுக்கே கூட அதனால் ஏற்படும் விளைவுகள் என்னென்ன என்பது தெரியாது. அப்போது, அவர்களின் மூத்த உறவினர் ஒருவர் பேசியிருக்கிறார். குரல் வேறுமாதிரி இருந்ததால், அவள் அம்மா பேசியவரைக் கடுமையாகத் திட்டி பின்பு, காவல்துறைக்கும் தகவல் கொடுத்து விட்டார். பிறகுதான், அலைபேசியில் இம்மாதிரி குரல்மாறி வரும் முறை பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிந்தது; ஆனாலும், குடும்பத்தில் ஏற்பட்ட விரிசல் இன்றுவரை சரியாகவே இல்லை" என்று கண்ணன் கூறினான்.

அவனைத் தொடர்ந்து, "நான் அலைபேசியை எப்போது கையில் எடுத்தாலும், அதில் உள்ள பணஇருப்புக் குறைந்து விடுகிறது என என் அப்பா திட்டுவார். நான் விளையாடுவதனைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை" என்று வேல் கூறினான்.

"நீ அலைபேசியில் உள்ள இணையத் தொடர்பை இயக்கி இருப்பாய்; அதனால், சில நிறுவனம் அளிக்கும் தானியங்கிச் செய்திகள், சில இணைய வசதிகள் உன் அலைபேசிக்கு வரத்தொடங்கும்; நிறுவனங்கள், அதற்கான தொகையை எடுத்துக்கொள்ளும்; அதனால், அலைபேசியின் பணஇருப்பு இயல்பாகக் குறையத் தொடங்கும்" என்றார் ஆசிரியர்.

அதனை வகுப்பு முழுமையும் ஏற்றுக்கொண்டது.

குறிப்பு – இதைப்போல அலைபேசியைத் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளைத் தொகுத்து வரச்செய்க; படத்தொகுப்பும் உருவாக்குக.

- அலைபேசியில் மருத்துவமனை, காவல்நிலையம் மற்றும் உடனடி உதவிக்கான தொலைபேசி எண்களை முதலில் பதிவு செய்து வைப்பது இன்றியமையாதது.
- ஏதேனும் ஆபத்துக் காலத்தில் உறவினர்கள், நண்பர்களில் யாரைத் தொடர்பு கொள்வது என்பதற்கான தகவலை ice1, ice2 (In case of Emergency) எனக் குறியீட்டுச் செய்தியாகப் பதிவு செய்வது மிக இன்றியமையாதது.

அடுத்து . . . . . பேஸ்புக், டிவிட்டர், இணையம், மின்னஞ்சல். . . . . . சுடர்விழி தொடங்கியதும் நான் கூறுகிறேன் என அதிகமான குரல்கள் முன்வந்தன.

“புகைப்படத்தை அனைவருக்கும் அனுப்புவது, தனிப்பட்ட அந்தரங்கச் செய்திகளை அனைவரும் அறியச் செய்வது, எப்போதும் துன்பத்தை வரவழைப்பவை” என ஆசிரியர் தொடங்கி வைத்தார்.

“என் அண்ணாவின் அலைபேசிக்குக்கூட ஓர் அழைப்பு வந்தது. ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்கீழ் பரிசு கிடைத்திருக்கிறது எனவும், அதற்கான பொருள்கள் அஞ்சலில் அனுப்பப்படும் எனவும், அஞ்சல் கட்டணத்தை மட்டும் செலுத்தினால்போதும் எனவும் தகவல் இருந்தது. என் அண்ணாவும் அதை ஏற்றுக்கொண்டதோடு ரூ.**999/–** கொடுத்து அந்த அஞ்சலைப் பெற்றார். அதைப் பிரித்துப் பார்த்தபோதுதான் **100**ரூபாய்க்கும் கூட மதிப்பில்லாத பொருள்கள் பெறப்பட்டது தெரிந்தது.” இது மதியின் வாக்குமூலம்.

அப்படியென்றால், பல இணையப் பக்கங்களில் நாம் நுழைந்ததும், “இந்த இணையத்தளத்தில் நுழைந்த இலட்சமாவது ஆள் நீங்கள்! வாழ்த்துகள்! இங்கே சொடுக்கவும், என வேறுபட்ட வண்ணத்தில் அறிவிப்பு சில ஒளிர்வதைப் பார்த்திருக்கிறேன், அவையெல்லாம் போலிகளா ? ” வேல் ஆவலுடன் கேட்டான்.

உறுதியாக, அவை ஏமாற்றுச் செய்திகள்தான், மேலும் ஆசிரியர் தொடர்ந்தார்.

“ அந்த அறிவிப்புகளுக்குப் பதில் அளிப்பது, அதில் நமது தனிப்பட்ட தகவல்களைப் பதிவு செய்வது, முன்அறிமுகம் இல்லாதவர்களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் வரும் மின்னஞ்சல் மற்றும் தகவல்களுக்குப் பதில் அளிப்பது, தேவையற்ற இணையத்தளங்களில் உறுப்பினராக இணைவது, குடும்ப மற்றும் தனிப்பட்ட பிற தகவல்களை இணையத்தளங்களில் பதிவு செய்வது, பாடல்கள், படங்களைப் பதிவிறக்கம் செய்வது போன்றவை நமக்கு நாமே தேடிக் கொள்ளும் தொல்லைகளாகும். அடுத்து, நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்பும் ஓர் ஊடகம், தொலைக்காட்சி!”

ஆசிரியர் கூறியதும் மாணவர் முகங்கள் மலர்ந்தன.

“விடுமுறை நாள் முழுவதும் எனக்கும் என் தங்கைக்கும் தொலைக்காட்சிதான் உலகம்” என்றான், வளவன்.

உடனே கவின், “நாள்முழுக்க அப்படி என்ன பார்ப்பாய் ?” கேலியாகக் கேட்டான்.

“கார்ட்டூன்படம், சினிமா, நகைச்சுவை, விளம்பரங்கள், குத்துச்சண்டை, மட்டைப்பந்து முதலிய விளையாட்டுகள், தொலைக்காட்சித் தொடர்கள் எனப் பார்ப்பதற்குத்தான் எவ்வளவோ உள்ளனவே!” என வளவன் கூறவும், “எப்போது பார்த்தாலும் பழிதீர்ப்பது, அழுதுகொண்டே இருப்பது, அடுத்தவரைக் கவிழ்த்துவிட்டுத் தான்மட்டும் முன்னேறுவது – இவைபோன்ற காட்சிகளைக் கொண்ட தொலைக்காட்சித் தொடர்களை எப்படிப் பார்க்கிறாய் ?” என யாழினி எதிர் வினா தொடுத்தாள்.

வெட்கத்துடன் தலைகவிழ்ந்து கொண்டு நாக்கைக் கடித்தான் வளவன்.

வினாச் சிக்கலில் மாட்டிக் கொண்ட அவனை விடுவித்தார் ஆசிரியர்.

தொடர்ந்து ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல் களைகட்டியது.

இறுதியாக ஆசிரியர், “மாணவர்களே! பெரும்பாலும் இம்மாதிரி ஆபத்து உள்ள சூழ்நிலைகளைத் தவிர்ப்பது நல்லது; வேறு வழியில்லாத நிலையில் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்; எதையும் பாதுகாப்புடன் அணுகுங்கள்; நுண்ணறிவுடன் செயல்படுங்கள். மேற்கண்ட பிரச்சினைகளைத் தவிர்க்க என்ன செய்வது? நாம் என்ன செய்யலாம்? அனைவரும் சிந்தியுங்கள். அடுத்த வகுப்பிற்கு ஏற்ற பதில்களுடன் வாருங்கள்” என முத்தாய்ப்பாக முடித்தார், ஆசிரியர்.

என்ன மாணவர்களே! நாமும் சிந்திக்கலாமா?

### உளவு நிழற்படக் கருவி– எச்சரிக்கை

நாம் பல்முனை விற்பனையகங்களுக்கு ஆடைகளை வாங்கச் செல்வோம். ஆயத்த ஆடைகளை வாங்கும்போது, அதன் அளவு சரியாக இருக்கிறதா என்பதை அறிய, ஆடைகளை அணிந்து பார்க்க கடைகளிலே சில அறைகளை ஒதுக்கி இருப்பார்கள். இவ்விடங்களில் ஆடை மாற்றுவதை உளவுநிழற்படக் கருவி மூலம் படம்பிடித்து வெளியிடுவதாகத் தற்போது பல குற்றச்சாட்டுகள் காவல் நிலையங்களில் பதிவாகி வருகின்றன.

இதைத் தவிர்க்க, ஆடை மாற்றும் அறைக்குள் உங்கள் அலைபேசியை இயக்கிப் பார்த்தால் ஒருவித தடுப்புஒலி நமக்குக் கேட்கும்; அப்படிக் கேட்டால் அவ்வறையில் எங்கோ சிறுதுளையில் உளவு நிழற்படக் கருவி இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணருங்கள்; எச்சரிக்கையாக இருங்கள் என இணையப் பாதுகாப்புக் காவலர்கள் எச்சரிக்கின்றனர்.

### பயிற்சி

**அ. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடையளிக்க.**

1. பல்லூடகங்கள் யாவை?
2. நீங்கள் நாள்தோறும் பயன்படுத்தும் ஊடகங்கள் யாவை?
3. ஊடகங்களினால் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் தொல்லைகளையும் எவ்வாறு தவிர்க்கலாம்?

ஆ. பாடப்பகுதிக் கலந்துரையாடலை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுக.

இ. தகவல் தொடர்புச் சாதனங்களின் நன்மை, தீமைகளைப் பட்டியலிடுக.

| தகவல் தொடர்புச் சாதனங்கள் | நன்மைகள் | தீமைகள் |
|---|---|---|
| அலைபேசி | | |
| பண்பலை வானொலி | | |
| தொலைக்காட்சி | | |
| கணினி | | |
| இணையத்தளம் (பேஸ்புக், டிவிட்டர்) | | |

ஈ. வகுப்பறையில் பேசுக.

அறிவிப்பாளர் : ஹலோ, யார் பேசுறது ? எங்கிருந்து பேசுறீங்க ?

முகில் : திருவண்ணாமலையில் இருந்து முகில் பேசுறேன்.

அறிவிப்பாளர் : முகில், என்ன படிக்கிறீங்க ?

முகில் : நான் நாலாம் வகுப்பு படிக்கிறேன்.

அறிவிப்பாளர் : நல்லது முகில், உங்களுக்கு என்ன விளையாட்டு பிடிக்கும் ?

முகில் : எனக்கு என் நண்பர்களுடன் ஒளிந்து விளையாடுவது ரொம்பப் பிடிக்கும். ஆனால், என் அம்மா ஊருக்குப் போய்விட்டார்கள். நான் வீட்டில் தனியாக இருக்கிறேன். அதனால், விளையாடப் போகவில்லை.

அறிவிப்பாளர் : ஐயோ, பாவம்! வீட்டில் தனியாக இருக்கிற நமது குட்டி நேயர் முகிலிற்காக இந்தப் பாட்டை வழங்குகிறோம், நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது . . . . .

மேற்கண்டவாறு பண்பலை வானொலியில் சிலர் தங்களைப் பற்றிய விவரங்களை விளக்கிக் கொண்டிருப்பார்கள், நீங்கள் கேட்டிருக்கிறீர்களா ? அது குறித்துத் தங்கள் கருத்துகளை வகுப்பறையில் பேசுக.

உ. நேர்காணல் கண்டு கருத்துகளைப் பதிவு செய்து செய்தியாக்குக.

உன் வீட்டருகில் / நண்பர்களிடத்தில் / உறவினர்களிடத்தில் தகவல் தொடர்புச் சாதனங்களால் ஏற்பட்ட பாதிப்பு ஒன்றை நேர்காணல் கண்டு தொகுக்க; தொகுத்தவற்றைப் பதிவு செய்க. அதனை நாளிதழ் செய்தியாக மாற்றித் தருக.

## "என்னால் முடியும், நானே செய்தேன்"

## ('I can, I did')

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தமிழ்நாடு அரசு

# ஏழாம் வகுப்பு

## இரண்டாம் பருவம்

### தொகுதி 1

தமிழ் ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு இலவசப்பாடநூல்
வழங்கும் திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2012
திருத்திய பதிப்பு – 2013
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்
www.textbooksonline.tn.nic.in

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

**SHORT VERSION**

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

“I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation.”

“I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means.”

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# பொருளடக்கம்

## தமிழ் (1 - 60)


| இயல் | | | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | செய்யுள் | | திரிகடுகம் | 2 |
| | உரைநடை | | காந்தியடிகள் கடிதம் | 5 |
| | துணைப்பாடம் | | உரியது | 8 |
| | இலக்கணம் | | இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும் | 11 |
| 2. | செய்யுள் | (i) | திருவாரூர் நான்மணிமாலை | 19 |
| | | (ii) | மெய்ப்பொருள் கல்வி | 21 |
| | உரைநடை | | தூங்கா நகர் | 23 |
| | துணைப்பாடம் | | அறிவு நுட்பம் | 29 |
| | இலக்கணம் | | அறுவகைப் பெயர்ச்சொற்கள் | 32 |
| 3. | செய்யுள் | (i) | ஏர்முனை | 42 |
| | | (ii) | அம்மானை | 44 |
| | உரைநடை | | நெசவு | 46 |
| | துணைப்பாடம் | | நிலைத்த செல்வம் கல்விச் செல்வம் | 50 |
| | இலக்கணம் | | வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் | 53 |


## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
|---|---|---|
| 1. | திரிகடுகம் ( 2 ) | 4 |
| 2. | மெய்ப்பொருள் கல்வி (13–16 அடிகள்) | 4 |
| 3. | ஏர்முனை (7–14 அடிகள்) | 8 |
| | மனப்பாடஅடிகள் மொத்தம் | 16 |

(பாடநூலுள் ★ இவ்வுடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி)

# தமிழ்

## ஏழாம் வகுப்பு

### இரண்டாம் பருவம்

# திரிகடுகம்

– நல்லாதனார்

## தூயவர் செயல்கள்

1. உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் – தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

பொருள் : நீராடிய பின் உண்ணுதல், பெரும்பயன் கிடைத்தாலும் பொய்ச்சாட்சி சொல்லாமல் இருத்தல், உடல்வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல் ஆகிய இம்மூன்றும் மனம், மொழி, மெய்களால் தூய்மை உடையவரின் செய்கைகளாம்.

சொற்பொருள்: உண்பொழுது – உண்ணும்பொழுது; பெறினும் – பெற்றாலும்; பால்பற்றி – ஒருபக்கச் சார்பு (நடுவுநிலைமையில் இருந்து மாறுதல்); தோல்வற்றி – தோல்சுருங்கி; சாயினும் – அழியினும்; சான்றாண்மை – அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்; குன்றாமை – குறையாது இருத்தல்; தூஉயம் – தூய்மை உடையோர்).

## அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை

2. இல்லார்க்கொன் றீயும் உடைமையும், இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் – எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள. *

பொருள் : வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல், எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே என்றும் உண்டு.

சொற்பொருள் : ஈயும் – அளிக்கும்; நில்லாமை – நிலையாமை; நெறி – வழி; தூய்மை – தூய தன்மை; மாந்தர் – மக்கள்.



புதரில் விதைத்த விதை

3. முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும் – நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

பொருள் : அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம், மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதைபோன்று பயனற்றவையே.

சொற்பொருள்: நிறை ஒழுக்கம் – மேலான ஒழுக்கம்; தேற்றாதான் – கடைப்பிடிக்காதவன்; வனப்பு – அழகு; தூறு – புதர்; வித்து – விதை.

ஆசிரியர் குறிப்பு : திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருத்து என்னும் ஊரினர் என்பர். இவரைச், செருஅடுதோள் நல்லாதன் எனப் பாயிரம் குறிப்பிடு வதனால், இவர் போர்வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நூல் குறிப்பு : திரிகடுகம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூல் நூறு வெண்பாக்களை உடையது. சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம். இம்மருந்தை உண்ட மனிதர்களுக்கு உடல்நோய் நீங்கும். இதனைப்போன்றே ஒவ்வொரு திரிகடுகப் பாடலிலும் இடம்பெற்றுள்ள மூன்று கருத்தும் மக்களின் மனமயக்கத்தைப் போக்கித் தெளிவை ஏற்படுத்தும்.

நூல் பயன் : திரிகடுகம் பாடல்களிலுள்ள மூன்று அறக்கருத்தும் கற்பாரின் மனத்திலுள்ள அறியாமையாகிய நோயைப் போக்கி, அவரைக் குன்றின்மேலிட்ட விளக்காகச் சமுதாயத்தில் விளங்கச் செய்யும்.

தமிழ்

## மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) பால்பற்றிச் சொல்லா விடுதலும் – இவ்வடியில் பால்பற்றி என்பதன் பொருள்.

1. பகுப்புப்பற்றி 2. இனம்பற்றி 3. ஒருபக்கச் சார்புபற்றி

ஆ) 'நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும்' இவ்வடியில் வழி என்னும் பொருள்தரும் சொல்.

1. நில்லாமை 2. நெறி 3. உள்

இ) வனப்பு என்னும் சொல்லின் பொருள்

1. அழகு 2. அறிவு 3. வளமை

ஆ) குறுவினாக்கள்

1. திரிகடுகம் – பெயர்க்காரணம் கூறுக.
2. நல்லாதனார் – ஆசிரியர் குறிப்புத் தருக.

இ) சிறுவினாக்கள்

1. தூய்மை உடையவரின் செயல்கள் யாவை ?
2. நன்றறியும் மாந்தர் செயல்கள் யாவை ?
3. புதரில் விதைத்த விதைகளாவன எவை ?

தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பல மொழிகட்கும் தலைமையாக உள்ள தகுதியும், அவற்றிலும் மிக்க மேன்மை உடையதுமான மொழியே உயர்தனிச் செம்மொழி. இவ்விலக்கண அடிப்படையை ஆராயுமிடத்துத் தமிழ்மொழியானது தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியவற்றிற்கெல்லாம் தலைமையும், அவற்றினும் மிக்க மேன்மையும் உடையதாகையால் உயர்மொழியாகத் திகழ்கிறது. தான் வழங்கும் நாட்டில் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல மொழியே தனிமொழி எனப்படும். திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய்மொழி, புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம்.

– பரிதிமாற் கலைஞர்

# காந்தியடிகள் கடிதம்

குஜராத்,
02.10.1917

அனைவருக்கும் என் இனிய வணக்கம். குழந்தைகள் அனைவரும் நலந்தானே? குஜராத் மாநிலத்தில் நான் ஆற்றிய உரையை, உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என விரும்பினேன். என் பிறந்தநாளில் அந்தக் கருத்துகளை உங்களுக்குத் தெரிவிப்பதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

பயிற்றுமொழியைப்பற்றி நிறைவான, தெளிவான ஒரு முடிவுக்கு வருவதுதான், கல்வி கற்பித்தலில் நாம் செய்யவேண்டிய முதல்செயல். பயிற்றுமொழியைக் குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதனைப் போன்றது.

இச்செய்தியைப்பற்றிக் கல்வியாளர்களிடையே இருவேறுபட்ட கருத்து நிலவி வருகின்றன. தாய்மொழியின்மூலம் கல்வி கற்பிக்கப்படவேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்பிக்கப்படவேண்டும் எனச் சிலர்



தமிழ்

விவாதிக்கின்றனர். இந்த இரு வேறு கருத்திலும் உள்ள நன்மை, தீமைகளை ஆராய்ந்து இந்த விவாதத்திற்கு முடிவான ஒரு தீர்வு காணுதல் வேண்டும்.

கவி இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம், ஆங்கிலத்தில் அவருக்கு இருந்த அறிவு மட்டுமன்று, தம்முடைய தாய்மொழிமீது அவருக்கு இருந்த பற்றுதலும்தான்.

முன்சிராம் பேசும்போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே. உயர்ந்த மனம்படைத்த மதன்மோகன் மாளவியாவின் ஆங்கிலப்பேச்சு வெள்ளியைப்போல ஒளிவிட்டாலும், அவரது தாய்மொழிப் பேச்சு, தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்றது.

தாய்மொழியை வளமுறச் செய்வதற்குத் தேவையானவை, தங்கள் தாய்மொழியில் உள்ள பற்றும் மதிப்பும்தானே தவிர, ஆங்கில அறிவு இல்லை என்பதனை மேலே காட்டிய சான்றுகள் தெளிவாக விளக்குகின்றன.

ஒரு மொழியைப் பயன்படுத்துகின்றவர்களின் எண்ணங்கள், அம்மொழியில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். மொழியின் தன்மை, மக்களின் பண்பாட்டைச் சார்ந்திருப்பது இயற்கையே. மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால், அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும். 'வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது சீற்றம் கொண்டானாம்' என ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு. மொழி, நிறைவு பெற்றதாக இல்லை எனக் குறை சொல்பவர்கள் இந்தத் தொழிலாளியைப் போன்றவர்களே. குறைபாடு, மொழியைப் பயன்படுத்துபவர்களிடம்தான் இருக்கிறதே அன்றி, மொழியில் இல்லை.

ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி. இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு, நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், தாய்மொழிமூலம் நமக்குக் கல்வி அளிக்கப் பட்டிருந்தால், நம்மிடையே பல போஸ்களும் இராய்களும் தோன்றியிருப்பார்கள்.

பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருத்தல் வேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். சிறந்த பயன் ஏற்பட வேண்டுமாயின், அத்தகைய தொடர்பு இன்றியமையாதது. தெரிந்தறியாத ஒருமொழியின்மூலம் கல்வி கற்பிப்பது, இந்த இணக்கத்தைக் குலைத்துவிடும்.

தாய்மொழியைக் கற்பித்தல்மொழியாக வைத்துக்கொண்டால், ஆங்கிலத்தில் அறிவைப் பெறுவது பாதிக்கப்படுமா, இல்லையா என்பதனைப்பற்றிச் சிந்தனை செய்ய வேண்டிய தேவையில்லை என்றே நினைக்கிறேன். படித்த இந்தியர் அனைவரும் அயல் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பதில்லை. இந்த அயல்மொழியிடம்

ஒரு பற்றுதலைத் தோற்றுவிப்பதோ ஊக்கம் அளிப்பதோ தேவையில்லை எனவும் நான் கருதுகிறேன்.

நீங்கள் உங்கள் தாய்மொழியில் அறிவுபெற வாழ்த்தும் ஆசியும்.

மோ. க. காந்தி

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

( 1917ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை, மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் கடித வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. )

## மாதிரி வினாக்கள்

### அ) புறவய வினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காந்தியடிகள் ____________ மாநிலத்தில் ஆற்றிய உரையைக் குழந்தைகளுக்குக் கூறினார்.
2. வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது ____________ கொண்டானாம்.

### ஆ) குறுவினாக்கள்

1. கவி இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடைக்குக் காரணம் என்ன ?
2. மதன்மோகன் மாளவியாவின் பேச்சுக்குக் காந்தியடிகள் கூறும் உவமைகள் யாவை ?
3. யார் யாரைச் சாதனையாளர்களாகக் காந்தியடிகள் கண்டு மகிழ்ச்சியடைகின்றார் ?

### இ) சிறுவினாக்கள்

1. பயிற்றுமொழி குறித்துக் காந்தியடிகள் உரைப்பன யாவை ?
2. மொழியைக் குறை கூறுபவர்பற்றிக் காந்தியடிகள் உரைப்பன யாவை ?
3. பள்ளி எவ்வாறு அமைய வேண்டுமென்று காந்தியடிகள் உரைக்கின்றார் ?
4. அயல்மொழி குறித்துக் காந்தியடிகள் கூறும் கருத்துகள் யாவை ?

### ஈ) நெடுவினா

தாய்மொழிவழிக் கல்வியின் தேவைகுறித்துக் காந்தியடிகள் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

# உரியது

முற்றும் துறந்த முனிவர் ஒருவர் கோவில்களுக்குப் பயணம் மேற்கொண்டார். பற்றற்ற துறவியாகிய அவர், இன்றிருக்கும் ஊரில் நாளை இருக்கமாட்டார்; ஒருவேளையே உப்பில்லாத உணவை உண்பார்.

அவர் பொய்யை முழுவதுமாக வெறுப்பவர். அவருடைய வாய், மறந்தும் பொய் சொல்லாது. அன்றியும், பொய் சொல்வார் மனையில் உணவு உண்ணவும் மாட்டார். அவர், இதனை மிகவும் உயரிய குறிக்கோளாகவே கொண்டு ஒழுகினார்.

ஒருநாள், அவர் ஓர் ஊருக்குச் சென்றார்.

“இந்த ஊரில் உண்மை பேசுபவர் யாவர்?” என அந்த ஊராரிடம் கேட்டார்.

‘அதோ தெரிகின்ற மாடிவீட்டில் வாழ்கின்ற பெரியவர் உண்மை பேசுபவர்; அடியார் பக்தியுடையவர்; ஓர் இலட்சம் செல்வமும் நான்கு புதல்வரும் உடையவர்’ என்று பலரும் கூறினர்.

பின்னர்ப் பெரியவருடைய வீட்டை அம் முனிவர் அடைந்தார்.

இருக்கையில் உட்கார்ந்திருந்த பெரியவர், அவரைக் கண்ட உடனே எழுந்து, ஓடிவந்து ஞானியின் கால்களில் விழுந்து வணங்கினார். அவரை இருக்கையில் உட்காரச் செய்து, “பெருமானே! உணவு உண்ண வரவேண்டும்” என்று வேண்டினார்.

அவருடைய அன்பு, அடக்கம், பணிவு முதலிய நற்குணங்களைக் கண்டு முனிவர் முகம் மலர்ந்து, உண்மையாளர்தானா என்று சோதித்தறிந்த பின்னரே உணவு உண்ணவேண்டும் என்று எண்ணினார்.

“ஐயா! உமக்குச் செல்வம் எவ்வளவு உண்டு?”

“சாமி! இருபத்து இரண்டாயிரம் ரூபாய் உண்டு.”

“குழந்தைகள் எத்தனை பேர்?”

“சாமி, ஒரே மகன்”

“உமக்கு என்ன வயது?”

“சாமி! எனக்கு வயது மூன்று ஆண்டு ஐந்துமாதம் ஏழுநாள் பதினாறரை மணி.”

முனிவர் கடுஞ்சினம் கொண்டார்.

“ஐயா! நீர் சுத்தப் புளுகராக இருக்கின்றீர். நீர் பேசுவதெல்லாம் பெரும்புரட்டு. உம் வீட்டு அன்னம் என் தவத்தை அழிக்கும். நான் பொய்யர் வீட்டில் உண்ணேன்” என்று கூறி வெகுண்டெழுந்தார்.

பெரியவர், அவர் காலில் விழுந்து, “அருள் நிறைந்த அண்ணலே! அடியேன் ஒருபோதும் பொய் சொல்லமாட்டேன்; உண்மையே சொல்வேன்; சற்றுச் சிந்தனை செய்து, ஆய்ந்து பார்த்து உண்மை உணர்வீராக” என்று கூறித், தமது வரவு–செலவுப் புத்தகத்தை நீட்டினார்.

அதில் இருப்புத்தொகை ஓர் இலட்சரூபாய் என்றிருந்தது.

“அடேய்! இதோ, உனக்குச் சொத்து ஓர் இலட்சமென்று இருக்கிறதே, நீ, இருபத்து இரண்டாயிரம் என்று பொய் சொன்னாயே!” என்று கடிந்தார் முனிவர்.

“சாமி! ஓர் இலட்ச ரூபாய் பெட்டியில் உள்ளது. ஆனால், பெட்டியில் உள்ள பணம் எனக்குச் சொந்தமாகுமா? இதோ பாருங்கள். தருமக் கணக்கில் இதுநாள்வரை இருபத்து இரண்டாயிரமே செலவழிந்துள்ளது. தருமம் புரிந்த பணந்தானே என்னுடையது. இப்போது நான் மாண்டால், இந்தப் பெட்டியில் உள்ள பணம் என்னுடன் வாராதே! உடன் வருவது தருமம் ஒன்றுதானே! ஆகவே, எனக்கு உரியது, தருமம் புரிந்த இருபத்திரண்டு ஆயிரந்தான்” என்று கூறினார் பெரியவர்.

முனிவர் இதனைக்கேட்டு வியப்புற்றார்.

“சாமி! எனக்குப் பிறந்த பிள்ளைகள் நால்வர்; ஆனால், என் பிள்ளை ஒருவன்தான்.”

“அப்பா! நீ சொல்வதன் கருத்து எனக்கு விளங்கவில்லையே!”

“சாமி! விளங்குமாறு கூறுகிறேன்.”

“மகனே! நடராஜா” என்றழைத்தார் பெரியவர்.

“சீட்டு விளையாடுகிறேன்; வரமுடியாது” என்று பதில் வந்தது.

“மகனே! வேல்சாமி!”

“ஏன் இப்படிக் கதறுகின்றாய்? வாயை மூடிக்கொண்டிரு” என்று பதில் வந்தது.

“மகனே சிவசாமி!”

“உனக்கு அறிவிருக்கிறதா! உன்னோடு பேச என்னாலாகாது. பூமிக்குச் சுமையாக இன்னும் ஏன் நீ இருக்கின்றாய்?” என்று பதில் வந்தது.

“மகனே! கந்தசாமி”

கந்தசாமி ஓடிவந்து தந்தையையும் முனிவரையும் தொழுது, “சாமி! பால்கொண்டு வரட்டுமா? பழம்கொண்டு வரட்டுமா?” என்று கேட்டு விருந்தளித்து, விசிறி எடுத்து வீசிக்கொண்டு பணிவுடன் நின்றான்.

பெரியவர், “சாமி! அந்த மூவரும் என் மகன்களா? என் கருத்துக்கு முரணானவர்கள் பிள்ளைகளா? முற்பிறப்புக் கடன்காரர்கள். இவன் ஒருவன்தான் என் பிள்ளை” என்றார்.

“அப்பா! உன் கருத்து உவகையைத் தருகின்றது. வயது குறித்து நீ கூறியதன் உட்பொருள் யாது?”

“சாமி! அடியேன் நாள் ஒன்றுக்கு ஒன்றரை மணிநேரந்தான் வழிபாடு செய்கின்றேன். மிகுதி நேரமெல்லாம் வயிற்றுக்காகவும் குடும்பத்துக்காகவும் உழைக்கின்றேன். பேசாத நாள் எல்லாம் பிறவா நாள்தானே?

இறைவனைப் பூசிக்கும் நேரந்தான் எனக்கு உரியது. அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது ஆண்டுகள் ஆயின. ஐந்து வயதிலிருந்து இறைவனைப் பூசிக்கின்றேன். நாள் ஒன்றுக்கு ஒன்றரை மணிநேரம்தான் பூசை செய்கின்றேன். அந்த வகையாகப் பார்த்தால், முப்பதினாயிரத்து நூற்றுப் பன்னிரண்டரை மணிநேரம் ஆகின்றது.

ஆகவே, அடியேன் பிறந்து அறுபது ஆண்டுகளானாலும் எனக்கு உரிய வயது திட்டமாக மூன்று ஆண்டு ஐந்துமாதம் ஏழுநாள் பதினாறரை மணிதான்.

- தருமம் செய்த பணம் எனக்கு உரியது.
- என் கருத்தை ஏற்று நடக்கின்றவனே எனக்கு உரிய மகன்.
- இறைத்தொண்டு செய்த நேரமே எனக்கு உரியது.”

இதனைக் கேட்ட முனிவர் பெரிதும் மகிழ்ந்தார்.

அவர் வீட்டில் உணவு உண்டு வாழ்த்திச் சென்றார்.

நன்றி: திருமுருக கிருபானந்தவாரியார், சிந்தனைச் செல்வம்

## மாதிரி வினா

### கட்டுரை வினா

முனிவரிடம், பெரியவர் தமக்கு உரியவை எவையெவை எனக் கூறினார்?

> “தொன்மைமிக்க உலக மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை என்னும் பல்வகைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறது.”
>
> – தேவநேயப் பாவாணர்

# இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். முன் வகுப்பில் நடத்திய பாடங்கள் நினைவிருக்கிறதா?

மாணவர் : நன்றாக நினைவிருக்கிறதம்மா. இலக்கணவகையில் நால்வகைச் சொற்களைப்பற்றிக் கற்றுக் கொண்டோம்.

ஆசிரியர் : மெத்த மகிழ்ச்சி. (ஆசிரியர் நாற்காலியின் அருகில் செல்லுதல்)

ஆசிரியர் : பொற்கொடி, இந்த நாற்காலி எதனால் செய்யப்பட்டுள்ளது?

பொற்கொடி : மரத்தினால் அம்மா...

ஆசிரியர் : சரி. தமிழரசி, மரத்திற்கு 'மரம்' என எப்படிப் பெயர் வந்தது?

தமிழரசி : தெரியவில்லை, அம்மா. எப்படிப் பெயர் வந்ததென்று கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : 'மரம்' எனப் பெயர் வைத்ததற்கு எந்தக் காரணமும் இல்லை. நம் முன்னோர் எந்தக் காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயரே இடுகுறிப்பெயர். காரணம் அறியவியலாப் பெயர்கள் எல்லாம் இடுகுறிப்பெயர்களே.

மணவழகன் : எல்லாப் பெயர்களுமே இடுகுறிப்பெயர்களா, அம்மா?

ஆசிரியர் : இல்லை இல்லை. மண், நாய், கோழி என்பன இடுகுறிப்பெயர்களே. இதோ, இந்த 'நாற்காலி'க்கு எப்படிப் பெயர் வந்தது தெரியுமா?

நிறைமதி : நான்கு கால்கள் இருப்பதனால் 'நாற்காலி' என வந்திருக்கலாம்.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். இப்படிக் காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் காரணப்பெயர்கள் எனப்படும்.

தமிழரசி : காரணம் கருதி வந்த சில பெயர்களைக் கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : தமிழில் காரணப்பெயர்களே மிகுதியாக உள்ளன. பிறமொழிகளில் இடுகுறிப்பெயர்களே மிகுதியாக உள்ளன. பறவை (பறப்பதனால்), வளையல், செங்கல், முக்காலி, கரும்பலகை எனப் பலவற்றைக் கூறலாம்.

முத்து : மலை, காடு, மாடு இவையெல்லாம் இடுகுறிப்பெயர்கள்தாமே.

ஆசிரியர் : ஆம். மலை என்பது அனைத்து மலைகளுக்கும் பொதுப்பெயர். காடு என்பது அனைத்துவகைக் காடுகளுக்கும் பொதுப்பெயர். மாடு என்பது பல்வகை மாடுகளுக்கும் பொதுப்பெயர். இவ்வாறு அனைத்துக்கும் பொதுவாக வரும் இடுகுறிப்பெயர்களை இடுகுறிப் பொதுப்பெயர் எனக் கூறுவர்.

கனிமொழி : அம்மா, இடுகுறிப் பொதுப்பெயர் உண்டென்றால், இடுகுறிச் சிறப்புப் பெயருண்டா ?

ஆசிரியர் : உண்டு. 'மரம்' என்னும் சொல் மா, பலா, வாழை, தென்னை முதலிய மரவகை அனைத்திற்கும் இடுகுறிப்பெயராய்ப் பொதுவாக வரும். 'தென்னை' என்னும் சொல் ஒரு காரணமும் இன்றி, இடுகுறிப்பெயராய் நின்று, ஒரு பொருளுக்கே (தென்னைமரம்) சிறப்பாய் வருவதனால் இடுகுறிச் சிறப்புப் பெயராயிற்று.

முகிலன் : அம்மா...! காரணப் பெயரிலும் பொதுப்பெயர், சிறப்புப்பெயர் உண்டா ?

ஆசிரியர் : உண்டு. 'பறவை' என்னும் சொல்லை எடுத்துக்கொள்வோம். பறப்பதனால் பறவை எனக் காரணம் கருதி வழங்கும் பெயராயிற்று. காகம், குயில், புறா, கிளி ஆகிய அனைத்தையும் 'பறவை' என்னும் பொதுச்சொல்லால் அழைக்கிறோம். அதனால், இதனைக் காரணப் பொதுப்பெயர் என்கிறோம். கோகிலா...! அங்கே என்ன முணுமுணுப்பு ? உற்றுக்கேள்.

கோகிலம் : அம்மா, என் வளையல் உடைந்துவிட்டது.

ஆசிரியர் : கோகிலா, வளையல் என எப்படிப் பெயர் வந்தது ?

கோகிலம் : வளைந்து, வட்டமாக இருப்பதனால்....

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய். வளையல்போலவே சிலபொருள் வளைந்து வட்டமாக இருக்கும். இருப்பினும், அவையெல்லாம் வளையல் என அழைக்கப்படுவது இல்லை. இருப்பினும் இச்சொல், கையில் அணியும் வளையலை மட்டுமே குறிப்பதனால், காரணச் சிறப்புப் பெயர் ஆயிற்று.

கோகிலம் : நன்றி, அம்மா!

## பயிற்சி

கீழுள்ள சொற்களுள் காரணப்பெயர்களை வட்டமிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. காற்று | 2. பறவை | 3. முக்காலி | 4. அரிவாள் |
| 5. மரம் | 6. வளையல் | 7. கடல் | 8. மழை |

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக.**

அ) பெட்டி என்பது ______________ ஆகும்.

1. இடுகுறிப்பெயர் 2. காரணப்பெயர் 3. சுட்டுப்பெயர்

ஆ) சித்திரை மாதத்தில் பிறந்ததனால் ______________ என அழைக்கப்பட்டான்.

1. சித்திரையான் 2. கார்த்திகேயன் 3. அமாவாசை

இ) காரணப் பொதுப்பெயர் ______________ ஆகும்.

1. வளையல் 2. மண் 3. நண்டு

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| இடுகுறிப் பொதுப்பெயர் | – | மரங்கொத்தி |
| இடுகுறிச் சிறப்புப்பெயர் | – | பறவை |
| காரணப் பொதுப்பெயர் | – | காடு |
| காரணச் சிறப்புப்பெயர் | – | பனை |

### ஆ) குறுவினாக்கள்

1. காரணப்பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
2. இடுகுறிப்பெயர் என்றால் என்ன ? சான்று தருக.
3. இடுகுறிப்பெயரின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
4. காரணப்பெயரின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

### அ) பேசுதல் திறன்

தாய்மொழிவழிக் கல்வி கற்பதன் தேவை – இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

### ஆ) எழுதுதல் திறன் : உரைப்பகுதியைப் படித்து மையக் கருத்தறிதல்

(எ.கா.) : நாம் வாழும் உலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பெரும்பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது. அவற்றின் இயக்கங்களால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அவற்றுள்ளும் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்க இயலாது; அதனால்தான், திருவள்ளுவர் “நீரின்றமையாது உலகு” என்று கூறினார்.

அந்நீரைத் தருகின்ற மழையின் சிறப்பை, இன்றியமையாமையை உணர்ந்து, திருக்குறளில் ‘வான்சிறப்பு’ என்னும் ஓர் அதிகாரம் படைத்துப் புகழ்ந்து உரைக்கின்றார்.

சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் “மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்” என மழையைப் போற்றி வணங்கித் தம் காப்பியத்தைத் தொடங்கினார். மழையின்றேல் மாநிலத்தார்க்கு வளம் இல்லை.

‘மாரியல்லது காரியம் இல்லை’ என்பன போன்ற முதுமொழிகளும் மழையின் சிறப்புகளை நமக்கு உணர்த்துகின்றன.

### வினாக்கள்

1. பத்தியின் மையக் கருத்து யாது ?
2. ஐம்பெரும் பூதங்கள் யாவை ?
3. மழை குறித்து வள்ளுவரும் இளங்கோவடிகளும் யாது கூறுகின்றனர் ?
4. மழை தொடர்பான சொற்றொடர்கள் யாவை ?
5. பத்தியில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) வழக்குச் சொற்களும் திருத்தமான சொற்களும்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | மணி, நேற்று ஏன் பள்ளிக்கு வரவில்லை ? |
| மணி | : | நேத்து வவுத்து வலி, ஐயா. |
| ஆசிரியர் | : | தமிழரசி, மணி சொன்னது சரியா ? |
| தமிழரசி | : | தவறு, ‘நேற்று வயிற்று வலி’ எனச் சொல்லுதல் வேண்டும் ஐயா. |
| ஆசிரியர் | : | சிறப்பாகச் சொன்னாய். இப்படித்தான் நாம் சொற்களைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பழகுதல் வேண்டும். |

பயிற்சி : வழக்குச் சொற்களை நீக்கித் திருத்தமான சொற்களை எழுதுக.

1. பள்ளிக்கு அருகாமையில் என் வீடு இருக்கிறது.
2. என் வீட்லே யாருமே இல்லே.
3. எம் ஊர் ஆத்துல தண்ணியே இல்லே.
4. என் அப்பா அதிகமா சிலவு செய்கிறார்.

### ஆ) சொற்றொடர்ப் பொருத்தம்

சொற்கள் சேர்ந்தமைவது சொற்றொடராகும். ஒரு சொற்றொடரிலுள்ள எழுவாய், அதன் பயனிலையோடு திணை, பால், எண், இடங்களில் பொருத்தமாக அமைதல் வேண்டும். இவையே வழுவற்ற சொற்றொடர்களாம்.

(எ.கா.) திணைப்பொருத்தம் : கோலமயில் ஒயிலாக ஆடியது.
( கோலமயில் – அஃறிணை எழுவாய்; ஆடியது – அஃறிணைப் பயனிலை )

பால் பொருத்தம் : வண்டுகள் தேன் குடித்தன.
( வண்டுகள் – பலவின்பால் எழுவாய்; குடித்தன – பலவின்பால் பயனிலை )

எண் பொருத்தம் : விண்கலங்கள் விண்ணில் பறந்தன.
( விண்கலங்கள் – எழுவாய்ப் பன்மை; பறந்தன – பன்மைப் பயனிலை )

இடப்பொருத்தம் : அவன் பாடம் படித்தான்.
( அவன் – படர்க்கை எழுவாய்; படித்தான் – படர்க்கைப் பயனிலை )

சிறப்புப் பொருத்தம் : பாவேந்தர், பாரதியைப் புகழ்ந்து பாடினார். பாவேந்தர் என்னும் பெயர் பாரதிதாசனையே குறிக்கும் என்பதனால், அது சிறப்புப் பெயராயிற்று. சிறப்புப் பொருத்தம் உயர்வுமட்டுமல்லாது இழிவு கருதியும் வரும்.

(எ.கா.) முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா.

பயிற்சி

கீழ்க்காணும் முற்றுச்சொற்றொடரில் அமைந்துள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.

1. அரசர் பலர் வந்தார்கள்.
2. மயில்கள் ஆடியது.
3. கனிமொழி பாடம் படித்தாய்.
4. ஔவையார், அதியமானிடம் பரிசில் பெறச் சென்றாள்.
5. வயலில் மாடுகள் மேய்ந்தது.

இ) உரிய தமிழ் எண்களைத் தேர்வு செய்க.

1. மூன்று என்பதன் தமிழெண்

அ) ௩ ஆ) ௮ இ) க

2. ஏழு என்பதன் தமிழெண்

அ) ௮ ஆ) எ இ) உ

3. ஆறு என்பதன் தமிழெண்

அ) சு ஆ) ௬ இ) ச

ஈ) கட்டுரை எழுதுதல் : மாமரம் தன் வரலாறு கூறுதல்.

## வாழ்க்கைத்திறன்

### கூர்சிந்தனைத்திறன்

நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளை நடுநிலையோடு ஆராய்ந்து பார்த்தலே கூர்சிந்தனைத் திறனாகும்.

வளவன் தேர்வுக்காகப் படித்துக்கொண்டு இருக்கிறான். தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெறுவதாகப் பெற்றோரிடம் உறுதி அளித்துள்ளான். இந்நிலையில் அவனுடைய நண்பர்கள் விளையாட வருமாறு அவனை அழைக்கின்றனர்.

1. வளவன், நண்பர்களோடு செல்வானா ? படிப்பில் அக்கறை செலுத்துவானா ?
2. நீங்கள் வளவனாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### தன்னடக்கம்

பட்டினத்தடிகள் அரசருக்கு ஈடாகப் பெருஞ்செல்வம் படைத்தவராய் விளங்கினார். ஒரு நாள் எல்லாவற்றையும் துறந்துவிட்டுத் துறவியாகிவிட்டார். அவரைக் காண அரசன், சுற்றம்சூழ ஆரவாரத்துடன் வந்தான். அங்கு அரையாடை மட்டும் அணிந்த நிலையில் துறவுக்கோலத்தில் உட்கார்ந்திருந்தார் பட்டினத்தடிகள். அவரை வணங்கிய அரசன், "எமக்கு இணையாகச் செல்வம் படைத்திருந்த நீங்கள் இன்று கண்ட பயன் என்ன ?" என்று கேட்டார்.

அதற்குப் பட்டினத்தடிகள், "நீர் நிற்க, நான் இருக்க, இந்தச் சிறப்பு ஒன்று போதாதா ?" என்று பதில் அளித்தார். செல்வம் இருக்கும்போதும், இல்லாதபோதும் நாம் தன்னடக்கத்துடன் இருக்கப் பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | படம் பார்த்துப் பேசுதல் |
|---|---|

படத்தில் உள்ள நிகழ்வைப் பார்த்துப் பேசுக.

| நிகழ்வு – 1 | நிகழ்வு – 2 |
|---|---|
|  |  |

இவ்விரு படத்திலும் உள்ள நிகழ்வுகளில் போற்றுதற்கு உரிய நிகழ்வினைப் பற்றி மாணவர் கலந்துரையாடுக.

| செயல்பாடு : 2 | உரையாடுதல் |
|---|---|

உயிரிகளைத் துன்புறுத்துவதனைப் பற்றி மாணவர்களை உரையாடச் செய்க.

மாணவர் 1 : நண்பா! ஊர்வன, பறப்பன, சில பூச்சியினங்களைத் துன்புறுத்துகின்றோமே அது முறையா?

மாணவர் 2 : உலகிலுள்ள அனைத்தும் மனிதர்களுக்காகப் படைக்கப்பட்டவை. அவற்றைத் துன்புறுத்துவதில் தவறு என்ன?

மாணவர் 1 : உன் எண்ணம் தவறு. எல்லா உயிரிகளும் ஏதோ ஒரு காரணத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் துன்புறுத்துவதனாலும் கொல்வதனாலும் இழப்பு நமக்குத்தான்.

மாணவர் 2 : இழப்பா, நமக்கா, எப்படி?

மாணவர் 1 : சொல்கிறேன் கேள். தவளைகள் சில நச்சுப்பூச்சிகளை உண்டு, அவற்றிடம் இருந்து, நம்மைக் காக்கின்றன. பறவைகள் பழங்களை உண்டு எச்சமிடுவதனால் அதிலுள்ள விதைகள் மரங்களாக முளைக்கின்றன. இப்போது தெரிகிறதா இழப்பு யாருக்கென்று?

மாணவர் 2 : நமக்குத்தான். ஆனால், இந்தப் பாம்புகளை மட்டும் விடக்கூடாது. இதனால் மனித உயிர்களுக்குத்தான் ஆபத்தே தவிர, பயன் ஒன்றும் இல்லையே!

மாணவர் 1 : பாம்புகளால் பயன் இல்லையா? பாம்புகள் எலிகளை உணவாக உண்ணவில்லை என்றால் எலிகள் பெருகி, அவை பயிர்களை அல்லவா அழித்துவிடும்.

மாணவர் 2 : அட. . . . ஆமாம். இனி, எந்த உயிரிகளையும் துன்புறுத்தவும் மாட்டேன். கொல்லவும் மாட்டேன். நன்றி நண்பா.

மாணவர் 1 : மிக்க மகிழ்ச்சி.

| செயல்பாடு : 3 | குறிப்புகளைப் பயன்படுத்திப் பேசுதல் |
|---|---|

தாய்மொழி வழியில் கல்வி கற்பதில் உங்களுக்கு இருக்கும் அவா அல்லது பெருமிதத்தைப் பற்றிக் கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திப் பேசுக.

- தாய் சொல்லிக் கொடுத்த மொழி – கற்கும் பாடம் முழுமையாகப் புரிகிறது.
- ஒப்புயர்வற்ற அறிவை வளர்த்துக்கொள்ள இயலும்.
- நமக்கு வேண்டிய பண்பாடும் நல்ல பழக்கவழக்கமும் தாய்மொழியில்தான் உண்டு.
- தாய்மொழியில் கல்விகற்க பேரவாவும் பெருமிதமும் கொண்டுள்ளேன்.

## எழுதுதல்

| செயல்பாடு : 4 | சொல்வதனை எழுதுதல் |
|---|---|

சொல்வதனை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. தளராமை | 2. சமுதாயம் | 3. சான்றாண்மை | 4. செம்மொழி |
| 5. நிலையாமை | 6. திரிகடுகம் | 7. அறியாமை | 8. வெண்பா |
| 9. மனமயக்கம் | 10. நல்லாதனார் | 11. விண்கலங்கள் | 12. தொழிலாளி |

| செயல்பாடு : 5 | பொருள் எழுதுதல் |
|---|---|

கீழுள்ள பாடலைப் படித்துப் பொருள் எழுதுக.



கடலில் விழுந்த மழைத்துளியும் – காலைப்
பொழுதில் பயிலாக் கல்வியும்
வறுமைக்கு உதவாச் செல்வமும் – உதவிய
பொழுதில் கூறா நன்றியும்
பாறையில் விதைத்த விதையாகும் – பாழுங்
கிணற்றில் விழுந்த கல்லாகும்.

| செயல்பாடு : 6 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

படங்களின் பெயர்கள் இடுகுறிப்பெயரா, காரணப்பெயரா ? எனக் கண்டறிந்து எழுதுக.







| செயல்பாடு : 7 | வகைப்படுத்தி எழுதுதல் |
|---|---|

உங்களுக்குத் தெரிந்த பெயர்கள் பத்தினை எழுதி, அவற்றை இடுகுறிப்பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப்பெயர், காரணப்பொதுப்பெயர், காரணச்சிறப்புப்பெயர் என வகைப்படுத்தி எழுதுக.

## கற்றலடைவுச் சிறு மதிப்பீடு

மதிப்பெண் : 10

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 x 1 = 6

1. நல்லாதனார் இயற்றிய நூல்

   அ. திரிகடுகம் ஆ. புறநானூறு
   இ. திருவாரூர் நான்மணிமாலை

2. நல்லாதனார் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்

   அ. மதுரை ஆ. கோவை இ. திருநெல்வேலி

3. இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம்

   அ. ஆங்கில அறிவு ஆ. தாய்மொழி அறிவு இ. வடமொழி அறிவு

4. தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்ற பேச்சு யாருடையது ?

   அ. முன்சிராம் ஆ. காந்தியடிகள் இ. மதன்மோகன் மாளவியா

5. பெரியவரின் தருமக்கணக்கில் செலவழிந்துள்ள பணம்

   அ. இருபத்து இரண்டாயிரம் ஆ. இருபத்து மூன்றாயிரம் இ. இருபத்து நான்காயிரம்

6. காரணம் கருதி இடப்படும் பெயர்கள்

   அ. இடுகுறிப்பெயர்கள் ஆ. காரணப்பெயர்கள் இ. இடுகுறிப்பொதுப்பெயர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 4 x 1 = 4

1. நம் முன்னோர் எந்தக் காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாக இட்ட பெயர். ____________ .
2. ‘நாற்காலி’ என்னும் சொல் ____________ பெயராகும்.
3. ‘மரம்’ என்னும் சொல் ____________ பெயராகும்.
4. ‘குயில்’ என்னும் சொல் ____________ பெயராகும்.

## திருவாரூர் நான்மணிமாலை

(இறைவன் மண் சுமந்ததற்கு இரங்கல்)

என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில்
முன்பணிந்த தெய்வ முனிவோர்கள் – அன்புஎன்னாம்
புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தார் என்றுருகு வார்.

– குமரகுருபரர்

**பொருள் :** எலும்பை மாலையாக அணிந்தவரும் திருவாரூரில் எழுந்தருளி உள்ளவருமான சிவபெருமானைத் தெய்வத்தன்மையுள்ள முனிவர்கள் வணங்கியபோது, நந்தியால் அடிபட்டதற்கு அவர்கள் வருந்தவில்லை. வந்தி என்னும் பெயருடைய கிழவிக்காக மண்சுமந்து பாண்டியனிடம் இறைவன் அடிபட்டார் என்பதனை நினைத்து அவர்கள் மனம் வருந்தினார்கள். அவர்களின் அன்பு மிகவும் உயர்ந்தது.

**சொற்பொருள் :** என்பணிந்த (என்பு + அணிந்த) – எலும்பை மாலையாக அணிந்த; தென்கமலை – தெற்கில் உள்ள திருவாரூர்; பூங்கோயில் – திருவாரூர்க்கோவிலின் பெயர்; புண்ணியனார் – இறைவர்; மண் சுமந்தார் – வந்தி என்னும் கிழவிக்காக இறைவன் மண் சுமந்தார்; உருகுவார் – வருந்துவார்.



### ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | குமரகுருபரர் |
| பெற்றோர் | : | சண்முகசிகாமணிக் கவிராயர் – சிவகாமசுந்தரி அம்மையார் |
| ஊர் | : | திருவைகுண்டம் |
| இயற்றிய நூல்கள் | : | நீதிநெறி விளக்கம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம். |
| காலம் | : | கி.பி. பதினாறாம் நூற்றாண்டு. |

### நூல் குறிப்பு

திருவாரூர் + நான்கு + மணிமாலை = திருவாரூர் நான்மணிமாலை. இது, திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராசர்மீது பாடப்பெற்ற நான்மணிமாலை எனப் பொருள்படும்.

நான்மணிமாலை என்பது, தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. முத்து, பவளம், மரகதம், மாணிக்கம் என்னும் நால்வகையான மணிகளால் ஆன மாலையைப் போன்று நால்வகையான பாடல்களால் (வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா) ஆன நாற்பது செய்யுளைக் கொண்டது.

**நூல் பயன்**

இந்நூலைக் கற்பதனால் திருவாரூர் தியாகராசப் பெருமானைப் பற்றிய பெருமைகளை அறிந்து இன்புறலாம்.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) என்பணிந்த தென்கமலை – இவ்வடியில் 'தென்கமலை' உணர்த்தும் பொருள் ________ .

ஆ) குமரகுருபரர் பிறந்த ஊர் ________ .

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) நான்மணிமாலை என்பது ________ .

1. பதினெண்கீழ்க்கணக்கு 2. காப்பியம் 3. சிற்றிலக்கியம்

ஆ) மண் சுமந்தார் எனக் குறிப்பிடப்படுபவர் ________ .

1. திருமால் 2. சிவபெருமான் 3. நான்முகன்

3. பிரித்து எழுதுக.

அ) பூங்கோயில் ஆ) புடைத்தென்னார் இ) என்றுருகுவார்

4. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

பணிவு, கோவில், அன்பு, மண்.

### ஆ) குறுவினாக்கள்

1. திருவாரூர் நான்மணிமாலை – பெயர்க்காரணம் கூறுக.
2. குமரகுருபரர் – குறிப்பு எழுதுக.
3. என்பணிந்த தென்கமலை ஈசனார் யார் ?
4. இறைவன் யாருக்காக மண் சுமந்தார் ?

### இ) சிறுவினாக்கள்

1. இறைவன் மண் சுமந்த வரலாற்றை எழுதுக.
2. இறைவன் மண் சுமந்ததற்குக் குமரகுருபரர் எவ்வாறு வருந்தினார் ?

**நினைவு கூர்க.**

கடந்த ஆண்டு என் பள்ளியில் நடைபெற்ற
இலக்கிய மன்றச் செயல்பாட்டில் என்னைக் கவர்ந்த நிகழ்வு

# மெய்ப்பொருள் கல்வி

தலைசீவிப் பள்ளிக்கே ஓடு – நல்
தங்கப் பதுமையாம் தோழர்க ளோடு!
விலையில்லா மெய்ப்பொருள் கல்வி! – அதை
விரும்பிப் படித்தால் அறிவுண்டாம் செல்வி!

அழுக்கில்லா ஆடையே மேன்மை! அதை
அணிவதா லல்லவோ உடற்குண்டாம் தூய்மை
ஒழுங்கோடு நூல்களைத் தூக்கி – நில்லாது
ஓடி ஓடி பள்ளியை நோக்கி!

சின்னஞ் சிறுகுயில் போல – இசை
சிந்திச் சிரித்துச் செவ்விதழ் காட்டு
பொன்னொத்த தோழர் களோடு – பள்ளி
போகும் வழியிலும் ஒற்றுமை காட்டு!

* கற்பிப்போர் கண்கொடுப் போரே! – அந்தக்
கணக்காயர் உரையினில் இருசெவி சேரே!
நற்பெயர் எடுத்திட வேண்டும்! – நாளும்
நன்றாகப் படித்துநீ முன்னேற வேண்டும்! *

– வாணிதாசன்

பொருள் : மகளே! குளித்துத் தலைசீவி, நல்ல துணிகளை அணிந்து, பாட நூல்களை ஏந்தி, அழகுமிகு தோழிகளோடு பள்ளிக்கு விரைந்து செல்வாயாக! பள்ளி செல்லும்பொழுது உன் நண்பர்களோடு ஒற்றுமையாகச் சிரித்துப் பழகி மகிழ்வாயாக! உன் வாழ்க்கைக்குக் கல்விதரும் ஆசிரியர்தம் சொற்கேட்டு நடப்பாயாக! உற்றதுணையாகவும் உறுதுணையாகவும் விளங்குவதே கல்வி. அதுவே என்றும் உன்னோடு நிலைத்திருக்கும். அத்தகு கல்வியைக் கற்று வாழ்வில் முன்னேறிப் புகழ்பெறுவாயாக!

சொற்பொருள்: பதுமை – உருவம்; மெய்ப்பொருள் – நிலையான பொருள்; கணக்காயர் – ஆசிரியர்.



**ஆசிரியர் குறிப்பு**

இயற்பெயர் : எத்திராசலு ( எ ) அரங்கசாமி

பெயர் : வாணிதாசன்

பிறந்த இடம் : புதுவையை அடுத்த வில்லியனூர்

பெற்றோர் : அரங்க. திருக்காமு – துளசியம்மாள்

சிறப்பு: : 'கவிஞரேறு', 'பாவலர்மணி' என்னும் பட்டங்கள் பெற்றுள்ளார். தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்' என இவரைத் தமிழுலகம் புகழ்கிறது. உருசியம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் இவர்தம் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

காலம் : 22.07.1915 – 07.08.1974

**நூல் குறிப்பு :** கவிஞர் வாணிதாசன் தமிழ் உலகிற்குப் புனைந்து அளித்துள்ள 'குழந்தை இலக்கியம்' என்னும் பாடல் தொகுப்பிலிருந்து 'மெய்ப்பொருள் கல்வி' என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்வு செய்க.**

அ) தங்கப் பதுமையாம் தோழர்களோடு – இவ்வடியில் 'பதுமை' என்னும் சொல் உணர்த்தும் பொருள்

1. புதுமை 2. பத்து 3. உருவம்

ஆ) தமிழகத்தின் 'வேர்ட்ஸ் வொர்த்' எனப் புகழப்படுபவர்

1. வாணிதாசன் 2. பாரதிதாசன் 3. கம்பதாசன்

**2. பிரித்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. அழுக்கில்லா | ______________ | 4. அறிவுண்டாம் | ______________ |
| 2. அணிவதாலல்லவோ | ______________ | 5. உடற்குண்டாம் | ______________ |
| 3. செவ்விதழ் | ______________ | 6. விலையில்லா | ______________ |

**3. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

பள்ளி, பதுமை, தோழர், கல்வி.

### ஆ) குறுவினாக்கள்

1. வாணிதாசன் – குறிப்பு எழுதுக.
2. பள்ளிக்குச் செல்லும் ஒழுங்குபற்றி வாணிதாசன் குறிப்பிடுவன யாவை ?
3. கல்வி கற்பிப்போர் எத்தகையவர் ?

### இ) சிறுவினா

பள்ளிக்கு எவ்வாறு செல்லவேண்டுமென வாணிதாசன் குறிப்பிடுகிறார் ?

# தூங்கா நகர்

நள்ளிரவு மணி பன்னிரண்டு. எங்கும் சாலைகள் சந்தடியற்றுக் கிடக்கும்; தெருக்களில் மக்கள் நடமாட்டமே இருக்காது; எல்லாரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பர். இஃது உலக இயற்கை.

ஆனால், இவ்வாறு உலகமே உறங்கிக்கொண்டிருக்கும் வேளையிலும் விழித்திருக்கும் 'தூங்கா நகர்' ஒன்று தமிழகத்தில் உள்ளது. அந்நகர் எதுவென உங்களுக்குத் தெரியுமா? ஆண்டின் எல்லா நாளிலும் விழாக்கள் கொண்டாடியபடி இருப்பதனால், 'திருவிழா நகர்' என்னும் பெருமைபெற்ற நகரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நாற்றிசையிலும் கலையழகு பொருந்திய மாபெருங் கோபுரங்களோடு எட்டுச்சிறிய கோபுரங்களையும் கொண்டு, எழில்மிகு சிற்பக்கலைக் கூடமாக விளங்கும் கோவில் மாநகர் எதுவென்று உங்களுக்குத் தெரியுமா? பழம்பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழ்ந்த 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' என்னும் புகழ்மிக்க நகருக்கு நீங்கள் சென்றது உண்டா? சங்கம் வைத்துச் செந்தமிழ் வளர்த்த நகரம், முன்பு பாண்டியர்தம் தலைநகராக விளங்கிய நகரம், இன்றைய தமிழகத்தின் இரண்டாவது பெருநகரமாகத் திகழும் நகரம் எதுவெனத் தெரியுமா? இத்துணைச் சிறப்புக்கும் உரிய நகரம் மதுரை என்னும் மாநகரம்.

### மதுரை – பெயர்க்காரணம்

பாண்டிய நாட்டின் பழைமையான தலைநகரமாக விளங்கியது மதுரை. இஃது இன்றைய தமிழகத்தின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. மதுரை என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழும் மதுரையும் இனிமையின் இயல்பால் அமைந்தவை. தமிழ் என்றால் மதுரை; மதுரை என்றால் தமிழ். இங்ஙனம்,

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவோடு புரையுஞ் சீரூர் பூவில்
இதழகத் தனைய தெருவம் இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்

என்னும் பரிபாடல் அடிகள் கூறுவதுபோலவே
இன்றும் கோவிலும் தெருக்களும் அவ்வாறே காணப்படுகின்றன.

இவை இரண்டும் பிரிக்க இயலாதவை. அதனாலேயே மதுரையைப் போற்றப் புகுந்த புலவர் எல்லாரும் தமிழோடு சேர்த்தே போற்றிப் புகழ்ந்தனர். 'தமிழ்கெழு கூடல்' எனப் புறநானூறு போற்றியது.

நல்லூர் நத்தத்தனார் என்னும் புலவர், தாம் பாடிய சிறுபாணாற்றுப்படையில், “தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை” என்று குறித்தார். இளங்கோவடிகள், தமது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில், ‘ஓங்குசீர் மதுரை’, ‘மதுரை மூதூர் மாநகர்’, ‘தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை’, ‘மாண்புடை மரபின் மதுரை’, ‘வானவர் உறையும் மதுரை’, ‘பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்’ எனப் பற்பல அடைமொழிகளால் மதுரைக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தார். ‘சேரநாடு வேழமுடைத்து, சோழநாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து, தொண்டைநாடு சான்றோர் உடைத்து’ என்பன தமிழகத்தின் சிறப்பை உணர்த்தும்.

### நான்மாடக்கூடல்

மதுரைக்குக் ‘கூடல்’ எனவும், ‘ஆலவாய்’ எனவும் வேறு பெயர்கள் வழங்குகின்றன. நான்மாடக்கூடல் என்னும் பெயரே கூடல் என மருவியுள்ளது. திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ஆகிய நான்கு திருக்கோவில்கள் சேர்ந்தமைந்ததனால், நான்மாடக்கூடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர். ‘கன்னிகோவில்’, ‘கரியமால் கோவில்’, ‘காளிகோவில்’, ‘ஆலவாய்க் கோவில்’ ஆகிய நான்கு திருக்கோவில்களும் மதுரைக்குக் காவலாக அமைந்ததனால், ‘நான்மாடக்கூடல்’ என்னும் பெயரமைந்தது என்பாரும் உளர்.

வருணன், மதுரையை அழிக்க ஏழு மேகங்களை அனுப்பினான். அதனைப்பற்றி இறைவனிடம் பாண்டியன் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை மதுரையைக் காக்க அனுப்பினார். அந்நான்கும் நான்கு மாடங்களாகக் கூடி மதுரையைக் காத்தமையால் நான்மாடக்கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகப் பரஞ்சோதியார் கூறியுள்ளார். எந்நாட்டவரும் எவ்வூரினரும் வந்துகூடும் வளமான நகர் என்பதனால், கூடல் என்னும் பெயர் பெற்றது என்பர். சங்கம் வைத்துச் செந்தமிழை வளர்க்க, புலவர் எல்லாரும் கூடியதனால், கூடல் என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் அறிஞர் கூறுவர்.

### ஆலவாய்

மதுரையை விரிவுபடுத்த எண்ணிய பாண்டியன், இறைவனிடம் அதன் எல்லையை வரையறுத்துத் தருமாறு வேண்டினான். இறைவன், தன் கையணியாகிய பாம்பிடம் எல்லையை வரையறுக்க ஆணையிட்டார். பாம்பு, வாலை நீட்டி வலமாகத் தன் உடலை வளைத்தது. அவ்வாலைத் தனது வாயில் சேர்த்து மதுரையின் எல்லையை வகுத்துக் காட்டியது. அன்றுமுதல், மதுரைக்கு ‘ஆலவாய்’ என்னும் பெயர் அமைந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. ஆலவாய் என்பது, ஆலத்தை (விடத்தை) உடைய பாம்பினைக் குறிக்கும். மதுரையில் எழுந்தருளிய ஈசன், ஆலமர நிழலில் வீற்றிருந்ததனால் ஆலவாய் என்னும் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுவர். தென்மதுரையகத்தே சிறந்து நின்ற முதற்சங்கம் கடற்கோளால் அழிந்துபட, கபாடபுரத்தின்கண் இடைச்சங்கம் அமைந்தது. பின்னர், மற்றுமொரு கடற்கோளால் அந்நகரும் விழுங்கப்பட, கடைச்சங்கம் நிறுவப்பட்ட நிலப்பகுதியே இன்றைய மதுரை என்பர்.

மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் மருதை என வழங்கிய இடம், காலப்போக்கில் மதுரை என்றாகியதாம். கல்வெட்டில் மதிரை என்னும் பெயர் காணப்படுகிறது.

சங்ககால மதுரை, பூம்புனல் ஆறாகிய வைகை ஆற்றங்கரையில் அமைந்திருந்தது. அம்மதுரையில் யானைமீது போர்வீரன் ஒருவன் உட்கார்ந்து, தன் கையில் உயரமாக வெற்றிக்கொடியை ஏந்திச் செல்லும் அளவுக்குக் குன்றைக் குடைந்தாற் போன்ற வாயிலும், பாம்பென நெளிந்து செல்லும் பொறிகளையுடைய பெருமதிலும், அதனைச் சுற்றி ஆழ்ந்து அகன்ற அகழியும் இருந்துள்ளன.

யானைக் கூட்டங்கள் அகழிக்குச் செல்வதற்கு ஏற்ற சுருங்கை (சுரங்க) வழியும் அமைந்திருந்தது.

மதுரை மாநகரின் நடுவில் அண்ணல் கோவிலும் அதனைச் சுற்றி ஒழுங்குற அமைந்த தெருக்களும், தாமரைப் பொகுட்டையும் அடுக்கடுக்கான இதழ்களைப்போன்றும் காட்சியளித்தன. இஃது அன்றைய தமிழர்தம் நகரமைப்புக் கலையின் நுணுக்கத்தை உலகிற்குப் பறைசாற்றும் அடையாளமாகத் திகழ்கின்றது.

சிவன், திருமால், பலராமன், செவ்வேள், ஐயை, கொற்றவை, சிந்தாதேவி எனக் கடவுளர் பலருக்கும் கோவில்கள் இருந்துள்ளன. அரண்மனை, பல்வேறு தெருக்கள், அறங்கூறு அவையம், அம்பலங்கள், மன்றங்கள், அறக்கூழ்ச்சாலைகள், நாளங்காடி, அல்லங்காடி முதலியன மதுரையில் இருந்துள்ளன.

சங்கப்புலவர்களுள் கணக்காயனார் மகனார் நக்கீரனார், குமரனார், நல்லந்துவனார், மருதனிளநாகனார், இளந்திருமாறன், சீத்தலைச் சாத்தனார், பெருங்கொல்லனார், கண்ணகனார், கதங்கண்ணாகனார், சேந்தம்பூதனார் முதலியோர் அன்றைய மதுரையில் வாழ்ந்தோராவர்.


| | | | |
|---|---|---|---|
| மதுரை வீதிகளின் பெயர் | அறுவை வீதி | – | ஆடைகள் விற்கும் கடைவீதி |
| | கூலவீதி | – | தானியக்கடை வீதி |
| | பொன் வீதி | – | பொற்கடை வீதி |
| | மன்னவர் வீதி | – | மன்னர் வாழும் வீதி |
| | மறையவர் வீதி | – | அந்தணர் வீதி |

## மதுரையின் மாண்பு

சிவபெருமான் சுந்தர பாண்டியனாகவும் செவ்வேள் உக்கிரகுமாரப் பாண்டியனாகவும் உமையம்மை மலையத்துவசனுக்கு மகளாகத் தோன்றித் தடாதகைப் பிராட்டியாராகவும் மதுரையை ஆண்டனர். அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக மாணிக்கவாசகர் திகழ்ந்தார். திருஞானசம்பந்தர், கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச்சிறையார் உதவியுடன் சைவத்தைக் காத்தார். பாண்டிய நாட்டை ஆண்ட மன்னருள் பலர், சிறந்த புலவர்களாகவும் விளங்கினர்.



திருமலை நாயக்கர்



மீனாட்சியம்மன் கோவில் வரைபடம்



பொற்றாமரைக்குளம்

அவருள் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், வரகுண பாண்டியன், அதிவீரராம பாண்டியன் முதலியோர் நற்காவலர்களாகவும் சிறந்த பாவலர்களாகவும் திகழ்ந்தார்கள்.

மீனாட்சியம்மன் கோவிலில் மீனாட்சியம்மையும் சொக்கநாதரும் அழகுற வீற்றிருந்து அருளுகின்றனர். கோவிலின் உள்ளே பொற்றாமரைக்குளம் அமைந்து உள்ளது. இக்கோவிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் சிற்ப வேலைப்பாடுகள் மிக்கது.

### திருமலை நாயக்கரின் திருப்பணிகள்

திருமலை நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார். மீனாட்சியம்மன் கோவிலுக்குத் திருப்பணிகள் பல செய்தார்; கலைநயமிக்க நகரமாக மதுரையைக் கவினுற அமைத்தார்; சிற்பங்கள் மிக்க புது மண்டபத்தைக் கட்டினார்; கோடை விடுதியான தமுக்கமும், குளிர்பூந்தடாகமாகிய பெரிய தெப்பக் குளமும், கலைநயத்தில் 'தாஜ்மகாலை' யொத்த திருமலை நாயக்கர் மகாலையும் அமைத்து மதுரையை அழகுபடுத்தினார். அதில், மிகச் சிறந்த ஓவியங்களை அமைத்தார். பெருவிழாக்கள் பலவும் திருக்கோவிலில் நடைபெறுமாறு செய்தார். சித்திரைத் திருவிழாவைச் செந்தமிழ்நாட்டு மக்களேயன்றிப் பன்னாட்டினரும் பார்த்து மகிழுமாறு சிறப்புற நடைபெறச் செய்தார்; மதுரையை விழா நிறைந்த நகரமாக விளக்கமுறச் செய்தார்; கலைமலிந்த கலைநகரமாக்கிக் கண்டு களித்தார். அவர் கண்ட அணிமதுரைத் திருநகரை நாம் இன்றும் கண்டு இன்புறலாம். இராணி மங்கம்மாள் அமைத்த சத்திரங்களும் சாலைகளும் மதுரைக்குப் பெருமை சேர்ப்பனவாக இன்றும் திகழ்கின்றன.

### நிகழ்வுகள்

பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம், தருமிக்கு இறைவன் தண்டமிழ்ப் பாடல் தந்தமை பற்றிக் கூறுகிறது. மதுரையைச் சுற்றியுள்ள மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்களால் நாலடியார் இயற்றப் பெற்றது.

குமரகுருபரருக்கு மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து முத்துமணி மாலையைப் பரிசளித்தது முதலானவை மதுரையில் நடைபெற்ற நிகழ்வுகளாகும்.


### கல்வி வளர்க்கும் மதுரை

வள்ளல் பாண்டித்துரையார், மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை மருத்துவக் கல்லூரி இவற்றோடு கலைக் கல்லூரிகளும் இன்று கல்விப்பணி ஆற்றிவருகின்றன. ஆயிரங்கால் மண்டபம், அட்டசத்தி மண்டபம், புது மண்டபம், நகரா மண்டபம் என்பன இந்நகருக்கு மேலும் அணி சேர்ப்பன. சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம் கோவலன் பொட்டல் என்னும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களால் வழங்கப்படுகிறது.

பழங்கால மதிலின் எஞ்சிய சிறுபகுதி மேலவெளி வீதியில் மாநகராட்சித் தென்மண்டல அலுவலகமாக இயங்கி வருகிறது. கீழவாசல், மேலவாசல், தெற்குவாசல், வடக்குவாசல் என வழங்கப்படும் இடங்கள் கோட்டையின் மதில் வாயில்கள் இருந்த இடங்களாக அறியப்படுகின்றன. கையிற் சிலம்புடன் உட்கார்ந்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில், செல்லத்தம்மன் கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது.

விழிகளை மூடினாலும் தூங்காநகரின் வியத்தகு தொன்மைக்காட்சிகள் நம் மனக்கண்ணுள் நிழலாடுகின்றன.


கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் எழுந்த சிலப்பதிகாரமே மதுரை மூதூர் எனக் குறிப்பிடுவதனால் மதுரையின் பழைமை பெறப்படும்.



மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழைமையானது கிழக்குக் கோபுரம்; உயரமானது தெற்குக் கோபுரம். இது 160.9 அடி உயரமும் 1511 சுதை உருவங்களும் உடையது.



மரம் பயன்படுத்தாமல் கட்டப்பட்டது நாயக்கர் மகால். இதன் ஒவ்வொரு தூணும் 82 அடி உயரமும் 19 அடி சுற்றளவும் கொண்டது.



மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபம்

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ) தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என அழைக்கப்படுவது
1. திருநெல்வேலி 2. தஞ்சை 3. மதுரை

ஆ) மதுரை என்னும் சொல்லுக்கான பொருள்
1. பொறுமை 2. இனிமை 3. பழைமை

இ) பாண்டிய நாடு எதற்குப் பெயர் பெற்றது ?
1. முத்து 2. சோறு 3. தந்தம்

ஈ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றியவர்
1. மீனாட்சி 2. குமரகுருபரர் 3. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்

உ) நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர்
1. மருதுபாண்டியர் 2. பாண்டித்துரையார் 3. முத்துராமலிங்கனார்

### ஆ) குறுவினாக்கள்

1. கோவலன் பொட்டல் என வழங்கப்படுவதன் காரணம் என்ன ?
2. திருமலை நாயக்கர் செய்த கோவில் பணிகள் யாவை ?
3. திருமலை நாயக்கர் மகாலின் சிறப்பை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. மதுரையின் மாண்புகளை எழுதுக.
2. மதுரையில் நடைபெற்ற புராண நிகழ்வுகளை எழுதுக.

### ஈ) நெடுவினாக்கள்

1. மதுரையின் பெயர்க்காரணத்தை விவரிக்க.
2. மதுரையின் சிறப்புகளைக் கட்டுரையாக எழுதுக.

# அறிவு நுட்பம்

பாலையூரில் காளியப்பன் என்ற முரடன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பொது அறிவு என்பதே கிடையாது. அவனுக்குத் தெரிந்தது, எல்லாரிடமும் வம்புச்சண்டைக்குச் செல்வது, அடிப்பது, உதைப்பது. இதுதான் அவனது வழக்கமாக இருந்தது.

அவனைத் திருத்த அவ்வூர்ப் பெரியவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் முடிய வில்லை. அதனால், அவ்வூர் மக்கள் அனைவரும் அவனை வெறுத்தனர். அவன் ஊரில் இருக்கும்வரை, நம்மால் நிம்மதியாக வாழ முடியாது என்பதனை உணர்ந்து கொண்டனர்.

ஊர் மக்கள் காளியப்பனுக்குத் தெரியாமல் ஒன்றுகூடி, அவனைப்பற்றி அரசு அலுவலர்களிடம் புகார் செய்வதென முடிவு செய்தனர். காளியப்பனுக்கு எதிராகச் சாட்சி சொல்பவர் யாரும் இல்லாததனால், அவனுக்குத் தண்டனையும் வாங்கித்தர முடியாதெனக் கை விரித்துவிட்டனர்.

ஊரில் அறிவாளியாக இருந்த பெரியவர் ஒருவர், காளியப்பன் கொட்டத்தை அடக்க ஒருவழியைச் சொன்னார். "இந்த முரடனை நம் உடல் வலிமையால் வெல்லமுடியாது; ஒரு சூழ்ச்சியைக் கையாண்டுதான் இவனைத் திருத்துதல் வேண்டும்; நான் சொல்கிறபடி செய்யுங்கள். இந்தப் போக்கிரியினால் ஏற்படும் தொல்லை நீங்கிவிடும்" என்றார்.

எப்படியோ காளியப்பனின் தொல்லை தீர்ந்தால் சரியென இருந்த மக்கள், பெரியவரின் எண்ணத்தைச் செயல்படுத்துவதாக வாக்களித்தனர். அதன்படி திட்டம் தீட்டிச் செயல்படுத்தப்பட்டது.

ஒருநாள், காளியப்பன் வெளியூருக்குச் சென்றுவிட்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது, அவனுக்கு எதிரே வந்த சிறுவன் ஒருவன், "என்ன அண்ணே, உடம்புக்கு ஒன்னும் முடியலையா, முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கே" என்று வருத்தத்துடன் கேட்டான்.

காளியப்பனுக்குச் சிரிப்பு வந்தது. "என்னடா, என் உடம்பைப்பற்றி உனக்குத் தெரியாதா ? உனக்குக் கண் சரியாகத் தெரியவில்லையென நினைக்கிறேன்" என்று கூறினான். காளியப்பன் சற்றுத்தொலைவு சென்றிருப்பான்; வேறொரு மனிதன் அவனைப் பார்த்து, "என்னப்பா, கண்ணுக்குக் கீழே ஒரே கருவளையமாக இருக்கிறது; உடம்பு வேறு இளைத்திருக்கிறது; உனக்கு ஏதோ நோய் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

காளியப்பன் குழப்பத்தில் ஆழ்ந்தான். "இவர்களுக்கெல்லாம் என்னவாயிற்று ? முதலில் ஒரு சிறுவன் நம் உடம்பைப்பற்றி விசாரித்தான். இவனும் ஏதோ சொல்கிறானே. எனக்கு

தமிழ்

நோய் எதுவும் வந்ததுபோல் தெரியவில்லையே'' என்று சிந்தனை செய்தபடி சென்றான். இன்னும் சற்றுத்தொலைவு சென்றதும் எதிரே வந்த முதியவர் ஒருவர், காளியப்பனைத் தடுத்து நிறுத்தி உற்றுப் பார்த்தார். 'ஏம்பா, உன்னைப் பார்த்தால் ஏதோ பெரிய நோய் வந்ததுபோல் தெரிகிறதே; உன் கையைக் கொடு தொட்டுப் பார்க்கிறேன்'' என்று, அவன் கையைப் பிடித்தார்.

திடுக்கிட்ட அவர், ''என்ன தம்பி, உன் உடம்பு கொதியாய்க் கொதிக்கிறதே; இப்படிக் கடுமையான காய்ச்சல் அடிக்கும்போது வெளியே சுற்றலாமா ? உடனே போய் வைத்தியரைப் பார்; நன்றாக ஓய்வெடுத்துக் கொள்'' என்றார்.

பெரியவர் தம் வழியே சென்றார்.

காளியப்பன் இப்பொழுது முற்றிலும் குழம்பிப் போனான். தன்னைத்தானே தொட்டுப்பார்த்துக் கொண்டான்.

அவன் உடல் சுடுவதுபோல் அவனுக்குத் தெரிந்தது. அவனுக்குப் படபடப்பாக இருந்தது. அவன் தட்டுத்தடுமாறிக் கொண்டு வீட்டை அடைந்தான்.



காளியப்பன் வீடு சென்றதும் அவனுக்கு உண்மையிலேயே காய்ச்சல் வந்துவிட்டது; கட்டிலில் அப்படியே சாய்ந்துவிட்டான்.

ஊர்க்காரர்கள் எல்லாம் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். ''எப்படி இருந்தவன், இப்படி ஆகிவிட்டானே, இவனுக்கு ஏதோ கொடிய நோய் வந்திருக்கும் போலிருக்கிறதே. மருத்துவம் பார்க்காவிட்டால், இவன் உயிர் பிழைக்கமாட்டான்'' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஊர்மக்கள் பேசியதனைக் கேட்ட காளியப்பனுக்குப் பயம் தொற்றிக் கொண்டது. சுற்றியிருந்த மக்களைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டுத் ''தயவுசெய்து நல்ல மருத்துவர் ஒருவரை அழைத்து வந்து, என் உயிரைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறினான்.

ஊர்மக்கள் தங்களுக்குள் சிரித்துக்கொண்டு, அவர்கள் முன்பே சொல்லி வைத்திருந்த மருத்துவரைக் காளியப்பன் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். மருத்துவரும் காளியப்பனைச் சோதனை செய்து பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். "தம்பி, உனக்கு வந்திருப்பது எவராலும் தீர்க்க முடியாத நோய்; இந்த நோய்க்கு மருந்தே இன்னும் கண்டுபிடிக்கவில்லை; நீ கொஞ்ச நாளில் இறந்துவிடுவாய். அதனால், நீ விரும்புவதனை எல்லாம் சாப்பிட்டுவிட்டு இறைவனை வேண்டிக்கொண்டிரு; இதனைத்தவிர வேறு வழியில்லை" என்றார்.

காளியப்பனுக்கு வருத்தமாக இருந்தது. அவன் கண்களில் கண்ணீர் தாரைதாரையாகக் கொட்டியது. எந்தவிதக் காரணமும் இல்லாமல் தனக்கு ஏன் இப்படிப்பட்ட நோய் வரவேண்டும் எனச் சிந்தித்தான். ஊர் மக்களைக் கொடுமைப்படுத்தியதன் காரணமாகத்தான், அவர்களின் தீயசொற்களால்தான் தனக்கு இந்த நோய் வந்திருக்க வேண்டுமென நினைத்தான்.

அவன் உள்ளம் கடவுளை வேண்டியது. "ஒருவேளை நான் உயிர் பிழைத்து எழுந்து விட்டால், யாருக்கும் தொல்லை தரமாட்டேன்" என்று முடிவுசெய்து கொண்டான்; என்றாலும், தன் உயிரைக் காக்க மருந்தே இல்லை என்று மருத்துவர் கூறியதனைக் கேட்டு அழத் தொடங்கிவிட்டான்.

நான்கு நாளுக்குள் மூச்சுப்பேச்சு இல்லாமல் காளியப்பன் படுக்கையில் கிடந்தான். ஊர்மக்கள் கூடிக்கூடிப் பேசிக் கொண்டிருந்தனர். "எப்படியோ ஒரு படுபாவி ஒழிந்தான். இனிமேல், நம் ஊருக்கு நல்ல காலம்தான்" என மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

காளியப்பனுக்கு ஊர்மக்கள் பேசிக்கொள்வது மயக்கநிலையிலும் கேட்கவே செய்தது. அவன், தட்டுத்தடுமாறிப் படுக்கையைவிட்டு எழுந்தான். அவர்களைப் பார்த்து, "ஐயா, நீங்கள் பேசியதனை எல்லாம் கேட்டேன். நான் உங்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுத்து இருக்கிறேன் என்பது இப்பொழுதுதான் புரிகிறது. நான் மனந்திருந்திவிட்டேன். இனிமேல், யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யமாட்டேன். என்னை எல்லாரும் மன்னித்துவிடுங்கள்" என்றான்.

ஊர் மக்கள் பெரியவரின் அறிவுநுட்பம் கைகூடியதனை எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர். எப்படியோ ஒரு போக்கிரியின் தொல்லையிலிருந்து தங்கள் ஊர் விடுபட்டதனையும், முரடன் மனந்திருந்தியதனையும் எண்ணி, மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நன்றி : ஓவியர் ராம்கி, கிராமியக் கதைகள்.

## மாதிரி வினா

**கட்டுரை வினா**

காளியப்பனின் மனமாற்றத்திற்கான காரணங்களைக் கட்டுரையாக எழுதுக.

# அறுவகைப் பெயர்ச்சொற்கள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : வணக்கம். உட்காருங்கள். சென்ற பாடவேளையில் படித்த இடுகுறிப்பெயர், காரணப்பெயர் ஆகியவற்றில் ஏதேனும் ஐயமிருக்கிறதா ?

மாணவர் : இல்லை, அம்மா.

ஆசிரியர் : மகிழ்ச்சி. பூங்கொடி, கரும்பலகையில் எழுதியுள்ளதனை அனைவருக்கும் கேட்கும்படி தெளிவாகப் படி.

பூங்கொடி : கண்ணன் பூண்டியில் படிக்கிறான். அவன் நாள்தோறும் நடந்தே வருகிறான். அவன் நண்பகல் உணவு கொண்டு வருகிறான். ஆடல், பாடல் ஆகிய இரண்டிலும் அவன் வல்லவன். அவன் முகம் வட்டவடிவில் அழகாக இருக்கும்.

ஆசிரியர் : இப்பத்தியிலுள்ள பெயர்ச்சொற்களைக் கூறுங்கள்.

எழிலி : பூண்டி, நண்பகல், உணவு...

ஆசிரியர் : இவை மட்டுந்தானா ?

செழியன் : கண்ணன், அவன், முகம்...

ஆசிரியர் : இன்னும் என்னென்ன பெயர்ச்சொற்கள் உள்ளன ? வேறு யாராவது கூற முடியுமா ?

வளவன் : இதற்குமேல் இருப்பதாகத் தெரியவில்லை, அம்மா.

ஆசிரியர் : இன்னும் உண்டு. ஆடல், பாடல், வட்டம், அழகு ஆகியனவும் பெயர்ச்சொற்களே. பெயர்ச்சொற்களை இலக்கண நூலார் அறுவகைப்படுத்துவர்.

யாழினி : அம்மா, அவை என்னென்ன என்று கூறுங்களேன்.

ஆசிரியர் : பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.

எழிலி: : அம்மா, பொருட்பெயர் என்றால்....

ஆசிரியர் : பொருளைக் குறிக்கும் பெயர் பொருட்பெயர். இந்தப் பொருட்பெயர் இருவகைப்படும். அவை : உயிருள்ள பொருள், உயிரற்ற பொருள். உயிருள்ள பொருள்கள் : குமரன், மலர்க்கொடி, தென்னை, செம்பருத்தி, வெள்ளாடு, ஓணான்... முதலியன; உயிரற்ற பொருள்கள்: நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று... முதலியன. எழிலி, இப்போது விளங்கிற்றா ?

நிறுத்தம் side tab: 

எழிலி : தெளிவாகப் புரிந்துகொண்டேன், அம்மா. இடத்தைக் குறிப்பது இடப்பெயராகுமா, அம்மா ?

ஆசிரியர் : அருமையாகக் கேட்டாய்! ஓரிடத்தைக் குறிப்பது இடப்பெயரே. வீடு, தெரு, பள்ளி, கோவில், மக்கள் வாழிடம், தோட்டம், காடு, மலை என இடங்களைக் குறிப்பனவெல்லாம் இடப்பெயர்தான். பூங்கொடி இவற்றிற்குரிய பெயர்களைச் சொல்.

பூங்கொடி : அன்பகம், பெரியார் தெரு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருநின்றவூர் என்னைப்பெற்ற தாயார் கோவில், திருமழிசை, வாழைத்தோட்டம், ஆர்க்காடு, கொல்லிமலை.

ஆசிரியர் : எல்லாவற்றிற்கும் கூறிவிட்டாயே. பூங்கொடியைப் பாராட்டிக் கை தட்டுவோம். நீங்களும் இப்படிப் பல எடுத்துக்காட்டுகளை ஒருவருக்கொருவர் கூறிக் கொள்ளுதல் வேண்டும்.

வளவன் : அம்மா, அறுவகைப் பெயரில் காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயரா, அம்மா ?

ஆசிரியர் : ஆம். அதிலென்ன ஐயம் வளவா! கண் இமைக்கும் நொடிப்பொழுது முதல் ஊழிக்காலம்வரை எல்லாமே காலத்தைக் குறிக்கும் பெயர்கள்தாமே. சான்றாக நொடி, வினாடி, மணி, பொழுது, கிழமை, வாரம், திங்கள், ஆண்டு, பருவகாலம் என எல்லாமே காலப்பெயர்களே. வளவா! இக்காலங்களுக்கு எடுத்துக்காட்டுகள் சொல்.

வளவன் : ஐந்துநொடி, முப்பது வினாடி, பன்னிரண்டு மணி, விடியற்பொழுது, திங்கள்கிழமை, ஒருவாரம், தைத்திங்கள், ஓராண்டு, மழைக்காலம்.

ஆசிரியர் : அருமை அருமை. அனைத்துக்கும் சொல்லிவிட்டாயே.

குழலி : சினைப்பெயர் என்றால் என்ன, அம்மா ?

ஆசிரியர் : இது மிகவும் எளிது. சினை என்பது ஒன்றன் உறுப்பின் பெயரைக் குறிப்பது. மனித உறுப்புகள், விலங்கு உறுப்புகள், தாவரப் பகுதிகள், பொருள்களின் பகுதிகள் என முழுமையான ஒன்றின் பகுதிகளைக் குறிக்கும் பெயர்கள் சினைப்பெயர்களாம்.

எழிலா! மனித உறுப்புகளின் பெயர்களையும், தாவரப் பகுதிகளின் பெயர்களையும் சொல்.

எழிலன் : தலை, கண், மூக்கு, செவி, நாக்கு, பல், வயிறு, கை, கால், விரல், நகம் முதலியனவும், வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி, விதை முதலியனவும் சினைப்பெயர்களா, அம்மா!

ஆசிரியர் : அதிலென்ன ஐயம் ? நீ கூறிய அத்தனையும் சினைப்பெயர்கள்தாம். குமரா, குணப்பெயர் என்றால் என்னவென்று சொல்.

குமரன் : கோபம், அம்மா.

ஆசிரியர் : நன்றாகச் சொன்னாய்! அதனைத் தமிழிலே சொல்லியிருக்கலாமே, தமிழில் சொல் இருக்கும்பொழுது, வேறு சொற்களைப் பயன் படுத்துவது நம்மொழிக்கு நாமே செய்யும் தீங்கல்லவா? குமரா, கோபத்திற்கான தமிழ்ச்சொல் கூறு.

குமரன் : அம்மா, பேச்சுவழக்கில் சொல்லிப் பழகிவிட்டதனால் கூறிவிட்டேன். இனிமேல், இத்தகைய பிழையைச் செய்யமாட்டேன். கோபத் திற்கான தமிழ்ச்சொல் சினம்தானே, அம்மா!

ஆசிரியர் : அதிலென்ன ஐயம்? நீ சொன்னது செந்தமிழ்ச்சொல்தான். குணப் பெயரைப் பண்புப்பெயர் எனவும் கூறுவர். குணப்பெயர்கள் நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்படும். வேலா, நிறப்பெயர்களையும் சுவைப் பெயர்களையும் சொல்.

வேலன் : ஏழு நிறங்கள், அறுசுவைகள் அம்மா.

ஆசிரியர் : குணா! அளவு, வடிவப் பெயர்களைச் சொல்.

குணா : பத்து மீட்டர் துணி, ஐந்துபடி எண்ணெய், பத்துக்கிலோ அரிசி; வட்டப்பலகை, சதுரவீடு, செவ்வகப் புத்தகம், முக்கோணக் கூம்பு அம்மா.

ஆசிரியர் : தெள்ளத்தெளிவாகச் சொன்னாய், குணா. அறுவகைப் பெயர்களில் இறுதியாக நான் கூறிய பெயர்வகை என்னவென்று சொல், அகிலன்.

அகிலன் : தொழிற்பெயர், அம்மா.

ஆசிரியர் : நன்றாக நினைவில் வைத்திருக்கிறாய். தொழிற்பெயர் என்றால் என்ன? யாருக்குத் தெரியும்? சொல்லுங்கள்.

கீரன் : ஆசிரியர், அம்மா.

ஆசிரியர் : கீரன், நீ கூறியது தொழில் செய்பவரைப்பற்றி, ஆனால், நான் கேட்டது அவர் செய்யும் தொழில்பற்றி... விளங்குகிறதா?

கீரன் : ஆம், அம்மா. படித்தல், கற்பித்தல் இவை தொழில் பெயர்கள்தாமே.

ஆசிரியர் : ஆமாம். செய்யும் தொழிலைக் குறிக்கும் பெயர்களெல்லாம் தொழிற் பெயர்களே. பூங்கொடி, கரும்பலகையில் படித்த பெயர்ச்சொற்களை எழுதி அவற்றை, அறுவகைப் பெயர்களாக வகைப்படுத்துங்கள்.

மாணவர் : வகைப்படுத்துகிறோம் அம்மா.

| பெயர் வகை | பெயர் |
|---|---|
| பொருட்பெயர் | கண்ணன், நாற்காலி |
| இடப்பெயர் | வேலூர், நாமக்கல் |
| காலப்பெயர் | தைத்திங்கள், நண்பகல் |
| சினைப்பெயர் | முகம், கை |

குணப்பெயர் — வட்டம், அழகு
தொழிற்பெயர் — ஆடல், பாடல்

ஆசிரியர் : பிழையில்லாமல் எழுதியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

பயிற்சி : கீழுள்ள சொற்றொடரில் அமைந்துள்ள அறுவகைப் பெயர்களை வகைப்படுத்துக.

எழிலன் காலையில் தோட்டத்திற்குச் சென்றான். மரக்கிளையில் பச்சைக்கிளி உட்கார்ந்திருப்பதனைக் கண்டான்; குயிலின் பாடல்கேட்டு மகிழ்ந்தான்.

1. 3. 5.

2. 4. 6.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ. மதுரை என்பது ______________ பெயர்.
   1. காலப்பெயர் 2. குணப்பெயர் 3. இடப்பெயர்

ஆ. பூங்கொடி பூப் பறிக்கிறாள். இத்தொடரிலுள்ள 'பூ' என்பது ______________ பெயர்.
   1. பொருட்பெயர் 2. சினைப்பெயர் 3. தொழிற்பெயர்

இ. சதுரம் என்பது ______________ பெயர்.
   1. பொருட்பெயர் 2. காலப்பெயர் 3. குணப்பெயர்

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச்சொற்களை எழுதுக.

அ. ____________ அசைகிறது.
ஆ. ____________ பூசை நடக்கிறது.
இ. ____________ பள்ளிக்கு விடுமுறை.
ஈ. ____________ உடைந்துவிட்டது.
உ. ____________ மூன்றுகோணங்களைஉடையது.
ஊ. ____________ வல்லவன் இராமன்.

### ஆ) குறுவினாக்கள்

1. அறுவகைப்பெயர்கள் யாவை ?
2. காலப்பெயர்கள் நான்கனை எழுதுக.
3. சினைப்பெயர்கள் நான்கனை எழுதுக.
4. இடப்பெயர்கள் நான்கனை எழுதுக.

### இ) சிறுவினாக்கள்

1. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.
2. நும் பாடப்பகுதியில் உள்ள பெயர்ச்சொற்களைத் தொகுத்து வகைப்படுத்துக.

தமிழ்

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

'காளியப்பன்' போன்றோர் வளரக் காரணம்' – கலந்துரையாடுக.

ஆ) எழுதுதல் திறன்

பொருளுணர்ந்து முறைப்படுத்திப் பத்தியமைத்து எழுதுதல் (மாதிரி)

(எ.கா.) 1. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.

2. சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார்.

3. தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார்.

4. இவரின் இயற்பெயர் முத்தையா.

5. இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

6. இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் பல உண்டு.

முறைப்படுத்தப்பட்ட பத்தி

சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூரில் 1927ஆம் ஆண்டு கண்ணதாசன் பிறந்தார். இவரின் இயற்பெயர் முத்தையா. இவருக்குக் காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கிய நாதன், கமகப்பிரியா எனப் புனைபெயர்கள் பல உண்டு. கவியரசு கண்ணதாசன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தார். இவர் 1981ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

பயிற்சி

பொருளுணர்ந்து முறைப்படுத்திப் பத்தியமைத்து எழுதுதல்

1. நீ அழுகையை நிறுத்தாவிட்டால், ஓநாயிடம் தூக்கிப் போட்டுவிடுவேன் என்று குழந்தையிடம் கூறினாள், அவள்.
2. குடிசையின் உள்ளே சிறு பையன் அழுதுகொண்டிருந்தான்.
3. இதனைக்கேட்ட ஓநாய், குடிசைக்கு வெளியே நெடுநேரம் காத்துக்கொண்டிருந்தது.
4. பசியோடு உணவுதேடி அலைந்துகொண்டிருந்த ஓநாய், ஒரு குடிசைவீட்டின் அருகே வந்தது.
5. இங்கு மக்கள் பேசுவது ஒன்று; செய்வது வேறு ஒன்றாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டே ஓநாய் சென்றது.
6. திடீரென்று 'என் கண்ணே, அழாதே. உன்னை ஓநாயிடம் போடமாட்டேன். ஓநாய் இந்தப் பக்கம் வரட்டும். அதனை அடித்துக் கொன்றுவிடுவோம்' என்றாள்.

இ) செயல் திட்டம் : உங்களூர்த் திருவிழாவில் தொடக்கம்முதல் இறுதிவரை நடைபெறும் செயல்பாடுகளைத் தொகுத்தெழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

அ) நேர் இணைச்சொற்கள் – எதிர் இணைச்சொற்கள்

நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும்பொழுது, சுவைபடக் கூறுவதற்காக, ஒரே பொருள்தரும் இருசொற்களைப் பயன்படுத்துவது உண்டு. அவை நேர் இணைச்சொற்கள் எனப்படும்.

(எ.கா.) 1. காவேரி கண்ணுங்கருத்துமாகப் படிப்பாள்.

2. வளவனின் தந்தை பேரும்புகழும் மிக்கவர்.

இத்தொடர்களில் உள்ள கண்ணுங்கருத்தும், பேரும்புகழும் ஆகியன நேர் இணைச்சொற்கள். எதிரான கருத்தைக் கூறும்பொழுது எதிர்ப்பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் எதிர் இணைச்சொற்கள்.

(எ.கா.) 1. கோபாலன் உயர்வுதாழ்வின்றி அனைவரிடமும் பழகும் பண்பாளர்.

2. மலர்க்கொடியின் தந்தை அல்லும்பகலும் அயராது உழைத்தவர்.

இத்தொடர்களில் உயர்வுதாழ்வின்றி, அல்லும்பகலும் என்பன எதிர் இணைச்சொற்கள்.

பயிற்சி

1. கீழ்க்காணும் நேர் இணைச்சொற்களையும், எதிர் இணைச்சொற்களையும் தொடர்களில் அமைக்க.

1. ஈடுஇணையற்ற
2. அல்லும்பகலும்
3. குற்றங்குறை
4. ஓங்கியுயர்ந்த
5. தங்குதடையின்றி
6. கீரியும் பாம்பும்

2. உரிய இணைச்சொற்களை எடுத்துக் கோடிட்ட இடங்களில் நிரப்புக.

(இரவுபகல், ஏற்றத்தாழ்வு, கற்றோரும் மற்றோரும், அடித்துப்பிடித்து, பத்திப்பத்தியாக)

1. அண்ணல் அம்பேத்கர் சமுதாயத்தில் காணப்படும் ____________ களையப் பாடுபட்டார்.
2. கட்டுரை எழுதும்போது ____________ எழுதுதல் வேண்டும்.
3. உலகம், சூரியனைச் சுற்றுவதனால் ____________ தோன்றுகிறது.
4. பேருந்தில் இடம்பிடிக்க ____________ ஏறினேன்.
5. நேருவின் அறிவாற்றலைக் ____________ போற்றிப் புகழ்ந்தனர்.

ஆ) அரபு எண்ணுக்குரிய தமிழெண்ணை எழுதுக.

| | அரபு | – | தமிழ் | | அரபு | – | தமிழ் |
|---|---|---|---|---|---|---|---|
| அ) | 7 | – | ______ | ஈ) | 2 | – | ______ |
| ஆ) | 5 | – | ______ | உ) | 9 | – | ______ |
| இ) | 10 | – | ______ | ஊ) | 8 | – | ______ |

இ) கடிதம் எழுதுதல் : ஊர்த்திருவிழாவிற்கு வருமாறு, நண்பனுக்குக் கடிதம் எழுதுதல்.

ஈ) அகரவரிசையில் அமைத்தல்

மெய்யெழுத்து வரிசையறிதல்: க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய பதினெட்டு மெய்யெழுத்துகளும் உயிர் எழுத்தையோ உயிர்மெய்யெழுத்தையோ தொடர்ந்து மெய்யெழுத்து வரிசையாக வரும்.

பயிற்சி

கீழுள்ள சொற்களில் இரண்டாம் எழுத்து, மெய்யெழுத்து வரிசையில் அமையும்படி சொற்களை அமைக்க.

அம்மா, அப்பம், அங்கை, அஞ்சு, அக்கா, அத்தை, அச்சம், அன்பு, அந்தி, அண்ணி, அட்டை, அய்யா, அவ்வை, அல்லல், அள்ளல், அற்றம்.

## பண்பு

### கேட்டுப்பெறுதல்

தாமரை ஏழாம் வகுப்பில் படிக்கிறாள். அவளைப் பற்றி அறிந்தால், உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்பமாட்டீர்கள். ஏனென்றால், அவளுக்குப் பிடித்த பொருளாக இருந்தால், யாரையும் கேட்காமல் உரிமையோடு எடுத்துக்கொள்வாள். பலரும் பலமுறை அறிவுறுத்தியும் அவளால் அந்தப் பழக்கத்தை விடவே முடியவில்லை. ஒருவருக்கு உரிமையான பொருளை, அவர் அனுமதியின்றி எடுத்துக்கொள்வது தவறில்லையா ?

கூடிப் பேசுவோம்

1. தாமரை போன்றோரை உங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வீர்களா ?
2. நீங்கள் எப்போதாவது தாமரையைப் போன்று நடந்து கொண்டதுண்டா ?
3. தாமரையின் செயலைத் திருத்தாமல் வளரவிட்டால் என்ன ஆகும் ?
4. தாமரையின் பழக்கத்தை மாற்றுவது எப்படி ?

## வாழ்க்கைத்திறன்

### சிக்கலுக்குத் தீர்வு காணல்

நம் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கலுக்கு ஆக்கப்பூர்வமான வழியைத் தேர்ந்தெடுக்கவும் அவற்றுக்கு எளிதாகத் தீர்வு காணவும் சிக்கலுக்குத் தீர்வு காணும் திறன் உதவுகிறது. குமரனுக்குக் கால்பந்து விளையாடுவதென்றால் மிகவும் பிடிக்கும். படிக்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம் கால்பந்தாட்டம் ஆடிக்கொண்டிருப்பான். ஆனால், அவனுடைய தந்தைக்கோ அவனைச் சிறந்த நீச்சல் வீரனாக்கிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. குமரனுக்கு ஏற்பட்ட சிக்கலுக்குத் தீர்வு என்ன ?

நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### நாட்டுப்பற்று

ஜெர்மனி நாட்டின் கொடுங்கோலராகக் கருதப்பட்டவர் ஹிட்லர். 'இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தால், நாட்டைத் திறமையாக ஆட்சிபுரியும் தகுதி இந்தியருக்கு இருக்கிறதா என்பது ஐயமே' என்று இந்தியர்களைக் குறைத்து மதிப்பிட்டு, ஒருமுறை அவர் கருத்துக் கூறினார். இதனைக்கேட்ட செண்பகராமன் கொதித்தெழுந்தார். ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி, எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்புக் கேட்கச் செய்தார். உலகையே நடுங்கச்செய்த கொடுங்கோலராக இருந்தாலும் அவரையே மன்னிப்புக் கேட்கச்செய்த மாவீரன் செண்பகராமனின் நாட்டுப்பற்று போற்றுதற்குரியதாகும்.

பெற்ற தாயையும் பிறந்த நாட்டையும் மதிக்கக் கற்றுக்கொள்ளாதவன் கற்றும் பதராகவே கருதப்படுவான். ஆகவே, ஒவ்வொருவரும் பெற்ற தாய்க்கும் நாட்டுக்கும் பேரும்புகழும் சேர்த்தல் வேண்டும்.

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | விடையளித்தல் |
|---|---|

**கீழுள்ள பத்தியை ஆசிரியர் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு மாணவர்கள் விடைகூறுக.**

விவேகானந்தர் நமது நாட்டின் வீரத்துறவி. அவர்தம் பேச்சு இந்திய இளைஞர்களின் மனத்தில் வீர உணர்ச்சியைத் தூண்டியது. ஒவ்வோர் இளைஞருக்குள்ளும் பொதிந்து கிடக்கும் ஆற்றலை வெளிக் கொண்டுவந்து அவர்களைச் செயல் வீரர்களாக மாற்றியது. “ இளைஞர்கள் பிறரிடமிருந்து நல்லவற்றை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் வளரமுடியும். நீங்கள் கடவுளின் குழந்தைகள். சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளுங்கள்” என்று விவேகானந்தர் இளைஞர்களை நோக்கி வீரமுழக்கமிட்டார். அவர்தம் உரையினைக் கேட்ட இளைஞர்கள் துடித்தெழுந்தார்கள்; நாட்டிற்கு அரும்பெரும் தொண்டாற்றினார்கள்.

### வினாக்கள்

1. இளைஞர்களின் வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்பாதவர் விவேகானந்தர் (சரி /தவறு)
2. இளைஞர்கள் கடவுளின் குழந்தைகள் (சரி /தவறு)
3. பிறரிடமிருந்து நல்லன அல்லாதவற்றை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் (சரி /தவறு)
4. இளைஞர்கள் செம்மறி ஆடுகள் அல்லர், சிங்கங்கள் (சரி/தவறு)
5. இளைஞர்கள் நாட்டுக்குத் தொண்டாற்றுதல் வேண்டும் (சரி /தவறு)

| செயல்பாடு : 2 | கதை கூறுதல் |
|---|---|



**கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை கூறுக.**

- வைகைஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுதல்
- கரை உடைந்து வெள்ளம் ஊருக்குள் புகும்நிலை
- வீட்டிற்கு ஒருவர் மண்சுமந்து கரையை வலுப்படுத்த அரிமர்த்தன பாண்டியன் ஆணையிடல்
- வந்தி கிழவிக்கு இறைவன் பிட்டுக்கு மண் சுமத்தல்
- இறைவன் மண்சுமக்காமல் மண்சுமப்போரையும் இடையூறு செய்தல்
- காவலர்கள் இச்செயலை மன்னனிடம் முறையிடல்
- மன்னன் இறைவனைப் பிரம்பால் அடித்தல்
- பிரம்படி உலகில் உள்ள எல்லா உயிரிகள் மீதும் விழுதல்

| செயல்பாடு : 3 | வினாடிவினா |
|---|---|

'தூங்காநகர்' என்னும் உரைநடைப்பகுதியை ஒட்டி மாணவர்களாகவே வினாடிவினா நடத்துக. (வினா அமைப்பதும், வினாடி வினா நடத்துவதும், வினாடி வினா நிகழ்ச்சியில் பங்குபெறுவதும் மாணவர்களாகவே இருத்தல் வேண்டும்)

## எழுதுதல்

| செயல்பாடு : 4 | சொல்வதனை எழுதுதல் |
|---|---|

சொல்வதனை எழுதுக.

1. தங்கப்பதுமைத் தோழர்கள்
2. விலையில்லா மெய்ப்பொருள் கல்வி
3. விரும்பிப் படித்தால் அறிவு உண்டு
4. அழுக்கில்லா ஆடையே மேன்மை
5. கற்பிப்போர் கண்கொடுப்போரே

| செயல்பாடு : 5 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

பாடலில் அடிக்கோடிட்ட பெயர்ச்சொற்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுக.



கட்டை கட்டை மாட்டு <u>வண்டி</u>
காலம் கடந்த மாட்டு வண்டி
<u>கறுப்புப்</u> புகை கக்கிடாத
காளை பூட்டின கட்டைவண்டி
<u>ஆண்டுநூறு</u> கடந்தாலும்
அழகாய் <u>ஓடும்</u> மாட்டுவண்டி
காததூரம் ஓடினாலும்
கட்டுவிடாக் கட்டைவண்டி
சல்சல் மாட்டுவண்டி
<u>சாலையில்</u> ஓடும் மாட்டுவண்டி
<u>வாலை</u> நன்றாய்த் தூக்கியே
விரைந்து ஓடும் காளைகளே.

| | | |
|---|---|---|
| 1 | பொருட்பெயர் | |
| 2 | இடப்பெயர் | |
| 3 | காலப்பெயர் | |
| 4 | சினைப்பெயர் | |
| 5 | குணப்பெயர் | |
| 6 | தொழிற்பெயர் | |

| செயல்பாடு : 6 | விடை எழுதுதல் |
|---|---|

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

கொல்லையிலே வாழைபலா
மாங்கனிகள் குலுங்கும்! நீள்
கரும்ப ழைக்கும்!
நெல்லரியோ வந்தகதிர்
நிறங்கண்டு தலைதாழ்த்தும்!
ஊரோ ரத்துக்
கல்லருவி முழவார்க்கும்!
காடெல்லாம் பூச்சிரிக்கும்!
குயில்கள் பாடும்!

வினாக்கள்

1. பாடலிலுள்ள முக்கனிகள் பெயரினை எழுதுக.
2. அழைப்பது எது ?
3. தலை தாழ்த்துவது எது ?
4. காடெல்லாம் சிரிப்பது எது ?
5. பாடும் பறவை எது ?

## கற்றலடைவுச் சிறு மதிப்பீடு

மதிப்பெண் :10


I. கீழ்க்காணும் தொடர்கள் சரியா, தவறா ? 6 x 1 = 6

1. 'வந்தி' கிழவிக்காக மண்சுமந்து பாண்டியனிடம் இறைவன் அடிபட்டார். (சரி/தவறு)
2. கவிஞரேறு என்னும் பட்டத்தைப் பெற்ற கவிஞர் திருக்காமு ஆவார். (சரி/தவறு)
3. வாழ்க்கைக்குக் கல்விதரும் ஆசிரியரின் சொல்கேட்டு நடத்தல் வேண்டும். (சரி/தவறு)
4. பாண்டியர்தம் தலைநகரம் தஞ்சாவூர் (சரி/தவறு)
5. மதுரையைப் புகழ்ந்து பாடிய எட்டுத்தொகை நூல், 'பரிபாடல்' ஆகும். (சரி/தவறு)
6. காளியப்பன் ஊர் போற்றும் நல்லவன். (சரி/தவறு)

II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 2 = 4

1. குணப்பெயர் நான்கனை எழுதுக.
2. பொருட்பெயர் என்றால் என்ன ?

# ஏர்முனை



ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்லே!
என்றும்நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே! – (ஏர்முனை)

பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே – பயிர்
பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரி யினாலே – நாம்
சேமமுற நாள்முழுதும் உழைப்பத னாலே – இந்தத்
தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே! – (ஏர்முனை)

* நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக – அது
நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக
பக்குவமாய் அறுத்துஅதைக் கட்டுக்கட்டாக – அடிச்சுப்
பதருநீக்கிக் குவிச்சு வைப்போம் முட்டுமுட்டாக! – (ஏர்முனை)

வளர்ந்துவிட்ட பருவப்பெண் போல்உனக்கு வெட்கமா? – தலை
வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்பக்கமா – இது
வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும்ஆசை முத்தமா? – என்
மனைக்கு வரக்காத் திருக்கும் நீஎன் சொத்தம்மா – (ஏர்முனை) *

– அ. மருதகாசி

பொருள் : உழவுத்தொழிலுக்கு இணையான தொழில் உலகில் இல்லை என்பதனால், நம் வாழ்வில் பஞ்சமில்லை. கதிரவனாலே மழை பொழிந்து நிலத்தில் பயிர்களும் பூத்துக் காய்த்து உள்ளன. நம் உழைப்பால் நாடும் நலம் பெறுகிறது. முத்து முத்தாக வியர்வை சிந்தியதனால் கொத்துக்கொத்தாக நெல்மணிகள் விளைந்துள்ளன. நெற்பயிரானது பருவப்பெண்ணைப்போலத் தரையின் பக்கம் தலை சாய்ந்துள்ளது. இது தன்னை வளர்த்துவிட்ட நிலமகளுக்கு நெற்கதிர் தரும் ஆசை முத்தமாக அமைந்துள்ளது. நெற்கதிர்களை அறுத்துக் கட்டுக்கட்டி அடித்துத் தூற்றிப் பதர் நீக்கி வீட்டில் சேர்த்து வைப்போம். இந்த நெற்கதிர்கள் வீடு வந்து சேரவிருக்கின்றன. அவை என் செல்வமாகும்.

சொற்பொருள்: மாரி – மழை; சேமம் – நலம்; தேசம் – நாடு; முட்டு – குவியல்; நெத்தி – நெற்றி.



## ஆசிரியர் குறிப்பு

பெயர் : அ. மருதகாசி

பிறந்த ஊர் : திருச்சி மாவட்டத்திலுள்ள மேலக்குடிகாடு

பெற்றோர் : அய்யம்பெருமாள் – மிளகாயி அம்மாள்.

சிறப்பு : திரைக்கவித் திலகம்

காலம் : 13.02.1920 – 29.11.1989

நூல் குறிப்பு : 'திரைக்கவித் திலகம் அ. மருதகாசி பாடல்கள்' என்னும் தலைப்பில், திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. சமூகம் என்னும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள பாடல், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) நிகரற்ற தொழில் ______________ .

ஆ) உழவர்கள் செல்வமாகக் கருதுவது ______________ .

2. பிரித்து எழுதுக.

அ) நேரிங்கே ______________ .

ஆ) சேமமுற ______________ .

இ) தேசமெல்லாம் ______________ .

ஈ) பருவப்பெண் ______________ .

### ஆ) குறுவினாக்கள்

1. முத்து முத்தான வியர்வைக்குக் கிடைத்த பயன் என்ன ?
2. உழவர் நெல்லை எவ்வாறு வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர் ?
3. விளைந்த நெற்கதிரைக் கவிஞர் எவ்வாறு உவமிக்கிறார் ?

### இ) சிறுவினா

கவிஞர் மருதகாசி, உழவரின் செயல்களாகக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

### செயல் திட்டம்

உழவுத்தொழில் தொடர்பான திரையிசைப் பாடல்களை எழுதி வருக.

தமிழ்

## அம்மானை

வீரன்நெடு வெள்வேல் வியன்செந்தில் எம்பெருமான்
பாரில்உயி ரெல்லாம் படைத்தனன்காண் அம்மானை,
பாரில்உயி ரெல்லாம் படைத்தனனே யாமாகில்
ஆரணங்கள் நான்கும் அறிவனோ அம்மானை,
அறிந்து சிறைஅயனுக் காக்கினன்காண் அம்மானை.

– சுவாமிநாத தேசிகர்

பொருள் : ஒளிபொருந்திய நெடிய வேலை ஏந்திய வீரனும் பெருமை பொருந்திய திருச்செந்தூரில் விளங்குபவனும் ஆகிய முருகப்பெருமான், உலகிலுள்ள உயிர்களை எல்லாம் படைத்தனன். உலகிலுள்ள உயிர்களை எல்லாம் படைத்தவனே ஆனாலும், அவன் நான்கு மறைகளையும் அறிவானோ ? அவன், இவற்றை யெல்லாம் அறிந்தே நான்முகனைச் சிறையிலிட்டனன்.

சிறப்பு நயம் : அம்மானை – ஒருவகைக் காய் விளையாட்டு. இது பெண்கள் விளையாடுதற்குரியது. பெண்கள் மூவர் வட்டமாக உட்கார்ந்துகொண்டு கல்லை மேலெறிந்து பிடித்தாடுவது அம்மானை விளையாட்டு. அங்ஙனம் ஆடுங்கால் முதலாமவர், இரண்டாமவரிடம் ஒரு கருத்தைக்கூறித் தொடங்க, இரண்டாமவர் மூன்றாமவரை அதுபற்றி வினவ, மூன்றாமவர் அதற்கு விடைகூறி முடிப்பதாக அமையும் சுவையான ஓர் உரையாடல் விளையாட்டு. இவ்விளையாட்டைத் தமிழக மகளிர் பண்டுதொட்டே ஆடி வருகின்றனர்.

நான்முகன் மறைகளைப் படைத்தவனாகவும், மறையை அறிந்தவனாகவும் இருந்தும் பிரணவப் பொருளைப்பற்றித் தெரியாததனால், முருகப்பெருமான் நான்முகனைச் சிறையில் அடைத்த செய்தியை இவ்வம்மானை கூறுகிறது. முருகப்பெருமான் சிறந்தவன்; யாவும் அறிந்தவன் என்பது இப்பாடலில் உணர்த்தப் பெறுகிறது.

ஆசிரியர் குறிப்பு : திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூலை இயற்றியவர் ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் ஆவார். ஈசான தேசிகர் என்பது, அவரது சிறப்புப் பெயராகும். தாண்டவமூர்த்தி என்பார்க்கு மகனாகப் பிறந்தார். இவர் மயிலேறும் பெருமாள் என்பாரிடம் கல்வி கற்றார். இவர், திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகமூர்த்திக்குத் தொண்டராய் இருந்தார்; ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்.

நூல் குறிப்பு : திருச்செந்திற்கலம்பகம் என்னும் இந்நூல், தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. கலம்பகம் = கலம் + பகம் எனப் பிரியும். கலம் – பன்னிரண்டு; பகம் – ஆறு எனப் பதினெண் உறுப்புகளைக் கொண்டது. மேலும், பல்வகையான பா வகைகளும் கலந்திருத்தலால் இந்நூல் கலம்பகம் எனவும் பெயர் பெற்றது. பதினெண் உறுப்புகளில் ஒன்றாகிய அம்மானை என்னும் பகுதி, ஈண்டுப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்வு செய்க.

1. அம்மானை என்பது __________ விளையாடும் விளையாட்டு.

அ. ஆண்கள் ஆ. பெண்கள் இ. குழந்தைகள்

2. அம்மானைப் பாடலில் போற்றப்படும் தெய்வம்

அ. சிவன் ஆ. நான்முகன் இ. முருகன்

3. முருகனால் சிறையிலிடப்பட்டவன்

அ. நான்முகன் ஆ. சிவன் இ. திருமால்

### ஆ. குறுவினாக்கள்

1. திருச்செந்திற்கலம்பகம் – நூல் குறிப்பு எழுதுக.
2. அம்மானை – விளக்குக.

### இ. சிறுவினா

முருகப்பெருமானின் சிறப்புகளை எழுதுக.

நான் கேட்ட நாட்டுப்புறப் பாடல்

# நெசவு

## (உரையாடல்)

அருளப்பர் : அம்மா, மலர்விழி! இங்கே வா, பாவு நூலில் ஒரிழை அறுந்துவிட்டது; வந்து அதனைப் பிணைத்துவிடு.

மலர்விழி : அப்பா, நான் படித்துக் கொண்டிருக்கிறேன்; அம்மாவைக் கூப்பிடுங்களேன்.

அருளப்பர் : மலர்விழி, நீ நன்றாகப் படி. ஆனால், படிப்பு மட்டுமே உனக்கு உற்ற துணை ஆகிவிடாது; கைத்தொழிலையும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்; கவலை உனக்கிலை ஒத்துக்கொள் என்னும் பாடலை நீ கேட்டதில்லையா? வா, அறுந்துவிட்ட இழையை எடுத்துப் பிணைத்துவிடு.

மலர்விழி : சரி, அப்பா. இதோ பாவு நூலில் அறுந்த இழையைப் பிணைத்து விட்டேன். (தோழி மங்கை உள்ளே நுழைகிறாள்) ஓ, மங்கையா! வா வா! அப்பா, இவள் என் தோழி!

மங்கை : இதுதான் நெசவுக்கூடமா! இவையெல்லாம் என்னென்ன?

மலர்விழி : இதோ! அச்சுமரம், படைமரம், விழுதுகம்பு, குத்துக்கம்பி, ஓடம், ஊடைகுழல், பாவு இவையெல்லாம் தறி நெய்யப் பயன்படும் கருவிகள்.

அருளப்பர் : அருமை அருமை! மலர்விழி! நம் வீட்டு நெசவுக்கூடத்தைப் பற்றி உன் தோழிக்கு நன்றாகவே கூறுகிறாய்.

மங்கை : அங்கே மேலே ஒரு படம் உள்ளதே... அதில் உள்ளவர் யார்?

அருளப்பர் : மங்கை! தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் படம்தான் அது. அவர் படத்தை ஏன் வைத்திருக்கிறேன் தெரியுமா? ஒருமுறை அவரிடம், பூக்களில் சிறந்த பூ எதுவெனக் கேட்டனர். அதற்குத் திரு.வி.க. சற்றும் தயங்காமல் பருத்திப்பூ எனக் கூறினார்.

மற்றவையெல்லாம் பூத்துக் காய்த்துக் கனிந்துவிடும். ஆனால், பருத்தி ஒன்று மட்டும்தான் பூத்துக் காய்த்து வெடித்துப் பஞ்சாகி நூலாகி ஆடையாகி, நம் மானம் காத்து நிற்கும்.

மலர்விழி : அப்பா, பருத்தியைப் பிரித்து அடித்துப் பஞ்சாக்கி நெய்வதனால் ஆடை உருவாகிவிடுகிறதா?

அருளப்பர் : ஆம். அது மட்டுமா? ஆடை நெய்த பின்னர் வண்ணமேற்றல், பூ வேலைப்பாடுகள் செய்தல், கரையழகுபடுத்தல், மணமூட்டல், பளபளப்பாக்கல் எனப் பல வேலைகளுக்குப் பின்னரே அழகிய ஆடையாக உருவெடுக்கிறது.

மங்கை : ஆடையைப் பளபளப்பாக்குவார்களா? புதிராக இருக்கிறதே!

அருளப்பர் : நெய்த துணிகளைத் தோய்த்துப் பளபளப்பாக்கத் தேய்ப்புக் கல்லைப் பயன்படுத்துவர். இது பழங்காலத்திலிருந்து தொடர்ந்து வரும் பழக்கம்.

மங்கை : மலர்விழி, தறி மட்டும்தான் நெசவுக்குப் பயன்படுமா?

மலர்விழி : தறி நெசவு, விரல் நெசவு, மேல்நோக்கு நெசவு, கீழ்நோக்கு நெசவு எனப் பலவகை உண்டு. அப்படித்தானே, அப்பா!

அருளப்பர் : ஆமாம், மலர்விழி. பஞ்சிலிருந்து நூற்கப்படும் நூல் எண் 10, எண் 20, எண் 40, எண் 60, எண் 80, எண் 100, எண் 120 என அதன் மென்மைத் தன்மைக்கு ஏற்பப் பெயரிட்டு அழைக்கின்றோம். பாவுநூல், ஊடைநூல் இணைந்து கலிங்கம் என்னும் ஆடை உருவாகிறது. சேலை, வேட்டி, சட்டை, துண்டு என நூல் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றது.

மங்கை : அப்பா, கைத்தறி நெசவு எங்கெங்கு நடைபெறுகின்றது? நெய்த ஆடைகள் எங்கெங்கே அனுப்பப்படுகின்றன?

அருளப்பர் : மங்கை! காஞ்சி, ஆரணி, மதுரை, கோவை, பரமக்குடி, சின்னாளப்பட்டி, ஈரோடு, சென்னிமலை, உறையூர், திருப்புவனம்



முதலிய ஊர்களில் கைத்தறி நெசவு இன்றும் நடைபெறுகிறது. நகர்ப்புறங்களில் இயந்திர நெசவு நடைபெறுகிறது. தமிழகத்தில் நெய்யப்படும் ஆடைகள் உலக நாடுகள் பலவற்றிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மங்கை : ஆகா, இப்பொழுதுதான் என் நினைவிற்கு வருகிறது. திருப்பூர்ப் பின்னலாடைகள், மதுரைச் சுங்குடிப்புடவைகள், உறையூர்க் கண்டாங்கிச் சேலைகள், காஞ்சிப்பட்டாடைகள், சென்னிமலைப் போர்வைகள் உலகம்முழுவதும் மக்களால் விரும்பி வாங்கப்படுகின்றன என்பதனை நாளிதழ்களில் படித்திருக்கிறேன்.

மலர்விழி : அப்பா! மங்கை, பட்டாடை என்று கூறியதும்தான், அதனைப்பற்றி அறிந்துகொள்ளத் தோன்றுகிறது. பட்டாடை உருவாகும் முறை பற்றிச் சொல்லுங்கள் அப்பா, நாங்களும் தெரிந்து கொள்கிறோம்.

அருளப்பர் : பட்டாடையைப் பழங்காலத்திலிருந்தே நம் முன்னோர் அணிந்து வந்துள்ளனர். முதலில் பட்டுப்புழுவை வளர்த்தல் வேண்டும். அதன் வாயிலிருந்து சுரக்கும் திரவத்தால் பட்டுப்புழு தன்னைச் சுற்றிக் கூடு கட்டிக்கொள்ளும். கூட்டைவிட்டு உரிய காலத்தில் அது வெளியேறும்முன் கொதிக்கும் நீரில் பட்டுப்புழுவின் கூடுகளைப் போடுவார்கள். அப்புழு இறந்துபோனபின், அதன் கூடுகளிலிருந்து எடுக்கும் நூல்தான் பட்டு நூல். அப்பட்டு நூலில் உருவாகும் ஆடையே பட்டாடை.

மலர்விழி : அது சரி அப்பா, இன்று விழாக்களில் பெரியவர்களுக்கு ஆடை போர்த்திச் சிறப்புச் செய்கிறார்களே! இப்பழக்கம் எப்படி ஏற்பட்டது?

அருளப்பர் : பிறப்பு, திருமணம், துறவு, இறப்பு என அனைத்துச் சடங்குகளிலும் பட்டாடை முதன்மை இடம் பெறுகின்றது. கைத்தறி, கதர் ஆடைகளின் சிறப்பை உணர்ந்து அண்ணல் காந்தியடிகள், பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா முதலியோர் கைத்தறி ஆடைகளை அணிந்தனர்; மேடைகளில் மலர் மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறி ஆடை போர்த்தும் பழக்கத்தையும் தோற்றுவித்தனர். குளிரில் வாடிய மயிலுக்குப் போர்வை போர்த்திய வள்ளல் பேகன், இதற்கு முன்னோடி. நம் வாழ்வின் தொடக்கம்முதல் இறுதிவரை புத்தாடை இணைந்து நிற்கிறது.

மங்கை : ஆடையில்லா மனிதன் அரை மனிதன், ஆள் பாதி; ஆடை பாதி என்னும் பழமொழிகள் ஆடையின் சிறப்பைக் குறிக்க எழுந்தவை

என்பதனை நம் ஆசிரியரும் கூறியுள்ளார். நான் சொல்வது சரிதானே!

மலர்விழி : அது மட்டும் இல்லை. செய்யும் தொழிலில் சீர் தூக்கின், நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்னும் வழக்காறும் உண்டு.

மங்கை : மலர்விழி! நீ கொடுத்து வைத்தவள். அப்பா, நெசவுத்தொழில் நலிந்து போகாமல் காக்கும் உங்கள் சேவை போற்றுதற்குரியது. உலகிலேயே கைத்தறி நெசவின் முன்னோடி தமிழகம் என்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய செய்தி. நாளை என் பிறந்த நாள். கைத்தறி ஆடையைப் பிறந்தநாள் பரிசாகத் தருமாறு என் தந்தையிடம் கேட்கப் போகிறேன்; சென்று வரட்டுமா!

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

மயிலுக்குப் போர்வை போர்த்திய வள்ளல்

அ. பேகன் ஆ. பாரி இ. ஓரி

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| காஞ்சி | – | சுங்குடிப் புடவைகள் |
| திருப்பூர் | – | கண்டாங்கிச் சேலைகள் |
| மதுரை | – | போர்வைகள் |
| உறையூர் | – | பின்னலாடைகள் |
| சென்னிமலை | – | பட்டாடைகள் |

### ஆ. குறுவினாக்கள்

1. கைத்தறி நெசவுக்குரிய கருவிகள் யாவை?
2. கைத்தறி நெசவு நடைபெறும் ஊர்கள் நான்கனை எழுதுக.
3. ஆடையின் தேவையைப் பற்றி விளக்கும் பழமொழிகளை எழுதுக.
4. கைத்தறி ஆடைகளின் புகழ் பரப்பியவர் யாவர்?

### இ. சிறுவினாக்கள்

1. அழகிய ஆடை எவ்வாறு உருவாகிறது?
2. பட்டுநூல் எவ்வாறு உருவாகிறது?

### ஈ. நெடுவினா

கைத்தறி நெசவு பற்றி விளக்குக.

# நிலைத்த செல்வம் கல்விச் செல்வம்

ஒற்றையடிப் பாதையின் வழியாக நகை வணிகரும், புலவர் ஒருவரும் நடந்து கொண்டிருந்தார்கள்.

புலவரைப் பார்த்த நகை வணிகரோ, 'ஐயா, என் செல்வமே சிறந்த செல்வம், என்னிடம் தங்கம் மட்டுமல்லாமல், வைர நகைகளும் இருக்கின்றன. உங்களிடம் சொல்லிக்கொள்ள அப்படி என்ன இருக்கிறது' என்றார்.

அதனைக் கேட்ட புலவர், 'ஐயா, உங்களிடம் இருக்கின்ற செல்வத்தைவிட, என்னிடம் இருக்கின்ற செல்வமே சிறந்த செல்வம். அதனை யாராலும் களவாட இயலாது; அடுத்தவரிடம் கொடுத்தாலும் குறையாது'.

'வீணாக என்னிடம் செல்வம் இருக்கிறது, அஃது இருக்கிறது; இஃது இருக்கிறது என்று பெருமையடித்துக் கொள்ளாதீர்கள். உங்கள் செல்வத்தைவிட, என் செல்வமே சிறந்த செல்வம்' என்றார்.

'ஐயா, உங்கள் செல்வத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டி, எந்த நேரமும், ஏதாவது நடந்துவிடக்கூடாதே என்று ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் தவித்துக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால், என்னிடம் இருக்கின்ற செல்வத்தைப்பற்றி எனக்கு எந்தக் கவலையும் கிடையாது. அதனை யாராலும் திருடிச் செல்ல இயலாது என்ற மகிழ்ச்சியோடு இருப்பேன்' என்றார் புலவர்.

ஆனால் வணிகரோ, புலவரின் பேச்சுக்குத் தன் இசைவைத் தெரிவிக்கவில்லை; புலவரின் பேச்சு தவறானது என்று முரண்பட்டுக்கொண்டே இருந்தார்.

அந்த நேரத்தில் எதிர்பாராதவாறு அந்தப் பாதையில் திபுதிபுவெனத் திருடர்கள் வந்தார்கள்.

புலவரையும் வணிகரையும் சூழ்ந்துகொண்ட அவர்கள், தங்களிடம் இருந்த கத்தியினைக் காட்டி, இருவரிடம் இருக்கின்ற பொருள்களை எல்லாம் கேட்டார்கள்.

கத்தியைக் கண்டதும் வணிகர் பயந்துவிட்டார். தன் உயிருக்கு ஊறு வந்து விடக்கூடும் என்று பயந்து அலறிய அவர், தயங்காமல் தன்னிடம் இருந்த நகைகளை எல்லாம் திருடர்களின் கையில் கொடுத்துவிட்டார்.

திருடர்கள் புலவரின் முன்னே கத்தியைக் காட்டி, அவரிடம் இருக்கின்ற பொருள்களை எல்லாம் கேட்கத் தொடங்கினார்கள்.

திருடர்களைப் பார்த்த புலவர், ‘ஐயா, என்னிடம் எந்தப் பொருட்செல்வமும் இல்லை. கல்விச் செல்வம் ஒன்றுதான் என்னிடம் இருக்கிறது. நான் வேண்டுமானால் ஒரு நாடோடிப் பாட்டுப் பாடுகிறேன், கேளுங்கள்’ என்று திருடர்களின் விருப்பத்திற்குத் தகுந்தபடி பாட்டுப்பாடத் தொடங்கினார்.

அந்தப் பாடலைக் கேட்ட திருடர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

புலவரோ, திருடர்களின் விருப்பத்தைப் புரிந்துகொண்டு, அவர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைகின்றவகையில், மேலும் இனிமையாகப் பாடத் தொடங்கினார்.

புலவரின் பாடல் திருடர்களுக்கு நிறைவளித்தது.

அவர் பாடும் பாடலை அவர்களும் முணுமுணுத்துக்கொண்டு பாடி ஆடத் தொடங்கினார்கள்.

‘ஐயா, பல இடத்தில் திருடிக் களைத்துப் போன எங்களுக்கு, உங்கள் பாடல் பெருமகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் இரண்டு மூன்று பாடல்களை நீங்கள் பாடினால் இன்னும் கொஞ்சம் மகிழ்வோம்’ என்றார்கள்.

புலவரும் சளைக்காமல், மிகவும் உற்சாகத்தோடு மீண்டும் புதிய மெட்டில் பாடல்களைப் பாடத் தொடங்கினார்.

அவற்றைக் கேட்ட திருடர்கள் மேலும் உற்சாகமடைந்தார்கள். “ஐயா பாட்டுக்காரரே, “நீர் இனிமையாகப் பாடுகின்றீர். உமது பாட்டைக் கேட்டு மகிழ்ச்சியுடன் ஆடிய நாங்கள் இந்த நகைகளை உங்களுக்குப் பரிசாகத் தருகிறோம், வாங்கிக் கொள்ளுங்கள்” என்று கூறியபடி நகை வணிகரிடம் இருந்து வாங்கிய நகைகளைப் புலவருக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்.

புலவர், திருடர்களைப் பார்த்தார். “திருடர்களே, அடுத்தவர் பணத்தைத் திருடிப் பிழைக்கின்ற வேளையிலேயே என் பாடல் உங்கள் களைப்பை எல்லாம் போக்கி மகிழ்ச்சியளிக்கிறது என்று கூறுகின்றீர்களே. நீங்கள் உழைத்துச் சம்பாதிக்கும்போது, என் பாடலைக் கேட்டால், இன்னும் எவ்வளவு மகிழ்ச்சியடைவீர்கள். நீங்கள் எல்லாரும் நல்ல கலைநயம் மிக்கவர்களாக இருக்கின்றீர்கள். அதனால், ‘உங்கள் செயல் திறனையும் அறிவையும் நல்லவற்றிற்கே பயன்படுத்துங்கள். இனிமேல், இந்தத் திருட்டுத் தொழிலை விட்டுவிடுங்கள்” என்று கூறினார். புலவரின் பேச்சு, திருடர்களைச் சிந்திக்கச் செய்தது.

ஒருவர் முகத்தை ஒருவர் மாறிமாறிப் பார்த்துக்கொண்டனர். பின்னர்ப் புலவரைப் பார்த்த அவர்கள். “ஐயா, இதுவரையிலும் நாங்கள் எத்தனையோ இடத்திற்குத் திருடச் சென்றிருக்கிறோம். திருடச் சென்ற இடத்தில் பலதரப்பட்ட மக்களையும் பார்த்திருக்கின்றோம். எல்லாருமே எங்களை வெறுத்து ஒதுக்கினர். எங்களைப் பிடித்துக் காவலர்களிடம் ஒப்படைத்துத் தண்டனை வாங்கிக் கொடுத்தனர். சிலர் எங்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர். ஆனால், நீங்கள் மட்டும் நாங்கள் திருந்தவேண்டி, எங்களையும் மனிதர்களாக நினைத்துக்கொண்டு நல்வழியைக் காட்டினீர்கள். நீங்கள் காட்டிய நல்வழியை நாங்கள் என்றுமே மறக்கமாட்டோம். இன்றோடு திருட்டுத் தொழிலை விட்டுவிட்டு, நல்ல வேலையைத் தேடி நாங்கள் செல்கிறோம்” என்று கூறினார்கள்.

பின்னர், அனைவரும் புலவரை வணங்கிவிட்டு விடைபெற்றுச் சென்றனர்.

திருடர்களின் முகத்தில் உண்மை தெரிவதனை உணர்ந்த புலவரும், இனிமேல் இவர்கள் திருந்திவிடுவார்கள் என்று உறுதியாக நம்பினார். திருடர்கள் தன்னிடம் கொடுத்த நகைகளை அப்படியே வணிகரிடம் கொடுத்தார், புலவர்.

வணிகரே, ‘இதோ! உமது நகைகள் எல்லாம் உம்மிடமே திரும்பி வந்துவிட்டன. என்னுடைய கல்விச் செல்வத்தின் உதவியால்தான் உம்முடைய பொருட்செல்வத்தைக் காக்க முடிந்தது. இல்லையென்றால், திருடர்கள் இந்த நகைகளை எல்லாம் எப்போதோ இங்கிருந்து கொண்டுசென்றிருப்பார்கள்’ என்றார், புலவர்.

தன் நகைகளை வாங்கிக்கொண்ட வணிகரோ, புலவரின் கால்களில் விழுந்து, ‘ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். நான் செய்த தவற்றை இப்போது உணர்ந்து கொண்டேன். என்னதான் நான் தங்கத்தையும் வைரத்தையும் குவித்து வைத்திருந்தாலும், உங்களின் கல்விச்செல்வத்திற்கு நான் தலைவணங்குகிறேன்’ என்று கூறினார்.

நிலைத்த செல்வம் கல்விச் செல்வமே.

நன்றி : பி.எம். முத்து, பண்பை வளர்க்கும் பண்பாட்டுக் கதைகள்

## மாதிரி வினா

### கட்டுரை வினா

நிலைத்த செல்வம் கல்விச் செல்வம் – இச்சிறுகதை உணர்த்தும் செய்தியை விவரிக்க.

# வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம்,எழினி! முன்வகுப்பில் கற்றுக் கொண்டதனைப்பற்றிச் சொல்.

எழினி : பெயர்ச்சொற்கள் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் கற்றோம், ஐயா.

ஆசிரியர் : நன்று. முகிலன்! பையில் என்ன கொண்டுவந்துள்ளாய்?

முகிலன் : பழுத்த பழம் எடுத்து வந்துள்ளேன், ஐயா.

ஆசிரியர் : (மாணவன் கூறிய தொடரைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களைப் படிக்கச் சொல்லுதல்). பழம் எடுத்து வந்தவன் யார்?

முருகன் : முகிலன், ஐயா.

ஆசிரியர் : என்ன எடுத்து வந்தான்?

முருகன் : பழுத்த பழம் எடுத்து வந்தான், ஐயா.

ஆசிரியர் : இத்தொடரில் வந்துள்ள வினைச்சொற்களைப் பற்றிக் கற்றுக் கொள்வோம். முல்லை! இத்தொடரில் வந்துள்ள வினைச்சொற்களைச் சொல்.

முல்லை : வந்தான், பழுத்த, எடுத்து ஆகியன.

ஆசிரியர் : நன்று. இவற்றுள் 'வந்தான்' என்பது 'செயல்' முற்றுப்பெற்றதனை உணர்த்துவதனால், இது வினைமுற்று ஆகும். இச்சொல், எந்தக் காலத்தைக் காட்டுகிறது?

சிந்து : இறந்தகாலம் காட்டுகிறது, ஐயா.

ஆசிரியர் : 'வந்தான்' என்னும் இச்சொல், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எவ்வாறு வரும்?

அழகன் : வருகின்றான், வருவான் என வரும், ஐயா.

ஆசிரியர் : மிக நன்று. இவ்வாறு செயல் முடிந்ததனைக் குறிக்கும் சொல்லே வினைமுற்று ஆகும். இது மூன்று காலங்களில் ஒன்றனை உணர்த்தும்; திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும். கோபால், அடுத்த சொல்லைப் படி.

கோபால் : 'பழுத்த' என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : பழுத்த என்னும் சொல், முற்றுப்பெறாத வினைச்சொல். இச்சொல் பழம் என்னும் பெயர்ச்சொல்லைக்கொண்டு முடிவுபெறுகிறது. இவ்வாறு ஒரு பெயரைக்கொண்டு முடியும் முற்றுப்பெறாத

வினைச்சொல்லே பெயரெச்சம் ஆகும். இது முக்காலத்திலும் வரும். பழுத்த என்னும் சொல் இறந்தகாலத்தில் வந்துள்ளதுபோல், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் எவ்வாறுவரும் என்று சொல்லுங்கள்.

இனியன் : பழுக்கின்ற பழம், பழுக்கும் பழம் என வரும், ஐயா.

ஆசிரியர் : மிகவும் நன்று. அடுத்த சொல் என்ன?

இனியன் : எடுத்து என்னும் சொல், ஐயா.

ஆசிரியர் : எடுத்து என்னும் முற்றுப்பெறாத வினைச்சொல் 'வந்தான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. இவ்வாறு வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் முக்காலத்தையும் உணர்த்தும்.

எடுத்து வந்தான் – இஃது இறந்தகால வினையெச்சம். இதனைப்போல் நிகழ்கால, எதிர்காலங்களுக்கும் பொருத்திக் கூறுங்கள்.

கோபால் : எடுத்து வருகின்றான் – நிகழ்கால வினையெச்சம். எடுத்து வருவான் – எதிர்கால வினையெச்சம்

பயிற்சி :

1. பின்வரும் தொடரிலுள்ள வினைமுற்றை வட்டமிடுக.
   யாழினி கடுமையாக உழைத்தாள்.
2. பின்வரும் தொடரிலுள்ள பெயரெச்சத்தை வட்டமிடுக.
   நன்கு படித்த மாணவன் முதல் மதிப்பெண் பெற்றான்.
3. பின்வரும் தொடரிலுள்ள வினையெச்சத்தை வட்டமிடுக.
   குழந்தை ஆடிப் பாடி மகிழ்ந்தது.

## மாதிரி வினாக்கள்

அ. கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. வினைமுற்று என்றால் என்ன? சான்று தருக.
2. பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
3. வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
4. அட்டவணையை நிரப்புக.

| வ.எண் | வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|---|
| 1. | படித்தான் | | படித்து |
| 2. | | வந்த | வந்து |
| 3. | கண்டான் | | கண்டு |
| 4. | | கேட்ட | |

ஆ. பின்வரும் பத்தியிலுள்ள வினைமுற்று, பெயரெச்ச, வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.

காலையில் கண் விழித்த செல்வி, படுக்கையைவிட்டு எழுந்தாள்; பல் துலக்கி முகம் கழுவினாள்; வாசல் தெளித்துக் கோலமிட்டாள். அவளின் தாய், அவளின் செயலைக் கண்டு பாராட்டினாள். மனமகிழ்ந்த செல்வி மகிழ்ச்சியில் துள்ளி ஓடினாள்; ஆடிப்பாடி மகிழ்ந்தாள். அன்றைய பாடங்களைப் படித்து முடித்தாள்; பள்ளிக்கு விரைந்து சென்றாள்.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

1. நெசவுத்தொழில் மேம்படுவதற்குரிய வழிமுறைகள் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.
2. தொலைக்காட்சி நாடகம் ஒன்றனைப் பற்றிக் கலந்துரையாடுக.

ஆ) படித்தல் திறன்

இந்நாள் அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமின்றி, அவர்வழி நடந்திட, அவர் காண விரும்பியதனைக் கண்டிட, அவர் தந்து சென்றதனை உருக்குலைக்காது இருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிர் உள்ளவையாக்கிட, உறுதிபூணும் நாளாகும். மாலையின் மாண்பு மணத்தில் இருக்கிறது; விளக்கின் பயன் ஒளியில் இருக்கிறது. அதுபோல, விழாக்களின் பயன் நம் செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது.

இ) எழுதுதல் திறன்

விளம்பரங்கள், அறிவிப்புகளைப் பார்த்துப் புரிந்துகொள்ளுதல்

மதுரையில் தென்னிந்திய நூல் விற்பனையாளர் சங்கம் நடத்தும்

**ஐந்தாவது புத்தகக் கண்காட்சி**

**கழிவு 10 விழுக்காடு**

இடம் : தமுக்கம் மைதானம்,
மதுரை – 625 002.
அனைவரும் வாரீர்!

நாள் : 2.9.2010–11.9.2010
நேரம் : காலை 11 – இரவு 9 மணி
நுழைவுக் கட்டணம் இல்லை!

வினாக்கள்

1. இவ்விளம்பரம் எதனைப் பற்றியது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள் நடைபெறுகிறது?
4. புத்தகம் வாங்குவோருக்கு எத்தனை விழுக்காடு கழிவு தரப்படுகிறது?
5. புத்தகக் கண்காட்சி நடத்துவோர் யார்?

ஈ) படைப்புத்திறன்

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு – குறித்து நாடகம் எழுதுக.

தமிழ்

## மொழித்திறன் பயிற்சி

### அ) மரபுச்சொற்கள்

நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே மரபு எனப்படும். மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவது மரபுப்பிழை. யானைக்கன்று என்பதே மரபுச்சொல். இதனை யானைக்குட்டி எனக் கூறுவது மரபுப்பிழை.

#### இளமை மரபுச்சொற்கள்

**தாவரங்கள் : காய்களின் இளமை மரபு**

| | | |
|---|---|---|
| அவரைப்பிஞ்சு | கத்தரிப்பிஞ்சு | வாழைக்கச்சல் |
| வெள்ளரிப்பிஞ்சு | தென்னங்குரும்பை | மாவடு |

**விலங்குகள்: இளமை மரபு**

| | | |
|---|---|---|
| குருவிக்குஞ்சு | கோழிக்குஞ்சு | ஆட்டுக்குட்டி |
| கழுதைக்குட்டி | எருமைக்கன்று | பன்றிக்குட்டி |
| மான்கன்று | நாய்க்குட்டி | பூனைக்குட்டி |
| சிங்கக்குருளை | புலிப்பறழ் | கீரிப்பிள்ளை |

#### ஒலி மரபுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| குயில் கூவும் | மயில் அகவும் | காகம் கரையும் |
| கிளி கொஞ்சும் | கூகை குழறும் | குதிரை கனைக்கும் |
| சிங்கம் முழங்கும் | நரி ஊளையிடும் | யானை பிளிறும் |

#### வினைமரபுச்சொற்கள்

| | | |
|---|---|---|
| அப்பம் தின் | காய்கறி அரி | இலை பறி |
| நெல் தூற்று | களை பறி | பழம் தின் |
| நீர் பாய்ச்சு | பாட்டுப் பாடு | மலர் கொய் |

**பயிற்சி : பொருத்துக.**

1. காகம் – கூவும்
2. குதிரை – கரையும்
3. சிங்கம் – கனைக்கும்
4. நரி – முழங்கும்
5. குயில் – ஊளையிடும்

### ஆ) தமிழெண்களைக் கூட்டுக.

1. க+உ = ______
2. ச+ரு = ______
3. ரு+ரு = ______
4. உ+ச = ______

### இ) கட்டுரை எழுதுதல்: உழவர் திருநாள்

### ஈ) அகரவரிசையில் அமைக்க.

சீப்பு, சங்கு, சைதை, செப்பு, சூளை, சேவல், சாவி, சுக்கு, சோலை, சிலை, சொல், சௌமியன், சக்கரம், சீரகம், சென்னை, சாறு, செல்வம், சுண்ணம், சூது, செடி.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

தொடர்வண்டி நிலையத்தில்...

பயணி : டிக்கெட் கவுண்டர் எங்கே இருக்குச் சொல்லுங்கையா?

ஒருவர் : ஸ்டெப்ட்டாபோயி லெப்ட்ல திரும்புங்க. அங்க கார்னர்ல ஒரு போர்டு இருக்கும். அங்கபோயி வாங்குங்க.

பயணி : ஐயா, தாம்பரத்திற்கு ஒரு டிக்கெட் கொடுங்க.

அலுவலர் : செவன் ருப்பீஸ் சேஞ்சா கொடுங்க.

பயணி : இந்தாங்க பத்து ரூபாயா இருக்கு.

அலுவலர் : டிக்கெட் இந்தாங்க. மீதி சேஞ்ச் எடுத்துக்கங்க.

பயணி : ஐயா, தாம்பரம் போற டிரெயின் எந்த பிளாட்பாம்ல வரும்.

ஒருவர் : ஸ்டெப்ஸ் ஏறி அந்த சைடுல எறங்கனீங்கனா பிளாட்பாம் நெம்பர் டூல டிரெயின் வரும். அங்கபோயி ஏறிக்குங்க.

இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களை நீக்கித் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தி உரையாடலை அமைக்க.

## வாழ்க்கைத்திறன்

### படைப்பாற்றல் திறன்

நம் வாழ்வில் நாள்தோறும் எதிர்கொள்ளும் சூழல்களுக்குப் பல்வேறு கோணங்களில் இருந்து தீர்வு காண படைப்பாற்றல் திறன் உதவுகிறது.

தண்ணீர் குறைவாக இருந்த குடத்தினுள் கற்களை நிரப்பி, நீரின் அளவை உயரச்செய்து தாகம் தீர்ந்த காகத்தின் கதை படைப்பாற்றல் திறனுக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். நம் மனம் தளர்வடையும்போது, ஆக்கப்பூர்வமான வழிகளில் செலுத்த படைப்பாற்றல் திறன் உதவும். உங்களுடைய வாழ்வில் எந்த ஒரு சூழலிலாவது படைப்பாற்றல் திறனைப் பயன்படுத்தி உள்ளீர்களா?

எவையெவை படைப்பாற்றல் எனப் பட்டியலிடுங்கள்?

பட்டியலிட்ட படைப்பாற்றல்களில் ஏதாவது ஒன்றில் நீங்கள் திறனோ ஆர்வமோ கொண்டுள்ளீர்களா?

## மதிப்புக்கல்வி

### உயிரிரக்கம்

மன்னர் பிம்பிசாரர் ஒருமுறை வேள்வி ஒன்றனை நடத்தத் திட்டமிட்டார். அவ்வேள்வியில் பலியிடுவதற்காக ஆயிரக்கணக்கில் ஆடுகள் கட்டிப்போடப்பட்டு இருந்தன. அங்கு வந்த கௌதம புத்தர், உயிர்களைப் பலியிட வேண்டா என்று கூறினார். ஆனால், அவர்கள் பலியிடுதலைக் கைவிடவில்லை. இறுதியாக, “இந்த வாயில்லா விலங்குகளை விட்டுவிடுங்கள். என்னையே இந்த வேள்வித்தீயில் போடுங்கள்” என்று கூறிய புத்தர், வேள்வித்தீயில் விழப்போனார். புத்தரின் இச்செய்கையைக் கண்டு பிம்பிசாரர் திடுக்கிட்டார்; மனம் மாறினார்; புத்தரின் அறிவுரையை ஏற்றார். பிம்பிசாரர் நாடெங்கும் உயிர்ப்பலியைத் தடை செய்தார்.

உயிரைத் துன்புறுத்தும்போதும் கொல்லும்போதும் அதன் நிலையில் நீங்கள் இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள்.

# வளரறி செயல்பாடுகள்

## பேசுதல்

| செயல்பாடு : 1 | கலந்துரையாடுதல் |
|---|---|

நிகழ்வைப் பார்த்துக் குழுவில் கலந்துரையாடுக. (விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறுவதன் விளைவுகளைச் சிந்திக்க !)





| செயல்பாடு : 2 | பட்டிமன்றம் |
|---|---|

'நிலைத்த செல்வம் கல்விச் செல்வமா, பொருள் செல்வமா ?' என்னும் தலைப்பில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பட்டிமன்றம் ஒன்றனை நிகழ்த்துக.

## எழுதுதல்

| செயல்பாடு : 3 | நேர்காணல் |
|---|---|

உங்கள் ஊரில் உள்ள உழவர்களிடம் கீழுள்ள வினாக்களுக்கான விடையை எழுதி வருக.

1. நீங்கள் நிலத்திற்கு எந்த வகை உரங்களை இடுகிறீர்கள் ?
2. ஒரு நாளைக்கு நிலத்தில் எவ்வளவு நேரம் உழைக்கிறீர்கள் ?
3. உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்கிறதா ?
4. பாசனத்திற்குப் போதுமான நீர் வசதி உள்ளதா ?
5. நீர் வசதி இல்லாதபோது நீங்கள் செய்யும் பயிர் வகைகள் எவை ?

| செயல்பாடு : 4 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

கீழுள்ள சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பஞ்சம் | 2. | சூரியன் | 3. | சேமம் |
| 4. | தேசம் | 5. | சொத்து | 6. | ஆசை |

(அவா, வறட்சி, நலம், உடைமை, நாடு, கதிரவன்)

| செயல்பாடு : 5 | கண்டறிந்து எழுதுதல் |
|---|---|

அ. விடுகதையில் உள்ள ஊர்ப்பெயரைக் கண்டறிக.

1. முதல் எழுத்து மறைந்தால் 'துரை'
2. இரண்டாம் எழுத்து மறைந்தால் 'மரை'
3. மூன்றாம் எழுத்து மறைந்தால் 'மது' – ஊர்ப் பெயர் என்ன ?

ஆ. விடுகதையில் உள்ள விலங்கின் பெயரைக் கண்டறிக.

1. முதல் எழுத்து மறைந்தால் 'மறைக்கும்'
2. இரண்டாம் எழுத்து மறைந்தால் 'குரைக்கும்'
3. மூன்றாம் எழுத்து மறைந்தால் 'குதிக்கும்' – விலங்கின் பெயர் என்ன ?

| செயல்பாடு : 6 | எழுதுதல் |
|---|---|

உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்களிடம் விடுகதைகளைக் கேட்டு எழுதி வருக.

| செயல்பாடு : 7 | எழுதுதல் |
|---|---|

கீழ்க்காணும் தொடர்களிலுள்ள பெயரெச்ச, வினையெச்சச் சொற்களை எடுத்தெழுதுக.

1. கேட்காத கடனும் பார்க்காத பயிரும் வீடுவந்து சேராது.
2. கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

## தொகுத்தல்

| செயல்பாடு : 8 | செயல்திட்டம் |
|---|---|

பலவகையான துணிவகைகளைத் திரட்டித் தொகுப்பேடு ஒன்றனை உருவாக்குக.

## கற்றலடைவுச் சிறு மதிப்பீடு

மதிப்பெண் : 10

I. கோடிட்ட இடங்களை நிரப்புக. 6 x 1 = 6

1. திரைக்கவித் திலகம் எனப் பாராட்டப்படும் கவிஞர் ____________ .
2. கலம்பக உறுப்புகளின் எண்ணிக்கை ____________ .
3. ஈசான தேசிகரின் மற்றொரு பெயர் ____________ .
4. திரு. வி. க. கூறிய சிறந்த பூ ____________ .
5. நிலைத்த செல்வம் ____________ செல்வமாகும்.
6. செயல் முடிந்ததனைக் குறிக்கும் சொல் ____________ ஆகும்.

II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. 2 x 2 = 4

1. சுவாமிநாத தேசிகர் பற்றிக் குறிப்பு வரைக.
2. நெசவுகளின் வகைகள் யாவை ?

## “என்னால் முடியும், நானே செய்தேன்”

## (‘I can, I did’)

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

தமிழ்நாடு அரசு

# ஏழாம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

### தொகுதி 1

தமிழ் ENGLISH

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப்பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2012
திருத்திய பதிப்பு – 2013
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்
www.textbooksonline.tn.nic.in

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

## SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

## AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

“I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation.”

“I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means.”

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature

# பொருளடக்கம்

## தமிழ் (1 - 76)


| இயல் | | | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | செய்யுள் | (i) | பொங்கல் வழிபாடு | 2 |
| | | (ii) | உழவின் சிறப்பு | 4 |
| | உரைநடை | | இயற்கை வேளாண்மை | 6 |
| | துணைப்பாடம் | | தூரத்து ஒளி | 13 |
| | இலக்கணம் | | வேற்றுமை, அடைமொழி, மூவகைப்போலிகள் | 15 |
| 2. | செய்யுள் | (i) | திருக்குறள் | 29 |
| | | (ii) | முக்கூடற்பள்ளு | 32 |
| | உரைநடை | | தமிழக விளையாட்டுகள் | 34 |
| | துணைப்பாடம் | | நண்பன் | 38 |
| | இலக்கணம் | | சொல் | 40 |
| 3. | செய்யுள் | (i) | எங்கள் தமிழ் | 50 |
| | | (ii) | சீவகசிந்தாமணி | 52 |
| | உரைநடை | | ஓவியக்கலை | 53 |
| | துணைப்பாடம் | | கொடைக்குணம் | 59 |
| | இலக்கணம் | | அணியிலக்கணம் | 62 |


## மனப்பாடப் பகுதி

| இயல் | செய்யுள் | அடிகள் |
|---|---|---|
| 1 | பொங்கல் வழிபாடு (14–21) | 8 |
| 2 | திருக்குறள் (2, 4, 6, 8, 10) | 10 |
| 3 | எங்கள் தமிழ் | 8 |
| | மனப்பாடஅடிகள் மொத்தம் | 26 |

( * உடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி)

# CONTENTS

## ENGLISH (77 - 124)


| Unit | | Topic | Page No |
|---|---|---|---|
| 1. | Prose | Creating Space To Be Human | 79 |
| | Poem | Keep On Keeing On | 94 |
| | Supplementary Reader | George Washington Carver and Peanuts | 97 |
| 2. | Prose | The Iron Man - 1 | 104 |
| | Poem | Be The Best Of Whatever You Are | 115 |
| | Supplementary Reader | An Interface With An Extra-Terrestrial Being | 117 |

# தமிழ்

## ஏழாம் வகுப்பு

### மூன்றாம் பருவம்

## பொங்கல் வழிபாடு

நீ தந்த கனி இது; நீ தந்த கரும்பிது
நீ தந்த நெற்கதிர் இது;
நீ தந்த நீர் இது; நீ தந்த சீர் இது;
நீ தந்த ஒளியும் இஃதே!

நீ தந்த சீரும் நீ தந்த திருவும்
நினக்கே நிவேதனம் கதிரவா!
கனகப் புரவிமேல் கடுகியே வந்திடு
கதிரவா எங்கள் கோவே!

நீ தந்த செல்வத்தை நிவேதனம்
செய்பிழை யாம் அறிந்தும்
வழிவேறு வணங்க யாம்
அறியாது கூவுகின்றோம்.
கதிரவா கடுகி வருவாய்!

* நீயன்றி மண்ணுண்டோ, விண்ணுண்டோ,
ஒளியுண்டோ, நிலவுமுண்டோ,
நீருண்டோ, என்னிடம் வாழ்த்துப் பொருளுமுண்டோ?
கதிரவா கனிந்து வருவாய்!

கரும்பு மனமும் இனிப்பாம் உயிரும்
நின்னடி படைத்து விட்டோம்
கதிரவா! ஏற்று மகிழ்வாய்
உயர்ந்தவா, உயிரின் முதலே! *


– ந. பிச்சமூர்த்தி

பொருள் : உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்துக்கும் முதல்வனாக விளங்கும் ஞாயிறே! இவ்வுலகில் காணும் கனிவகையும் கரும்பும் நெற்கதிர்களும் உன்னால் விளைந்தவை. இவை அனைத்தும் உன்னில் தோன்றிய நீராலும் கதிரொளியாலும் உருவான சிறப்பினைப் பெற்றவை. கதிரவனே! நீ தந்த அழகிய செல்வப்பொருள்கள் அனைத்தையும் உனக்கே படையலாக்கி வணங்குகிறோம். கதிரவா! எங்கள் தலைவனே! உனக்கு எதனைப் படையலாக வைத்து வணங்குவது என்பதனை அறியாது, எமக்கு நீ வழங்கிய பொருள்களையே படையலாக்கித் தவற்றைச் செய்துவிட்டோம். ஆயினும், எம் பிழை பொறுத்துப் பொன்னொளி வீசும் குதிரைகள் மீதேறி விரைந்து வருக.

நீயில்லாமல் மண்ணும் விண்ணும் ஒளியும் நிலவும் நீருமில்லை. எல்லாமே உன்னிடமிருந்து பிறந்தவை. எனவே, உன்னைப் புகழ்ந்து போற்ற எம்மிடம் எப்பொருளும் இல்லை. கரும்புபோலும் இனிய மனத்துடனும் இனிதான உயிர்ப்புடனும் உனது திருவடிகளைப் பணிந்து படைத்துவிட்டோம். அனைத்திலும் உயர்ந்த நீ, இவற்றை ஏற்று மகிழ்ந்து அருள் புரிவாயாக!

சொற்பொருள் : திரு – செல்வம்; நிவேதனம் – படையலமுது; கனகம் – பொன்; புரவி – குதிரை; கோ – அரசன்; கடுகி – விரைந்து.

### ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | ந. வேங்கட மகாலிங்கம் |
| புனைபெயர் | : | ந. பிச்சமூர்த்தி |
| ஊர் | : | தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணம் |
| தொழில் | : | 1924 – 1938வரை வழக்குரைஞர்.<br>1938 – 1954வரை கோவில் நிருவாக அலுவலர். |
| எழுத்துப்பணி | : | கதைகள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஓரங்க நாடகங்கள். |
| காலம் | : | 15.08.1900 – 04.12.1976 |

நூற்குறிப்பு : ந.பிச்சமூர்த்தியின் கவிதை நூல்கள் இருபதாம் நூற்றாண்டின் இக்கால இலக்கியத் துறைக்குப் புதிய சிறப்புகளைச் சேர்த்திருக்கின்றன. பாரதிக்குப்பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவை இவரது படைப்புகள். இவரது ந. பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள எண்பத்துமூன்று கவிதைகளில் ஒன்று இப்பொங்கல் வழிபாடு என்னும் கவிதை.

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ. கனகம் என்பதன் பொருள் ________________.

1. செல்வம் 2. பொன் 3. மண்

ஆ. புரவி என்பதன் பொருள் ________________.

1. பசு 2. குதிரை 3. யானை

2. பிரித்து எழுதுக.

1. நெற்கதிர் = __________ 3. மண்ணுண்டோ = __________

2. நிலவுமுண்டோ = __________ 4. நின்னடி = __________

3. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

கனி, கதிர், கதிரவன், கரும்பு, உயிர்.

### ஆ. குறுவினாக்கள்

1. கதிரவனால் விளைந்த பொருள்கள் எவை?
2. கதிரவனிடமிருந்து பிறந்தவை எவை?

### இ. சிறுவினா

கதிரவனுக்குப் படையலாக்கப்பட்ட பொருள்கள் எவை?



## உழவின் சிறப்பு

மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை
ஆழி தரித்தே அருளும்கை – சூழ்வினையை
நீக்கும்கை என்றும் நிலைக்கும்கை நீடூழி
காக்கும்கை காராளர் கை.

– கம்பர்

பொருள் : உழவ! நின் கைகள், ஏர் பிடித்து உழவு செய்கின்ற கைகளாம்; வேற்படையைக் கையிலே பிடித்துள்ள மன்னர்களும் ஆர்வத்தோடு நோக்குகின்ற கைகளாம்; மோதிரம் அணிந்துள்ள உன் கைகள், வருபவர்க்கு எல்லாம் வரையாது வழங்கும் கைகளாம். ஏழை மக்களின் வறுமைத் துன்பமாகிய பசிப்பிணியைப் போக்கும் கைகளாம்; என்றும் உழும் தொழிலே உலகில் நிலையானது; வேளாண் செய்வோரின் கைகளே என்றென்றும் உயிர்களுக்கு அடைக்கலம் அளிக்கின்ற கைகளாம்.

சொற்பொருள்: மேழி – கலப்பை, ஏர்; வேந்தர் – மன்னர்; ஆழி – மோதிரம்; சூழ்வினை – உண்டாகும் வறுமைத் துன்பம்; காராளர் – மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்.



ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | கம்பர் |
| பிறந்த ஊர் | : | தேரழுந்தூர், மயிலாடுதுறைக்கு அண்மையில் உள்ளது. |
| ஆதரித்தவர் | : | சடையப்ப வள்ளல் |
| இயற்றிய நூல்கள் | : | கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம். |
| சிறப்பு | : | கல்வியில் பெரியர் கம்பர், கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும். |
| காலம் | : | பன்னிரண்டாம் நூற்றாண்டு. |

## மாதிரி வினாக்கள்

அ. புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேந்தர் என்பதன் பொருள்

அ. அமைச்சர் ஆ. வள்ளல் இ. மன்னர்

2. ஆழி என்பதன் பொருள்

அ. சிலம்பு ஆ. தோடு இ. மோதிரம்

ஆ. குறுவினா

கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?

இ. சிறுவினா

உழவனின் கைகளைக் கம்பர் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார் ?

# இயற்கை வேளாண்மை
## ( நேர்காணல் )

(முகுந்தன், வேலன், கயல்விழி, பேராசிரியர் நெடுமாறன், வேளாண் அலுவலர் சிவா)

முகுந்தன் : வேலா! வணக்கம். நாளை நாம் கோவையில் நடைபெறும் வேளாண்மைப் பல்கலைக்கழகக் கண்காட்சிக்குச் செல்ல இருக்கிறோம். நம்முடன் கயல்விழியும் வருவதாகக் கூறியுள்ளாள்.

வேலன் : மிக்க மகிழ்ச்சி. அங்கேதான் என் மாமா நெடுமாறன் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்; அவரையும் சந்திக்கலாம்.

முகுந்தன் : மிக்க மகிழ்ச்சி.

(மறுநாள் முகுந்தன், வேலன், கயல்விழி ஆகிய மூவரும் கோவைக்குச்சென்று, வேளாண் கண்காட்சியைப் பார்த்து மகிழ்கின்றனர். அப்போது பேராசிரியர் நெடுமாறனைச் சந்தித்து, இயற்கை வேளாண்மை குறித்துக் கேட்கின்றனர்.)

மூவரும் : வணக்கம்.

பேராசிரியர் : வாங்க, வாங்க வணக்கம்.

வேலன் : மாமா! இவர்கள் முகுந்தன், கயல்விழி. என் நண்பர்கள். நாங்கள் கண்காட்சி காண வந்தோம். உங்களையும் பார்த்துப் பேச வந்தோம்.



பேராசிரியர் : அப்படியா? நல்லது. (மூவரையும் இருக்கையில் உட்காரச் செய்தல்) வேலா! வீட்டில் அம்மா, அப்பா மற்றும் எல்லாரும் நலமா?

வேலன் : அனைவரும் நலமாக இருக்கிறார்கள், மாமா...

பேராசிரியர் : இங்கே கண்காட்சியை நன்றாகப் பார்த்தீர்களா? அக்கண்காட்சியில் உங்களை ஈர்த்த பகுதி எது?

மூவரும் : கண்காட்சியில் இயற்கை வேளாண்மையே எங்களை மிகவும் ஈர்த்தது. இயற்கை வேளாண்மையைப்பற்றி எங்களுக்கு இன்னும் விரிவாகச் சொல்லுங்களேன்.

பேராசிரியர் : ஓ! தாராளமாகச் சொல்லுகிறேன். முதலில் இதனைப் பருகுங்கள்.

(அனைவரும் இளநீர் பருகுதல்)

வேலா! உங்கள் நிலத்தில் அறுவடை முடிந்ததா?

வேலன் : இல்லை, மாமா! இந்த ஆண்டு பயிர்களெல்லாம் பூச்சிகள் தாக்கி விளைச்சல் பாதிக்குமேல் குறைந்துவிட்டது; செய்த செலவுகூட வராது என அப்பா கூறினார்.

பேராசிரியர் : என்ன செய்வது? இன்றைய சூழலில் வாழ்வில் மட்டுமல்லாமல், வேளாண்மையில்கூடச் செயற்கையின்மீது ஆர்வம் மிகுந்துவிட்டது.

வேலன் : என்ன சொல்கிறீர்கள், ஐயா?

பேராசிரியர் : நல்ல விளைச்சல் எடுக்கலாம் என்று நினைத்துத் தேவைக்குமேல் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தியதனால் மண்ணின் தன்மையையும், நீரின் தன்மையையும் கெடுக்கும் அளவுக்குச் சூழ்நிலை உருவாகிவிட்டது.

கயல்விழி : இதனால் என்னவாகும், ஐயா?

பேராசிரியர் : இதனால் நிலம், நீர், காற்று, ஆகாயம் முதலிய வாழ்வாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்படும். பயிர்களுக்கு மட்டுமல்லாமல், மனிதர் களுக்கும் புதிதுபுதிதாக நோய்கள் வரும். வருங்காலத் தலைமுறைக்கு வேளாண்மையின் பயன்பாடுகள் அரிதாகி விடும்போல் இருக்கிறது.

முகுந்தன் : இதற்கு மாற்றுவழியே இல்லையா, ஐயா ?

பேராசிரியர் : உறுதியாக உண்டு. வருமுன் காப்போம் என்னும் முதுமொழிக் கிணங்க, இயற்கை வேளாண்மையை நம் வேளாண் பெருமக்கள் பின்பற்ற வேண்டும் என்பதே எனது கருத்து.

கயல்விழி : இக்காலத்தில் அஃது இயலுமா, ஐயா?

பேராசிரியர் : ஏன் இயலாது? தற்போது வேளாண்துறையில் இயற்கை வேளாண்மைக்கு எனத் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

வேலன் : இக்கண்காட்சியில் இயற்கை வேளாண்மை, சான்றளிப்புக் குறித்து வேளாண் அலுவலர் சிவா எங்களுக்குப் புதிய கருத்துகளைக் கூறினார்.

பேராசிரியர் : அப்படியா! சிவா என் மாணவன்தான். சிவா ஆய்விலும் படிப்பிலும் பணியிலும் சிறந்து விளங்குவதாகக் கேள்விப்பட்டேன். வாருங்கள், நாம் அனைவரும் இயற்கை வேளாண்மைக் கண்காட்சித் திடலுக்குச் செல்வோம்.

சிவா, எப்படி இருக்கிறாய்? உன்னை மாணவனாகப் பார்த்தது. இப்போது வேளாண்மை அலுவலராகப் பணியாற்றுவதனைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். என் மருமகனும் அவனுடைய நண்பர்களும் நீ பேசியதுகுறித்து, என்னிடம் பெருமையாகக் கூறினார்கள். அவர்களுக்கு மேலும் கருத்துகள் சிலவற்றை நீ கூறுதல் வேண்டும்.

வே.அலுவலர் : அப்படியே ஆகட்டும், ஐயா.

முகுந்தன் : இயற்கை வேளாண்மைக் கூறுகள் என்றால் என்ன?

வே.அலுவலர் : உழுதல், விதைத்தல், தொழு உரமிடுதல், நீர் பாய்ச்சுதல், களை எடுத்தல், காத்தல் முதலியன இயற்கை வேளாண்மைக் கூறுகளாம். இக்கூறுபாடுகளை நன்கு உணர்ந்து, நம் தமிழர் உழவுத்தொழிலை இயற்கை முறையில் சிறப்பாக மேற்கொண்டனர்; உலகத்தார் பசிப்பிணியைப் போக்கி வந்தனர்; வருகின்றனர்.

கயல்விழி : நிலத்தை எப்படி உழுதல் வேண்டுமென்று சொல்லுங்கள், ஐயா?

வே.அலுவலர் : நன்றாகக் கேட்டாய். விதைக்கும்முன் நிலத்தைப் பண்பட உழுதல் வேண்டும். அதாவது, ஒருபலம் எடையுள்ள மண்ணைக் கால்பலம் எடை அளவிற்கு உலரும்வரை உழுதிடுதல் வேண்டும். இதனைத்தான் வள்ளுவர் குறளில் கூறுகிறார்.

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

வேலன் : 'அகல உழுவதனைவிட ஆழ உழுதல் நன்று' என்பதுபோலவா?

வே.அலுவலர் : ஆம், அப்படியேதான். அப்பொழுதுதான் கீழிருக்கும் மண் மேலும், மேலிருக்கும் மண் கீழும் புரளும். மண்ணிலுள்ள களை விதைகள் முளைக்கும். மீண்டும் மீண்டும் உழவு செய்யும்போது களைகள் நீங்கி, மண் புழுதியாகும்.

கயல்விழி : நன்செய், புன்செய் என்றால் என்ன, ஐயா ?

வே.அலுவலர் : நீர்வளமிக்கது நன்செய் நிலம். இந்நிலத்தில் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்கள் விளையும். நீர்வளம் குறைந்த பகுதி புன்செய். இதனை வானம் பார்த்த பூமி என நம் வேளாண் மக்கள் கூறுவர். இந்நிலத்தில் விளையும் பயிர்கள் பருவமழையை நம்பியே இருக்கும். இந்நிலத்தில் கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, துவரை, கொள்ளு, காராமணி முதலிய பயிர்கள் விளையும்.

முகுந்தன் : புன்செய் நிலத்தில் நீர் இல்லாமல் எப்படிப் பயிர் விளையும், ஐயா ?

வே.அலுவலர் : எல்லாம் மழையை நம்பித்தான். பருவத்தே பயிர் செய், ஆடிப்பட்டம் தேடி விதை என்னும் பழமொழிகளுக்கேற்பக் காலத்தே பயிர் செய்து பயன் கண்டனர் நம் முன்னோர்.

வேலன் : இவற்றுக்கெல்லாம் விதைகளை எங்கிருந்து வாங்குவார்கள் ?

வே.அலுவலர் : வேளாண் பெருமக்கள் தாங்கள் விளைவித்த பயிர்களிலிருந்து நல்ல விதைகளைத் தேர்வுசெய்து, தூய்மைப்படுத்திப் பாதுகாத்துப் பின்பு பயன்படுத்துவர்; அல்லது, சான்று பெற்ற விதைகளை வாங்கிப் பயன்படுத்துவர்.

கயல்விழி : விதைகளை எவ்வாறு பயன்படுத்துவார்கள், ஐயா ?

வே.அலுவலர் : விதை நெல்லை முதலில் நாற்றங்காலில் விதைத்து இருபத்தொரு நாள்முதல் இருபத்தைந்து நாள்வரை வளர்ப்பர். பின்னர், அதனைப் பறித்துப் பண்படுத்தப்பட்ட சேற்று நிலத்தில் நடுவர். பிறகு, முறையாக நீர் பாய்ச்சிக் களையெடுத்து இயற்கை உரமிட்டுக் காப்பர்.

முகுந்தன் : கரும்பும் வாழையும் அதனைப்போன்றே நடுவார்களா, ஐயா ?

வே.அலுவலர் : அவையும் அப்படித்தான். கரும்பை வெட்டிக் கணுக்களாகவும், வாழையின் கன்றுகளைக் கிழங்குடனும் வெட்டி எடுத்து நடுவர். எந்தெந்தப் பயிர்க்கு எவ்வளவு இடைவெளி வேண்டுமென்பதனை, நம் முன்னோர், ‘நெல்லுக்கு நண்டோட; கரும்புக்கு ஏரோட; வாழைக்கு வண்டியோட; தென்னைக்குத் தேரோட’ எனக் கூறிச் சென்றுள்ளனர். இவ்வாறு இடைவெளி அமையுமானால், பயிரில்

நன்கு காற்றுப் புகும்; பயிர்களும் செழித்து வளரும்; நல்ல பயனும் தரும் என்பர்.

கயல்விழி : அந்தக் காலத்தில் யூரியா, பாஸ்பேட், பொட்டாசியம் முதலிய உரங்கள் இருந்தனவா, ஐயா ?

வே.அலுவலர் : ஏதம்மா! நம் முன்னோர் தொழு உரங்களையே பயன்படுத்தித் தரமான விளைச்சலைக் கண்டனர்.

வேலன் : தொழு உரங்கள் என்றால் என்ன, ஐயா... ?

வே.அலுவலர் : இலை தழைகள், ஆட்டு எரு, மாட்டு எரு, கடலைப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு, இலுப்பம் பிண்ணாக்கு எனப் பல இயற்கை உரங்கள் உள்ளன. இவற்றைத் தொழு உரங்கள் என்பர்.

கயல்விழி : இயற்கை வேளாண்மை அல்லது அங்கக வேளாண்மை என்றால் என்ன ?

வே.அலுவலர் : இரண்டும் ஒன்றுதான். அங்கக வேளாண்மை என்பது செயற்கை உரம், பூச்சி – பூஞ்சாணக்கொல்லி மருந்துகளைப் பயிர்களுக்குப் பயன்படுத்தாமல் உணவு உற்பத்தி செய்வது.

வேலன் : அங்ககச் சான்றளிப்பு என்றால் என்ன ?

வே.அலுவலர் : இயற்கை அல்லது அங்ககப் பண்ணையத்திற்குச் சான்று வழங்கும் நிறுவனத்தினர் ஆய்வுசெய்து, தகுதியிருப்பின் பண்ணைக்குச் சான்று வழங்குவது.

முகுந்தன் : பஞ்சகவ்வியம் என்கிறார்களே, அஃது என்ன ஐயா ?

வே.அலுவலர் : ஓ, அதுவா ? பசுவிடமிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்கள் அதாவது கோமயம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருள்களைக் கலந்து செய்வதே பஞ்சகவ்வியம். இதனைப் பயிரில் தெளிப்பதனால், புழு, பூச்சிகள் பயிர்களை நெருங்கா. இது தவிர வேப்பம் பிண்ணாக்கு, கடலைப் பிண்ணாக்கு, இலுப்பம் பிண்ணாக்கு முதலியவற்றையும் வயல்களுக்கு உரமாகப் பயன் படுத்துவர். பயிரிடும்முன் சணப்பை, அவுரி, கொளுஞ்சி, தக்கைப்பூண்டு முதலியவற்றை வளர்த்து, அவற்றை அப்படியே உழுது தழையுரமாகப் பயன்படுத்துவர். இதனால், மண்ணின் வளம்கெடாமல் பேணிப் பாதுகாக்கப்படுவதனோடு பயிர்களும் நன்கு வளரும்.

கயல்விழி : பயிரில் புல் பூண்டுகளும் வளர்ந்துவிடுமே!

வே.அலுவலர் : மனிதருள் தீயோர் இருப்பதனைப்போலப் பயிரிலும் வேண்டாத புல் பூண்டுகள் வளரத்தான் செய்யும். இவற்றை உழவர் களைந்துவிடுவர். அதற்குக் களையெடுத்தல் என்பது பெயர். இதனையே வான்புகழ் வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. – குறள், 1038

முகுந்தன் : காப்பு என்றால் என்ன, ஐயா ?

வே.அலுவலர் : காப்பு என்றால் காத்தல் என்பது பொருள். பயிர்களைப் பூச்சிகள் தாக்காத வகையிலும், ஆடுமாடுகள் மேயாத வகையிலும் தவிராமல் பாதுகாத்து வருதல் வேண்டும். 'கேட்காத கடனும் பார்க்காத பயிரும் பாழ்' என்பர் நம் முன்னோர்.

வேலன் : இயற்கை வேளாண்மையின் பயன் குறித்துச் சொல்லுங்களேன்!

பேராசிரியர் : எண்ணற்ற நன்மைகள் உண்டு. முக்கியமாக நிலம், நீர், காற்று, வான்வெளி இவை சிதைவடையாமல் பாதுகாக்கப்படுகின்றன. மக்களுக்கு உடல்நலத்திற்கேற்ற உணவு கிடைக்கிறது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பர். 'உணவே மருந்து; மருந்தே உணவு' என்னும் முதுமொழிக்கேற்ப, நம் முன்னோர்களின் உணவுமுறை இருந்து வந்தது. அதனை நாமும் கடைப்பிடிப்போம்.

மூவரும் : நன்றி, ஐயா.

## மாதிரி வினாக்கள்

அ. புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ. வேளாண் பல்கலைக்கழகம் உள்ள இடம் ________________ .

1. மதுரை 2. சென்னை 3. கோவை

ஆ. வேளாண்தொழிலில் உள்ள கூறுகள் ________________ .

1. இரண்டு 2. நான்கு 3. ஆறு

இ. வானம் பார்த்த பூமி என்பது

1. நன்செய் 2. புன்செய் 3. பொன்செய்

ஈ. கேட்காத கடனும் பார்க்காத பயிரும் ________________ .

1. பாழ் 2. பால் 3. பாள்

உ) பஞ்சகவ்வியம் என்பது ______________ பொருள்களால் ஆனது.

1. மூன்று  2. நான்கு  3. ஐந்து

2. பொருத்துக.

அ. நெல் – வண்டியோட

ஆ. கரும்பு – நண்டோட

இ. வாழை – தேரோட

ஈ. தென்னை – ஏரோட

## ஆ. குறுவினாக்கள்

1. உரங்களையும் பூச்சிக்கொல்லிகளையும் ஏன் பயன்படுத்துதல் கூடாது?
2. நிலத்தை எவ்வாறு உழுதல் வேண்டும்?
3. பயிர்களுக்கு இடைவெளி எவ்வளவு விடுதல் வேண்டும்?
4. தொழு உரம் என்றால் என்ன?
5. விதைப்பதற்குரிய காலம் சுட்டும் பழமொழிகளை எழுதுக.

## இ. சிறுவினாக்கள்

1. மண்ணை எவ்வாறு பண்படுத்துதல் வேண்டும்?
2. பஞ்சகவ்வியம் ஆக்குவது எப்படி?
3. பயிர்க்காப்புச் செய்வது எவ்வாறு?
4. அங்கக வேளாண்மை என்றால் என்ன?

## ஈ. நெடுவினாக்கள்

1. இயற்கை வேளாண்மையின் தேவையை விளக்குக.
2. உரம், பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் தீமைகளை விவரிக்க.
3. வேளாண்மையில் கருத்தில் கொள்ளவேண்டியவற்றை விளக்குக.

### படைப்பாற்றல் கல்வி

- இவ்வுரைநடைப்பகுதியில் இடம்பெற்றுள்ள கடினச்சொற்களாகக் கருதுவனவற்றை அடிக்கோடு இடுக.
- கடினச்சொற்களுக்கான பொருளைச் சிறு குழுவில் கலந்துரையாடுக.
- புரிந்துகொண்ட செய்திகளை மனவரைபடமாக வரைக.

# தூரத்து ஒளி

மாலைப்பொழுதில் வழக்கம்போல் ஆற்றங்கரை ஓரம் மன்னர் அக்பரும் பீர்பாலும் பேசிக்கொண்டே நடந்தனர். பனிக்காலம் அது. குளிர் கடுமையாக இருந்த நேரம். மன்னரின் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. "பீர்பால், இந்தப் பனியிலும் கடுங்குளிரிலும் ஓர் இரவு முழுவதும் இந்த ஆற்றுநீரில் யாராலாவது நிற்க இயலுமா ?

பீர்பால் குளிரில் நடுங்கியபடி, "என்னால் இயலாது மன்னா! ஆளை விடுங்கள்" என்றார். "உங்களால் இயலாது என்பது எனக்குத் தெரியும். இரவு முழுவதும் ஆற்றுநீரில் யார் நிற்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று நாளை காலை முரசு அறைந்து மக்களுக்குத் தெரிவியுங்கள்" என்றார் மன்னர். "என்ன மன்னா, இதனைப் போய்" எனப் பீர்பால் இழுத்தார்.

"முதலில் நான் சொன்னபடி செய்யுங்கள், பிறகு பார்க்கலாம்" என்றபடி பீர்பாலிடம் கூறிவிட்டுப் புறப்பட்டார், மன்னர். மறுநாள் காலை, மன்னரின் அறிவிப்பு தெருவெங்கும் முரசு அறிவித்துக் கூறப்பட்டது. மிகவும் வறுமையில் வாடும் ஏழை ஒருவன், மன்னரின் பரிசைப் பெற்றாவது குடும்பத்தை வாழ வைக்கவேண்டும் என எண்ணினான். எனவே, என்னவானாலும் சரி, போட்டியில் கலந்துகொள்ளலாம் என முடிவெடுத்து, மன்னரின் முன்போய் நின்றான். மன்னரும் அவனை அன்றைய இரவுப்பொழுது முழுவதும் ஆற்றுநீரில் நின்று வருமாறு கூறி அனுப்பி வைத்தார். அவனைக் கண்காணிக்க இரு காவலரையும் உடன் அனுப்பி வைத்தார். ஏழை மனிதனும் இரவுப்பொழுது முழுவதும் ஆற்றுக்குள் நின்றான். காவலர்கள், அவனை இரவு முழுவதும் கண்காணித்துக் கொண்டே இருந்தார்கள். காலையில், அவனை அழைத்து வந்து மன்னரிடம் நிறுத்தினார்கள். அவர்களிடம், "என்ன, இரவு முழுவதும் ஆற்றுநீரில் இவன் நின்றிருந்தானா ?" எனக் கேட்டார் மன்னர். "ஆமாம் மன்னா" எனக் காவலர்கள் கூறினார்கள். சரியென ஏற்றுக்கொண்ட மன்னர், 'உன்னைப் பாராட்டுகிறேன்' என்றார். சரி, இந்தக் குளிரை எப்படித் தாங்கிக்கொண்டு நின்றாய் ?" என வியப்புடன் கேட்டார்.

ஏழை, "மன்னா, அஃது ஒன்றும் பெரிய செயலில்லை. இரவு முழுவதும் அரண்மனையில் தெரிந்த வெளிச்சத்தைப் பார்த்துக்கொண்டே நின்று கொண்டிருந்தேன்" என்றான். "ஆகா, அப்படியென்றால் உனக்குப் பரிசுப்பொருள் இல்லை; நீ செல்லலாம்" என்றார் மன்னர். மன்னர் இப்படிக் கூறவும் ஏழை அதிர்ச்சியுற்றான். "மன்னா, தாங்கள் இப்படிக் கூறலாமா ?" எனக் கண்கள் கலங்கக் கேட்டான். "நீ, இரவு முழுவதும் அரண்மனை விளக்கைப் பார்த்ததனால், அதன் சூட்டில் குளிர்காய்ந்து இருக்கிறாய். அதனால்தான், உனக்குப் பரிசு இல்லை என்றேன். நீ போகலாம்"

தமிழ்

என்றதும் மன்னரை எதிர்த்துப் பேச இயலாமல், வருந்தியபடியே அவன் சென்றான். காவலர்கள் அவனுக்காக மனம் இரங்கினர்; எப்படியும் அந்த ஏழைக்குப் பரிசுப்பொருள் கிடைக்கவேண்டும் என்னும் நல்லெண்ணம் கொண்டனர். அதற்காகச் சிறிதும் காலந்தாழ்த்தாமல், நடந்த அனைத்தையும் ஒன்றுவிடாமல் பீர்பாலிடம் கூறினார்கள். இனித் தாம் பார்த்துக்கொள்வதாகப் பீர்பால் அவர்களிடம் வாக்களித்தார். அன்று காலையிலேயே மன்னர், தம் காவலர்களுடன் வேட்டைக்குக் கிளம்ப ஏற்பாடு செய்தார்; வழக்கம்போல் பீர்பாலையும் அழைத்துவரக் காவலரை அனுப்பினார். பீர்பாலை அழைத்துவரச் சென்ற காவலர் திரும்பினர். "மன்னா, விரைவில் பீர்பால் தங்களுடன் வந்து சேர்ந்துகொள்வதாகக் கூறி, என்னை அனுப்பி வைத்தார்" என்றான்.

"சரி, வரட்டும். நாம் செல்வோம்" என்ற மன்னர், தம் பரிவாரங்களுடன் காட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார். காட்டுப்பகுதியில் அக்பர் சென்று கொண்டிருந்தார். வழியில் பீர்பாலைப் பார்த்ததும் சிரித்துவிட்டார். ஏனென்றால், பீர்பாலின் செயல் மாறுபட்டிருந்ததே அதற்குக் காரணம். அங்கே அவர் சமையல் செய்துகொண்டிருந்தார்.

அடுப்பில் வைக்கவேண்டிய சோற்றுப்பானையை ஐந்தடி உயரத்தில் கட்டித் தொங்கவிட்டிருந்தார்; அதன்கீழே அடுப்பில் சின்னஞ்சிறு குச்சிகள் மெதுவாய் எரிந்து கொண்டிருந்தன. அக்பர், "என்ன பீர்பால், இங்கு உட்கார்ந்துகொண்டு என்ன செய்து கொண்டிருக்கிறீர்" என்றார். மன்னரைப் பார்த்ததும் பீர்பால், "வாருங்கள் மன்னா, வணக்கம்! நான், இங்குச் சமையல் செய்துகொண்டிருக்கிறேன்" என்றதும் மன்னரும், மற்றவர்களும் சிரித்தார்கள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"பீர்பால், அடுப்பு எங்கே இருக்கிறது? சோற்றுப்பானை எங்கே இருக்கிறது? எப்படி அடுப்பில் இருந்து சூடு ஏறிச் சோறு வேகும்?" என்று நையாண்டி செய்தார் மன்னர். "உறுதியாகச் சூடு ஏற்றிச் சோறு ஆக்கலாம், மன்னா! எங்கோ இருக்கும் அரண்மனையின் விளக்கொளியைப் பார்த்து, ஒருவருக்குச் சூடு கிடைக்கும்பொழுது, இது மட்டும் ஏன் முடியாது?" என்றவுடன், அக்பர் தம் தவற்றை உணர்ந்தார். அந்த ஏழையை உடனே வரவழைத்து, அவனுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார், அக்பர். தாம் செய்த தவற்றை உணர்த்திய பீர்பாலுக்கு நன்றிகூறிப் பரிசு கொடுத்தார். பீர்பாலும் ஏழைக்குப் பரிசு கிடைத்ததில் மனநிறைவடைந்தார்.

நன்றி : க.கௌ. முத்தழகர், அக்பர் பீர்பால் நகைச்சுவைக் கதைகள்

## மாதிரி வினா

கட்டுரை வினா

அக்பரின் தவற்றைப் பீர்பால் எவ்வாறு உணர்த்தினார்?

# வேற்றுமை, அடைமொழி

## வேற்றுமை

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், உட்காருங்கள். இன்று காலைவழிபாட்டுக் கூட்டத்தில் பரிசுபெற்றவர் யார்?

மாணவர் : கண்ணன் பரிசு பெற்றான், ஐயா.

ஆசிரியர் : தலைமையாசிரியர், யாரைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்?

மாணவர் : தலைமையாசிரியர், கண்ணனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார், ஐயா.

ஆசிரியர் : 1. கண்ணன் பரிசு பெற்றான்.

2. தலைமையாசிரியர், கண்ணனைப் பாராட்டிப் பரிசு வழங்கினார்.

(இத்தொடர்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுதல்.)

முதல் தொடரில் கண்ணன் என்னும் பெயர்ச்சொல் அமைந்துள்ளது. இரண்டாம் தொடரில் அதே பெயர்ச்சொல் கண்ணனை மற்றவர் பாராட்டியதனைக் குறிக்கிறது. இத்தொடரில், கண்ணன் என்னும் பெயர்ச்சொல்லின் பொருள் வேறுபடுகிறது. இவ்வேறுபாட்டுக்குக் காரணம், கண்ணன் என்னும் பெயரோடு சேர்ந்துள்ள 'ஐ' என்னும் உருபு. இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது, வேற்றுமை எனப்படும். பெயர்ச்சொல்லின் இறுதியில் அமைந்து பொருள் வேறுபாட்டைச் செய்யும் உருபுகளை வேற்றுமை உருபுகள் என்பர்.

மணி : சற்று விளக்கமாகச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : இராமன் கண்டான் – இதே தொடர், இராமனைக் கண்டான் என வரும்பொழுது, இரண்டிற்குமுள்ள வேறுபாடு புரிகிறதா?

மணிமொழி: நன்றாகப் புரிகிறது, ஐயா. முதல் தொடரானது இராமன் வேறொருவனைப் பார்த்தான் எனவும், இரண்டாம் தொடரானது வேறொருவன் இராமனைப் பார்த்தான் எனவும் பொருள் வேறுபடுகிறது, ஐயா.

ஆசிரியர் : இச்சிறுமாற்றத்திற்குக் காரணம் என்ன? நன்றாகச் சிந்தித்துக் கூறுங்கள்.

கபிலன் : 'ஐ' என்னும் எழுத்து, ஐயா.

ஆசிரியர் : மிக்க மகிழ்ச்சி. இவ்வாறு பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபு வேற்றுமை உருபு எனப்படும். இவ்வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எண்வகைப்படும்.

பாரி : ஐயா, முதல் வேற்றுமை என்றால் என்ன ?

ஆசிரியர் : இயல்பான பெயர், (எழுவாய்) பயனிலையைக் கொண்டு முடிவது முதல் வேற்றுமை எனவும், எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கப்படும். (இது வினையையும் பெயரையும் வினாவையும் பயனிலையாகக் கொண்டு முடியும்.)

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | கண்ணன் வந்தான் | – | வினைப் பயனிலை |
| | அவன் கண்ணன் | – | பெயர்ப் பயனிலை |
| | அவன் யார் ? | – | வினாப் பயனிலை |

எழுவாய் வேற்றுமைக்கு எனத் தனி உருபு இல்லை.

பொன்மணி: ஐயா, இரண்டாம் வேற்றுமைக்கு உருபு உண்டா ?

ஆசிரியர் : உண்டு. இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' என்பதாகும். வளவன் செய்யுளைப் படித்தான். இத்தொடரில் உள்ள செய்யுள் என்னும் பெயர்ச்சொல் 'ஐ' என்னும் உருபையேற்றுச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுகிறது. இவ்வாறு பெயர்ச்சொல்லினது பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை ஆகும்.

அதியன் : ஐயா, மூன்றாம் வேற்றுமைக்கும் உருபு உண்டா ?

ஆசிரியர் : மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் ஆகியன.

| | | | |
|---|---|---|---|
| (எ.கா.) | நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது. | – | ஆல் |
| | தூங்குகையான் ஓங்குநடை. | – | ஆன் |
| | தாயொடு மகள் வந்தாள். | – | ஒடு |
| | தந்தையோடு தாய் வந்தாள். | – | ஓடு |
| | தந்தையுடன் தம்பியும் வந்தான். | – | உடன் |

வைரமணி : ஐயா, நான்காம் வேற்றுமை உருபு என்ன ?

ஆசிரியர் : நான்காம் வேற்றுமை உருபு 'கு'. தலைவர் நந்தினிக்குப் பரிசு வழங்கினார். நந்தினி என்னும் சொல் 'கு' என்னும் உருபை ஏற்றுப் பொருள் வேறுபடுத்திக் காட்டுகிறது அல்லவா ?

காந்தாரி : ஐந்தாம் வேற்றுமை உருபுபற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : சொல்கிறேன். ஐந்தாம் வேற்றுமை உருபுகள் இல், இன் என்பன.

(எ.கா.) கொடையில் சிறந்தவர் பாரி. இந்தியாவின் தெற்கு எல்லை குமரி. இத்தொடர்களில் கொடை, இந்தியா என்னும் சொற்களுடன் இல், இன் என்னும் உருபுகள் சேர்ந்து பொருளை வேறுபடுத்துகின்றன.

மாரி : ஆறாம் வேற்றுமைக்கு உருபு உண்டா, ஐயா ?

ஆசிரியர் : ஆறாம் வேற்றுமை உருபு 'அது' என்பது. (எ.கா.) இராமனது வீடு. எனது புத்தகம். இத்தொடர்களில் இராமன், என் ஆகிய பெயர்ச்சொற்களுடன் 'அது' என்னும் வேற்றுமை உருபு சேர்ந்து பொருளை வேறுபடுத்துகிறது.

இளம்பிறை : ஏழாம் வேற்றுமை உருபையும் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஏழாம் வேற்றுமைக்குக் கண், உள், மேல், கீழ் என்பன உருபுகளாம்.

(எ.கா.) வீட்டின்கண் குழந்தை விளையாடுகிறது.

பெட்டிக்குள் பணம் இருக்கிறது.

கூரையின்மேல் சேவல் உள்ளது.

கட்டிலின்கீழ் நாய் படுத்துள்ளது.

இத்தொடர்களில் வீடு, பெட்டி, கூரை, கட்டில் ஆகிய சொற்களுடன் கண், உள், மேல், கீழ் ஆகிய உருபுகள் சேர்ந்து இடப்பொருளை உணர்த்துகின்றன.

எழிலரசு : ஐயா, எட்டாம் வேற்றுமைக்கு உருபு உண்டா ?

ஆசிரியர் : எட்டாம் வேற்றுமை உண்டு; ஆனால், அதற்கு உருபு இல்லை. இதனை 'விளி வேற்றுமை' என அழைப்பர்.

(எ.கா.) கந்தா வா !

இத்தொடரில் கந்தன் என்னும் சொல்லில் இறுதி (ன்) எழுத்தானது கெட்டு, அதன் அயல் எழுத்து (த – தா என) நீண்டு அழைத்தற் பொருளைத் தருகிறது. இவ்வாறு பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தற் பொருளில் வருவதனை 'விளி வேற்றுமை' என்பர்.

பயிற்சி : கோடிட்ட இடத்தில் பொருத்தமான உருபேற்ற சொல்லைத் தேர்ந்தெழுதுக.

1. அமுதா ______________ எழுதினாள்.

அ. பாடத்தை ஆ. பாடத்துக்கு இ. பாடத்தின்

2. முருகன் ______________ உயர்ந்தான்.

அ. உழைப்பை ஆ. உழைப்பால் இ. உழைப்புக்கு

3. பண்டைய மன்னர்கள் தமிழ் ______________ பாடுபட்டனர்.

அ. வளர்ச்சிக்கு ஆ. வளர்ச்சியை இ. வளர்ச்சியின்கண்

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லுடன் பொருத்தமான வேற்றுமை உருபை இணைத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கலைச்செல்வன் __________ முரித்தான். (கிளை)
2. பாடம் __________ படிக்கப்பட்டது. (இராமன்)
3. பாடல் எழுதிய __________ பரிசு கிடைத்தது. (புலவர்)
4. இது __________ சட்டை. (கபிலன்)
5. __________ இலக்குமி பாடுகிறாள். (மேடை)

### ஆ. குறுவினாக்கள்

1. வேற்றுமை என்பது யாது ?
2. வேற்றுமை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை ?
4. உருபின்றி வரும் வேற்றுமைகள் யாவை ? விளக்குக.

### இ. மனவரைபடம் வரைக

வேற்றுமை உருபுகளின் வகைகளை நீ புரிந்துகொண்டவாறு மனவரைபடம் வரைக.

## அடைமொழி

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம். அனைவரும் நலம்தானே! சென்ற வகுப்பில் படித்த பாடங்கள் எளிதாகப் புரிந்திருக்கும் என நினைக்கிறேன். யாருக்காவது ஐயம் உள்ளதா ?

மாணவர் : நன்றாக விளங்கிற்று, ஐயா.

ஆசிரியர் : மகிழ்ச்சி, பாண்டியா! இன்று என்ன கிழமை ?

பாண்டியன் : திங்கட்கிழமை, ஐயா.

ஆசிரியர் : திங்கள் என்றால் என்ன பொருள் ?

பாண்டியன் : நிலவு, மாதம் ஐயா.

ஆசிரியர் : நிலவை வெண்ணிலவு எனவும் அழைப்பார்கள் அல்லவா ?

பொன்னி : ஆமாம், ஐயா.

ஆசிரியர் : இதில் வரும் வெண்மை என்னும் சொல் நிலவுக்கு அடைமொழியாக வந்துள்ளது.

பொன்னி : அடைமொழி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : பல வகைப்பட்டதாக இருக்கும் ஒரு பொருளைப் பொதுவாகச் சுட்டும்பொழுது, அதன் வகை குறித்து ஐயம் ஏற்படலாம். எனவே அவற்றை, இனம் பிரித்துக்காட்டுவதற்குத் தனிச்சொல்லைப் பயன்படுத்துவர். அத்தனிச்சொல் அடைமொழி எனப்படும். சான்றாகப் பாடநூல் எனச் சொல்லும்பொழுது, அதன்வகை குறித்து ஐயம் தோன்றும். அதனைப் போக்க தமிழ்ப் பாடநூல், ஆங்கிலப் பாடநூல், கணக்குப் பாடநூல் என அடை கொடுத்துக் கூறுதல் வேண்டும். இவ்வாறு பொருள்களை இனம்பிரித்தறிய உதவும் அடைமொழிகள் இனமுள்ள அடைமொழி எனப்படும்.

இளவழகி : ஐயா, இனமுள்ள அடைமொழி உண்டென்றால், இனமில்லா அடைமொழி யென ஒன்று இருக்கிறதா ?

ஆசிரியர் : இருக்கிறது. வெண்ணிலவு, கருங்காக்கை, செங்கதிரோன் இவற்றுக்கெல்லாம் இனமாகக் கூற வேண்டுமானால், கருநிலவு, வெண்காக்கை, கருங்கதிரோன் எனக் கூறுதல் வேண்டும். அவ்வாறு ஒன்று இல்லாததனால் இவை போன்றவற்றை இனமில்லா அடைமொழிகள் எனக் கூறுவர்.

அறிவுமதி : இனமில்லா அடைமொழிகள்பற்றி நன்கு அறிந்துகொண்டோம், ஐயா.

ஆசிரியர் : அடைமொழிகளின் வகைகளைப்பற்றி நீங்கள் மேல் வகுப்பில் இன்னும் விரிவாகப் படிப்பீர்கள்.

மாணவர் : நன்றி, ஐயா.

## மாதிரி வினாக்கள்

### அ. குறுவினாக்கள்

1. அடைமொழி என்றால் என்ன ?
2. இனமுள்ள அடைமொழிக்குச் சான்றுகள் தருக.
3. இனமில்லா அடைமொழிக்குச் சான்றுகள் தருக.

### பயிற்சி

கீழுள்ள தொடர்களை இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழியெனப் பகுத்துக் காட்டுக.

1. செந்தாமரை
2. பாற்குடம்
3. உப்பளம்
4. பூமரம்
5. ஊர்மன்றம்
6. தோய்தயிர்
7. செஞ்ஞாயிறு
8. வெள்ளைப்பூனை
9. செந்தமிழ்

# மூவகைப் போலிகள்

மாணவர் : வணக்கம், அம்மா.

ஆசிரியர் : நம் பள்ளி அறிவிப்புப் பலகையில் இன்று, திருக்குறள் ஒன்று எழுதப் பட்டுள்ளது. அக்குறளை யார் யாரெல்லாம் படித்தீர்கள்? மாதரசி! அக்குறளைச் சொல்.

மாதரசி : அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.

இக்குறளில் 'அகம்' என்பதற்குப் பதில், 'அகன்' எனவும், 'முகம்' என்பதற்குப் பதில் 'முகன்' எனவும் எழுதப்பட்டுள்ளதே, இது பிழையல்லவா? அம்மா.

ஆசிரியர் : அருமையாகக் கேட்டாய். 'அகம், முகம்' என்பதற்குப் பதிலாக 'அகன், முகன்' என எழுதினாலும் பொருள் மாறுபடாது. இவ்வாறு ஒரு சொல்லின் எழுத்து வேறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பதனைப் 'போலி' என்பர்.

நன்னன் : ஒரு சொல்லில் இறுதி எழுத்து மட்டும் மாறுபட்டு வருவதுதான் போலியா?

ஆசிரியர் : அப்படியன்று. ஒரு சொல்லில், முதலிலுள்ள எழுத்தோ இடையில் உள்ள எழுத்தோ, இறுதியிலுள்ள எழுத்தோ மாறுபட்டாலும் பொருள் மாறுபடாது இருப்பின், அது போலி எனப்படும். இப்போலி, 1. முதற்போலி, 2. இடைப்போலி, 3. இறுதிப்போலி என மூவகைப்படும். இறுதிப் போலியைக் கடைப்போலி எனவும் கூறுவர்.

கயல்விழி : ஒவ்வொன்றனைப் பற்றியும் எடுத்துக்காட்டுகளோடு கூறுங்கள், அம்மா.

ஆசிரியர் : ஒரு சொல்லின் முதலெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது வருவது முதற்போலியாகும். (எ.கா.) மஞ்சு – மைஞ்சு; மயல் – மையல்.

ஒருசொல்லின் இடையெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது, இடைப்போலி எனப்படும். (எ.கா.) முரசு – முரைசு; இலஞ்சி – இலைஞ்சி.

ஒருசொல்லில் ஈற்றெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது இருப்பது, இறுதிப்போலி (கடைப்போலி) என்பர். (எ.கா.) அறம் – அறன்; பந்தல் – பந்தர்.

மாறன் : வேறு ஏதாகிலும் போலி உண்டா, அம்மா?

ஆசிரியர் : உண்டு. அஞ்சு ரூபாய் கொடு என்னும் தொடரில், 'அஞ்சு ரூபாய்' என்பது எதனைக் குறிக்கிறது?

மாறன் : ஐந்து ரூபாய் என்பதனைக் குறிக்கிறது, அம்மா.

ஆசிரியர் : இவ்வாறு அஞ்சு என்னும் சொல்லில் உள்ள அனைத்து எழுத்துகளும் மாறியுள்ளன. இருப்பினும், பொருள் மாறவில்லை. எனவே, இது முற்றுப்போலி எனப்படும்.

மாணவர் : நன்றி, அம்மா. போலிகள்பற்றித் தெளிவாக அறிந்துகொண்டோம்.

பயிற்சி : கீழுள்ள தொடர்களில் காணப்படும் போலிகளை வட்டமிடுக.

1. அஞ்சு பழங்கள் வாங்கி வா.
2. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை
3. மல்லிகைப் பந்தரின் கீழே தங்கினான்.

## மாதிரி வினாக்கள்

அ. புறவய வினா

கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான போலிகளை எழுதுக.

1. கலம் – 2. இலஞ்சி – 3. குடல் –

ஆ. குறுவினாக்கள்

1. போலி என்றால் என்ன ?
2. போலி எத்தனை வகைப்படும் ?
3. இறுதிப்போலியை விளக்குக.
4. நலன், ஆனை, அரையர் – இவை எவ்வகைப் போலிகளுக்கு எடுத்துக்காட்டுகள் ?

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் – என்னும் தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) எழுதுதல் திறன்

பூனையும் எலியும் சந்தித்துக்கொண்டால் என்ன பேசிக்கொள்ளும் ?

ஒரு பக்கத்திற்கு உரையாடல் வடிவில் எழுதுக.

செயல்திட்டம்

ஐந்து மூலிகைத் தாவரங்களின் படங்களை ஒட்டி, அவற்றின் பயன்களை எழுதிக் கொணர்க.

## மொழித்திறன் பயிற்சி

### அ) பிறமொழிச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை அறிவோம்

| பிறமொழிச் சொல் | – | தமிழ்ச் சொல் | பிறமொழிச் சொல் | – | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|---|---|
| அனுமதி | – | இசைவு | உபயம் | – | திருப்பணியாளர் கொடை |
| ஆதவன் | – | ஞாயிறு | உஷார் | – | விழிப்பு |
| ஆரம்பம் | – | தொடக்கம் | எதார்த்தம் | – | இயல்பு |
| ஆஸ்தி | – | சொத்து | ஐதிகம் | – | உலக வழக்கு |
| இம்சை | – | துன்பம் | காகிதம் | – | தாள் |
| இருதயம் | – | நெஞ்சகம் | கிரீடம் | – | மணிமுடி |
| ஈசன் | – | இறைவன் | குபேரன் | – | பெருஞ்செல்வன் |
| உபசரித்தல் | – | விருந்தோம்பல் | | | |

பயிற்சி : பிறமொழிச் சொற்களை நீக்கி அவற்றுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. இந்த வேலையில் சேர என்ன அந்தஸ்து உள்ளது ?
2. கொடுங்கோல் அரசன் அக்ரமம் செய்தான்.
3. ஆகாசத்தில் பட்சி பறந்தது.
4. புஷ்பமின்றி, அபிஷேகம் உண்டா ?
5. குழந்தைக்குக் கண்திருஷ்டி சுற்றிப்போடு.

### ஆ) தமிழெண்களின் கூடுதல் காண்க.

1. க + க = ________  2. ச + ரு = ________

3. உ + ௱ = ________  4. கூ + க = ________

### இ) கட்டுரை எழுதுதல்

பெண் கல்வி

### ஈ) அகரவரிசையில் அமைக்க.

தை, தீ, தென்னை, தாமரை, தூண், தேன், தட்டு, திண்ணை, துணி, தொட்டி, தோட்டம், தயிர், திரள், தூள், திண்ணன், தோணி, தொடு, தீனி.

## பண்பு

### மறுத்தல்

கண்ணன் ஏழாம் வகுப்பில் படிக்கிறான். கண்ணனின் தாயார் மலர்க்கொடி, அவனை வெளியில் எங்காவது அழைத்துச்செல்ல வேண்டுமென்றால் மிகவும் தயங்குவார். காரணம், கண்ணனின் செயல்தான். யார், எதனைக் கொடுத்தாலும் உடனே கைநீட்டி வாங்கிவிடுவான். ‘வேண்டா’ என்று அவனுக்குச் சொல்லவே தெரியாது. மலர்க்கொடி எத்தனையோ முறை அவனிடம் எடுத்துக் கூறிவிட்டாள்; ஆனால், அவளால் திருத்த இயலவில்லை.

கூடிப்பேசுவோம்

1. கண்ணனைப் போன்று உனக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் உள்ளனரா ?
2. கண்ணனின் செயல் முறையானதா ?
3. கண்ணனின் பழக்கத்தை மாற்றுவதற்கு ஏதேனும் வழி இருந்தால் குறிப்பிடுங்கள்.
4. தொடர்வண்டியில் செல்லும்போது யாராவது, எதனையாவது கொடுத்தால், நீங்கள் வாங்கிக் கொள்வீர்களா ?

## வாழ்க்கைத்திறன்

### ஒருவரோடு ஒருவர் பழகும் திறன்

ஒருவருக்கொருவர் நட்புடன் பழகவும், தொடர்ந்து மகிழ்ச்சியான நட்புறவை வளர்த்துக் கொள்ளவும் இத்திறன் தேவை.

மைவிழியும் மான்விழியும் இணைபிரியாத தோழிகள். ஆனால், சில நாளாக மைவிழியின் போக்கு மான்விழிக்குப் பிடிக்கவில்லை.

எப்போதும் பிறரிடம் குறை காண்பதே அவளுக்குப் பொழுதுபோக்காக இருந்தது. இதனால் மற்ற நண்பர்கள், இவர்களோடு சேராமல் ஒதுங்கி இருந்தார்கள்.

மான்விழி எடுக்கும் முடிவு என்னவாக இருக்கும் ?

மைவிழியின் நட்பை மான்விழி தொடர்வாளா, விலகிச் செல்வாளா ?

மான்விழி நிலையில் நீயிருந்தால் என்ன முடிவெடுப்பாய் ?

## மதிப்புக்கல்வி

### உதவும் மனப்பான்மை

சென்னையில் ஒரு குழுவினர் பள்ளி ஒன்றனை நடத்தி வந்தனர். அப்பள்ளியின் ஆசிரியரான வேழூர் நரசிம்மர் என்பவர், ஏழை மாணவர்க்கு நண்பகல் இலவய உணவு வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கினார்.

அதற்காகப் பொருளுதவிபெற அவர் அணுகியவர்களுள் மருத்துவ மாமேதை குருசாமியும் ஒருவர். அத்திட்டத்தின் சிறப்பை உணர்ந்த குருசாமி, மறுநாள் அவரைச் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வருமாறு கேட்டுக்கொண்டார்.

எழும்பூர்க் கென்னத்துச் சாலையில் தமக்கு உரிமையாக இருந்த மாளிகை ஒன்றனைப் பள்ளிக்கு ஆவணம் எழுதிப் பதிவு செய்துகொடுத்தார். அன்னாரின் உதவும் மனப்பான்மை அளவிடற்கரியது.

உதவிக்கு எல்லையில்லை. ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப உதவிகள் வேறுபடும். எனவே, தேவைப்படுவோருக்கு உதவுவதே உதவியாகும். அதுவே, மனிதனுக்குரிய சிறப்புப் பண்பு.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. – குறள், 226

## வளரறி செயல்பாடுகள்

| பேசுதல் திறன் | செயல்பாடு –1 |
|---|---|

படங்களில் உள்ள நிகழ்வுகளை முறைப்படுத்தி மூன்று மணித்துளி பேசுக.



| குழுக்கலந்துரையாடல் | செயல்பாடு – 2 |
|---|---|

சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத போகியை எவ்வாறு கொண்டாடலாம் என்பதனைக் கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் குழுவில் கலந்துரையாடுக.



1. உன் வீட்டில் போகி நாளில் எரிக்கப்படும் பொருள்கள்
2. நெகிழிப் பொருள்களை எரிப்பதனால் ஏற்படும் தீமைகள்
3. எந்தெந்தப் பொருள்களை எரிப்பதனால் கேடு விளையாது ?

| சிக்கலுக்குத் தீர்வு காணல் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழுள்ள படங்கள் உணர்த்தும் சிக்கல்களையும் அவற்றிற்கான தீர்வுகளையும் குழுவில் கலந்துரையாடுக.



| படித்தல் திறன் | செயல்பாடு – 4 |
|---|---|

கீழுள்ள உரைப்பத்தியை நிறுத்தக் குறிகளுக்கு ஏற்பப் படிக்கவும்.

பொங்கல்விழா நடைபெறும் காலம் இனிய காலம்; கால் உலாவும் வானமும், நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம்; இயற்கையன்னை பசுமையான புடைவை உடுத்துப் பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும் கனியும் கரும்பும் அணிந்து இன்பக்காட்சி தருங்காலம்.

பொங்கலுக்குத் தலைநாள் போகி. போகியை அடுத்து வருவது பொங்கல் புதுநாள்; அந்நாளில், ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ நிகழும்; வீட்டிலுள்ள பழம்பானைகள் விடைபெறும்; புதுப் பானைகளில் பொங்கல் நடைபெறும். பால் பொங்கும் பொழுது, “பொங்கலோ பொங்கல்” என்னும் மங்கல ஒலி எங்கும் கிளம்பும். அப்பொழுது, பெண்கள் குரவை ஆடுவர்; பிறகு, “பூவும் புகையும் பொங்கலும்” கொண்டு இல்லுறை தெய்வத்தை வணங்குவர். அனைவரும் வயிறார உண்டு மகிழ்வர்.

– ரா. பி. சேதுப்பிள்ளை, தமிழின்பம்

| அறிந்த சொற்களை எழுதுதல் | செயல்பாடு – 5 |
|---|---|

கட்டங்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி ‘லை’ என்னும் எழுத்தில் முடியும் சொற்களை உருவாக்குக.

| | | |
|---|---|---|
| கா | மா | வே |
| இ | லை | ஆ |
| சோ | பா | ஒ |

1. ________
2. ________
3. ________
4. ________
5. ________
6. ________
7. ________
8. ________

| தொடர் உருவாக்குதல் | செயல்பாடு – 6 |
|---|---|

உரிய சொற்களை நிரப்பித் தொடரை நிறைவு செய்க.

( மன்னர், மோதிரம், நீடுழி, வறுமைத்துன்பம், கலப்பை )

1. ____________ பிடிக்கும் கை.
2. ____________ நோக்கும் கை.
3. ____________ தரித்தே அருளும் கை.
4. ____________ நீக்கும் கை.
5. ____________ காக்கும் கை.

| பழமொழி உருவாக்குதல் | செயல்பாடு – 7 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திப் பழமொழிகளை உருவாக்குக.

( தை, அகல, பருவத்தே, ஆடிப்பட்டம், விதை, செய், பயிர், தேடி, ஆழ உழுதல், உழுவதனைவிட, வழி, நன்று, நோயற்ற, செல்வம், பிறந்தால், வாழ்வே, குறைவற்ற, பிறக்கும். )

1. தை பிறந்தால் வழி பிறக்கும்.
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________

| பொருத்துக | செயல்பாடு – 8 |
|---|---|

யார், யாரிடம் கூறியது ?

| வ. எண் | கூற்று | கூறியவர், கேட்டவர் | |
|---|---|---|---|
| 1. | “ என்னால் இயலாது மன்னா ! ஆளை விடுங்கள்” | அ. | ஏழை, அக்பர் |
| 2. | “ இரவு முழுவதும் இவன் ஆற்றுநீரில் நின்றிருந்தானா ?” | ஆ. | பீர்பால், அக்பர் |
| 3. | “ மன்னா தாங்கள் இப்படிக் கூறலாமா ?” | இ. | அக்பர், காவலர் |
| 4. | “ அடுப்பு எங்கே இருக்கிறது ? சோற்றுப்பானை எங்கே இருக்கிறது ? எப்படி அடுப்பில் சூடு ஏறிச் சோறு வேகும் ?” | ஈ. | அக்பர், ஏழை |
| 5. | “ அப்படியென்றால் உனக்குப் பரிசுப்பொருள் இல்லை; நீ செல்லலாம்”. | உ. | அக்பர், பீர்பால் |

| பத்தி உருவாக்குதல் | செயல்பாடு – 9 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வினைப் பயனிலைத் தொடர்களை உருவாக்கிப் பத்தியை நிறைவு செய்க.

(வளர்க்கின்றது, பாய்கின்றது, பொழிகின்றது, விழுகின்றது, நிறைகின்றது)

மலையிலே மழை ____________________; அருவியாய் ____________________; ஆறாகப் ____________________ ; ஆற்றுநீர் வாய்க்கால்களிலும் ஏரிகளிலும் ____________________ ; பயிர்பச்சைகளையும் செடிகொடிகளையும் ____________________ .

| உருபுகளைப் பயன்படுத்துதல் | செயல்பாடு – 10 |
|---|---|

வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக.

1. முகிலன் படம் ________ பார்த்தான். ( ஐ ) = முகிலன் படத்தைப் பார்த்தான்.
2. படம் முகிலன்________ வரையப்பட்டது. ( ஆல் ) = ________
3. முகிலன் கல்வி ________ சிறந்தவன். ( இல் ) = ________
4. முகிலன்________ படம் சிறப்பானது. ( அது ) = ________

| கண்டறிதல் | செயல்பாடு – 11 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்துத் தடித்த சொற்களிலுள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுதுக.

## புனல் விழா

காவிரி **ஆற்றின்** இரு கரைகளிலும் வாழ்ந்த சோழநாட்டு மக்கள், அவ்வாற்றில் புதுவெள்ளம் வரும்பொழுது புனல்விழாக் கொண்டாடி மகிழ்வர். விழா நடைபெறும் அன்று ஆற்றலும் ஆண்மையும் மிக்க இளைஞர் பலர் அவ்வாற்று நீரில் குதித்து எதிர்த்து நீந்தி ஆண்மைதோன்ற ஆடி மகிழ்வர். அவர்கள் அவ்வாறு ஆடி **மகிழ்வதை** அந்நாட்டு அரசன் முதல் அவ்வூர் மக்கள் வரை அனைவரும், ஆற்றின் **கரைக்கண்** அமைந்த அரண்மிக்க அழகிய இடங்களில் இருந்து கண்டு மகிழ்வர்.

இவ்வாறு புனல்விழா நடைபெறும் இடங்களில் ஒன்று **காவிரிப்பூம்பட்டினத்திற்கு அண்மையில்** உள்ள கழார்ப் பெருந்துறை. இத்துறையில் பாயும் காவிரி ஆறு **ஆற்றலோடு** கரைகளை மோதி அழிக்கும். ஆற்றுப்புனல் மோதி மோதிக் கரைகளை அழிப்பினும், அழிவுறாமல் வானுற வளர்ந்த மருத மரங்கள் **நிறைந்தது** அத்துறை. இத்துறைக்குச் சேரநாட்டுத் தலைவன் ஆட்டனத்தி புனல் ஆடி புகழ் சேர்த்தான்.

– புலவர் கா. கோவிந்தன், சங்கத்தமிழ்ப் புலவர்வரிசை

| அடைமொழி உருவாக்குதல் | செயல்பாடு – 12 |
|---|---|

கட்டத்தில் உள்ள சொற்களை உரிய முறையில் சேர்த்து அடைமொழிகளை உருவாக்குக.

| | | | |
|---|---|---|---|
| 1. | பூ | விழா | பூமாலை |
| 2. | கரு | சோறு | |
| 3. | புளி | சுடர் | |
| 4. | திரு | மாலை | |
| 5. | இரு | மலை | |
| 6. | மா | வண்டு | |

| சொல்வதனை எழுதுதல் | செயல்பாடு – 13 |
|---|---|

நீர்வளமிக்கது நன்செய் நிலம். இந்நிலத்தில் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்கள் விளையும். நீர்வளம் குறைந்த பகுதி புன்செய். இதனை வானம் பார்த்த பூமி என நம் வேளாண் மக்கள் கூறுவர். இந்நிலத்தில் விளையும் பயிர்கள் பருவமழையை நம்பியே இருக்கும். இந்நிலத்தில் கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, துவரை, கொள்ளு, காராமணி முதலிய பயிர்கள் விளையும்.

| தொடரை நிரப்புதல் | செயல்பாடு – 14 |
|---|---|

உரிய சொற்களைக் கொண்டு தொடரை நிறைவு செய்க.

( கை, உணவு, குரல், கூலி, உயிர், மதிப்பு, சொல், விடை)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| பசித்தவனுக்கு | ____________ | கொடு | மனிதனுக்கு | ____________ | கொடு |
| உறவுக்குக் | ____________ | கொடு | மானத்துக்கு | ____________ | கொடு |
| உழைப்புக்குக் | ____________ | கொடு | கவலைக்கு | ____________ | கொடு |
| உரிமைக்குக் | ____________ | கொடு | கவிதைக்குச் | ____________ | கொடு |

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

1. உரிய இணையைத் தேர்ந்தெடுக்க. 1 x 1 = 1

அ. பொங்கல் வழிபாடு – கம்பர்

ஆ. உழவின் சிறப்பு – ந. பிச்சமூர்த்தி

இ. தூரத்து ஒளி – க. கௌ. முத்தழகர்

2. ஏழைக்குப் பரிசு கிடைக்க பீர்பால் செய்த செயல் என்ன ? 1 x 1 = 1

அ. வேட்டை ஆ. சமையல் இ. வீதியுலா

3. விளி வேற்றுமை எது ? 1 x 1 = 1

அ. மூன்றாம் வேற்றுமை ஆ. எட்டாம் வேற்றுமை இ. நான்காம் வேற்றுமை

4. இனமுள்ள அடைமொழிகளை எடுத்தெழுதுக. 3 x 1 = 3

அ. ____________ ( வெண்முகில், வெண்காக்கை)

ஆ. ____________ (கருநிலவு, செந்தமிழ்)

இ. ____________ (செங்கல், கருங்கதிரோன்)

5. கோடிட்ட இடத்தை நிரப்புக. 4 x 1 = 4

அ. அங்கக வேளாண்மையின் வேறுபெயர் ____________ .

ஆ. பசுவிடமிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்களைக் கலந்து செய்வது ____________ .

இ. உலகில் தோன்றிய உயிர்கள்அனைத்துக்கும் முதல்வன்____________ .

ஈ. பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபு ____________ எனப்படும்.

# திருக்குறள்

## கல்வி

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

பொருள் : நூல்களைக் குற்றமறக் கற்றல் வேண்டும். கற்றபடி நடத்தல் வேண்டும்.

சொற்பொருள் : கசடு – குற்றம்; நிற்க – கற்றவாறு நடக்க.

2. எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. *

பொருள் : எண்ணும் எழுத்தும் ஆகிய இவ்விரண்டும் மனிதர்களுக்கு இரு கண்கள் எனக் கூறுவர்.

சொற்பொருள் : எண் – எண்கள், கணக்கு; எழுத்து – இலக்கண இலக்கியங்கள் (வரிவடிவம்)

3. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

பொருள் : கல்வி கற்றவர் கண் உடையவர்; கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் ஆவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். *

பொருள் : அறிவில் சிறந்த புலவர்களுடன் பேசிப் பழகும்போது மகிழ்ச்சியாக இருப்பதும், அவர்களை விட்டுப்பிரியும்போது, 'இனி இவரை எப்பொழுது காண்போம்' என எண்ணிப் பிரிவதும் புலவரின் இயல்பாகும்.

சொற்பொருள் : உவப்ப – மகிழ; தலைக்கூடி – ஒன்றுசேர்ந்து.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

பொருள் : செல்வம் உடையவர்முன் ஏழை கவலைப்பட்டு இரந்து நிற்பதுபோலக் கற்றவர்முன் பணிந்து கற்பவரே உயர்ந்தவர்; பணிந்து கல்லாதவர் தாழ்ந்தவர்.

சொற்பொருள் : உடையார் – செல்வர்; இல்லார் – ஏழை; ஏக்கற்று – கவலைப்பட்டு; கடையர் – தாழ்ந்தவர்.

6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. *

பொருள் : மணற்பாங்கான இடத்தில் தோண்டத்தோண்ட நீர் சுரக்கும். அதுபோல, மக்கள் நூல்களைக் கற்கக்கற்க அவர்தம் அறிவு வளரும்.

சொற்பொருள் : தொட்டனைத்து – தோண்டும் அளவு; மாந்தர் – மக்கள்.

7. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

பொருள் : கற்றவனுக்கு எந்த நாடும் தன் நாடாகும்; எந்த ஊரும் தன் ஊராகும். இதனை அறிந்தும் சிலர் சாகும்வரை கற்காமல் இருப்பது ஏன்?

சொற்பொருள் : சாந்துணையும் – சாகும்வரையிலும்.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. *

பொருள் : ஒரு பிறப்பில், தான் கற்றுக்கொள்ளும் நல்லறிவு, இனி எழும் பிறவிகளுக்கும் பாதுகாப்பைத் தரும்.

சொற்பொருள் : ஏமாப்பு – பாதுகாப்பு.

9. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

பொருள் : தாங்கள் இன்பம் அடையும் கல்வியால் உலகம் இன்பம் அடைவதனைக் கண்டு, கற்றவர் மேன்மேலும் கற்க விரும்புவர்.

சொற்பொருள் : காமுறுவர் – விரும்புவர்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. *

பொருள் : ஒருவனுக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியாகும். கல்வி தவிர, மற்றச் செல்வங்கள் எல்லாம் செல்வங்கள் ஆகமாட்டா.

சொற்பொருள் : விழுச்செல்வம் – சிறந்த செல்வம்; மாடு – செல்வம்.

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ. உவப்பத் தலைக்கூடி ____________ பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

ஆ. ஒருமைக்கண் தான்கற்ற ____________ ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

இ. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை ____________.

**2. மாறியுள்ள குறளை முறைப்படுத்தி எழுதுக.**

அ. எண்ணென்ப எழுத்தென்ப ஏனை கண்ணென்ப
இவ்விரண்டும் வாழும் உயிர்க்கு.

ஆ. தொட்டனைத்து மணற்கேணி ஊறும் மாந்தர்க்குக்
கற்றனைத்து அறிவு ஊறும்.

**3. பிரித்து எழுதுக.**

அ. கசடற = ____________ ஆ. எழுத்தென்ப = ____________

இ. மணற்கேணி = ____________ ஈ. கற்றறிந்தார் = ____________

**4. சேர்த்து எழுதுக.**

அ. எண் + என்ப = ____________ ஆ. கண் + உடையார் = ____________

**5. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.**

அ. எழுத்து ____________

ஆ. முகம் ____________

இ. புலவர் ____________

ஈ. இன்பம் ____________

உ. அறிவு ____________

### ஆ. குறுவினாக்கள்

1. புலவர் தொழிலாக வள்ளுவர் எதனைக் கூறுகிறார்?
2. வள்ளுவர் மணற்கேணியோடு அறிவை எவ்வாறு ஒப்பிடுகிறார்?
3. வள்ளுவர் குறிப்பிடும் அழியாச் செல்வம் எது ? ஏன் ?

### இ. சிறுவினாக்கள்

1. கல்வியின் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவனவற்றை எழுதுக.
2. சாகும்வரை ஏன் கற்றல் வேண்டும்?

### ஈ. நெடுவினா

கல்வியதிகாரம் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## முக்கூடற்பள்ளு

### (நகர்வளம் – இளைய பள்ளி)

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலை வாய்க்கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியில் கிடைக்கும்
மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே.

பொருள் : ஊமத்தம் பூவை விரும்பிச் சூடும் பெரும்பித்தனாகிய சிவபெருமானுக்கு உரிய ஊர் எங்கள் மருதூர். இவ்வூர், வாய்க்கால்களில் தத்திச்செல்லும் நீரானது முத்துகளால் இடைமறித்து அடைக்கப்படும். சாலை வழியாகக் கொணர்ந்த கருப்பங்கழிகளைக் கரும்பாலைகளில் சாறு பிழிந்துகொண்டிருக்கும் பேரிரைச்சல் சத்தமோ காதுகளைச் செவிடாக்கும். இவ்வூரில் உள்ளோர் பலரும் அடித்துச் செய்யும் உலோக வேலைகளின் ஒலியோ அந்தப் பேரிரைச்சலை மறைக்கும்படியாக மிக்கிருக்கும். நாள்தோறும் விழாக்கள் கொண்டாடுவார்போல, எங்கும் சிறப்பான காட்சிகளின் அழகு மிளிரும். இத்தகைய எல்லாச் செல்வங்களும் இவ்வூரிலேயே கிடைக்கும்.

சொற்பொருள் : தத்தும் புனல் – தத்திச்செல்லும் நீர்; முத்தம் அடைக்கும் – முத்துகள் மிக்குப் பெருகி இடையே அடைத்துக்கொண்டு கிடக்கும்; கலிப்புவேலை – கருமார், கொல்லர், தட்டார் முதலியோர் செய்யும் தொழில்கள்; சித்ரம் – சிறப்பான காட்சிகள்; மதோன்மத்தர் – பெரும்பித்தனாகிய சிவபெருமான்.

ஆசிரியர் குறிப்பு : இந்நூலின் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. ஆயினும், நாடகப் பாங்கில் அமைந்த இந்நூலை இயற்றியவர் என்னயினாப் புலவர் எனச் சிலர் கூறுவர். சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட இந்நூலில், திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கை ஆங்காங்கே காணலாம்.

நூற்குறிப்பு : நீர் நிறைந்த பள்ளமான சேற்றுநிலத்தில் உழவுத்தொழில் செய்து வாழும் பாமர மக்களாகிய பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்திரித்துக் கூறுவதாக அமைந்த நூல், பள்ளு.

திருநெல்வேலிக்குச் சற்று வடகிழக்கில் தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்று ஆறுகள் கூடும் இடத்திற்கு வடக்கே உள்ள சிற்றூர், முக்கூடல். இதற்கு ஆசூர் வடகரை நாடு என்னும் பெயரும் உண்டு. தென்பால் உள்ள பகுதி, சீவலமங்கைத் தென்கரை நாடு என வழங்கப் பெறுகின்றது.

தென்கரை நாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் ஊர் மருதூர். முக்கூடலில் வாழும் பள்ளி மூத்த மனைவி, மருதூரில் வாழும் பள்ளி இளைய மனைவி. இருவரையும் மணந்து வாழும் ஒருவனின், வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பதுபோலப் பாடப்பட்ட இந்நூல், முக்கூடற்பள்ளு எனப் பெயர் பெற்றது.

நூற்பயன் : முக்கூடற்பள்ளு கற்பதனால், அக்கால மக்களின் உழவுத்தொழில் பற்றியும் அச்சமுதாயத்தைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். காளைகளின் பல்வேறு பெயர்கள், விதைகளின் பெயர்கள், மீன்வகைகள் என மருத நிலவளம் பற்றியும் அறியலாம்.

| ஒன்பது மணிகள் | | |
|---|---|---|
| முத்து | பவளம் | மரகதம் |
| மாணிக்கம் | புட்பராகம் | இரத்தினம் |
| வைரம் | வைடூரியம் | கோமேதகம் |

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மருதூரில் வீற்றிருக்கும் இறைவன் ____________.
2. மூன்று ஆறுகள் சேருமிடம் ____________.

### ஆ. குறுவினாக்கள்

1. வாய்க்கால் நீரை அடைத்தது எது?
2. மருதூரில் நடைபெற்ற தொழில்கள் யாவை?
3. முக்கூடல் – குறிப்பு எழுதுக.

### இ. சிறுவினா

மருதூரின் பெருமைகளாக முக்கூடற்பள்ளு கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

# தமிழக விளையாட்டுகள்

விளையாட்டுகள், ஓரினத்தின் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவன. விளையாட்டில் சிறுவர், சிறுமியர், இளையோர், முதியோர் என எல்லா நிலையில் உள்ளோரும் ஈடுபடுகின்றனர். உடல்திறன் வளர்க்க, உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்த, மனம் மகிழ்ச்சியில் திளைக்க விளையாட்டுகள் துணைபுரிகின்றன.

விளையாட்டின் அடிப்படை நோக்கம் போட்டியிடுதலாகும். உடலிலும் உள்ளத்திலும் உள்ள ஆற்றல்களை வெளியிடவும், எதிர்பாராத தோல்விகளை எதிர்கொள்ளவும் மனப்பான்மை மேம்படவும் விளையாட்டு உதவுகிறது. விளையாட்டு வழியாகப் பட்டறிவும், போராட்டத்திற்கு விடை காணும் திறனும் பெற முடிகிறது.

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா

...... ...... ......

மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

என்று பாரதி, விளையாட்டின் மேன்மையறிந்து அதனைப் பழக்கமாக்கிக் கொள்ள வலியுறுத்துகிறார்.

விளையாட்டுகள் பால் அடிப்படையிலும், தன்மை அடிப்படையிலும் பல்வேறு வகையினவாக அமைகின்றன. மகளிர் விளையாட்டுகள் பெரும்பாலும் அக விளையாட்டுகளாகவும், ஆடவர் விளையாட்டுகள் புற விளையாட்டுகளாகவும் உள்ளன.





பம்பரம், கிளித்தட்டு, உப்பு விளையாட்டு, கள்ளன் காவலன், கோலி, கிட்டிப்புள், காற்றாடி, பந்துவிளையாட்டு, ஒற்றையா இரட்டையா, நீச்சல் முதலியன சிற்றூர்ச் சிறுவர் விளையாடுவன. பூப்பறித்தல், கரகரவண்டி, தட்டாங்கல், பல்லாங்குழி, ஊஞ்சல், தாயம் என்பன சிற்றூர்ச் சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள். இன்று சடுகுடு (கபடி), மட்டைப்பந்து, கால்பந்து, கைப்பந்து, எறிபந்து, இறகுப்பந்து, ஓட்டம், தடைதாண்டி ஓட்டம் எனப் பலவகை விளையாட்டுகள் போட்டி ஆட்டங்களாக விளையாடப்படுகின்றன.

பண்டைக் காலத்தில் தமிழர் விளையாடினரா? அதற்கு அவர்களுக்கு நேரமிருந்ததா? என்னென்னவெல்லாம் விளையாடினார்கள்? எப்படி விளையாட்டு வளர்ந்தது என்பதனைப்பற்றி அறிந்து கொள்வோமா?

வீர விளையாட்டுகளில் என்றும் பெருவிருப்பமுடையவர் தமிழர். மற்போரிடல், ஏறுதழுவுதல், வேட்டையாடுதல், நீரில் மூழ்கி மணல் எடுத்தல் என்பன பழைமை வாய்ந்த ஆடவர் விளையாட்டுகள். முற்காலத்தில் மற்போரில் வல்ல மல்லர், மன்னரால் மதிக்கப் பெற்றனர். களத்தில் பல்லாயிரவர் சூழ்ந்து நிற்க, தருக்கும் செருக்கும் நிரம்பிய ஆமூர் மல்லனுக்கும் வீரமும் தீரமும் வாய்ந்த நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீர விளையாட்டைப் புறநானூறு என்னும் சங்க இலக்கிய நூல் வருணிக்கின்றது.

முல்லை நிலத்தில் ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டு நடைபெற்றது. முரசு அதிர, பம்பை முழங்க, தொழுவத்திலிருந்து கொழுமைமிக்க காளைகள் ஒவ்வொன்றாக வெளியே ஓடிவரும். கொம்பிலே உள்ளது காளையின் தெம்பு என்றறிந்த வீரர்கள் காளையின் கொம்பைப் பிடித்து, அதன் கொட்டத்தை அடக்குவர். வாலைப் பிடித்தல் தாழ்வு என்பது தமிழர் கொள்கை. பல்லோர் சூழ்ந்து நிற்க கிணற்றுக்குள் துடுமெனப் பாய்ந்து குதித்து மணல் எடுத்து வருதல் ஒருவகை வீர விளையாட்டாகக் கருதப்பட்டது.

பண்டைய நாளில் பெண்கள் வட்டாடுதல், கழங்கு, அம்மானை, பந்தாடுதல், ஊஞ்சல், ஓரையாடுதல் எனப் பல விளையாட்டுகளில் இனிதே பொழுது போக்கினார்கள். அரங்கு இழைத்து (கட்டம் வரைந்து) நெல்லிக்காய்களை வைத்து நகர்த்தி ஆடும் ஆட்டம் வட்டாடுதலாகும். அக்கால மகளிர் நண்டு, ஆமை ஆகியவற்றைக் கோல்கொண்டு அலைத்து ஓரையாட்டம் ஆடி மகிழ்ந்தனர். சிறுவர், சிறுதேர் உருட்டி விளையாடி மகிழ்ந்தனர். சிறுமியர் முத்துகளைக் கிளிஞ்சல்களின் உள்ளே இட்டு ஆட்டிக் களிப்புற்றனர்.

இங்ஙனம், வீர விளையாட்டுகள் ஆடுவதில் விருப்புற்று விளங்கிய தமிழர் விலங்குப்போர் காண்பதிலும் வேட்கையுற்று விளங்கினர்.

அரசர் வாழும் தலைநகரங்களில் யானைப்போர் நடைபெறுவதற்கும், அதனைக் காண்பதற்கும் தனியிடங்கள் இருந்தன. மதுரையில் உள்ள தமுக்கம் மைதானம் யானைப்போர் காண்பதற்கான திடலாகும்.

ஆட்டுக்கிடாய்ப் போர், சேவற்போர், கடுமையான காடைப்போர் என்பன வற்றைத் தமிழர் கண்டு மகிழ்ந்தனர். சோழநாட்டின் பழைய தலைநகரமான உறந்தையூரில் வீரக்கோழிகள் சிறந்திருந்தமையால் கோழியூர் என்னும் பெயரும் அதற்கமைந்தது என்பர்.

காலம் செல்லச்செல்ல அதற்கேற்ப விளையாட்டுகளின் தன்மையும் போக்கும் மாறியுள்ளன. பண்டைய ஏறுதழுவுதல் விளையாட்டு இன்று சல்லிக்கட்டாகவும், மஞ்சுவிரட்டாகவும் அறியப்படுகின்றன. அன்று ஏறுதழுவியவரையே மகளிர் விரும்பி மணந்தனர். இன்று அவ்விளையாட்டானது பணமுடிப்பு, பரிசுப்பொருள்கள் பெறுதல், பலர் சேர்ந்து மாடு விரட்டல் என மாறிவிட்டது.

தமிழரின் தற்காப்புக்கலை விளையாட்டுகளில் ஒன்றாகச் சிலம்பாட்டம் வளர்ந்து வருகிறது. நிலத்திலிருந்து ஓர் ஆளின் நெற்றி உயரம்வரை இருக்கும் தடியைச் சுழற்றி ஆடும் ஆட்டமே சிலம்பாட்டமாகும். குச்சி விளையாட்டு, கம்பு விளையாட்டு எனச் சிற்றூர்களில் அறியப்படும் சிலம்பாட்டம் இன்றும் ஊர் விழாக்களில் நடைபெறுகிறது.

உலக அரங்கில் தமிழரின் வீர விளையாட்டான கபடி (சடுகுடு)க்குத் தனியிடம் கிடைத்துள்ளது. கபடி விளையாடும்போது பாடிக்கொண்டே விளையாடுவது நம் மூதாதையர் வழக்கம்.



ஆனால், கபடிப் போட்டியில் பாடும் மரபு மறைந்துவிட்டது. ஊர்த்திருவிழாக் காலங்களில் வழுக்குமரம் ஏறுதல், உறியடித்தல், மஞ்சள்நீர் ஊற்றுதல் ஆகிய விளையாட்டுகளை இன்றைக்கும் சிற்றூர்களில் காணலாம்.

விளையாட்டு, குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் உள்ள மகிழ்ச்சிக்கும் வழி வகுக்கின்றது. இது, நம் சமுதாயத்தின் நாகரிகத்தையும் மரபையும் பண்பாட்டையும் விளக்கவல்லது. தமிழக அரசு, விளையாட்டின் பெருமையும் பயனும் மக்களைச் சென்றடைய தமிழ்நாடு உடற்பயிற்சி கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தி ஊக்கமளித்து வருகிறது. விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் தருவதனோடு கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் அரசு முன்னுரிமை அளிக்கின்றது. இயந்திரக் காலத்தாலும் புதுமைப் போக்காலும் சமுதாய மாற்றத்தாலும் விளையாட்டுகள் குறைந்துகொண்டும் மாறியும் வருகின்றன. விளையாட்டின் மேன்மைகண்ட நாம், மேன்மேலும் அதனை வளர்ப்போம்! எந்நாளும் காப்போம்! புகழில் உயர்ந்து நிற்போம்.

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

அ. விளையாட்டின் அடிப்படை நோக்கம் ________________ ஆகும்.

ஆ. தமிழரின் தற்காப்புக் கலைகளுள் ஒன்று ________________ .

இ. முல்லை நிலத்தில் ________________ என்னும் வீர விளையாட்டு நடைபெற்றது.

**2. பொருத்துக.**

| விளையாடுவோர் | | விளையாட்டு |
|---|---|---|
| அ. ஆடவர் | – | ஓரையாடுதல் |
| ஆ. மகளிர் | – | பூப்பறித்தல் |
| இ. சிறுவர் | – | ஏறு தழுவுதல் |
| ஈ. சிறுமியர் | – | கிட்டிப்புள் |

### ஆ. குறுவினாக்கள்

1. பாரதியார் விளையாட்டின் இன்றியமையாமையைப்பற்றிக் கூறியது யாது?
2. சிறுமியர் விளையாடும் விளையாட்டுகள் யாவை?
3. புறநானூறு கூறும் வீர விளையாட்டுகள் யாவை?

### இ. சிறுவினா

பண்டைக் காலத்தில் நடைபெற்ற விலங்குப்போர்பற்றி விளக்குக.

### ஈ. நெடுவினா

தமிழர்களின் விளையாட்டுகள்பற்றிக் கட்டுரை வரைக.

### படைப்பாற்றல் கல்வி

- தமிழர்கள் விளையாட்டுகள்பற்றிச் சிறு குழுவில் கலந்துரையாடுக.
- தமிழர் விளையாட்டுகளைப்பற்றி மன வரைபடம் வரைக.

துணைப்பாடம்

# நண்பன்

மரியாதைராமன் நடுவராய் இருந்த அந்த நகரத்தில் வரதன், சோமு என்ற இருவர் அடுத்தடுத்துப் பல்பொருள் அங்காடி வைத்து நடத்தி வந்தனர். இருவருக்கும் விற்பனை நன்றாகவே நடந்து வந்தது. ஆனாலும் வரதன்மீதும், அவன் வணிகத்தின்மீதும் சோமுவுக்குப் பொறாமையாகவே இருக்கும்.

எப்பொழுதும் வரதனின் கடைக்கு யார் வருகிறார்கள், போகிறார்கள் என்ன நடக்கிறது என்பதனையே உற்றுநோக்கிக் கொண்டிருப்பான்.

சில நாளில் வரதனின் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பெருகிற்று. வணிகம் நன்கு சூடுபிடிப்பதனைக் கண்டு சோமு மிகுந்த பொறாமை கொண்டான். தன்னுடைய கடையிலும் அவ்வாறு வணிகம் நடைபெறவில்லையே என எண்ணி மேலும் பொறாமைப்பட்டான்.

தான் எல்லாவற்றிலும் வரதனைவிட உயர்வாகவே இருக்கவேண்டும் என ஆசைப்படுவான். ஆனால், இப்பொழுதோ அவனைவிடக் குறைவாகவே வணிகம் நடைபெறுவதனை நினைத்துப் பெருமூச்சுவிட்டான். அவனது பொறாமையை அதிகமாக்குவதுபோல நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

அரசாங்க வீரன் ஒருவன் வந்து, வரதனை மரியாதைராமன் அழைத்துவரச் சொன்னதாக அழைத்துப் போனான்.

உடனே சோமு, "அடேயப்பா நடுவர் கூப்பிடும் அளவிற்கு இவன் மிகவும் உயர்ந்துவிட்டானா? எவ்வளவு பெரும்பேறு இவனுக்கு" என வியந்தான்.

அடுத்த வாரமும் வரதனை அழைத்துச் செல்ல அரசாங்க வீரன் வந்தான்; அதனையும் சோமு கவனித்தான். அவன் மனத்தில், நடுவர் இந்த வரதனை மட்டும் கூப்பிட்டுப் பேசுகிறாரே, என்னை ஏன் கூப்பிடவில்லை. நானும் அவனைப்போல் ஒரு பெரிய வணிகன்தானே. அவனைவிட, நான் எந்த விதத்தில் தாழ்ந்துவிட்டேன் என எண்ணிக் குமுறினான்.

அதற்கடுத்த நாள் சோமு வரதனை அணுகி, "ஆமாம் மரியாதைராமன் உம்மை அடிக்கடி அழைத்து வரச் சொல்கிறாரே என்ன காரணம்?" என்று கேட்டான்.

அதற்கு வரதன், 'எனக்கும் அவருக்கும் ஆயிரம் இருக்கும். அதனை எல்லாம் உன்னிடம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது' என்று கூறி அனுப்பினான். அதனைக் கேட்டதும் சோமுவுக்கு உலகமே சுழல்வதுபோல இருந்தது.

பொறுக்குமா அவன் மனம்? வரதனிடம் நடுவர் பேசுகிறார் என்றால், நடுவர் அவனிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்பது தெரிகிறது. அதனைப்போன்ற மதிப்பு, தனக்கும் கிடைக்காதா என்று சோமு ஏங்கினான்.

அவன், தன் மனைவியிடம் தனது எண்ணத்தைக் கூறினான். அவளும், “அப்படியா, வரதனுக்கு நடுவரிடம் அவ்வளவு செல்வாக்கு இருக்கிறதா? அப்படியானால், ‘அவருடன் நீங்கள் நட்புக்கொண்டால் நமக்கு நல்லது” என்றாள்.

மறுநாள், வரதனின் வீட்டிற்குச் சோமு பரிசுப்பொருளுடன் சென்றான். பின்பு, அதனையே பழக்கமாகக் கொண்டான். அவன் போகும்போதெல்லாம் பழங்கள், தின்பண்டங்கள் ஆகியவற்றைக் கொண்டுசென்றான்.

வரதன், ‘இவற்றையெல்லாம் எதற்கு வாங்கி வருகிறாய்?’ என்று முதலில் மறுத்தான். பிறகு ஏற்றுக்கொள்ளலானான். தனக்கு வரதனின் தயவு இருப்பதனால், அரசாங்கத்தில் எதனையும் இனித் தனக்கு வாய்ப்பாகச் செய்துகொள்ள முடியும் என சோமு எண்ணினான்.

நாள்கள் சென்றன. ஒருநாள் அரசாங்க அலுவலர் ஒருவர் சோமுவின் கடைக்கு வந்து வரியைக் கட்டும்படி கூறினார். அதுபற்றிச் சோமு கவலைப்படவில்லை. செய்தியை வரதனிடம் சொன்னால், ஒருநொடியில் சரி செய்துவிடலாம் என எண்ணினான். எனவே, வரியைக் கட்டாமல் இருந்துவிட்டான்.

ஒரு மாதமாயிற்று. ஓர் அரசாங்க அலுவலர் சோமுவிடம் வந்து நடுவர் அழைத்துவரச் சொன்னதாகக் கூறி அழைத்துப் போனார். அதற்குள் சோமு, தானே செய்தியைத் தெரிந்துகொண்டு வரதன் நடுவரிடம் பேசி இருக்கிறான். அதனால்தான், நடுவர் நம்மை அழைத்துள்ளார் என எண்ணி மகிழ்ந்தவாறே அரண்மனையை அடைந்தான் சோமு.

நடுவர் அவனைப் பார்த்ததுமே, “நான் உன்னை ஏன் அழைத்தேன் தெரியுமா? நீ என் தோட்டத்துக்கு ஒரு நாளைக்கு நூறு குடம்வீதம் பத்து நாள் தண்ணீர் இறைத்து ஊற்றுதல் வேண்டும். ஏனென்றால், நீ வரி செலுத்தத் தவறிவிட்டாய். எனவே, நீ இந்தத் தண்டனையை ஏற்றுக்கொண்டு பத்து நாளுக்குள் வரி செலுத்துதல் வேண்டும். இல்லையென்றால், உன் கடையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்” எனக் கூறினார்.

மேலும், வரதன் வரி செலுத்தாததன் காரணமாகத்தான் வாரா வாரம் என் அரண்மனையின் ஒரு பகுதியைப் பெருக்கிவந்தான். வரி செலுத்தாமல் தப்பிக்க நினைக்கும் வணிகர்களுக்கு இதுதான் தண்டனை என்றார் நடுவர்.

‘இதுதான் அவனுக்குக் கிடைத்த அரச மரியாதையா? எனக்கும் அது கிடைத்ததே’ என விதியை நொந்துகொண்டு, சோமு நாள்தோறும் நீர் இறைத்துத் தோட்டத்துக்கு ஊற்றினான். அதன்பின் சோமு மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதில்லை.

நன்றி : ஓவியர் ராம்கி, மரியாதைராமன் கதைகள்

## மாதிரி வினா

கட்டுரை வினா

‘நண்பன்’ என்னும் கதையின் வாயிலாக அறியும் நீதியை விளக்குக.

தமிழ்



# சொல்

## பகாப்பதம், பகுபதம்

| | | |
|---|---|---|
| மாணவர் | : | வணக்கம், ஐயா. |
| ஆசிரியர் | : | வணக்கம். எல்லாரும் வந்துவிட்டார்களா? |
| சாந்தா | : | கண்ணன் இன்று வரவில்லை, ஐயா. நேற்று வயிற்றுவலியால் துடித்துவிட்டான். மருத்துவமனைக்குச் சென்றுவந்தபின் இல்லத்தில் ஓய்வில் இருக்கிறான். |
| ஆசிரியர் | : | உடல்நலம் பேணுவதுதான் முதன்மையானது; மற்றவையெல்லாம் அதன்பின்னர்தான். சுவரில்லாமல் சித்திரம் ஏது? நலமாகி வரட்டும். |
| மயில்வண்ணன் | : | முன் வகுப்பில் ஓரெழுத்துத் தனித்து நின்றும், ஒன்றனுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து நின்றும் பொருள் தந்தால், அது சொல் எனப்படும் என்று கூறினீர்கள், ஐயா.<br><br>மேலும், அதனைப் பெயர், வினை, இடை, உரியென வகைப் படுத்தினீர்கள். ஐயா, சென்ற வகுப்பில் கணக்காசிரியர் பகு எண், பகா எண் என எண்களை வகைப்படுத்திக் காட்டினார். அதனைப்போலத் தமிழ்ச்சொற்களிலும் உண்டா? எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், ஐயா. |
| ஆசிரியர் | : | நன்றாகக் கேட்டாய் மயில்வண்ணா! கணக்கைப்போலவே தமிழிலும் சொற்களைப் பகுபதம், பகாப்பதம் என இருவகையாகப் பிரிக்கலாம். |
| அன்பு | : | பதம் என்றால் என்ன, ஐயா? |
| ஆசிரியர் | : | பதம் என்றாலும் சொல் என்றாலும் ஒன்றே. மொழி, கிளவி என்பன அதன் வேறு பெயர்கள். ஓரெழுத்தானது தனித்து நின்று பொருள் தந்தால், அஃது ஓரெழுத்து ஒருமொழி எனப்படும். இவை நாற்பத்திரண்டு உள்ளன. சிலவற்றை இங்குக் கூறுகிறேன். (எ.கா.) தை, பை, கை, பூ, தீ, வை, தா, ஈ, கா .... முதலியன.<br><br>எழுத்துகள் பல தொடர்ந்து நின்று பொருள் தந்தால், அஃது எழுத்துத் தொடர்மொழி எனப்படும்.<br><br>(எ.கா.) நூல், எழுதுகோல், வீடு, மகன், சந்தை, மாடு...முதலியன. |
| இளவழகி | : | பகாப்பதம் என்றால் என்ன, ஐயா? |

ஆசிரியர் : பகுத்தல் என்றால் பிரித்தல் என்பது பொருள். பகா என்றால் பிரிக்க இயலாதது என்பது பொருள். பிரிக்கவியலாத சொல் பகாப்பதம் எனப்படும். (எ.கா.) மண், கல், பொன் இவை பெயர்ப்பகாப்பதங்கள். நட, வா, போ, செய், நில் – இவை வினைப் பகாப்பதங்கள்.

மாணவர் : பகுபதம் பற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : பகுக்க இயலும் சொற்களைப் பகுபதம் என்பர். அவ்வாறு பகுக்கும்போது இரண்டுமுதல் ஆறு உறுப்புகளாக அச்சொல்லைப் பிரிக்கலாம். அவ்வுறுப்புகளின் பெயர்களாவன: பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

மாணவர் : சொற்களைக்கூடப் பிரிக்கலாம் என்பது பற்றியும் அச்சொற்களில் ஆறு உறுப்புகள் உள்ளன என்பன பற்றியும் அறிந்துகொண்டோம், ஐயா. மிக்க நன்றி.

பயிற்சி : 1. பின்வரும் தொடரிலுள்ள பகாப்பதங்களைத் தேர்ந்தெழுதுக.

பாரதி மலர் தூவி இறைவனை வழிபட்டாள்.

2. பின்வரும் தொடரிலுள்ள பகுபதங்களைத் தேர்ந்தெழுதுக.

அன்பரசி பாட்டுப் பாடிப் பரிசு பெற்றாள்.

## மாதிரி வினாக்கள்

### சிறுவினாக்கள்

1. பகாப்பதம் என்றால் என்ன?
2. பகுபதம் என்றால் என்ன?
3. ஓரெழுத்து ஒருமொழிக்குச் சான்றுகள் ஐந்து தருக.
4. பகுபதத்தின் உறுப்புகள் யாவை?

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே – இத்தலைப்பில் ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) படித்தல் திறன்

பின்வரும் பாடலை உரிய ஓசையுடன் படித்துக் காட்டுக.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை;
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை;

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொல் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

– பாரதியார்

இ) எழுதுதல் திறன்

உரைநடைப்பகுதியைச் சுருக்கி வரையும் திறன் பெறுதல்

(எ.கா.) மக்களாய்ப் பிறந்தவர் அறிவைத் தேடிப்பெறுதல் வேண்டும். அறிஞர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தேடிச்சென்று அவர்களிடத்திலிருந்து அறிவுச்செல்வத்தைப் பெற்று உயர்தல் வேண்டும். அறிஞர்கள் எழுதிய நூல்கள் உலகின் பல்வேறு மொழிகளில் இருக்கலாம்; உலகின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கப்பெறலாம். அப்படிப்பட்ட நூல்களை எல்லாம் வரவழைத்து அவற்றைப் படித்துப் பாதுகாத்தல் வேண்டும். அத்தகைய நூல்களின் வாயிலாக அறிவுச்செல்வத்தைப் பெற்று உயர்தல் வேண்டும்.

உரைநடைப்பகுதியின் சுருக்கம்

மக்களாய்ப் பிறந்தவர்கள் அறிஞர்களைத் தேடிச்சென்று அறிவைப் பெறுதல் வேண்டும். பல்வேறு மொழிகளில் அறிஞர்கள் எழுதிய நூல்களைப் படித்து அறிவுச்செல்வத்தைப் பெற்று உயர்தல் வேண்டும்.

பயிற்சி : கீழுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துச் சுருக்கி எழுதுக.

உலகில் கோடிக்கணக்கான உயிர்கள் வாழ்கின்றன. இவ்வுயிர்களுள் மனிதன் மட்டுமே தனது சிந்தனை ஆற்றலால் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகிறான். மனிதன், தான்பெற்ற அனுபவங்களைப் பிறர்க்கு எடுத்துரைக்கவும், பிறர் பெற்ற அனுபவங்களைத் தான் அறிவதற்கும் கருவியாக விளங்குவது மொழியே.

மனிதன் நாகரிகம் அடைவதற்கு முதற் கருவியாக விளங்கியது, மொழியே. மொழியின் சீரிய பயன்பாடு ஒருவரோடு மற்றொருவர் தொடர்புகொள்வதே. இத்தொடர்பு சீராகவும் கருத்து மாறுபாடு ஏற்படாத வண்ணமும் அமைதல் வேண்டும்.

ஈ) செயல் திட்டம் : நீ விரும்பும் விளையாட்டு வீரரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுக்க.

## மொழித்திறன் பயிற்சி

அ) சொற்றொடர் வகைகள்

சொற்றொடர் உணர்த்தும் பொருளைக்கொண்டு செய்தித்தொடர், வினாத்தொடர், கட்டளைத்தொடர், உணர்ச்சித்தொடர் என வகைப்படுத்தலாம்.

நேற்று, எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. – செய்தித்தொடர்.

உன் இருப்பிடம் எங்குள்ளது? – வினாத்தொடர்

இளமையில் கல். – கட்டளைத்தொடர்

என்னே, இந்த ஓவியத்தின் அழகு! – உணர்ச்சித்தொடர்

கீழுள்ள சொற்றொடரை வகைப்படுத்துக.

1. காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்துப் போராடினார்.
2. உன்னிடம் திருக்குறள் புத்தகம் இருக்கிறதா?
3. தொல்காப்பியன் வீட்டுக்கு வந்திலன்.
4. என்னே, தாஜ்மகாலின் அழகு!
5. வீட்டைத் தூய்மையாக வைத்திரு.

சொற்றொடர் மாற்றங்கள்

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்.

(எ.கா.) முயன்றால் முடியாதது உண்டோ? இவ்வினாத்தொடரை

முயன்றால் அனைத்தும் முடியும், எனச் செய்தித்தொடராக்கலாம்.

நாள்தோறும் உடற்பயிற்சி செய். – கட்டளைத்தொடர்

நாள்தோறும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். – செய்தித்தொடர்.

பயிற்சி : கீழுள்ள சொற்றொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. மாற்றுத்திறனாளியரை மதித்தல் வேண்டும். (கட்டளைத் தொடராக்குக.)
2. உழைப்பின்றி ஊதியம் இல்லை. (உடன்பாட்டுத் தொடராக்குக.)
3. நான் திருக்குறள் படித்தேன். (வினாத்தொடராக்குக.)
4. அந்தோ, குழந்தை கீழே விழுந்துவிட்டதே! (செய்தித் தொடராக்குக.)
5. உன் கையெழுத்து மிகவும் அழகாக உள்ளது. (உணர்ச்சித் தொடராக்குக.)

ஆ) தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுதல்

மரபுத்தொடர், பழமொழித்தொடர், உவமைத்தொடர் முதலிய தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுவதன்மூலம் கருத்தை எளிதில் விளங்கச் செய்யலாம்.

(எ.கா.) தாய், தன் குழந்தையைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்தாள்.

அண்ணா, தங்குதடையின்றிப் பேசும் ஆற்றல் உடையவர்.

பயிற்சி : கீழுள்ள தொடர்களைச் சொற்றொடரில் அமைத்தெழுதுக.

1. பழக்கவழக்கம்
2. தொன்றுதொட்டு
3. ஊணுறக்கமின்றி
4. அல்லும்பகலும்
5. பேரும்புகழும்
6. மேடும்பள்ளமும்

இ) தமிழெண்களை வரிசையில் அமைக்க.

க, ௬, கூ, ரு, எ, அ, உ, ச, க0, கா

ஈ) கட்டுரை எழுதுதல்

உங்கள் ஊர் திருவிழாவில் நடைபெற்ற விளையாட்டுகள்.

உ) கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.

பின்னல், பாட்டு, பீடம், பட்டு, பூட்டு, பையன், பேரன், பௌவம், போர், பெண், புளி, பொன், பூனை, பால், பிட்டு, பனை, பீர்க்கம், பெட்டி, பானை.

## பண்பு

### மதிப்பளித்தல்

சண்முகம் தாத்தா வீடு, எது என்று கேட்டால் சிறு குழந்தையும் அடையாளம் காட்டும். அந்த அளவுக்கு அனைவருக்கும் தெரிந்தவர் அவர். யாரைப் பார்த்தாலும் வாங்க, போங்க என மரியாதையாகத்தான் பேசுவார். ஒரு வயதுடைய குழந்தையோ தொண்ணூறு வயதுடைய முதியவரோ யாராக இருந்தாலும் அவர்களுக்கு மரியாதை தருவார்.

கூடிப்பேசுவோம் :

1. சண்முகம் தாத்தா, தன்னைவிட வயதில் இளையவருக்கு மரியாதை கொடுக்கிறார், ஏன் ?
2. உங்களைவிட வயதில் சிறியவர்களை, நீங்கள் எவ்வாறு அழைக்கிறீர்கள்?

## வாழ்க்கைத்திறன்

### மன எழுச்சிகளை எதிர்கொள்ளல்

நம்முடைய உணர்வு, எண்ணம் முதலியவற்றை உரிய முறையிலும் உரிய அளவிலும் வெளிப்படுத்த இத்திறன் உதவுகிறது. எல்லா மனவெழுச்சிகளும் நல்லனவும் அல்ல; தீயனவும் அல்ல. அவற்றை எவ்வாறு வெளிப்படுத்துகிறோம் என்பதே இன்றியமையாதது. மட்டைப்பந்து ஆட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. 'அ' அணி சார்பாக ஆடும் வெற்றிச்செல்வன் நன்றாக ஆடவில்லையென்று, அந்த அணியின் தலைவன் தமிழ்ச்செல்வன் குறை சொல்கிறான். இருவருக்குள்ளும் சண்டை ஏற்படுகிறது. சினத்தைக் கட்டுப்படுத்த இயலாத தமிழ்ச்செல்வன், வெற்றிச்செல்வனைஅடிக்கக் கை ஓங்குகிறான். தமிழ்ச்செல்வன் செய்தது சரியா ?

சினம் வந்தால் கட்டுப்படுத்துவது எவ்வாறு ?

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். – குறள், 305

## மதிப்புக்கல்வி

### பரிவு

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பெருந்தகையாளருள் மு.வரதராசனாரும் ஒருவராவார். 'வலக்கை தருவது இடக்கைக்குத் தெரியக் கூடாது' என்பது முதுமொழி. அதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் மு.வரதராசனார். ஒருமுறை கல்லூரிக் கட்டணம், விடுதிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் போன்றவற்றைச் செலுத்த இயலாமல் மாணவர் சிலர் துன்பப்படுவதனைக் கண்டார். அவர்களுக்குத் தேவையான அனைத்துக் கட்டணங்களையும் தாமே கட்டினார். அதுமட்டுமன்றித் தமது வீட்டையே விடுதியாக்கி, மாணவர் தங்கிப் படிக்கவும் வழிசெய்தார். இயலாதோர்க்கு இரங்குவதும் உதவுவதும் பரிவு ஆகும்.

> இயல்வது கரவேல்
> ஈவது விலக்கேல்
> – ஔவையார்

## வளரறி செயல்பாடுகள்

| படித்தல் திறன் | செயல்பாடு – 1 |
|---|---|

கீழுள்ள உரைப்பத்தியைக் குரலேற்ற இறக்கத்துடன் பொருளுணர்ச்சிக்கேற்றவாறு படிக்க.

### தமிழர்கள் மாவீரர்கள்

பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன்; பிறர்க்குப் புறமுதுகுகாட்டி ஓடாதவன் தமிழன்; முடியுடை வேந்தரின் சந்ததியில் வந்தவன் தமிழன்; பல தூர அயல்நாடுகளோடு சிறப்பாக வாணிகம் நடத்தியவன் தமிழன்; கடல் கடந்தவன் தமிழன்; கடல் கடந்து சென்று பர்மா தேசத்தைக் கைப்பற்றி ஆண்டவன் தமிழன்.

இமயத்தில் புலி பொறித்தவன் தமிழன்; கடாரத்தை வென்றவன் தமிழன்; ரோம் நகருக்குப் பொன்னாடை விற்றவன் தமிழன்; இலக்கியச் சுவையைக் கண்டவன் தமிழன்; எந்நாடும் வியக்கும் வீரன் தமிழன்; ஏறு நடையுடையான் தமிழன்; இன்னல் கண்டும் புன்னகை புரிவான் தமிழன்; தன்னலங் கருதாது உழைத்தான் தமிழன்; சூதும்வாதும் விருப்பும்வெறுப்பும் அறியான் தமிழன்; மானமே பெரிதென மதித்தான் தமிழன்; கப்பலோட்டினான் தமிழன்; எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தான் தமிழன்.

–அறிஞர் அண்ணா

| சொற்பொருள் அறிதல் | செயல்பாடு – 2 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் பொருளறிந்து, அவற்றைக்கொண்டு கருத்துரையை நிறைவு செய்க.

( கசடு, உவப்ப, விழுச்செல்வம், ஏமாப்பு, மாந்தர்)

கல்விச் செல்வம் அள்ள அள்ளக் குறையாத ____________ ஆகும். இப்பிறவிக்கும் மறுபிறவிக்கும் மக்களுக்கு ____________த் தரக் கூடியது. இதனால், கற்போரின் மனக் ____________ நீங்கும். அத்தகைய கல்விச் செல்வத்தை ____________ அனைவரும் பெறுதல் வேண்டும். ஏனெனில், கல்வி கற்ற மக்கள்தாம் தமக்குள் எத்தகைய வேறுபாடுமின்றி ____________க் கூடி ஒற்றுமையுடன் வாழ்வர்.

| வகைப்படுத்துதல் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழுள்ள சொற்களுள் பெயர்ப்பகாப்பத, வினைப்பகாப்பதச் சொற்களைக் கண்டறிந்து வகைப்படுத்துக.

(மணி, கொடு, நிலம், பேசு, மலர், கண், நில், ஓடு, தலை, தடு, மரம், பாடு )

| வ. எண் | பெயர்ப்பகாப்பதம் | வினைப்பகாப்பதம் |
|---|---|---|
| 1. | மணி | கொடு |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |

| சொல் உருவாக்குதல் | செயல்பாடு – 4 |
|---|---|

கட்டத்திலுள்ள எழுத்துகளைக்கொண்டு பகாப்பதச் சொற்களை வட்டமிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம | ணி | அ | டி | ______ | ______ |
| ண் | ஆ | டு | ந | ______ | ______ |
| ம | று | கொ | னி | ______ | ______ |
| லா | உ | டை | ப | ______ | ______ |
| | | | | ______ | ______ |

| எழுதுதல் திறன் | செயல்பாடு – 5 |
|---|---|

சொற்களில் உள்ள மெய் எழுத்துகளை நீக்கிப் பகாப்பதச் சொற்களை உருவாக்குக.

| | |
|---|---|
| 1. சட்டை | சடை |
| 2. பட்டு | |
| 3. பட்டி | |
| 4. எட்டு | |
| 5. நண்டு | |
| 6. வண்டு | |
| 7. தண்டு | |
| 8. செல்வி | |
| 9. கன்னி | |
| 10. பாக்கு | |

| ஓரெழுத்து ஒரு மொழிகளை அறிதல் | செயல்பாடு – 6 |
|---|---|

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் குறிக்கும் ஓரெழுத்து ஒரு மொழிகளை எடுத்து எழுதுக.

| | |
|---|---|
| 1. அரண் | சோ |
| 2. அரசன் | |
| 3. அம்பு | |
| 4. தலைவன் | |
| 5. நெருப்பு | |
| 6. மலர் | |

(ஏ, தீ, கோ, பூ, ஐ, சோ)

| பொருள் அறிதல் | செயல்பாடு – 7 |
|---|---|

அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளை உரிய கட்டத்தில் நிரப்புக.

| | | |
|---|---|---|
| 1 | கா | சோலை |
| 2 | தா | |
| 3 | தை | |
| 4 | பா | |
| 5 | வா | |
| 6 | ஆ | |

( பாடல், சோலை, வருக, பசு, கொடு, திங்களின் பெயர் )

| கொச்சைச் சொற்களைத் திருத்துதல் | செயல்பாடு – 8 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியில் வண்ண எழுத்துகளிலுள்ள கொச்சைச்சொற்களைத் திருத்தி எழுதுக.

( கண்விழித்து, வியர்வை, ஆற்றங்கரை, பிட்டு விற்று, வெண்கலம், வயிற்றுப்பிழைப்பு,வேண்டும் )

ஆத்தங்கரைக்கு மேற்கே உள்ளது அந்த அழகிய சிற்றூர். அவ்வூரில் தனித்து வாழும் இசக்கிக் கிழவிக்கு உதவுவதற்கு யாரும் இல்லை. முதுமையினால் உடலும் நடையும் தளர்ந்து போனவள். அதற்காக யாரிடமும் கையேந்தி வாழ விரும்பாதவள். வேர்வை சிந்தி உழைத்து உண்ண வேண்டும் என்று எண்ணுபவள். இதற்காகப் புட்டு வித்துத் தன் வயித்துப்பிழைப்பைத் தேடிக் கொண்டாள். வெங்கலப் பாத்திரத்தில் வைத்திருக்கும் அவள் சமைத்த புட்டை உண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேணும். ஊர்த்திருவிழா நாள்களில் புட்டுக்காகக் கூட்டம் அலை மோதும். அந்நாள்களில் இரவெல்லாம் கண் முழித்துப் புட்டு சமைப்பதற்கான வேலைகளைச் செய்வாள்.

| மயங்கொலி எழுத்துகளைஅறிதல் | செயல்பாடு – 9 |
|---|---|

உரிய எழுத்துகளை நிரப்பிப் பழமொழிகளை உருவாக்குக.

இ _____க்கும் காலம் வந்தால் பிறக்கும் ஈசலுக்கும் சி _____ கு. ( று, ற )

எ _____ ம்புக்குத் தெரியாத க _____ ம்பு இல்லை. ( று, ரு )

அ _____ ண்மனை உறவைக்காட்டிலும் அடுக்களை உ_____ வு மேல். ( ற, ர )

| எதிர்ப் பால் சொற்களை அறிதல் | செயல்பாடு – 10 |
|---|---|

வண்ண எழுத்துள்ள சொற்களுக்கு உரிய எதிர்ப் பால் சொற்களை அறிந்து தொடர்களை நிறைவு செய்க.

( பேடும், பாணனும், ஆயனும், எயிற்றியும், ஐயன், பெண்ணும்)

1. ஆணும் பெண்ணும் சமம்.
2. சேவலும் __________ பறவைகள்.
3. __________ ஆய்ச்சியும் முல்லை நில மக்கள்.
4. எயினனும் __________ பாலை நில மக்கள்.
5. __________ பாடினியும் சங்ககாலத்துப் புலவர்கள்.
6. தந்தை தாயை, __________ ஐயை என்பர்.

| சொல் விளையாட்டு | செயல்பாடு – 11 |
|---|---|

## குறுக்கெழுத்துப்போட்டி

கீழுள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | ■ |
| 3 | | | ■ | 4 | | |
| | 5 | | | | ■ | |
| 6 | | | | | | 7 |
| | | | | | 8 | ■ |

### இடமிருந்து வலம்

1. சிறுமியர் கற்களைப் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டு (6)
3. ஏறுதழுவுதல் நடைபெறும் நிலம் (3)
4. விளையாட்டில் வெற்றிபெற்றவர்களுக்கு வழங்கப்படுவது (4)
5. ஊர்த்திருவிழாக் காலங்களில் பானையை உறியில் கட்டி அடித்து ஆடும் விளையாட்டு (4)
6. போர் நடைபெறும் இடத்தைப் போர்க் __________ என்பர் (3)

### வலமிருந்து இடம்

7. ‘இளையோர்’ என்பதன் எதிர்ச்சொல் (4)
8. பண்டைய மகளிர் நண்டு, ஆமை ஆகியவற்றைப் பயன்படுத்தி விளையாடும் ஆட்டம் (6)

### மேலிருந்து கீழ்

1. மதுரையில் யானைப்போர் நடைபெற்ற மைதானம் (4)
2. பாடிக்கொண்டே விளையாடும் தமிழரின் வீர விளையாட்டு (3)

### கீழிருந்து மேல்

7. ஏறுதழுவுதலின்போது முழக்கப்படும் போர் இசைக்கருவி (3)

| பாடல் எழுதுதல் | செயல்பாடு – 12 |
|---|---|

கோடிட்ட இடத்தில் ‘கலை’ என்னும் சொல்லை நிரப்பிப் பாடலை நிறைவு செய்க.

சிலம்பக்கலை நமது ___________
சிறுவருக்கும் உரிய ___________

உலகிலுள்ளோர் போற்றும் ___________
உயர்ந்தகலை சிலம்பக் ___________

தற்காப்பிற்கு ஏற்ற ___________
தமிழர் கலை சிலம்பக் ___________

கற்பதற்கு உரிய ___________
காலமெல்லாம் வாழும் ___________

தொன்றுதொட்டு இருக்கும் ___________
துணிவுடைமை வளர்க்கும் ___________

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. நிரப்புக.** 3 x 1 = 3

அ. சிவபெருமான் விரும்பிச் சூடும் பூ ___________

ஆ. தமிழரின் வீர விளையாட்டு ___________

இ. விளையாட்டின் அடிப்படை நோக்கம் ___________

**2. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

அ. பகுபத உறுப்புகளின் எண்ணிக்கை

அ. 4 ஆ. 6 இ. 8 ஈ. 10

ஆ. கீழுள்ளவற்றில் எழுத்துத்தொடர் மொழி எது ?

அ. பூ ஆ. கை இ. தை ஈ. வீடு

இ. ‘சேவல்’ என்பதன் எதிர்ப் பால் பெயர் என்ன ?

அ. பேடு ஆ. குட்டி இ. கன்று ஈ. குருளை

ஈ. ‘வேர்வை’ என்பதன் திருந்திய சொல்

அ. வேற்வை ஆ. வேர்த்தல் இ. வியர்வை ஈ. வியற்வை

உ. அரசனைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி ___________

அ. பூ ஆ. கோ இ. கா ஈ. ஆ

**4. குறட்பாவை நிறைவு செய்க.** 1 x 2 = 2

தொட்டனைத்து ஊறும் ___________ மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் ___________ .

தமிழ்

# எங்கள் தமிழ்

* இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு
இன்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு – எங்கள்
கதியில் உயர்ந்திடயாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் – தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில் (இனிமைத்)

தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே – வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம் – இன்பத்
தமிழ்குன்று மேல்தமிழ் நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு
தமிழ்என்று தோள்தட்டி ஆடு – நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு! (இனிமைத்) *

– பாரதிதாசன்

சொற்பொருள்: கதி – துணை; பேறு – செல்வம்; நனி – மிகுதி ( மிக்க ); தரம் – தகுதி; புவி – உலகம்.

**பொருள்:** இனிமை, இன்பம், அமுது, கனிச்சாறெனத் திகட்டும் சுவைமிக்கது எம் தமிழ். இத்தமிழ்ச்சொல்லினும் சுவைமிக்க சொல் வேறெங்கும் இல்லை. அச்சுவை மிக்க மொழியின்மீது தமிழ் மக்களுக்குக் காதல் மிக உண்டு. ஆதலால், தமிழ் எங்கள் உயிரென்பதனாலே எவரையும் வெல்லுந்திறமுண்டு இப்புவிமேலே. எம் தமிழ் எங்கள் விழியாதலால் அதன் ஒளி குன்றினால் நாடே இருளில் மூழ்கிவிடும். எனவே, தமிழிருக்கும்வரையே தமிழ் மக்களும் இருப்பர். ஆதலால், நாளும் அதற்குத் தொண்டுசெய்வோம். நம் வாழ்வு தமிழென்று தோள்தட்டி ஆடுவோம்; அது தரணியில் நாளும் வெற்றிபெறப் பாடுபடுவோம்.



**ஆசிரியர் குறிப்பு**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | சுப்புரத்தினம். பாரதியார்மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் எனத் தன் பெயரை மாற்றி அமைத்துக்கொண்டார். |
| பெற்றோர் | : | கனகசபை – இலக்குமியம்மாள் |
| கல்வி | : | தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியவற்றில் புலமை மிக்கவர். |
| இயற்றியவை | : | குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேர தாண்டவம், இருண்ட வீடு, தமிழச்சியின் கத்தி, பிசிராந்தையார், குறிஞ்சித் திட்டு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம் முதலியன. |
| காலம் | : | 29.04.1891 – 21.04.1964. |
| நூற்குறிப்பு | : | இப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் என்னும் கவிதைத் தொகுதியில் எங்கள் தமிழ் என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. |

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.

   அ. தமிழ் எங்கள் ________.

   ஆ. இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல ________.

2. பொருள் தருக.

   அ. கதி = ________ ஆ. பேறு = ________ இ. நனி = ________

### ஆ. குறுவினா

பாரதிதாசன் – குறிப்பு எழுதுக.

### இ. சிறுவினா

தமிழின் சிறப்பைப் பாரதிதாசன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

## சீவகசிந்தாமணி

வீழ்ந்து வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு
ஊழ்ந்து தோலுரிப் பனபோல் ஒத்த மற்றவற் றருவி
தாழ்ந்து வீழ்ந்தவை முழவின் ததும்பின் மதுகரம் பாடச்
சூழ்ந்து மாமயி லாடி நாடகம் துளக்குறுத் தனவே.

– திருத்தக்கதேவர்

பொருள் : மலையின்மீது வெண்மேகங்கள் தவழ்ந்து செல்கின்றன. அவ்வாறு மலையைவிட்டு வெண்மேகம் நகர்வது பாம்பு தோலுரிப்பதனைப் போன்று இருக்கிறது. மேகம் நகர்ந்துவிட்டபின், அம் மலையானது தோலுரிக்கப்பட்ட பாம்புபோல் இருக்கிறது. அங்கே வீழ்கின்ற அருவியின் ஒலி, மத்தளம்போன்று ஒலிக்கின்றது. தேன் உண்ணும் வண்டுகள் பாடுகின்றன. மயில்கள் ஆடுகின்றன. ஆகையால், இக்காட்சி ஒரு நாடகம் நடப்பது போன்று இருக்கிறது.

சொற்பொருள்: விண் – வானம்; வரை – மலை; முழவு – மத்தளம்; மதுகரம் – தேன் உண்ணும் வண்டு.

ஆசிரியர் குறிப்பு : திருத்தக்கதேவர் சோழர் அரச குலத்தில் பிறந்தவர். இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர். இவரது காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு ஆகும். இவர் பாடிய மற்றொரு நூல் நரி விருத்தம் ஆகும்.

நூற்குறிப்பு : ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சீவகசிந்தாமணி. இந்நூலின் கதைத் தலைவன் சீவகன். அவன் பெயரை இணைத்துச் சீவகசிந்தாமணி என இந்நூல் பெயர் பெற்றது என்பர். இந்நூலுக்கு மணநூல் என்னும் வேறு பெயரும் உண்டு.

### மாதிரி வினாக்கள்

அ. புறவயவினாக்கள்

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

திருத்தக்கதேவர் இயற்றிய வேறு நூல்

அ. கரி விருத்தம் ஆ. நரி விருத்தம் இ. பரி விருத்தம்

ஆ. குறுவினாக்கள்

1. சீவகசிந்தாமணி – குறிப்பு எழுதுக.
2. திருத்தக்கதேவர் – குறிப்பு எழுதுக.

இ. சிறுவினா

சீவகசிந்தாமணிப் பாடலின் நாடகக் காட்சியை விளக்குக.

# ஓவியக்கலை



எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்கள் மனங்களைக் கொள்ளைகொண்டு வியக்கவைக்கும் விந்தை மொழி, ஓவியம். காண்பவரைக் கவர்ந்திழுத்து உள்ளங்களைத் தன்வயப்படுத்தும் உயர்ந்தகலை ஓவியக்கலை. ஓவியம் பேசும் செய்திகள் பல; உணர்த்தும் கருத்துகளோ மிகப்பல.

தமிழகத்தில் தொன்றுதொட்டு விளங்கிவந்த பாரம்பரியக் கலைகள் பல. அவற்றுள் பல, காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு அழிந்துபோயின. எஞ்சிய சில, தமிழர்களின் கலைத்திறன்களையும் கலைநுட்ப அறிவையும் உலகோர்க்கு எடுத்துக்காட்டும் ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன. தமிழர் வளர்த்த நுண்கலைகளின் வரிசையில் ஓவியக்கலை முன்னணியில் நிற்கிறது.

பழங்கால மக்கள், தம் உள்ளக் கருத்துகளைப் புலப்படுத்த பாறைகளிலும் குகைகளிலும் கீறி எழுதினர். தம் எண்ணத்தைச் சித்திரம் வரைந்து வெளிப்படுத்தினர். இவற்றைத் தொல்பொருள் ஆய்வுகளாலும் இலக்கியச் சான்றுகளாலும் அறிந்துகொள்ள முடிகிறது.

கி.மு. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்தனர். தாம் தங்கிய மலைக்குகைகளிலும் பாறைகளிலும் கோட்டோவியங்கள் வரைந்தனர். அவற்றைத் தற்காலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கண்டுபிடித்து வெளிக் கொணர்ந்துள்ளனர்.

தமிழகத்தில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இடங்களில் ( மான், போர் செய்தல், விலங்கு வேட்டை ஆகியனவற்றைக் குறிக்கும்) குகைஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரையப்பட்டன. தாம் வரைந்த ஓவியங்களை முதலில் கண்ணெழுத்து என்றே வழங்கியுள்ளனர். தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் இருந்ததனைப் பரிபாடல், குறுந்தொகை செய்யுள் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. சீனமொழியிலும் எழுத்துகள் உருவங்களாக உள்ளன. எனவே, பழங்கால மக்கள் சித்திர எழுத்துகளால் கருத்துகளைப் புலப்படுத்தினர். அவையே நாளடைவில் மொழிக்குறியீடுகளாக வளர்ந்துள்ளன.

ஓவியம் வரைதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு முதலியன அடிப்படையாகும். இவ்வாறு வரையப்படுபவை கோட்டோவியங்கள் எனப்படும். அவ்வரைகோடுகள்மேல் சிவப்பு, கறுப்பு, மஞ்சள், நீலம் முதலிய வண்ணங்கள் பூச, அழகிய ஓவியங்களாக உருவெடுக்கும்.



நடுகல் சிற்பங்கள்

தொல்காப்பியம் நடுகல் வணக்கம் பற்றிக் கூறுகிறது. நடுகல்லில் போரில் வீரமரணம் எய்திய வீரனது உருவம், பெயர், பெருமைக்குரிய செயல் முதலியனவற்றைப் பொறிக்கும் பழக்கம் இருந்தது. சிற்பி, தான் செதுக்கவிருக்கும் உருவத்தை முதலில் வரைந்து பார்த்த பின்னரே, அவ்வோவியத்தைக்கொண்டு கல்லில் உருவம் அமைத்தல் மரபு. இதன்படி ஆராய்ந்து நோக்கினால் செதுக்குவதற்கு ஓவியம் துணை புரிந்ததனையும், ஓவியம் முன்னரே வளர்ந்திருந்ததனையும் உணர முடிகின்றது.

ஓவியக்கலை ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி எனப் பல பெயர்களால் வழங்கப்பெற்றது. ஓவியக் கலைஞர் ஓவியர், ஓவியப்புலவன், கண்ணுள் வினைஞன், சித்திரக்காரர், வித்தக வினைஞன், வித்தகர், கிளவி வல்லோன் என அழைக்கப்பட்டார். ஓவியர் எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணைகொண்டு எழுதுவோராதலின் கண்ணுள் வினைஞர் எனப் புகழப்பெற்றார்

நச்சினார்க்கினியர் தம் உரையில் ஓவியருக்கு, 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்' என இலக்கணம் வகுத்திருப்பது எத்துணைப் பொருத்தம் பார்த்தீர்களா? ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமைபெற்ற ஆசிரியர் ஓவியப் புலவன் எனப் போற்றப்பட்டார்.

ஓவியக் கலைஞர் குழுவை ஓவிய மாக்கள் என்றழைத்தனர். ஆண் ஓவியர் சித்திராங்கதன் எனவும், பெண் ஓவியர் சித்திரசேனா எனவும் பெயர் பெற்றிருந்தனர்.



ஆடல் மகள் மாதவி, 'ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள்' எனச் சிலம்பு பகர்கிறது. இதிலிருந்து ஓவியக் கலைக்கெனத் தனி இலக்கண நூல்கள் இருந்தன என்பதனைத் தெரிந்துகொள்ளலாம்.

### வரைகருவிகள்

பல்வகைக் காட்சிகள், உருவங்கள் வரைய ஓவியர் அக்காலத்தில் பல்வகைக் கருவிகளைப் பயன்படுத்தினர். வண்ணந்தீட்டும் கோல் தூரிகை, துகிலிகை, வட்டிகை எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு வட்டிகைப் பலகை எனப் பெயரிட்டிருந்தனர்.

### வரைவிடங்கள்

அக்காலத்தில் ஓவியங்கள் வரைவதற்கென்று தனியே இடங்கள் அமைந்து இருந்தன. இங்ஙனம் ஓவியம் வரையப்பட்ட இடங்கள் சித்திரக்கூடம், சித்திரமாடம், எழுதுநிலை மண்டபம், எழுதெழில் அம்பலம் என வழங்கப்பட்டன. இறை நடனம் புரிவதற்கே சித்திர சபை ஒன்றனை ஏற்படுத்தியுள்ளனர். இவற்றிலிருந்து ஓவியக்கலையில் தமிழர்க்கு இருந்த ஈடுபாட்டையும், கண்ணுகர் விருப்ப உணர்வையும், மக்களிடம் அதற்கிருந்த செல்வாக்கையும் மேன்மையையும் அறியலாம்.

அரசர் வாழும் அரண்மனை அந்தப்புரங்கள், செல்வர் வாழும் வளமனைகள், மாளிகைகள், ஆடலரங்குகள், கோவில் மண்டபங்கள், பொதுமன்றங்கள் முதலிய இடங்களில் கட்டடச் சுவர்கள், மேற்கூரைகள், தூண்களில் ஓவியங்களை வரைந்தனர். ஓவியத்தால் மக்கள் வீடுகளை அலங்கரித்தனர்.

வளங்கொழித்த மக்களின் இல்லங்களில் அழகிய ஓவியங்கள் பல தீட்டப் பட்டிருந்தன. புறநானூற்றில், ஓவத்தனைய இடனுடை வனப்பு என வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்ப வைத்துக் கவிஞர் போற்றுகிறார். சுடுமண் சுவர்மீது வெண்சுதை (சுண்ணாம்பு) பூசிச் செஞ்சாந்துகொண்டு ஓவியங்கள் தீட்டினர்.

அதுமட்டுமன்றி மரப்பலகை, துணிச்சீலை, திரைச்சீலைகளில் ஓவியம் எழுதினர். நாடகமேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்கினவற்றை 'ஓவிய எழினி' கொண்டு அறிகிறோம். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும் என்னும் பழமொழி இவ்வாறுதான் உருவாயிற்று.

வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதனைப் புனையா ஓவியம் என்றழைத்தனர். இன்றும், இது மென்கோட்டு ஓவியமாக நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இனி, எவ்வெவற்றை ஓவியங்களாக்கிக் கண்டு மகிழ்ந்தனர் என்பதனைக் காண்போமா ?

இயற்கைக் காட்சிகள், கற்பனைக் காட்சிகள், சமுதாய வாழ்க்கை முறைமை, இதிகாச புராணக்கதைகள் என்பன ஓவியத்திற்குரிய கருப்பொருள்களாயின. ஓவியர்கள் சோதிடக்கலை, வானநூல், கதைகள் முதலியவற்றைக் கற்றுணர்ந்து செவ்வனே சித்திரம் தீட்டினர். ஆடு முதலான பன்னிரண்டு இராசிகளையும்,



விண்மீன்களையும் வரைந்த செய்தி, நெடுநல்வாடை என்னும் சங்க நூல் தரும் அரிய செய்தியாகும். ஓவியங்களில் நிற்றல், இருத்தல், கிடத்தல் ஆகிய மனித இயல்புகளையும் வீரம், அமைதி, சினம், வியப்பு, உவகை முதலிய மெய்ப்பாடுகளையும் உத்தமம், மத்திமம், அதமம் மற்றும் தசதாளம், நவதாளம், பஞ்சதாளம் முதலிய அளவுகளையும் வலியுறுத்துவது தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளாக விளங்குகின்றன.

இங்ஙனம், சங்க காலத்தில் செழித்திருந்த ஓவியக்கலை இடைக்காலத்தில் சிதைந்து மறைந்துபோகத் தொடங்கியது. மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள் பல்லவப் பேரரசர்களாவர்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட முதலாம் மகேந்திரவர்ம பல்லவன், கலையார்வம் மிக்கவன். மகேந்திரவர்மன் காலத்தில் ஓவியக்கலை எழுச்சியுற்று உயர்நிலையை எட்டியது. இம்மன்னனே சிறந்த ஓவியனாகப் புகழ்பெற்றிருந்தான். கல்வெட்டுகள் இம்மன்னனைச் சித்திரக்காரப்புலி எனப் புகழ்கின்றன. தட்சிணசித்திரம் என்னும் ஓவிய நூலுக்கு இம்மன்னன் உரை எழுதியுள்ளான். இச்செய்தியிலிருந்து மகேந்திரவர்மன் ஓவியக்கலையின்மீது கொண்டிருந்த பற்றினையும் ஆர்வத்தையும் உள்ளக் கிடக்கையையும் ஊகித்தறியலாம்.

### சித்தன்னவாசல்

மகேந்திரவர்மன் காலத்திற்குப் பின்னர்த் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த அரசர்கள் ஓவியக்கலையை வளர்த்து வந்துள்ளார்கள். பனமலை, திருமலை, மாமல்லபுரக் குகைக்கோவில், மாமண்டூர், காஞ்சிக் கைலாசநாதர் கோவில் முதலிய இடங்களில் பல்லவர் கால ஓவியங்கள் சிதைந்த தோற்றத்துடன் காணப்படுகின்றன. பார்வதி உருவம், கின்னரர், கின்னரி, கந்தர்வர்

ஓவியங்கள் காண்போரை மயக்குவன. திருநந்திக்கரையில் சேரர் கால ஓவியங்கள் கிடைத்துள்ளன. புதுக்கோட்டைக்கு அருகே சித்தன்னவாசல் என்னும் குகைக்கோவில் ஓவியங்கள், ஓவியக் கருவூலங்களாக வைத்துப் போற்றத்தகுந்தன. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் அவனிப சேகர ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில், மதுரை ஆசிரியர் இளம்கௌதமன் இவ்வோவியங்களை வரைந்தார் எனக் கல்வெட்டுச் செய்தி அறிவிக்கின்றது. அங்குள்ள தாமரைத்தடாகம், ஆடல் அணங்குகள், அரசன், அரசி ஓவியங்கள் நம் கண்ணைக் கவர்வன.



சித்தன்னவாசல் ஓவியம்

சோழர்கால வனப்புமிக்க ஓவியங்களைத் தஞ்சைப் பெரியகோவிலில் கண்டு மகிழலாம். அவற்றிலுள்ள கவின்மிகு கயிலைக்காட்சி கண்களுக்கு விருந்தளிப்பன. சேரமான், சுந்தரர் கயிலைசெல்லும் காட்சி, சிவபெருமான் முப்புரம் எரித்த காட்சி, சுந்தரரைத் தடுத்தாளும் கோலம், நாட்டிய மகளிர், மாமன்னன் இராசராசன், கருவூர்த்தேவர் முதலிய ஓவியங்கள் வரலாற்றுச் சிறப்பை உணர்த்துவன.

திருவரங்கம், திருப்பதி, தில்லை, திருவாரூர், குடந்தை, மதுரை, காஞ்சி முதலிய பல இடங்களில் விசயநகர நாயக்க மன்னர்களின் ஓவியங்கள் காணப்படுகின்றன. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ச்சி பெற்றது. ஓலைகளிலும், கண்ணாடிகளிலும், தந்தங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. வண்ணங்களின் வனப்புக்கேற்ப இரத்தினங்கள் பதிக்கப்பெற்றன. ஓவியர்களின் கைவண்ணங்களை இன்றும் கோவில் கூரைகளிலும் சுவர்களிலும் மரச்சிற்பங்களிலும் காணலாம்.

ஈராயிரம் ஆண்டுகளாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு, வளர்ந்துவரும் கலையாக ஓவியக்கலை உள்ளது. தமிழர் ஓவிய மரபு, காலம் பல கடந்து எதிர்காலத் தலைமுறையினரான உங்கள் கையிலும் தவழ்ந்து கொண்டிருக்கின்றது என்று நம்பலாம்தானே! என்ன, எங்கே கிளம்பிவிட்டீர்கள்! தூரிகை கொண்டு ஓவியம் வரைவதற்குத்தானே?

## மாதிரி வினாக்கள்

### அ. புறவயவினாக்கள்

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. சங்ககாலத்தில் ஓவியங்களை ________________ என அழைத்தனர்.
2. தொல்காப்பியம் ________________ வணக்கம் பற்றிக் கூறுகிறது.
3. இறை நடனம் புரிவதற்கு ஏற்படுத்தப்பட்டது ________________ சபை.
4. கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதனை ________________ என்றழைத்தனர்.
5. சித்திரக்காரப் புலி என அழைக்கப்பட்டவன் ________________.

### ஆ. குறுவினாக்கள்

1. ஓவியக்கலை எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டது ?
2. கோட்டோவியங்கள் என்றால் என்ன ?
3. வரைகருவிகள் எவையெவை ?
4. சோழர்கால ஓவியங்கள் எங்குக் காணப்படுகின்றன ?
5. நாயக்கர் கால ஓவியங்கள் எங்கெங்கு உள்ளன ?

### இ. சிறுவினாக்கள்

1. பழங்கால ஓவியங்களாகக் கண்டெடுக்கப்பட்டவை எவை ?
2. ஓவிய வரைவிடங்களாகத் திகழ்ந்தவை எவை ?
3. தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளை எவ்வாறு கண்டறிவது ?

### ஈ. நெடுவினாக்கள்

1. சித்தன்னவாசல் ஓவியங்களைப் பற்றி விவரிக்க.
2. அன்றுதொட்டு இன்றுவரை தமிழர்கள் ஓவியக்கலையில் ஆர்வமிக்கவர்களாக இருந்தார்கள் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

### படைப்பாற்றல் கல்வி

- உரைநடைப் பகுதியில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களாக நீ கருதுவனவற்றை அடிக்கோடிடுக.
- அருஞ்சொற்களுக்கு அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருளறிக.
- பாடப்பொருளைச் சிறுகுழுவில் கலந்துரையாடி மனவரைபடம் வரைக.

துணைப்பாடம்

# கொடைக்குணம்

( கர்ண மகாராசாவின் கொடைத்திறனைப்பற்றிப் பல வாய்மொழிப் புராண மரபுக் கதைகள் உள்ளன. அத்தகைய கதைகளில் ஒன்றனை இப்போது உங்களுக்குக் கூறப்போகிறேன் என்று பாட்டி கதையைக் கூறத் தொடங்கினார். பாட்டியைச் சுற்றி உட்கார்ந்திருந்த குழந்தைகள் ஆர்வத்துடன் கதை கேட்க ஆயத்தமாயினர். கர்ண மகாராசாவின் கொடைத்திறம் பற்றிய செய்திகள் புதிதுபுதிதாக நாளும் வந்துகொண்டே இருக்கின்றன. )

கர்ண மகாராசாவின் புகழ் பரவிக்கொண்டே இருந்தது. கர்ண மகாராசா ஒரு சிற்றரசன்தான். அவனுக்கு அந்த நாட்டைக் கொடையாகக் கொடுத்தவன் துரியோதனன். ஒருநாள் அமைச்சன் ஒருவன் துரியோதனனுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, ‘‘மகாபிரபுவே, நீங்கள்தான் இந்த நாட்டின் சக்கரவர்த்தி. தங்களிடம் எல்லாவிதமான அதிகாரங்களும், செல்வமும், படையும் உள்ளன. தாங்கள் தானமாகக் கொடுத்த அங்கதேசம் என்ற சிறிய நாட்டைத்தான் கர்ணன் ஆளுகிறான். கர்ணனும் உங்கள் ஆளுகைக்கு உட்பட்டவன்தான், ஆனால், இந்த நாட்டில் இப்போது, உங்களுக்கு இல்லாத புகழ் கர்ணனுக்குத்தான் இருக்கிறது, அஃது எப்படி நியாயமாகும்?” என்று குதர்க்கமாக வினவினான் அமைச்சன்.

துரியோதனனுக்கு அமைச்சன் கூறுவது முறையாகவே தோன்றியது. எனவே, துரியோதனன் அமைச்சனிடம், ‘‘நானும், கர்ணன் மாதிரி புகழ் பெற நீர்தான் யோசனை கூற வேண்டும்’’ என்று கூறினான். அமைச்சன், ‘‘மகாபிரபுவே, நாளைமுதல் தாங்களும் கர்ணனைப்போல் கொடை கொடுக்கத் தொடங்கிவிடுங்கள். உங்களுக்குக் கொடைவள்ளல் என்ற புகழ் கிடைத்துவிடும்’ என்று கூறினான்.

துரியோதனன் “சரி, அப்படியே செய்கிறேன்” என்றான். உடனே அமைச்சன், “மகாபிரபுவே, இப்படி ஓர் அருமையான யோசனை கூறிய எனக்குக் கொடையாக ஏதாவது கொடுக்கக் கூடாதா?’’ என்று கேட்டான்.

அதற்குத் துரியோதனன், “இப்படி யோசனை சொல்வதற்காகத்தான் உமக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கிறேனே, தனியே வேறு கேட்கிறீரே! முதலில் இடத்தைக் காலி பண்ணும்’’ என்றான் துரியோதனன். அமைச்சன் அப்போதுதான் நினைத்தான். கொடை கொடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும் என்றும், பிறவிக்குணம் இல்லாமல் கொடை கொடுக்கிற மனம் தானாக வாராது என்றும் நினைத்துக் கொண்டான்.

மறுநாள், “துரியோதன மகாராசாவும் கொடை கொடுப்பார்’’ என்று அமைச்சன் அறிவித்தான். அந்த அறிவிப்பைக் கேள்விப்பட்ட கண்ணன் தள்ளாத முதியவர்போல், தன் உருவத்தை மாற்றிக்கொண்டு துரியோதனனிடம் வந்து, ‘‘ஐயா, எனக்கு ஒரு

தமிழ்

பொருள் தானமாக வேண்டும்'' என்று கேட்டார். 'பெரியவரே, உமக்கு என்ன வேண்டும் என்று கேளும் தருகிறேன்' என்றார் துரியோதனன். அதற்கு அந்தப் பெரியவர் வேடத்தில் வந்த கண்ணன், ''இன்னும் ஒரு மாதம் கழித்து இதே நாளில் வந்து, நான் விரும்பும் பொருளைக் கேட்டுப் பெற்றுக்கொள்கிறேன்'' என்றார். துரியோதனன், 'சரி எப்போது வேண்டுமானாலும், என்ன பொருள் வேண்டுமானாலும் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் என்று வாக்குக் கொடுத்தான். துரியோதனனிடம் வாக்குப் பெற்றுக்கொண்டு சென்ற கண்ணன், அன்றுமாலையே, மழைக்கடவுளை அழைத்து, ''நாளைமுதல் ஒரு மாதத்திற்கு அடைமழை பெய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். அன்றுமுதல் ஒரு மாதமாகத் துரியோதனனின் நாடெங்கும் அடைமழை பெய்தது. கண்ணன் ஒரு மாதம் கழித்து முதியவர்போல வேடமிட்டுத் துரியோதனனைக் காண வந்தார்.

துரியோதனன், அந்த முதியவரைப் பார்த்து, 'யார் நீ?' மழையில் நனைந்து கொண்டு, இந்த நேரத்தில் என்றான்.

''நான் உங்களை முன்பே சந்தித்துள்ளேன்; எனக்குக் கொடையாக ஒரு பொருளைத் தரவேண்டும் என்று ஒருமாதத்திற்கு முன்பு கேட்டிருந்தேன். தாங்களும் தருகிறேன் என்று வாக்குக் கொடுத்துள்ளீர்கள், நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார்.

துரியோதனனுக்கு அப்போதுதான், அந்த நிகழ்வு நினைவுக்கு வந்தது. அமைச்சனும் உடன் இருந்தான். அவனும், 'ஆமாம் மகாராசா! தாங்கள் வாக்குக் கொடுத்தீர்கள்' என்று நினைவூட்டினான். ''அதற்கென்ன இப்போது? என்ன வேண்டுமோ கேட்டுப் பெற்றுக்கொண்டு செல்லும்'' என்று மிகவும் அலட்சியமாகக் கூறினான். முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன், ''மகாபிரபுவே, கொடைவள்ளலே, எனக்கு இப்போதே ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகுவேண்டும். என் மகளின் திருமண நிகழ்ச்சிக்கு அடுப்பெரிக்க, காய்ந்த விறகு தேவையாக இருக்கிறது'' என்றான்.

துரியோதனன் சினத்துடன், முதியவர் வேடத்தில் இருக்கும் கண்ணனைப் பார்த்து, ''உமக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா! இங்கு ஒருமாதமாக மழை பெய்துகொண்டே இருக்கிறது. இங்கு, நாங்கள் அரண்மனை பயன்பாட்டிற்கே விறகு இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் நீர் வந்து காய்ந்த விறகு கேட்கிறீரே! பொன் பொருள் ஏதாவது தேவை என்றால் கேளும் தருகிறேன். விறகு மட்டும் கேட்காதீர்'' என்று கூறினான்.

முதியவர் தயங்கியபடியே, ''கொடைவள்ளலே, தாங்கள் எனக்குக் கொடுத்த வாக்கு என்னாவது?'' என்று கேட்டார். முதியவர் கூறியதனைக் கேட்ட துரியோதனன் மீண்டும் சினத்துடன் ''வாக்காவது போக்காவது இடத்தைக் காலி பண்ணும்'' என்றான்.

அமைச்சன், ''நம் நாட்டில் கர்ணன் என்று ஒரு வள்ளல் இருக்கிறான்; அவனிடம் போய்க் கேள், தருவான் உமக்கு'' என்றான். அமைச்சன் சொன்னதனைக் கேட்ட முதியவர், ''நீர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கர்ண மகாராசாவைத்தான் பார்க்கப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு நேரே, கர்ண மகாராசாவின் அரண்மனைக்குச் சென்றார், முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன்.

முதியவர் ஒருவர், தன்முன் மழையில் நனைந்துகொண்டு வந்து நிற்பதனைப் பார்த்த கர்ண மகாராசா, முதலில் முதியவருக்கு உடுத்திக்கொள்ள மாற்று உடையும் தலையைத் துவட்டிக்கொள்ள துண்டும் கொடுக்குமாறு உத்தரவிட்டார்.

முதியவரும் அதன்படியே உலர்ந்த ஆடைகளை உடுத்திக்கொண்டார். அவருக்குக் குளிருக்கு இதமாகப் பருகுவதற்குச் சூடாகப் பாலும் கொடுக்கப்பட்டது. தன்னை இளைப்பாற்றிக்கொண்ட பெரியவர்,

“ஐயா, கர்ண மகாராசாவே! நாளைக்குக் காலையில் என் மகளுக்குத் திருமணம் நடைபெற உள்ளது. அதற்குச் சமையல் செய்ய ஒரு வண்டி நிறைய காய்ந்த விறகு வேண்டும்; காய்ந்த விறகைக் கொடையாகக் கேட்கவே நான் இங்கு வந்துள்ளேன்” என்றார். கர்ண மகாராசா, தன் அரண்மனைப் பணியாளர்களை அழைத்து, ‘நம் நாட்டுக் காட்டில் அரண்மனை ஒன்றுள்ளது. அது முழுவதும் பாழடைந்திருக்கிறது. அந்த அரண்மனையில் நிறைய தூண்களும் உத்திரங்களும் உள்ளன. அவை மழையில் நனையாமல் காய்ந்த நிலையில் இருக்கும். நீங்கள் ஒரு வண்டி நிறைய அவற்றை எடுத்து ஏற்றி, அவை நனையாமல் இருக்க அவற்றின்மேல் ஓலைகளைக் கூரைபோல் வேய்ந்து, பெரியவரின் ஊருக்கு அனுப்பி வையுங்கள்’ என்று ஆணையிட்டார்.

கர்ண மகாராசா சொன்னபடியே பணியாளர்களும் காட்டு அரண்மனையில் உள்ள தூண்களையும் உத்திரங்களையும் பெயர்த்து எடுத்து, ஒரு வண்டியில் ஏற்றி, அவை நனையாமல் இருக்க பனை ஓலையால் கூரையும் வேய்ந்து வண்டியைத் துரியோதனனின் மாளிகை இருக்கும் தெருவழியே ஓட்டிச் சென்றனர்.

“பெரியவரே, காய்ந்த விறகு கிடைத்துவிட்டது போலிருக்கே” என்று அமைச்சன் கேட்க, முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன், ‘ஆமாம், காய்ந்த விறகு கிடைத்துவிட்டது. கொடைவள்ளல் கர்ண மகாராசாதான் கொடுத்தார்’ என்று உரக்கக் கூறினார். கொடைவள்ளல் என்னும் சொல்லைப் பெரியவர் வேண்டுமென்றே அழுத்தி உச்சரித்துக் கூறினார்.

அமைச்சனுக்கு அப்போதுதான், கொடைகொடுக்க செல்வம் மட்டும் இருந்தால் போதாது; கொடை உள்ளமும் கூர்த்த அறிவும் வேண்டும் என்னும் உண்மை புரிந்தது. சிரித்துக் கொண்டே நடந்தார் முதியவர் வேடத்தில் இருந்த கண்ணன்.

“இப்போது புரிகிறதா குழந்தைகளே, கர்ண மகாராசாவின் கொடைத்திறம்!” என்று கூறிக் கதையை முடித்தார் பாட்டி.

நன்றி : கழனியூரன், தாத்தா பாட்டி சொன்ன கதைகள்

## மாதிரி வினா

கட்டுரை வினா’

‘கொடைக்குணம்’ கதையைச் சுருக்கி எழுதுக.

# அணியிலக்கணம்

மாணவர் : வணக்கம், ஐயா.

ஆசிரியர் : வணக்கம், அனைவரும் உட்காருங்கள். எல்லாரும் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடினீர்களா?

முத்தழகு : ஆம், ஐயா. பொங்கலன்று வீட்டைத் தூய்மை செய்து, நாங்களும் புத்தாடை புனைந்து, பொங்கலிட்டுக் கதிரவனை வணங்கி வழிபட்டு விருந்துண்டோம்.

ஆசிரியர் : எவ்வாறு நம்மை நாம் புத்தாடைகளாலும் அணிகலன்களாலும் அழகு செய்து கொள்கிறோமோ, அதுபோலப் புலவர்களும் தாங்கள் எழுதும் பாடல்களைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்துவர் என்பதனை அறிந்திருக்கிறீர்களா?

பூவிழி : அப்படியா, ஐயா! பாடல்களுக்கு அணிகளா? அதுபற்றிச் சொல்லுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஆம். அணி என்றால் அழகு என்பது பொருள். புலவர்கள் செய்யுளை அழகுபடுத்துவதனை, 'அணி' என்றே வழங்கினர். அவ்வாறான அணிகள், 'இயல்பு நவிற்சி', ' உயர்வு நவிற்சி' முதலியன.

செழியன் : இயல்பு நவிற்சியணி என்றால் என்ன, ஐயா ?

ஆசிரியர் : ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளவாறு கூறுவது இயல்பு நவிற்சியணி எனப்படும்.

தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவார்.

இப்பாடலில் தயிர் கடையும் ஆய மங்கையரின் தன்மை உள்ளவாறே அழகுபடச் சொல்லப்படுவதனைக் காணலாம்.

மங்கை : உயர்வுநவிற்சியணி பற்றியும் கூறுங்கள், ஐயா.

ஆசிரியர் : ஒருபொருளின் தன்மையை மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி எனப்படும். உயரமான மலையை 'விண்ணைத் தொடும் மலை' என வருணித்தல்; உயரமான வைக்கோல் போரை 'வானை முட்டும் வைக்கோல்போர்' என உயர்த்திக் கூறுதல்.

மாணவர் : நன்றி, ஐயா.

பயிற்சி

கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள அணிகளை எடுத்தெழுதுக.

1. தமிழ்மொழி இனிமையானது. ________________
2. வான்புகழ்கொண்ட தமிழ்நாடு. ________________
3. தென்னை மரம் உயரமானது. ________________

## மாதிரி வினாக்கள்

அ) குறுவினாக்கள்

1. அணி என்றால் என்ன?
2. இயல்பு நவிற்சியணி என்றால் என்ன? விளக்கம் தருக.
3. உயர்வு நவிற்சியணி என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## வகுப்பறைத்திறன்கள்

அ) பேசுதல் திறன்

நீ கண்டுகளித்த இன்பச் சுற்றுலாவைப்பற்றி ஐந்து மணித்துளிகள் பேசுக.

ஆ) எழுதுதல் திறன் : ஒரு கதையை உரையாடலாகவோ செய்தியாகவோ நாடகமாகவோ மாற்றி எழுதுதல்.

ஒரு நிகழ்வைக் கதையாகவோ நாடகமாகவோ மாற்றி எழுதுவதனால் மொழியாற்றலும் படைப்பாற்றலும் பெருகும்.

(எ.கா.) நரியின் சாயம் வெளுத்த கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தக் கதையை உரையாடலாக எழுதுவோம்.

சிங்கம் : யார் நீ, உன்னை இதற்குமுன் நான் பார்த்ததில்லையே ?

நரி : நான், இறைவனால் அனுப்பப்பட்ட இந்தக் காட்டின் அரசன்.

சிங்கம் : நீ சொல்வது உண்மைதானா ?

நரி : ஆமாம், உங்களை யெல்லாம் ஆளவந்திருக்கும் அரசன். என் ஆளுமைக்கு நீங்கள் எல்லாம் அடிபணிதல் வேண்டும்.

சிங்கம் : அப்படியே செய்கிறேன்.

நரி : எனக்குப் பசிக்கிறது. உணவுக்கு உடனே ஏற்பாடு செய்.

சிங்கம் : இப்பொழுதே செய்கிறேன்.

நாள்கள் நகர்ந்தன. ஒருநாள் மழைபெய்தபொழுது காட்டிலிருந்த நரிகள் ஊளையிட்டன.

அதனைக்கேட்ட நரியரசன், தன் இனப்பற்று மற்றும் பழக்கம் காரணமாகத் தானும் ஊளையிடத் தொடங்கியது. நரி ஊளையிட்டதனைக் கேட்ட சிங்கம், நரியை அடையாளங் கண்டு துரத்தியது. நரி, தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடி மறைந்தது.

பயிற்சி : தமிழுக்குத் தலைகொடுத்த குமணன் கதையை உங்கள் ஆசிரியரிடம் கேட்டறிந்து, அதனை உரையாடல் வடிவில் எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

### அ) நிறுத்தக்குறிகள்

செய்யுளையோ உரைநடையையோ படிக்கும்போது, பொருளைத் தெளிவாகப் புரிந்து படிக்கவும், உரிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் பயன்படுத்துவது நிறுத்தக்குறிகளாகும். நிறுத்தக்குறிகளுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**1. முற்றுப்புள்ளி ( . )**

ஒரு தொடர் முற்றுப்பெற்றதனைக் குறிக்க முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ.கா.) கண்ணன் பள்ளிக்குச் சென்றான்.

**2. காற்புள்ளி ( , )**

பல பொருள்களைத் தொடர்ந்து சொல்லும்போது, ஒவ்வொன்றின் பின்னும் காற்புள்ளி இடுதல் வேண்டும். (கடைசிச் சொல்லுக்குப்பின் காற்புள்ளி தேவையில்லை)

(எ.கா.) மா, பலா, வாழை முக்கனிகள்.

**3. அரைப்புள்ளி ( ; )**

ஓர் எழுவாய், பல பயனிலைகளைக் ( வினைமுற்றுகளை ) கொண்டு முடியும்பொழுது, ஒவ்வொரு பயனிலைக்குப் பின்னரும் அரைப்புள்ளி இடுதல் வேண்டும்.

(எ.கா.) சிந்தனைச்செல்வன் நன்றாகப் படித்தான்; முதல் மதிப்பெண் பெற்றான்; பரிசு கிடைத்தது.

**4. வினாக்குறி ( ? )**

ஒரு வினாத்தொடரின் இறுதியில் வினாக்குறி இடுதல் வேண்டும்.

(எ.கா.) பொற்கொடி பாடம் படித்துவிட்டாயா ?

**5. உணர்ச்சிக்குறி ( ! )**

ஒரு செய்தியை உணர்ச்சியாகக் கூறும்போது உணர்ச்சிக் குறியிடுதல் வேண்டும்.

(எ.கா.) என்னே, இப்பூவின் மணம்!

**6. ஒற்றை மேற்கோள் குறி ('...')**

ஓர் எழுத்தையோ சொல்லையோ சொற்றொடரையோ தனியே குறிக்கும் இடத்திலும், ஒரு சொற்றொடரில் நூலின் பெயர், பழமொழி முதலியன வருமிடத்திலும் ஒற்றை மேற்கோள் குறி இடுதல் வேண்டும். 'எழில்' என்றால் 'அழகு' என்பது பொருள்.

பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' மிகச் சிறந்த படைப்பு. 'சுத்தம் சோறு போடும்' என்பது பழமொழி. வண்ணமிடும்போதும், தடித்த எழுத்துகளில் எழுதும்போதும், அடிக்கோடு இடும்போதும் இக்குறி இடத் தேவையில்லை.

7. இரட்டை மேற்கோள் குறி ( "...") :

ஒருவர் கூறியதனை நேர்கூற்றாகக் கூறும்போதும், ஒரு தொடரை மேற்கோளாகக் கூறும்போதும் இரட்டை மேற்கோள் குறியிடுதல் வேண்டும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்றார் ஔவையார்.

பயிற்சி

பின்வரும் தொடர்களுக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

1. உன் பெயர் என்ன
2. என்னே இமயமலையின் உயரம்
3. இயல் இசை நாடகம் முத்தமிழாகும்
4. எழிலி என்னும் சொல் மேகம் என்னும் பொருளில் வரும்
5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது பழமொழி
6. இயல் இசை நாடகம் எனத் தமிழ் மூவகைப்படும்
7. திருக்குறளை இயற்றியவர் யார்
8. தமிழ்மொழி ஓர் உயர்தனிச் செம்மொழி
9. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ
10. அந்தோ இஃது என்ன கொடுமை

ஆ) தமிழெண்களை நினைவு கூர்க.

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | ____ | 6 | ____ |
| 2 | ____ | 7 | ____ |
| 3 | ____ | 8 | ____ |
| 4 | ____ | 9 | ____ |
| 5 | ____ | 10 | ____ |

இ) கட்டுரை எழுதுதல் : சுற்றுப்புறத் தூய்மை

ஈ) அகரவரிசையில் அமைத்தல்

கீழுள்ள சொற்களை அகரவரிசையில் அமைக்க.

மீன், மண், முன், மான், மூடி, மையல், மெல்ல, மௌவல், மோர், மேடு, மொட்டு, மிளகு.

## தயக்கமின்றித் தமிழிலேயே பேசுவோம்!

### இல்லத்தில் தந்தை–மகன் உரையாடல்

மகன் : டாடி, எனக்கு இந்த லெஸன் புரியல. எனக்குச் சொல்லிக் குடுங்க.

தந்தை : எந்த லெஸன் புரியல? புக்கைக் கொண்டுவா பாக்கலாம்.

மகன் : இந்தாங்க, டாடி.

தந்தை : கன்ஸ்யூமர் அவேர்னஸா?

மகன் : டீச்சர், இந்த லெஸன் நடத்தன அன்னிக்கு நான் லீவு போட்டுட்டேன். நாளைக்கு இந்த லெஸன்லெ டெஸ்ட் வைக்கிறாங்க.

தந்தை : அப்படியா, நான் சொல்லித் தறேன். நீ ஏதாவது திங்ஸ் வாங்க ஷாப்புக்குப் போறேன்னு வைத்துக்கொள். பார் எக்ஸாம்பிள், மம்மி உங்கிட்ட பணங்குடுத்து, பிரெட் பாக்கெட் வாங்கிட்டு வரச் சொல்றாங்க. நீ எப்படி வாங்குவே?

மகன் : என்ன டாடி, இது? ஷாப்ல பிரெட் இருக்கான்னு கேப்பேன். அவங்க குடுத்தவுடன் உடனே எவ்வளவு ருப்பீஸ்னு கேட்டுக் குடுத்திட்டு வருவேன்.

தந்தை : வேறென்ன செய்வாய்?

மகன் : வேறெதுவுமில்லெ.

தந்தை : பிரட் பாக்கெட்டெ கையிலெ வாங்கன ஒடனே என்ன செய்வே?

மகன் : வீட்டுக்கு வந்துடுவேன்.

தந்தை : இட்ஸ் ராங். மொதல்ல அந்த பிரட் பாக்கெட்ல சரியான எடை இருக்கான்னு பாக்கணும். நெக்ஸ்ட் அந்தப் பாக்கெட்ல மேனுபாக்சரிங் டேட், எக்ஸ்பயரி டேட், எம்.ஆர்.பி. ரேட் என்ன போட்டிருக்காங்கனு பார்க்கணும்.

மகன் : இதெ எல்லாம் ஏம் பாக்கணும். பாக்கலின்னா என்ன மிஸ்டேக் ஆகும்?

தந்தை : சில மேனுபாக்சரிங் கம்பெனிங்க வெயிட் குறைவாகூடப் பேக் பண்ணியிருப்பாங்க. அந்த பிரெட் எக்ஸ்பயரி டேட் முடிஞ்சிருக்கலாம்., எம்.ஆர்.பி. ரேட்டெவிட அதிகமா பணம் குடுத்து நாம வாங்கியிருக்கலாம். அதனால இதெல்லாம் கேர்புல்லா பாத்து வாங்கணும்.

தமிழர்களாகப் பிறந்த நாம், நம் இல்லத்திலேயே அன்றாட வாழ்க்கையில் பெரும்பகுதி ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுகிறோம் என்பதற்கு இவ்வுரையாடலைச் சான்றாகக் காட்டலாம். ஆங்கிலச்சொற்களைக் கலக்காமல் பேசுவதுதான் தமிழர்களாகிய நமக்கும் நம்மொழிக்கும் பெருமை.

இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களுக்கான தமிழ்ச்சொற்களை அறிந்து கொண்டு நல்ல தமிழில் பேசுக. இவ்வுரையாடலில் இடம்பெற்றுள்ள ஆங்கிலச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதி உரையாடல் அமைக்க.

## வாழ்க்கைத்திறன்

### மன அழுத்தங்களை எதிர்கொள்ளல்

பொருந்தாத எண்ணம், செயல், சிந்தனை ஆகியவற்றால் ஏற்படும் மனநிலையே மன அழுத்தமாகும். மன அழுத்தத்தை மேலாண்மை செய்யாவிடில் தீமையே பயக்கும். மனத்தை நல்வழியில் செலுத்த, படைப்பாற்றலில் ஈடுபடலாம். சமுதாய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதலும் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவும்.

ஏழாம் வகுப்பில் படித்து வரும் தேன்மொழி, அன்று காலையிலிருந்தே யாருடனும் பேசாமல் வருத்தத்துடன் இருந்தாள். அவள் நிலையைக் கண்ட அவள் தோழி தனம், காரணம் அறிய விரும்பினாள். தேன்மொழியின் தந்தைக்குத் திடீரென்று வந்த பணி மாறுதல் காரணமாக உடனடியாகத் தாங்கள் வேற்றூர்க்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதனைக் கூறுகிறாள். நண்பர்களை விட்டுப்பிரிந்து செல்வதனை நினைத்துத் தனக்கு வருத்தமாக இருக்கிறது என்றாள்.

தேன்மொழி, தன் மன அழுத்தத்தை எவ்வாறு எதிர்கொள்வாள் ?

இத்தகைய சூழலில் நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள் ?

## மதிப்புக்கல்வி

### நட்புறவு

வீட்டைவிட்டு வெளியுலகிற்கு வரும்பொழுது நாம் சந்திக்கும் மனிதர்தாம் எத்தனை வகையினர் ? எத்தகைய பண்பினர் ? என்னென்ன பழக்கத்தினர் ? நினைத்தாலே வியப்பாக இருக்கிறது அல்லவா ? இவர்கள் எல்லாரும் நல்லவர்களா ? தீயவர்களா ? எவ்வாறு அறிந்து நட்புக்கொள்வது ?

அவரவர் வளர்ந்த சூழல்களால் நல்லவராகவும் தீயவராகவும் அறியப்படுகிறார்கள். எனவே, பள்ளியில் பழகும்பொழுது ஒருவனுடைய நல்ல குணங்களையும் பழக்கங்களையும் அறிந்தபின்னால் அவனை நண்பனாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இவற்றையெல்லாம் ஆராயாமல், அருகில் உட்கார்ந்தவுடன் நம்முடன் முதன்முதலாகப் பேசியவன் என்ற வகையிலும் நட்புத் தொடங்கும். நாள் செல்லச்செல்ல அவனிடமுள்ள குற்றங்கள், குறைகள் தெரியவரும். அத்தகைய நேரங்களில் நட்புக் கொண்டவனிடமுள்ள குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி நம்மிடமுள்ள அன்பாலும், பொறுமைப் பண்பாலும் அவனைத் திருத்த முயற்சி செய்யலாம்.

இல்லையென்றால், அவன் நட்பை வேண்டாமென விட்டுவிடலாம். சரிதானே!

யாரிடமும் நட்புக் கொள்வதற்குமுன் நட்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு, நட்பு ஆகிய திருக்குறள் அதிகாரங்களைக் கற்று நட்புக் கொள்ளுதல் வேண்டும்.

கூடிப் பிரியேல் என்பது ஆன்றோர் வாக்கு.

## வளரறி செயல்பாடுகள்

| கேட்டல் திறன் | செயல்பாடு –1 |
|---|---|

பின்வரும் பத்தியைப் படிக்கக் கேட்டுக் கீழுள்ள வினாக்களுக்குச் சரியா தவறா என விடையளிக்க.

பாண்டித்துரை சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவர். இவர் மதுரைக்குச் சென்றபோது மதுரை அன்பர் சிலர், இவரைச் சொற்பொழிவு ஆற்றுமாறு வேண்டிக்கொண்டனர். இதற்காகத் திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் ஒருமுறை படித்துவிட்டுப் பேச எண்ணினார். இவ்விரு நூல்களையும் அன்பரிடம் கேட்டார். ஆனால், அன்பர்களோ அந்நூல்கள் தங்களிடம் இல்லை என்று கூறினர். இதனால் பாண்டித்துரை வருத்தமுற்றார். இந்நிலை மாற ஓர் அரிய திட்டத்தைத் தீட்டியது அவர் மனம்.

அத்திட்டத்தின் விளைவாகத்தான் 1901ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினான்காம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகலில் மதுரையிலுள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தார். இச்சங்கம் தமிழை வளர்த்ததோடு மட்டுமன்றித் தமிழ்வளர்க்கும் புலவர் பெருமக்களையும் வளர்த்தும் காத்தும் வந்தது. தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும்வகையில் நான்காம் தமிழ்ச்சங்கம் கண்டெடுத்த பாண்டித்துரையின் புகழ் தாய்த்தமிழ் உள்ளவரை நிலைத்திருக்கும்.

“ தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை” – பாரதிதாசன்.

### வினாக்கள்

1. பாண்டித்துரை சென்ற ஊர் மதுரை. (சரி/தவறு)
2. அன்பர் பாண்டித்துரையிடம் பாடலொன்று பாடுமாறு கேட்டுக்கொண்டனர். (சரி/தவறு)
3. பாண்டித்துரை அன்பர்களிடம் திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் கேட்டார். (சரி/தவறு)
4. மதுரையிலுள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. (சரி/தவறு)
5. 1910ஆம் ஆண்டு நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. (சரி/தவறு)

| படித்தல் திறன் | செயல்பாடு –2 |
|---|---|

பாடலைக் குரலேற்ற இறக்கத்துடன் வாய்விட்டுப் படிக்க.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் – அதில்
　　　　கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்!
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் – அங்கென்
　　　　ஆசை தீரவிளை யாடிவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல
　　　　ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
　　　　ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

– கவிமணி

| புரிந்து எழுதுதல் | செயல்பாடு – 3 |
|---|---|

கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து அட்டவணையை நிரப்புக.

## எழுவர் கொடுத்த கொடை


முல்லைக்கொடியின் கொழுகொம்பு பெறாத திகைப்பைக் கண்ணால் கண்டபின், தன் செல்வநிலையும், வாழ்வும் மறந்து, அதற்கு உதவுதலே உணர்வாய்த் தான் ஊர்ந்து வந்த தேரை அங்கு அதற்கு உரியதாக நிறுத்தி வந்தான் பாரி என்னும் வள்ளல். இரவலர்க்குக் குதிரைகளை வழங்கி நாட்டையும் நல்கியவன் காரி என்னும் வள்ளல். நீலநிறப் பட்டாடையை ஆலமர் செல்வனுக்குக் கொடுத்து வேண்டிய பொருள்களையும் ஊர்களையும் வந்தவர்க்கு எல்லாம் வழங்கி, எல்லாம் இழந்தவன் ஆய் என்னும் வள்ளல். பெறுதற்கு அரிதாய் வாழ்நாள் வளர்ச்சிக்கு உரியதாய் பெற்ற நெல்லிக்கனியையும் தான் உண்ணக் கருதாமல், புலவர் நெடிது வாழ விழைந்து கொடுத்து மகிழ்ந்தவன் அதியமான். நண்பர்தம் இல்லறம் நடத்தற்கு வேண்டுவன நல்கிப் புகழ் பெற்றவன் நள்ளி. கூத்தர்தம் கலைவாழ அவர்க்கு நாடு கொடுத்துக் களித்தவன் ஓரி. மயில் ஆடி அகவியதைக் கேட்டுக் குளிரால் நடுங்கிக் கூவியதாக உணர்ந்து தன் போர்வையை அதற்குக் கொடுத்தவன் பேகன்.

–டாக்டர் மு.வரதராசன், தமிழ் நெஞ்சம்

| வ.எண் | கொடை | கொடுத்தவர் யார்? |
|---|---|---|
| 1. | முல்லைக்குத் தேர் | |
| 2. | இரவலர்க்குக் குதிரை | |
| 3. | வந்தவர்க்கு ஊர்கள் | |
| 4. | புலவர்க்கு நெல்லிக்கனி | |
| 5. | இல்லறத்திற்குப் பொருள் | |
| 6. | கூத்தர்க்கு நாடு | |
| 7. | மயிலுக்குப் போர்வை | |

| எழுதுதல் திறன் | செயல்பாடு – 4 |
|---|---|

இருவட்டங்களில் உள்ள சொற்களை உரிய முறையில் இணைத்துத் தொடரை உருவாக்குக.




1. அச்சம் தவிர்ப்போம்
2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________

| எதிர்ச்சொல் அறிதல் | செயல்பாடு – 5 |
|---|---|

1. அழுகையும் ____________ வாழ்வில் இயல்பு. ( சிரிப்பும் / துன்பமும் )
2. ____________ முதுமையும் யாவர்க்கும் உண்டு. ( மூப்பும் / இளமையும் )
3. ____________ இறக்கமும் மலைக்கு அழகு. ( ஏற்றமும் / உயர்வும் )
4. உயர்வு ____________ அனைவரிடமும் பழகுதல் நன்று. ( தாழ்வின்றி / தயக்கமின்றி )
5. ஒற்றுமை கண்டால் ____________ நீங்கும். ( வேற்றுமை / பெருமை )


| கண்டறிதல் | செயல்பாடு – 6 |
|---|---|

விடுகதைகளுக்குரிய விடைகளைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நெ | | ப் | பு |
| 2. | | ர | ப் | பு |
| 3. | பி | | | பு |
| 4. | | டு | | பு |
| 5. | து | | | பு |

1. தாளைக் கொடுத்தால் தின்னும்;
   தண்ணீர் குடித்தால் மடியும்.
2. வயலுக்கு எல்லையாவான்;
   தன் தலையையே நடக்கக் கொடுப்பான்.
3. பாரில் வந்து சேரும் முன்னே
   பத்துத் திங்கள் சிறைவாசம்.
4. சாண் உயரப் பையன்
   வைத்ததெல்லாம் சமைப்பான்.
5. படகுக்குக் கையாவான்; பயணத்துக்கு
   உதவுவான்.


| பொருத்துக. | செயல்பாடு – 7 |
|---|---|

| | |
|---|---|
|  | கோட்டோவியம் |
|  | குகை ஓவியம் |
|  | ஓலை ஓவியம் |
|  | கண்ணாடி ஓவியம் |

| சொல் விளையாட்டு | செயல்பாடு – 8 |
|---|---|

குறிப்புகளைப் பயன்படுத்தி ‘ல்’ என்னும் எழுத்தில் முடியும் சொற்களை வட்டங்களில் நிரப்புக.

1. பசு தருவது
2. வாய்க்குள் இருப்பது
3. புத்தகத்தின் தமிழ்ச்சொல்
4. போர்க்கருவிகளுள் ஒன்று
5. வீடுகட்ட உதவுவது
6. எழுத்துகள் பல சேர்ந்தால்
7. நடக்க உதவுவது
8. தானிய வகைகளுள் ஒன்று



| நடித்தல் திறன் | செயல்பாடு –9 |
|---|---|

கொடைக்குணம் துணைப்பாடத்தில் ஏதேனும் ஒரு நிகழ்வை நாடகமாக நடித்துக் காட்டுக.

| படைப்பாற்றல் | செயல்பாடு –10 |
|---|---|


உரிய சொற்களை நிரப்பிப் பாடலை நிறைவு செய்க.

(பொருள், கூர்மை, வீரம், தேன், உழைப்பு, வேலி )

| | |
|---|---|
| வாளுக்குக் ____________ வேண்டும். | வயலுக்கு ____________ வேண்டும். |
| வாழ்வுக்குப் ____________ வேண்டும். | வேந்தனுக்கு ____________ வேண்டும். |
| வண்டுக்குத் ____________ வேண்டும். | வெற்றிக்கு ____________ வேண்டும். |

| விழிப்புணர்வு | செயல்பாடு –11 |
|---|---|

பாக்கு மட்டையில் வரையப்பட்ட ஓவியம்.




நெகிழிப் பொருள்களைத் தவிர்ப்போம்;
மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்துவோம்.

பாக்குமட்டைகளைப் பயன்படுத்தி உன்னால் செய்ய முடிந்த பொருள்களைச் செய்க.

| படைப்பாற்றல் | செயல்பாடு – 12 |
|---|---|

இப்படம் குறித்து உன் மனத்தில் தோன்றும் கருத்துகளை எழுதுக.



______________________
______________________
______________________
______________________
______________________
______________________

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

மதிப்பெண் : 10

**1. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.** 1 x 1 = 1

அ. பாரதிதாசன் – பிசிராந்தையார்
ஆ. மகேந்திர வர்மன் – தட்சிணசித்திரம்
இ. கழனியூரன் – தாத்தா பாட்டி சொன்ன கதைகள்
ஈ. திருத்தக்கத்தேவர் – குறிஞ்சித்திட்டு

**2. ஓரிரு சொற்களில் விடையளிக்க.** 5 x 1 = 5

அ. சித்தன்னவாசல் ஓவியங்களை வரைந்தவர் யார் ?
ஆ. சித்திரக்காரப் புலி என அழைக்கப்படுபவர் யார் ?
இ. சீவக சிந்தாமணியின் கதைத் தலைவன் யார் ?
ஈ. பாரதிதாசனின் இயற்பெயர் என்ன ?
உ. ஒற்றுமை என்பதன் எதிர்ச்சொல் தருக.

**3. பாடலை நிறைவு செய்க.** 4 x 1 = 4

தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு – இன்பத்
__________ நாளும்செய் வோம்நல்ல __________
தமிழ்என்று __________ ஆடு – நல்ல
தமிழ்வெல்க __________ என்றே தினம்பாடு !

# அரும்பு

கையெழுத்து இதழ் (மாதிரி)

திருவள்ளுவர் ஆண்டு ஆனி மாதம் செப்டம்பர் – 2013

## ஏழாம் வகுப்பு


அரசு பெண்கள் மேனிலைப் பள்ளி
திருவள்ளூர், திருவள்ளூர் மாவட்டம்.



### மணிக்கொடி

கதராடை நெய்து
மூவண்ணம் கலந்து
முக்கருத்து உணர்த்தி
நற்சக்கரம் பொறித்து
நானிலம் போற்றும்
மணிக்கொடியே!
பளிச்சிடுவதில் பாகுபாடில்லை.
பாமரனின் சட்டையில் ஒளிர்வாய்
பாராளுமன்றத்தில் பறந்திடுவாய்
பாக்களால் உன்னைத்
தொழுதிடுவோம்!
பாரதம் முழுவதும்
வணங்கிடுவோம்!

மு. நந்தினி,
ஏழாம் வகுப்பு




பா. இரம்யா,
ஏழாம் வகுப்பு

### காந்தித் தாத்தா

பொய்யறியாத் தாத்தா
பொக்கைவாய்த் தாத்தா
அகிம்சைவழி விடுதலையைப்
பெற்றுத் தந்த தாத்தா
அவர் பெருமை போற்றுவோம்
அகிலமெங்கும் நாட்டுவோம்.

க. புனிதா,
ஏழாம் வகுப்பு




தி. மாரியம்மாள்,
ஏழாம் வகுப்பு

### நேரு மாமா

மாமாவாம் எங்கள் நேரு!
இவருக்கு இணை வேறு யாரு!
அகிலம் போற்றும் ஆசிய சோதி
மனிதருள் நீயே மாணிக்கம்!
ரோசா சூடிய ராசா - உன்னால்
ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சி
பஞ்சசீலக் கொள்கையில் மலர்ச்சி!
உங்கள் பிறந்த நாளே - என்றும்
எங்கள் மகிழ்ச்சி நாளே!

இரா. தென்றல்,
ஏழாம் வகுப்பு

# ஒலிப்புப் பயிற்சி



## "என்னால் முடியும், நான் செய்தேன்"

## ('I can, I did')

### மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ.எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |